உ

கணபதி துணை.

# தொல்காப்பியம்.

## சொல்லதிகாரம்.

இஃது

வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த

சேனாவரையருரையோடும்

நல்லூர்

ஆறுமுகநாவலரால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து,

யாழ்ப்பாணம்

சி. வை. தாமோதரம்பிள்ளையால்

சென்னபட்டணம்:

ஊ. புஷ்பரதச்செட்டியாரது

கலாரத்நாகரவச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1868

விபவ௵ புரட்டாதி௴

Registered Copyright.

# சூசீபத்திரம்.


| பக்கம். | இயலின்பெயர். | சூத்திரத்தொகை. |
|---|---|---|
| க. | கிளவியாக்கம் | சுக |
| சுஉ. | வேற்றுமையியல் | உஉ |
| அஎ. | வேற்றுமைமயங்கியல் | ஙச |
| ககங. | விளிமரபு | ஙஎ |
| கஉஎ. | பெயரியல் | சங |
| கருரு. | வினையியல் | ருக |
| உ0க. | இடையியல் | சஅ |
| உஉஅ. | உரியியல் | க00 |
| உசஎ. | எச்சவியல் | சுஎ |
| | | ஆக சசுங. |

உ

கணபதிதுணை.

# தொல்காப்பியம்.

## சொல்லதிகாரம்.

### சேனாவரையருரை.

தன்றே ணான்கி னென்றுகைம் மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினு
மொளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே.

ஆதியிற் றமிழ்நூ லகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே.

தவளத் தாமரைத் தாதார் கோயி
லவளைப் போற்றுது மருந்தமிழ் குறித்தே.

சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதுந் திகழ்தரற் பொருட்டே.

முதலாவது

### கிளவியாக்கம்.

க. உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
யஃறிணை யென்மனா ரவரல பிறவே
யாயிரு திணையி னிசைக்குமன சொல்லே.

நிறுத்த முறையானே சொல்லுணர்த்தியவெடுத்துக்கொண்டார்; அதனால் இவ்வதிகாரஞ் சொல்லதிகாரமென்னும் பெயர்த்தாயிற்று.

சொல்லாவது எழுத்தோடு ஒருபுடையானொற்றுமையுடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது. உரையாசிரியரும் எழுத்தாதற்றன்மையொடு புணர்ந்தென்பார் "எழுத்தொடு புணர்ந்து" என்றாராகலின், ஒருபுடையொற்றுமையே கூறினார். தன்மையொடு புணர்ந்தென்றுக்கால், ஓரெழுத்தொருமொழிக்கு எழுத்சொடு புணர்தலின்மையிற் சொல்லாதலெய்தாதென்க. பொருள் குறித்து வாராமையின் அசைநிலை சொல்லாகாவெனின்;—"ஆவயி னூறு முன்னிலை யசைச்சொல்" என்றும், "வியங்கோளசைச்சொல்" என்றுமோதுதலான், அவையும் இடமுதலாகிய பொருள் குறித்து வந்தனவென்க. "யாகா பிற பிறக்கு" என்னுந் தொடக்கத்தனவோவெனின், அவையும் மூன்றிடத்திற்குமுரியவாய்க் கட்டுரைச்சுவை பட வருதலிற் பொருள் குறித்தனவேயாம். இக்கருத்தேபற்றியன்றே ஆசிரியர் "எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" என்றோதுவாராயிற்றென்க.

சொற்றான் இரண்டு வகைப்படும், தனிமொழியுந் தொடர்மொழியுமெனை. அவற்றுள், தனிமொழியாவது சமயவாற்றலாற் பொருள் விளக்குவது. தொடர்மொழியாவது அவாய்நிலையானும் தகுதியானும் அண்மையானும் இயைந்து பொருள் விளக்குந்தனிமொழியீட்டம்.

பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும், இடைச்சொல்லும், உரிச்சொல்லுமெனத் தனிமொழி நான்குவகைப்படும். மரமென்பது பெயர்ச்சொல். உண்டானென்பது வினைச்சொல். மற்றென்பது இடைச்சொல். நனியென்பது உரிச்சொல்.

இருமொழித்தொடரும் பன்மொழித் தொடருமெனத் தொடர்மொழி இரண்டுவகைப்படும். சாத்தன் வந்தானென்பது இருமொழித்தொடர். அறம் வேண்டியரசனுலகம் புரந்தானென்பது பன்மொழித்தொடர்.

அதிகாரமென்னுஞ் சொற்குப் பொருள் பலவுளவேனும், ஈண்டதிகாரமென்றது ஒருபொருணுதலி வரும் பலவோத்தினது தொகுதியை. வடநூலாரும் ஓரிடத்து நின்ற சொற்பல சூத்திரங்களோடு சென்றியைதலையும் ஒன்றனதிலக்கணம் பற்றி வரும் பலசூத்திரத்தொகுதியையும் அதிகாரமென்ப.* சொல்லதிகாரம் சொல்லையுணர்த்தியவதிகாரமென விரியும். அச்சொல்லை யங்ஙனமுணர்த்திறோவெனின், தம்மையேயெடுத்தோதியும் இலக்கணங்கூறியுமுணர்த்தினாரென்பது.

வழுக்களைந்து சொற்களையாக்கிக்கொண்டமையான், இவ்வோத்துக் கிளவியாக்கமாயிற்று. ஆக்கம் அமைத்துக்கோடல், நொய்யுநுறுங்குங்களைந்து அரிசியமைத்தாரை அரிசியாக்கினாரென்பவாகலின். சொற்கள் பொருள்கண்மேலாமாறுணர்த்தினமையாற் கிளவியாக்கமாயிற்றெனினுமமையும். பொதுவகையாற் கிளவியென்றமையால், தனிமொழியுந்தொடர்மொழியுங் கொள்ளப்படும். கிளவி, சொல், மொழி என்னுந்தொடக்கத்தனவெல்லாம் ஒருபொருட்கிளவி.

இச்சூத்திரத்தின் பொருள். மக்களென்று கருதப்படும் பொருளை ஆசிரியர் உயர்திணையென்று சொல்லுவர்; மக்களென்று கருதப்படாத பிறபொருளை அஃறிணையென்று சொல்லுவர்; அவ்விருதிணைமேலுஞ்சொற்கணிகழும். எ-று. எனவே, உயர்திணைச்சொல்லும் அஃறிணைச்சொல்லுமெனச் சொல்லிரண்டென்றவாறும்.

மக்கட்சாதி சிறந்தமையான் உயர்திணையென்றார்.

என்மனாரென்பது செய்யுண்முடிபெய்தி நின்றதோரார்ற்றெதிர்காலமுற்றுச்சொல். என்றிசினோர், கண்டிசினோர் என்பன முதலாயின அவ்வாறு வந்த இறந்தகாலமுற்றுச்சொல். என்ப என்னுமுற்றுச்சொல்லினது பகரங்குறைத்து மன்னும் ஆருமென இரண்டிடைச்சொற்பெய்து விரித்தாரெ

---

* இதனைச் சிவஞானமுனிவர் விரித்துணர்த்தினர். தொல்காப்பியச்சூத்திரவிருத்தி ௧௯ ம் பக்கத்திற்காண்க.

ன்று உரையாசிரியர் கூறினாரெனின்;—என்மனாரென்பது இடர்ப்பட்டுழிச் சிறுபான்மை வாராது, நூலுள்ளுஞ் சான்றோர்செய்யுளுள்ளும் பயின்று வருதலானும், இசைநிறையென்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார் பின்னும் இசைநிறையென்றல் மேற்கோண்மலைவாதலானும், அவாக கது கருத்தன்றென்க. மாணாக்கர்க்குணர்வு பெருகல்வேண்டி வெளிப்படக் கூறாது உய்த்துணரவைத்தல் அவர்க்கியல்பாகலாற் செய்யுண்முடிபென்பது கூறாராயினார். *

என்மனாராசிரியரெனவே, உயர்திணை அஃறிணையென்பன தொல்லாசிரியர் குறியாம். ஆசிரியரென்னும் பெயர் வெளிப்படாது நின்றது.

மக்களாகிய சுட்டு யாதன்கணிகழும் அது மக்கட்சுட்டெனப் பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.† ஈண்டு மக்களென்றது மக்களென்னுமுணர்வை. எனவே, மக்களேயாயினும் மககளென்று சுட்டாது பொருளென்று சுட்டியவழி உயர்திணையெனப்படாதென்பதாம்.

இனி அவரலவென்னாது பிறவென்றேவிடின் யாதல்லாத பிறவென்று அவாய் நிற்குமாகலின், அவரலவென்றார். மக்

---

* ஈண்டுக் கூறியவாற்றால் மன் இசின் இரண்டும் முறையே எதிர்காலவிடைநிலையும் இறந்தகாலவிடைநிலையுமாமென்பது பெறப்பட்டது. சிவஞானமுனிவர் சிவஞானபாடியத்துள் "என்மனாரென்பது செய்யுண்முடிபாயதோராரீற்றுமுற்றுச் சொல். மன் எதிர்காலவிடைநிலை. அது 'உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே' என்னுஞ்சூத்திரத்துச் சேனாவரையருரையானுமறிக" என்றார். இங்ஙனமாகவும், மன் இறந்தகாலவிடைநிலையென்பர் சிலர்.

† மக்கட்சுட்டென்பது அன்மொழித்தொகையன்றெனவும் இருபெயரொட்டாகுபெயரெனவுஞ் சிவஞானமுனிவர் கூறினர். தொல்காப்பியச்சூத்திரவிருத்தி ௩௪ ம் பக்கத்திற் காண்க.

கட்சுட்டே—யென்று மேனின்றமையின் மக்களல்லாத பிற வென்றுணர்தலாமெனின்;—ஆற்றன் முதலாயினவற்றாற்கொள்வதூஉ சொல்லின்வழியென மறுக்க. இனி அவரலவென்றே யொழியின் அவற்றது பகுதியெல்லாம் எஞ்சாமற்றழுவாமையின், எஞ்சாமற்றழுவுதற்கு அவரல பிறவென்றார்.

செய்யுளாதலான் ஆயிருதிணையெனச் சுட்டு நீண்டது. வரையறையின்மையின் ஈண்டு யகரவுடம்படுமெய்யாயிற்று.

சொன்னிகழ்ச்சிக்குப் பொருளிடமாகலின், ஆயிருதிணையின்கண்ணென ஏழாவது விரிக்க. இன்சாரியை வேற்றுமையுருபுபற்றியும் பற்றாதும் நிற்குமென்று உரையாசிரியரிரண்டாவது விரித்தாராலெனின்;—"சாரியை யுள்வழிச் சாரியை கெடுதலுஞ் - சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையலும்" என்றிரண்டாவதற்குத் திரிபோதினமையானும், "செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்" என்புழியும் பிறண்டுமெல்லாம் ஏழாவது விரித்தற்கேற்பப் பொருளுணாததமையானும், அவ்வுரை போலியுரையென்க. ஆயிருதிணையினுமென்னுமும்மை விகாரவகையாற் றொக்குநின்றது.

இசைக்குமென்பது செய்யுமென்னு முற்றுச்சொல்.

மன்னென்றுமிடைச்சொல் மனவெனவீறு திரிந்து நின்றது. மன்னென்று பாடமோதுவாருமுளர்.

ஏகாரம் ஈற்றசை.

சொல்வரையறுத்தலே இச்சூத்திரத்திற்குக் கருத்தாயின், ஆடூஉவறிசொல் மகடூஉவறிசொல்லென்றாற்போல உயர்திணைச்சொல் அஃறிணைச்சொல்லெனவமையும், உயர்திணை மக்கள் அஃறிணை பிறவெனல்வேண்டாவெனின்;—உயர்திணை அஃறிணையென்பன தொல்லாசிரியர் குறியாகலான் ஆடூஉ மகடூஉப்போல வழக்கொடு படுத்துப் பொருளுணர்தலாகாமையின், உயர்திணை மக்கள் அஃறிணை பிறவெனல்வேண்டுமென்பது. இவ்வாறு ஒருபொருணுதலிற்றாக உரையாக்கால், சூத்திரமொன்றுமாறில்லையென்க. (க)

உ. ஆடூஉ வறிசொன் மகடூஉ வறிசொற்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
யம்முப் பாற்சொ லுயர்திணை யவ்வே.

இ - ள். ஆடூஉவறிசொல்லும் மகடூஉவறிசொல்லும் பல்லோரறியுஞ்சொல்லோடு பொருந்தி அம்மூன்று கூற்றுச் சொல்லும் உயர்திணையனவாம். எ - று.

ஆண்மகனை ஆடூஉவென்றலும் பெண்டாட்டியை மகடூஉ வென்றலும் பண்டையார்வழக்கு.

அறிவு முதலாயினவற்றான் ஆண்மகன் சிறந்தமையின் ஆடூஉவறிசொன் முற்கூறப்பட்டது. பன்மை இருபாலும்பற்றி வருதலிற் பல்லோரறிசொற் பிற்கூறப்பட்டது.

இரண்டாம் வேற்றுமை உயர்திணைக்கட் சிறுபான்மை தொகப்பெறுதலிற் றொக்குநின்றது. திரிந்த புணர்ச்சியன்மையின் விகாரவகையாற் றொக்கதென்பாருமுளர்.

சிவணியென்னும் வினையெச்சம் உயர்திணையவென்னும் வினைக்குறிப்புக் கொண்டது, ஆறும்வேற்றுமையேற்று நின்ற சொற் பெயராயும் வினைக்குறிப்பாயும் நிற்குமாகலான். * உயர்திணையவாமென்னும் முப்பாற்சொல்லின் வினை ஆடூஉவறிசொல் மகடூஉவறிசொல் என்னுமிரண்டன் வினையாகிய சிவணியென்னுஞ் செய்தெனெச்சத்திற்கு வினைமுதல்வினையாயினவாறென்னையெனின்;—உயர்திணையவாதல், ஆடூஉவறிசொல் மகடூஉவறிசொல் என்பனவற்றிற்கு மெய்துதலான், வினைமுதல்வினையாமென்க, "முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின" என்புழி வினைமுதல்வினையென்னுந் துணையல்லது பிறிதொன்றற்குப் பொதுவாகாது வினைமுதற்கே வினையாதல் வேண்டுமென்னும் வரையறையின்மையின். அல்

* உயர்திணையவென்பது வினைக்குறிப்புமுற்றாங்கால் அகரம் ஆறும்வேற்றுமையுருபாகாது வினைக்குறிப்புமுற்றுவிகுதியேயாமென்றறிக.

லாக்கால், இவளுமிவனுஞ் சிற்றிலிழைத்துஞ்சிறுபறையறைந்தும் விளையாடுப என்பனபோல்வன அமையாவாமென்க.

ஆடூஉவறிசொன் முதலாயினவற்றையுணர்த்தியல்லது அவற்றதிலக்கணமுணர்த்தலாகாமையின், பாலுணர்த்துமெழுத்து வகுப்பவே அவைதாமும் பெறபபடும் இச்சூத்திரம் வேண்டாவென்பது கடாவன்மையுணர்க.

உயர்திணைச்சொல்லுணர்த்தி அதனது பாகுபாடு கூறுகின்றாராகலின், அம்முப்பாற்சொலுயர்திணைய என்றாராயினும் உயர்திணைச்சொல் மூன்றுபாகுபாடுபடுமென்பது கருததாகக் கொள்க. இக்கருத்தானன்றே, ஆசிரியர் அம்முப்பாற் சொல்லும் என இனைத்தெனவறிநத பொருட்டொகுதிககுக் கொடுக்குமும்மை கொடாராயினும், உரையாசிரியரும உயர்திணையெனப்பட்ட பகுப்பை விரிப்புழி இத்துணையல்லது விரிபடாதென்பது ஈண்டுக் கூறியது என்றுரைததூஉமென்க. "ஆயிருபாற்சொலஃறிணையவ்வே" என்பதற்கும் ஈதொக்கும். (உ)

ங. ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்
றாயிருபாற்சொ லஃறிணை யவ்வே.

இ - ள். ஒன்றனையறியுஞ்சொல்லும் பலவற்றையறியுஞ் சொல்லுமென அவ்விரண்டுகூற்றுச்சொல்லும் அஃறிணையனவாம். எ-று. (ங)

ச. பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கி
னாண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியுந்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியு
மிவ்வென வறியுமந் தந்தமக் கிலவே
யுயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்.

இ - ள். உயர்திணையிடத்துப் பெண்மைத்தன்மை குறித்த ஆண்மை திரிந்த பெயர்ச்சொல்லும், தெய்வத்தைக் குறித்த பெயர்ச்சொல்லும், இவையெனத் தம்பொருளை வே

றறிய நிற்கும் ஈற்றெழுத்தினைத் தமக்குடையவல்ல, உயர்
திணையிடத்துப்பாற்குரிய பாலாய் வேறுபட்டிசைக்கும். எ-று.

பால வேறுபட்டிசைத்தலாவது தாமுயர்திணைப்பெயராய்
ஆடூஉவறிசொல் முதலாயினவற்றிற்குரிய ஈற்றெழுத்தே தம்
வினைக்கீறாக இசைத்தல.

உ-ம். பேடி வந்தாள்; பேடர் வந்தார்; பேடியர்வந்தார்;
எ-ம். தேவன் வந்தான்; தேவி வந்தாள்; தேவர் வந்தார்.
எ-ம். வரும்.

அலிப்பெயரினீக்குதற்குப் பெண்மை சுட்டிய என்றும், ம
கடூஉப்பெயரினீக்குதற்கு ஆண்மை திரிந்த என்றுங்கூறினார்.

பெண்மை சுட்டிய எனவே பெண்மை சுட்டாப பேடெ
னபதும ஒழிக்கப்பட்டதாம.

பெண்மை சுரிதலுமுண்டேனும் ஆண்மை திரிதல பெரும்
பான்மையாகலான் ஆண்மை திரிந்த என்றார்.

பேடியர் பேடிமார் பேடிகள் என்பனவும் அடங்குதற்கு
ப் பேடியென்னும் பெயர்நிலைக்கிளவியென்னாது பெண்மை
சுட்டிய ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி என்றார்.

பெண்மை சுட்டிய எனறும பெயரெச்சம் பெயர்நிலைக்
கிளவி என்னும் பெயர் கொண்டது. ஆண்மை திரிந்த என
பது இடைநிலை.

“தன்மைதிரிபெயர்” என்றாற்போலச் சொல்லொடு பொ
ருட்கொற்றுமை கருதி ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிள
வி என்றார்.

உயர்திணைமருங்கிற் பால்பிரிந்திசைக்கும் எனவே தமக்
கென வேறீறின்மை பெறப்படுதலின், இவ்வெனவறியுமந
தந்தமக்கிலவே எனல வேண்டாவெனின் ;—தமக்கெனவீறு
டைய ஆடூஉவறிசொன முதலாயினவற்றிற்குரிய ஈற்றானும்
இசைக்குங்கொல்லெனனும் ஐயநீக்குதற்கு அந்தந்தமக்கில
வே எனல்வேண்டுமெனபது.

பாலுளடங்காத பேடியையும் திணையுளடங்காத தெய்வத்தையும் பாலுள்ளுந் திணையுள்ளுமடக்கியவாறு.

சுட்டியவென்பது செய்யியவென்னும் வினையெச்சமென்றும், ஆண்மை திரிதல் சொறகின்மையிற பெயர்நிலைக்கிளவி என்பது ஆகுபெயராய்ப் பொருண்மேனின்றதென்றும், உரையாசிரியர் கூறினாராலெனின்;—ஆண்மை திரிதல் பெண்மைத்தன்மையெய்துதற்பொருட்டன்றிப் பேடிக்கியல்பாகலிற் பெண்மை சுட்ட வேண்டி ஆண்மை திரிந்தவென்றல் பொருந்தாமையானும், பொருளே கூறலுற்றாராயின் ஆசிரியர் பேடியுந்தெய்வமுமென்று தாங்கருதிய பொருள் இனிது விளங்கச் சுருங்கிய வாய்பாட்டாற் சூத்திரிப்பராகலானும், அவர்க்கது கருத்தன்மையான், உரையாசிரியர்க்கும் அது கருத்தன்றெனக. (௪)

## ரு. னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்.

இ-ள். னஃகானாகியவொற்று ஆடூஉவறிசொல்லாம். எ-று.

உ-ம். உண்டனன், உண்டான், உண்ணாநின்றனன், உண்ணாநின்றான், உண்பன், உண்பான், கரியன், கரியான் என வரும்.

ஆடூஉவறிசொல்லாவது னகாரவீற்றுச் சொல்லாயினும், பாலுணர்த்துதற்சிறப்பு நோக்கி னஃகானொற்றேயென்றார். அறமாவது மூக்காறின்மை என்றாற்போல, னஃகானொற்றாடூஉ வறிசொல் என்றாராயினும், ஆடூஉவறிசொல்லாவது னஃகானொற்றென்பது கருத்தாகக் கொள்க. "ளஃகானொற்று" முதலாயினவற்றிற்கும் இவையொக்கும்.

ஏகாரம் அசைநிலை. உரையாசிரியர் பிரிநிலையென்றாராலெனின்;—பிரிநிலையாயின் ஆடூஉவறிசொற்கிலக்கணங்கூறுதலன்றிப் பிரித்து அதன்சிறப்புணர்த்துதலே கருத்தாமாகலின், அவ்வுரை போலியுரையென்க. (ரு)

## சு. ளஃகா னொற்றே மகடூஉ வறிசொல்.

இ-ள். ளஃகானாகியவொற்று மகடூஉவறிசொல்லாம். எ-று.

உ - ம். உண்டனள், உண்டாள், உண்ணாநின்றனள், உண்ணாநின்றாள், உண்பள், உண்பாள், கரியள், கரியாள் என வரும். (சு)

எ. ரஃகா னொற்றும் பகர விறுதியு
மாரைக் கிளவி யுளப்பட மூன்று
நேரத் தோன்றும் பலரறி சொல்லே.

இ - ள். ரஃகாரனாகியவொற்றும் பகரமாகியவிறுதியும் மாரென்னுமிடைச்சொல்லும் இம்மூன்றும் பலரறிசொல்லாம். எ-று. ஏயென்பது ஈற்றசை.

உ - ம். உண்டனர், உண்டார், உண்ணாநின்றனர், உண்ணாநின்றார், உண்பர், உண்பார், கரியர், கரியார். எ-ம். கூறுப, வருப. எ-ம். கொண்மார், சென்மார். எ-ம். வரும்.

மார் எதிர்காலம் பற்றி வந்த ஆரேயாம் ரஃகாரனொற்றெனவடங்குமெனின்;—அற்றன்று, ஆரேயாயிற் கொண்மார் என்புழி மகரங்காலம் பற்றி வநததோரெழுத்தாகல்வேண்டும்; உண்பார் வருவார் எனக் காலம்பறறி வருமெழுத்து முதனிலைக்கேற்றவாற்றான் வேறுபட்டு வருமன்றே; அவ்வாறன்றி உண்மார் வருமார் எனவெல்லாமுதனிலைமேலும் மகரத்தோடு கூடி வருதலானும், வினைகொண்டு முடிதற்கேற்பதோர் பொருள்வேறுபாடுடைமையானும், ஆரீறன்று வேறெனவே படுமென்பது.

மூன்றுகாலமும் வினைக்குறிப்பும் பற்றி வருதலொப்புமை நோக்கி அர் ஆர் என்னு மிரண்டீற்றையும் ரஃகான் என அடக்கியோதினார். அன ஆன் அள் ஆள் என்பனவற்றையும் இவ்வொப்புமைபற்றி னஃகான் ளஃகான் என அடக்கியோதினார்.

ரகாரம் மூன்றுகாலமும் வினைக்குறிப்பும்பற்றிப் பெருவழக்கிற்றாய்வருதலின் முன் வைத்தார். மார் பகரவிறுதியிற் சிறுவழக்கிற்றாகலிற் பின் வைததார்.

உண்கும், உண்டும், வருதும், சேறும் என்னுந்தொடக்கத்தனவும் பலரறிசொல்லாயினும், அவை “எண்ணியன் மரு

ங்கிற்றிரி" தலின்நேரத்தோன்ருவாகலான், இவற்றை நேரத்தோன்றும் பலரறிசொல்லென்ருர்.

மூன்றும் பலரறிசொல்லென்ருராயினும், பலரறிசொல்லாவது இம்மூன்றுமென்பது கருத்தாகக் கொள்க. (எ)

அ. ஒன்றறி கிளவி தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

இ - ள். ஒன்றறிசொல்லாவது த ற ட என்னுமொற்றை யூர்ந்த குற்றியலுகரத்தை யிறுதியாகவுடைய சொல்லாம். எ-று.

உ - ம். வந்தது, வாராநின்றது, வருவது, கரிது. எ-ம். கூயிற்று, தாயிற்று; கோடின்று, குளம்பின்று. எ-ம். குண்டுகட்டு, கொடுந்தாட்டு, குறுந்தாட்டு. எ-ம். வரும்.

கிடக்கைமுறையாற்கூருது த ற ட எனச் சிறப்புமுறையாற் கூறிஞர்.

குன்றியலுகரமென மெலிந்து நின்றது.

தகரவுகரம் மூன்று காலமும் வினைக்குறிப்பும்பற்றி வருதலும், றகரவுகரம் இறந்தகாலமும் வினைக்குறிப்பும்பற்றி வருதலும், டகரவுகரம் வினைக்குறிப்பேபற்றி வருதலுமாகிய வேறுபாடுடைமையால், குற்றியலுகரமென ஒன்ருகாது மூன்ருயின. (அ)

கூ. அ ஆ வ என வரூஉ மிறுதி
யப்பான் மூன்றே பலவறி சொல்லே.

இ - ள். பலவறிசொல்லாவன அ ஆ வ எனவருமிறுதியையுடைய அக்கூற்றுமூன்றுசொல்லாம். எ-று.

உ - ம். உண்டன, உண்ணுநின்றன, உண்பன, கரியன. எ-ம். உண்ணு, தின்ணு. எ-ம். உண்குவ, தின்குவ. எ-ம். வரும்.

உண்ட, உண்ணுநின்ற, உண்ப, கோட்ட என்னுந்தொடக்கத்தனவும் அகரவீற்றுப்பலவறிசொல், அவற்றுள் உண்ப

வென்பது பகரவீற்றுப் பலரறிசொல்லன்றே, அஃறிணைக் காயினவாறென்னையெனின்;—பகரவிறுதியாயினன்றே உயர்திணைக்காவது. ஈண்டுக் காட்டப்பட்டது "கானந் தகைப்ப செலவு" "சினையவுஞ் சுனையவு நாடினர் கொய்தல் வேண்டா நயந்து தாங்கொடுப்ப போல்" என நின்றனபோல எதிர்காலத்து வரும் பகரமூர்ந்து நின்ற அகரவீறுதலின், அஃறிணைச்சொல்லேயாமென்பது. செய்யுளாகலின், தகைப்பன கொடுப்பன என்னுஞ்சொற்கள் தகைப்ப கொடுப்ப என விகாரவகையான் அவ்வாறு நின்றனவாகலான், வழக்குமுடிவிற்கு அவை காட்டல் நிரம்பாதெனின்;—தகைத்தன, தகையாநின்றன; தகைத்த, தகையாநின்ற. எ-ம். கொடுத்தன, கொடாநின்றன; கொடுத்த, கொடாநின்ற. எ-ம். இறந்தகாலத்தும் நிகழ்காலத்தும் அகரவீறு முதனிலைக்கேற்றவாற்றான் அவ்வக்காலத்திற்குரிய எழுத்துப்பெற்று அன்பெற்றும் பெறாதும் முடியுமாறுபோல, எதிர்காலத்தும் முதனிலைக்கேற்றவாற்றான் அக்காலத்திற்குரிய எழுத்துப் பெற்று அன் பெற்றும் பெறாதும் முடியும். எதிர்காலத்திற்குரிய எழுத்தாவன பகரமும் வகரமுமாம். அவற்றுட் பகரம் பெற்று அன் பெற்றும் பெறாதும் முடிவுழி, தகைப்பன, தகைப்ப, கொடுப்பன, கொடுப்ப. எ-ம். வகரம் பெற்று அவ்வாறு முடிவுழி, வருவன, வருவ; செல்வன, செல்வ. எ-ம். இவ்வாறு முடியுமாகலின், தகைப்ப கொடுப்ப என்பன விகாரமெனப்படா இயல்பேயாமென்பது. கொடுப்பன யாவை அவைபோல என உவமை கருதாது அவைதம்மையே சுட்டி நிற்றலிற் கொடுப்ப என்பது பெயரன்மையறிக. அன் பெறாது எதிர்காலத்து வரும் வகரவொற்றூர்ந்து நின்ற அகரமாய் வகரவீறடங்குமெனின், வினைகொண்டு முடிதலொழித்து மாரீற்றிற்குரைத்ததுரைக்க. அவ்வாறுரைக்கவே, குகரம் பெற்றவழி அன் பெறற்கேலாமையின், உண்குவ தின்குவ என்னுந்தொடக்கத்தன வகரவீறேயாம். வருவ செல்வ எனக் குகரம் பெறாதவழி வகரவீறுதலும் அகரவீறுதலுமென இருநிலைமையுமுடையவாம். என்னை! எல்லாவினைக்கண்ணுஞ் சேற

னமாலைத்தாகிய வகரவீறு ஆண்டு விலக்கப்படாமையானும், அத்தன்மைத்தாகிய அகரவீறும் ஆண்டு வந்து அன் பெறுக வழிக் காலவகரமூர்ந்து அவ்வாறு நிற்றலுடைமையானுமென்பது.

வருமென்னுமுகரம் விகாரவகையான் நீண்டு நின்றது.

ஈற்றுவகையான் மூன்றாகிய சொல்லென்பார் அப்பான் மூன்றென்றார். (கூ)

கo. இருதிணை மருங்கி னைம்பா லறிய
ஈற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்துந்
தோற்றந் தாமே வினையொடு வருமே.

இ - ள். உயர்திணை அஃறிணையென்னும் இரண்டு திணைக் கண்ணுமுளவாகிய ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பலவென்னும் ஐந்துபாலுமறிய அவ்வச்சொல்லினிறுதிக்கணின்றொலிக்கும் பதினோரெழுத்தும் புலப்படுதற்கண் வினைச்சொற் குறிப்பாய்ப் புலப்படும். எ-று.

திணை இரண்டே பால ஐந்தேயென வரையறுத்தற்கு இருதிணைமருங்கிளைம்பாலென்றார்.

னகாரமும் ளகாரமும் ரகாரமும் மாரும் இறுதி நின்று ணர்த்துமென்பதற்கு ஈற்றினின்றிசைக்கும் பதினோரெழுத்தும் என்பது ஞாபகமாயிற்று. அல்லனவற்றிற்கு அறுவாதமாத்திரமென்றார்.

தாமேயென்பது கட்டுரைச்சுவைப்பட நின்றது.

வினையெனப் பொதுப்படக் கூறினாராயினும்,ஏற்புழிக்கோடலென்பதனாற் படர்க்கைவினையென்று கொள்ளப்படும்.

இவை பெயரொடு வருவழித் திரிபின்றிப் பால் விளக்காமையின் வினையொடு வருமென்றார். (கo)

கக. வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியு
மயங்கல் கூடா தம்மர பினவே.

ஒருதிணைச்சொல் ஏனைத்திணைச்சொல்லோடு முடியுந் திணைவழுவும், ஒருபாற்சொல் அத்திணைக்கண் ஏனைப்பாற்சொல்லோடு முடியும் பால்வழுவும், பிறிதோர்காரணம் பற்றாது ஒருபொருட்குரிய வழக்கு ஒருபொருண்மேற்சென்றதெனப்படும் மரபுவழுவும், வினாவுதற்குறைபாகாச் செப்புவழுவும், வினவப்படாத பொருள்பற்றி வரும் வினாவழுவும், ஓரிடச்சொல் ஓரிடச்சொல்லோடு முடியும் இடவழுவும், காலக்கிளவி தன்னொடியையாக் காலமொடு புணருங் காலவழுவுமென வழு எழுவகைப்படும். வழுவற்கவென்றலும் வழுவமைத்தலுமென வழுக்காத்தல் இருவகைப்படும். குறித்த பொருளை அதற்குரிய சொல்லாற்சொல்லுகவென்றல வழுவற்கவென்றலாம். குறித்த பொருட்குரிய சொல்லன்றாயினும் ஒருவாற்றான் அப்பொருள் விளக்குதலின் அமைகவென்றல் வழுவமைத்தலாம். இச்சூத்திரமுதலாக இவ்வோத்து வழுக்காக்கின்றது.

இ-ள். கூறப்பட்ட பதினோரீற்றவாய் வினைபற்றி வரும் பாலறிசொல்லும், அவன் இவன் உவன் என்பன முதலாகப் பெயர்பற்றி வரும் பாலறிசொல்லும், தம்முட்டொடருங்கால், ஒருபாற்சொல் ஏனைப்பாற்சொல்லோடு மயங்கா, தம்பாற்சொல்லோடு தொடரும். எ-று. எனவே, பிறபாற்சொல்லோடு தொடர்வன வழுவென்பதாம்.

ஈண்டுப் பெயரொன்றது பொருளை.

திணையுணராக்கால் அதனுட்பகுதியாகிய பாலுணர்தலாகாமையின், பாலறிகிளவியெனவே திணையறிதலும் பெறப்படும்; படவே, மயங்கல்கூடாவென்றது திணையும் பாலும் மயங்கற்கவென்றவாறும்.

இன்னும் மயங்கல்கூடாவென்றதனான், வினைப்பாலறிசொல்லும் பெயர்ப்பாலறிசொல்லும் பாலறிசொல்லுள் ஒருசாரனவும் இடமுங்காலமுமுணர்த்துமாகலின், அவ்வாறுணர்த்துவனவற்றுள்ளும் மயங்கற்கவென்றவாறும்; ஆகவே, இடமுங்காலமும் மயங்காது வருதலுங்கூறப்பட்டதாம்.

உ-ம். அவன் வந்தான்; அவள் வந்தாள்; அவர் வந்தார்; அது வந்தது; அவை வந்தன. எ-ம். நெருநல் வந்தான். எ-ம். திணையும் பாலுமிடமுங்காலமும் வழுவாது முடிந்தவாறு. அவ்வாறன்றி, அவன் வந்தது; அவன் வந்தாள்; யான் வந்தான்; நாளை வந்தான் என மயங்கி வருவனவெல்லாம் வழுவாம்.

சிறப்புடைப்பொருளைத் தானினிது கிளத்தலென்பதனான் ஐம்பாலுணர்த்துதற்சிறப்புடைய படர்க்கைவினைபற்றியோதினாரேனும், "தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவி" என்றும் "முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி" என்றும் பெயர்வழுவமைப்பாராகலின், தன்மைமுன்னிலைப் பாலறிகிளவியும் மயங்கற்கவென்பது ஈண்டைக்கொள்ளப்படும். உ-ம். யான் வந்தேன்; யாம் வந்தேம். எ-ம். நீ வந்தாய்; நீயிர் வந்தீர். எ-ம். வரும். யான் வந்தேம்; நீயிர் வந்தாய் என்னுந் தொடக்கத்தன வழுவாம்.

மயங்கல்கூடாவென்றது மயங்குதலைப் பொருந்தாவென்றவாறு. மயங்கல்கூடா, தம்மரபினவே என்பனவற்றுள் ஒன்றனதாற்றலான் ஏனையதன்பொருளும் உணரப்படுதலின் ஒன்றேயமையுமெனின்; — சொல்லில்வழியதுய்த்துணர்வதென்க.

தம்மரபினவேயென்பதனைப் பிரித்து வேறோர்தொடராக்கிச் சொற்கண்மரபு பிறழாது தம்மரபினவேயென மரபுவழுக்காத்ததாகவுரைக்க. இது யோகவிபாகமென்னுநூற்புணர்ப்பு. முன்னிருபொருள்படவுரைப்பனவெல்லாம் இந்நூற்புணர்ப்பாகக் கொள்க. யானை மேய்ப்பானைப் பாகனென்றலும், யாடு மேய்ப்பானை இடையனென்றலும் மரபு. மேய்த்தலொப்புமையான் யானை மேய்ப்பானை இடையனென்றலும், யாடு மேய்ப்பானைப் பாகனென்றலும் மரபுவழு.

செப்புவழாநிலையும், வினாவழாநிலையும், சிறப்புவகையானோதப்படும் இடவழாநிலையும், இவ்வாறோதப்படுமரபுவழாநிலையும் ஒழித்து, ஒழிந்தன இச்சூத்திரத்தாற் காத்தார். (கக)

**கஉ. ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
யாண்மை யறிசொற் காகிட னின்றே.**

இ - ள். "உயர்திணை மருங்கிற் பாலிரிந் திசைக்கும்" என்று மேற்கூறப்பட்ட ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி ஆடூஉவறிசொல்லோடு புணர்தற்குப் பொருந்தும் இடனுடைத்தன்று. எ-று.

ஆண்மையறிசொற்காகிடனின்றென்ற விலக்கு ஆண்மையறிசொல்லோடு புணர்தலெய்தி நின்ற பேடிக்கல்லதேலாமையின், அலிமேற்செல்லாதென்க.

இச்சூத்திரத்தைப் "பெண்மை சுட்டிய" என்னுஞ்சூத்திரத்தின்பின் வையாது ஈண்டு வைத்தார், இது வழுவற்கவென நின்றதாகலான். (கஉ)

**கங. செப்பும் வினாவும் வழாஅ லோம்பல்.**

இ - ள். செப்பினையும் வினாவினையும் வழுவாமற் போற்றுக. எ-று.

செப்பென்பது வினாய பொருளையறிவுறுப்பது. அஃதிரண்டு வகைப்படும், செவ்வனிறையும் இறை பயப்பதுமென. உயிரொத்தன்மை யாது என்று வினாயவழி உணர்தற்றன்மைத்து என்றல் செவ்வனிறையாம். உண்டியோ என்று வினாயவழி வயிறு குத்திற்றென்றல், உண்ணேனென்பது பயந்தமையின், இறை பயப்பதாம்.

கருவூர்க்குச் செல்லாயோ சாத்தாவெனப் பருநூல் பன்னிருதொடியென்பது செப்புவழுவாம். சொல்லெப்பொருளுணர்த்துமென்று வினாயவழிச் சொல்லொருபொருளுமுணர்த்தாதென்பதுமது, வினாய பொருளை வினாவானுணர்ந்து தான் குறித்த பொருளைச் செப்பானுணர்த்துகின்றானாகலானென்பது.

வினாவின்றியுஞ்செப்பு நிகழ்தலின் வினாய பொருளையெனல்வேண்டாவெனின், வினாய பொருளையென்றது அறிவுறுப்பது செப்பெனின், அறியலுறப்பொருளையறிவுறுத்தலின் வினாவு

ஞ்செப்பாயடங்குதலானும், செப்பென்பது உத்தரமென்பதுவேறொருபொருட்கிளவியாகலானும்; வினாய பொருளையறிவுறுத்தலே இலக்கணமாமென்பது. குமரியாடிப் போந்தேன் சோறு தம்மின் என வினாவின்றி நிகழ்ந்த சொல் யாண்டடங்குமெனின்;—அறியலுறுதலையுணர்த்தாது ஒன்றனையறிவுறுத்து நிற்றலிற் செப்பின்பாற்படும்.

வினாவெதிர்வினாதல், ஏவல், மறுத்தல், உற்றதுரைத்தல், உறுவதுகூறல், உடம்படுதலெனச் செப்பறுவகைப்படுமென்று உரையாசிரியர் கூறினாராலெனின்;—உயிரெத்தன்மைத்தென்றவழி உணர்தற்றன்மைத்தென்றன் முதலாயின அவற்றுளடங்காமையானும், மறுத்தலும் உடம்படுதலும் ஏவப்பட்டார்கண்ணவாகலானும், அறுவகைப்படுமென்று பிறர் மதமேற்கொண்டு கூறினாரென்பது.

வினாவாவது அறியலுறவு வெளிப்படுப்பது. அது மூவகைப்படும், அறியான்வினாவும், ஐயவினாவும், அறிபொருள்வினாவுமென. அறியான்வினா உயிரெத்தன்மைத்தென்பது. ஒருபுடையானுமறியப்படாத பொருள் வினாவப்படாமையிற்பொதுவகையானறியப்பட்டுச் சிறப்புவகையானறியப்படாமை நோக்கி அறியான்வினாவாயிற்று. ஐயவினா குற்றியோ மகனோ தோன்றுகின்றவுருவென்பது. அறிபொருள்வினா அறியப்பட்ட பொருளையே ஒருபயனோக்கி அவ்வாய்பாட்டினான் வினாவுவது. பயன் வேறறிதலும் அறிவுறுத்தலுமுதலாயின. கறக்கின்றவெருமை பாலோ சினையோவென்பது வினாவழுவாம். ஒருபொருள் காட்டி இது நெடிதோ குறிதோவென்பதுமஃது.

உரையாசிரியர் அறிபொருள்வினாவை அறிவொப்புக்காண்டலும், அவனறிவு தான் காண்டலும், மெய்யவற்குக் காட்டலும் என விரித்து, ஏனைய கூட்டி, ஐந்தென்றார்.

இருவகைச்செப்பினும், மூவகைவினாவினும், செவ்வனிறையும், அறியான்வினாவும், ஐயவினாவும் வழாநிலையாகலின், வழாஅலோம்பலென்பதனாற் கொள்ளப்படும். ஏனைய வழுவ

மைப்புழிக் காணப்படும். வினா வழீஇயினவிடத்து அமை யாதென்று உரையாசிரியர் கூறினாரால் எனின்;—அற்றன்று: “யாரென வரூஉம் வினாவின் கிளவி” எனவும் “வினாவுற வரூஉம் வினாவுடை வினைச்சொல்” எனவும் முன்னர் வழுவமைப்பராகலான், அது போலியுரையென்க. (கங)

கச. வினாவுஞ் செப்பே வினாவெதிர் வரினே.

இ - ள். வினாய பொருளை ஒருவாற்றான் அறிவுறுத்து வினாவிற்கு மறுமொழியாய் வரின், வினாவுஞ் செப்பாம். எ-று.

சாத்தா உண்டியோவென்று வினாயவழி உண்ணேனோவென வரும். வினாவாய்பாட்டான் வந்ததாயினும், உண்பலென்பது கருத்துப்பொருளாகலிற் செப்பெனப்படும். உண்டியோவென்று வினாயவழி உண்பல் உண்ணேனென்றிருந்த சாஞென்ற வினாவுவான்போலக் கூறலின், வழுவமைதியாயிற்று. இது செப்புவழுவமைதியேற் “செப்பே வழீஇயினும்” என்புழியடங்குமெனின்;—ஒன்றனைச் செப்பு ஒன்றறாவதன்றி வினாச் செப்பாயினமையின், வேறு கூறினார். (கச)

கரு. செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
யப்பொருள் புணர்ந்த கிளவி யான.

இ - ள். செவ்வனிறையாகாது செப்பு வழுவி வரினுங் கடியப்படாது, ஒருவாற்றான் வினாய பொருட்கு இயைபுபட்ட கிளவியாதற்கண். எ-று.

சாத்தா உண்டியோவென்று வினாயவழி, நீயுண்ணென்றும், வயிறு குத்துமென்றும், பசித்தேனென்றும், பொழுதாயிற்றென்றும், இவை செவ்வனிறையல்லவேனும், வினாய பொருளை ஒருவாற்றானறிவுறுத்தலின், அமைந்தவாறு கண்டுகொள்க. அஃதேல், இவை “தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற்றோன்றலும்” என்புழிக் குறிப்பிற்றோன்றலாயடங்குமாகலின், ஈண்டுக் கூறல்வேண்டாவெனின்;—அவ்வாறடங்குமாயினும், “செப்பும் வினாவும் வழாஅ லோம்பல்” என்றதனான் இவையெல்லாம் வழுவாதலெய்திற்று, அதனானமைக்கல்வேண்டுமென்பது. (கரு)

கக. செப்பினும் வினாவினுஞ் சினைமுதற் கிளவிக்
கப்பொரு ளாகு முறழ்துணைப் பொருளே.

இ - ள். செப்பின்கண்ணும் வினாவின்கண்ணும் சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும் உறழ்பொருளுந் துணைப்பொருளும் அவ்வப்பொருளுக்கு அவ்வப்பொருளேயாம். எ-று. எனவே, சினையுமுதலுந் தம்முண்மயங்கி வருதல் வழூவென்பதாம்.

உறழ்பொருளாவது ஒப்புமை கூறாது மாறுபடக் கூறப்படுவது. துணைப்பொருளாவது ஒப்புமை கூறப்படுவது.

உ - ம். இவள்கண்ணினிவள்கண் பெரிய; நம்மரசனினெம்மரசன் முறைசெய்யும். எ-ம். இவள்கண்ணினிவள்கண் பெரியவோ; எம்மரசனி னும்மரசன் முறைசெய்யுமோ. எ-ம். இவள்கண்ணொக்குமிவள்கண்; எம்மரசனையொக்கு நும்மரசன். எ-ம். இவள்கண்ணொக்குமோ விவள்கண்; எம்மரசனையொக்குமோ நும்மரசன். எ-ம். வரும்.

"அவன் கோலினுந் தண்ணிய தடமென் றோளே." எ-ம். "துளிதலைத் தலைஇய தளிரன் னோளே." எ-ம். மயங்கி வந்தன வழூவாம் பிறவெனின்;—அவை செய்யுள்பற்றி வருமுவமவழூவாகலின் ஈண்டைக்கெய்தா, அணியியலுட்பெறப்படும். இம்மகள்கணல்லவோ கயனல்லவோவென வழக்கின்கண்ணும் மயங்கி வருமாலெனின்;—உண்மையுணர்தற்கு வினாயதன்றி ஐயவுவமைவாய்பாட்டாற் கண்ணைப் புனைந்துரைத்தல் கருத்தாகலின், அன்னவையெல்லாம் உரையென்னுஞ்செய்யுளாமென்பது. இந்நங்கைமுலையி னிந்நங்கைகண்ணல்ல என்றுந்தொடக்கத்தன மயக்கமின்மையின் இலக்கணவழக்காம் பிறவெனின்;—அற்றன்று: ஒத்தபண்புபற்றியன்றே பொருவுவது; கண்ணொடு முலைக்கு ஒத்த பண்பின்மையாற் பொருவுதல் யாண்டையது! ஒத்த பண்புபற்றிப் பொருவுதற்கண்ணது இவ்வாராய்ச்சியென்பது.

காக்கப்பட்டன செப்புவழாநிலையும் வினாவழாநிலையுமென்பார் செப்பினும் வினாவினுமென்றார். "வழாஅலோம்பல்" எ

ளபுநியடங்குமாயினும், நுண்ணுணர்வுடையார்க்கல்லது அறியப்படுவதாகலாகாமையின், விரித்துக் கூறியவாறு. தன்னின முடித்தலென்பதனாற் பொன்னணிந்த முத்துமணியுமெனவெவ்வேறுங்காலும் இனமாய பொருளை யெண்ணப்படுமெனப்படுத்து கொள்க. (கசு)

கஎ. தகுதியும் வழக்குந் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே.

இ - ள். தகுதிபற்றியும் வழக்குப்பற்றியும் நடக்கும் இலக்கணந்திறம்பக்கச்சொற்கடியப்படா. எ-று.

தகுதியென்பது அப்பொருட்குரிய சொல்லாற் சொல்லுதல் இழிபுடைத்தென்று அதனைச் சொல்லாது தகுவதோர்வாய்பாட்டாற்கூறுதல், அது செத்தானைத் துஞ்சினானென்றலும், சுடுகாட்டை நன்காடென்றலும், ஓலையைத் திருமுகமென்றலும், கெட்டதனைப் பெருகிற்றென்றலுமென இத்தொடக்கத்தன.

வழக்கென்பது காரணமின்றி வழங்கற்பாடேபற்றி வருவது. பண்புகொள் பெயராயினும் பண்பு குறியாது சாதிப்பெயராய வெள்பாடு வெண்களமர் கருங்களமரென வருவனவும், குடத்துள்ளும் பிறகலத்துள்ளுமிருந்த நீரைச் சிறிதென்னாது சிலவென்றலும், அடுப்பின்கீழ்ப் புடையடுப்பை மீயடுப்பென்றலும், பிறவும் வழக்காறும்.

பொற்கொல்லர் பொன்னைப் பறியென்றலும், வண்ணக்கர் காணத்தை நீலமென்றலுமுதலாகிய குழுவின் வந்த குறிநிலைவழக்கும், கண்கழீஇ வருதும் கான்மேனீர் பெய்து வருதுமென்றுந்தொடக்கத்து இடக்கரடக்குந் தகுதியென்றும், மரூஉமுடிபை வழக்காறென்றும், உரையாசிரியர் அமைத்தாராலெனின்;—குழுவின் வந்த குறிநிலைவழக்குச் சான்றோர்வழக்கின்கண்ணும் அவர்செய்யுட்கண்ணும் வாராமையின் அமைக்கப்படாவாகலானும், இடக்கரடக்கு "அவையல் கிளவி" எனவும் "மறைத்தனர்காலை" எனவும் முன்னரமைக்

கப்படுதலானும், மரூஉமுடிபு எழுத்ததிகாரத்துக் கூறப்பட்ட மையானும், அவர்க்கது கருத்தன்றென்பது. கருமை முதலாயின ஒருநிகரனவன்மையிற் காக்கையொடு சார்த்திக் களம்பழத்தை விதந்த துணையல்லது காக்கைக்கு வெண்மை நேராமையிற் காக்கையிற்கரிது களம்பழம் என்புழிக் கரிது வெளிதாயிற்றன்று. கிழக்குமேற்கெனபன வரையறையின்றி ஒன்றனொடு சார்த்திப் பெறப்படுவனவாதலின், ஒன்றற்குக் கீழ்பாலதனைப் பிறிதொன்றற்கு மேல்பாலதென்றலும் வழுவன்று. சிறுவெள்வாயென்பது இடுகுறி. அதனானிவை வழக்காறென அமைக்கப்படாவாயினும், உரையாசிரியர் பிறர்மதமுணர்த்திய கூறினாரென்பது.

தத்தமக்குரிய வாய்பாட்டானன்றிப் பிறவாய்பாட்டாற் கூறுதல் வழுவாயினும், அமைகவென மரபுவழுவமைத்தவாறு. (கஎ)

கஅ. இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே.

இ - ள். இனப்பொருளைச் சுட்டுதலின்றிப் பண்படுத்து வழங்கப்படும் பெயர் வழக்குநெறியல்ல செய்யுணெறி. எ-று,

உ - ம். 'செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும் வெண்டிங்களுள் வெயில் வேண்டினும்' எனவரும்.

பலபொருட்குப் பொதுவாகிய சொல்லன்றே ஒருபொருட்குச் சிறந்த பண்பான் விசேடிக்கப்படுவது; ஞாயிறு திங்களென்பன பொதுச்சொல்லன்மையிற் செஞ்ஞாயிறென்றும் வெண்டிங்களென்றும் விசேடிக்கப்படாவாயினும், செய்யுட்கண் அணியாய் நிற்றலின், அமைகவென்றார்.

பெருஞ்சோற்றன் பெருஞ்சாத்தன் என இல்குணமடுத்து வழக்கின்கண்ணும் இனஞ்சுட்டாது வருதலிற் செய்யுளாறென்றல் நிரம்பாதெனின்;—இவை இனஞ்சுட்டாமையின் வழுவாயினவல்ல, இல்குணமடுத்தலின் வழுவாயின. இனஞ்சுட்டலாவது இனத்தைச் சுட்டி அவற்றினின்றும் விசேடிக்கப்

படுதல். வெண்மை முதலாயின விசேடித்தலாவது அக்குணமில்லா இனப்பொருளினீக்கி அக்குணமுடையதனை வரைந்து சுட்டுவித்தலன்றே; சுட்டப்படுவதன்கண் அக்குணமிலையாயின் வரைந்து சுட்டுவிக்குமாறென்னை! அதனால் விசேடிக்கற்பாலது விசேடியாது நின்றதன்றாகலின் ஈண்டைக்கெய்தா; "வழக்கினாகிய வுயர்சொற் கிளவி" என்புழி ஒன்றென முடித்தலென்பதனான் அமைக்கப்படும்.

குறுங்கூலி, குறுந்தடி என்னுந்தொடக்கத்தன கூலி தடியெனப் பிரிந்து நில்லாமையிற் பண்புகொள் பெயராகா. பண்படாது, வடவேங்கடந்தென்குமரி, முட்டாழை, கோட்சுறா எனத் திசையும் உறுப்புந் தொழிலுமுதலாய அடையடுத்து இனஞ்சுட்டாது வருவன ஒன்றெனமுடித்தலென்பதனாற் செய்யுளாறென அமைத்துக்கொள்ளப்படும்.

ஒன்றனதாற்றலான் ஒன்று பெறப்படுதலின், வழக்காறல்லவென்றானுஞ் செய்யுளாறென்றானும் கூறவமையுமெனின்;—உய்த்துணர்வது சொல்லில்வழியென மறுக்க.

பண்புகொள்பெயர் இனங்குறித்து வருதன்மரபு; அம்மரபு வழக்கின்கண் வழுவற்கவென்றும், செய்யுட்கண் வழுவமைக்கவென்றுங் கூறியவாறாயிற்று. (கஅ)

கசு. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்.

இ-ள். தன்னியல்பிற்றிரியாது நின்ற பொருளை, அதனியல்பு கூறுங்கால் ஆக்கமுங் காரணமுங்கொடாது, இற்றெனச் சொல்லுக. எ-று.

இயல்பாவது பொருட்குப் பிற்றோன்றாது உடனிகழ்ந்த தன்மை.

உ-ம். நிலம் வலிது; நீர் தண்ணிது; தீ வெய்து; வளியுளரும்; உயிருணரும் என வரும்.

இற்றென்பது வினைக்குறிப்புவாய்பாடாயினும், உளரும், உணரும் என்னுந்தெரிநிலைவினையும், இற்றென்னும் பொருள்பட நிற்றலின், இற்றெனக் கிளத்தலேயாம்.

நிலம் வலிதாயிற்று என இயற்கைப்பொருள் ஆக்கம் பெற்று வருமாலெனின்;—சல்லுமிட்டு கையும் பெய்து குற்றுச் செய்யப்பட்ட நிலத்தை வலிதாயிற்றெனின், அது செயற்கைப்பொருளேயாம். நீர்நிலமும் சேற்றுநிலமும் முன் மிதித்துச் சென்று வன்னிலமிதித்தான் நிலம் வலிதாயிற்றென்ற வழி மெலிதாயது வலிதாய் வேறுப்பட்டதென ஆக்கம் வேறுபாடு குறித்து நிற்றலின் இயற்கைப்பொருள் ஆக்கமொடு வந்ததன்றாம். அல்லது நிலத்திற்கு வன்மை விகாரமென்றுணர்ந்து நிலம் வலிதாயிற்றென்னுமாயின், திங்கள் கரிதென்றது போலப் பிறழவுணர்ந்தார்வழக்காய் ஆராயப்படாதென்க.

**உ0. செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறல்.**

இ - ள். காரணத்தாற்றன்மை திரிந்த பொருளை, அதுதிரிபு கூறுங்கால, ஆக்கங்கொடுத்துச் சொல்லுக. எ-று.

ஆக்கமொடு கூறலென்பதனாற் றிரிபு கூறுதல் பெற்றாம். என்னை? அதன்கணல்லது வாராமையின்.

இயற்கைப்பொருள் செயற்கைபொருளென்பன இருபெயரொட்டுப்பண்புத்தொகை. (உ0)

**உக. ஆக்கந் தானே காரண முதற்றே.**

இ - ள். செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூறுங்கால், காரணத்தை முற்கூறி அதன்வழியாக்கங்கூறுக. எ-று.

தானேயென்பது செய்யுட்சுவை குறித்து நின்றது.

உ - ம். கடுக்கலந்த கைபிழிபெண்ணெய் பெற்றமையான் மயிர் நல்லவாயின; எருப்பெய்திளங்களை கட்டு நீர் கால்யாத்தமையாற் பைங்கூழ் நல்லவாயின; நீர் கலந்தலானில மெலிதாயிற்று; தீச்சார்தலானீர் வெய்தாயிற்று என வரும்.

மயிர் நல்ல, பயிர் நல்ல எனச் செயற்கைப்பொருள் ஆக்கம் பெறாது வந்தனவாலெனின்;—அந்நன்மை பொருட்குப் பின்றோன்றாது உடன்றோன்றி நிற்றல் இயற்கையேயாம்; அவ்வாறன்றி, முன்றீயவாயப் பின் நல்லவாயினவேனும், தீயநிலைமை காணாதான் மயிர் நல்ல பயிர் நல்லவென்றுற படுமிழு

க்கென்னை? அது செயற்கையாவதுணர்ந்தான் ஆக்கங்கொ டாது சொல்லினன்றே வழுவாவதென்க.

செயற்கைப்பொருளை ஆக்கமுங் காரணமுங்கொடுத்துச் சொல்லுகவென்பதே கருத்தாயிற் சூத்திரம் ஒன்றாகற்பாற் றெனின்; — அவ்வாறோதின், ஆக்கமுங்காரணமுஞ் செயற் கைப்பொருட்கணுத்தவாயினவென்பது பட்டுக் "காரண மின்றியும் போக்கின்று" என்பதனோடு மாறுகோடலானும், காரணஞ்செயற்கைப்பொருளதோ ஆக்கத்ததோவென ஐயுற ப்படுதலானும், ஆக்கந் தானே காரண முதற்றெனப் பிரித் துக் கூறினானென்பது.

இயற்கைப்பொருள் ஆக்கமுங்காரணமும் பெறாது வருத லுஞ் செயற்கைப்பொருள் அவை பெற்று வருதலும் இலக் கணமெனவே, இவ்வாறன்றி வருவன மரபுவழுவென்பதாம். நுண்ணுணர்வுடையார்க்குத் தம்மரபினவேயென அடங் குவவாயினும், ஏனையுணர்விலார்க்கு இவ்வேறுபாடுணரலாகா மையின், விரித்துக் கூறினார். (உக)

உஉ. ஆக்கக் கிளவி காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.

இ - ள். காரணமுதற்றெனப்பட்ட ஆக்கச்சொற் காரண மின்றி வரினுங் குற்றமின்று வழக்கினுள். எ-று.

உ - ம். மயிர் நல்லவாயின; பயிர் நல்லவாயின என வரும்.

வழக்கினுட்காரணமின்றியும் வருமெனவே, செய்யுளுட் காரணம் பெற்றே வருமென்பதாம். உ - ம். 'பரிசிலர்க் கரு ங்கல நல்கவுங் குரிசில வலிய வாகுநின் றாடோய் தடக்கை.' எ-ம். 'குருதி படிந்துண்ட காக முருவிழந்து குக்கிற் புறத்த சிரல்வாய.' எ-ம். 'கருமுருகன் சூடிய கண்ணி - திருநுதா- லின்றென் குரறகூந்தற் பெய்தமையாற் பண்டைத்தன் - சா யல வாயின தோள்.' எ-ம். காரணம் பெற்று வந்தவாறு க ண்டுகொள்க. குக்கிற்புறத்த, சிரல்வாய என ஆக்கமின்றி வந்தனவாலெனின்;—தொகுக்கும்வழித் தொகுத்தலென்ப

தனுன் ஆண்டாக்கந்தொக்கு நின்றதென்பது. 'அரியகானஞ் சென்றோர்க் கெளிய வாகிய தடமென் றோளே.' எ-ம். 'நல்லவை யெல்லாஅந் தியவாந் தியவு - நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.' எ-ம். செயற்கைப்பொருள் செய்யுளுட்காரண மின்றி வந்தனவாலெனின்;—களவுகாலத்தரியன இக்காலத் தெளியவாயினவெனபது கருத்தாகலான், இக்காலங்காரண மென்பது பெறப்படுதலானும், ஊழாலென்பது அதிகாரத் தான் வருமாகலானும், அவை காரணமின்றி வந்தனவென படாவென்பது. (உஉ)

உ௩. பான்மயக் குற்ற வையக் கிளவி
தானறி பொருள்வயிற் பன்மை கூறல்.

இ - ள். திணை துணிந்து பாறுணியாத ஐயப்பொருளை அவ்வத்திணைப்பன்மையாற்கூறுக. எ-று.

கிளவியென்பது ஈண்டுப் பொருளை.

ஐயப்பொருளாவது சிறப்பியல்பாற்றோன்றுது பொதுவியல்பாற்றோன்றிய பொருள்.

உ - ம். ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டிகொல்லோ இதோ தோன்றுவார். எ-ம். ஒன்றோ பலவோ செய் புக்கன. எ-ம். வரும்.

திணையயினென்னுது தானறிபொருள்வயினென, பொதுப்படக் கூறியவதனுன், ஒருவன்கொல்லோ பலர்கொல்லோ கறவையுய்த்த கள்வர். எ-ம். ஒருததிகொல்லோ பலர்கொல்லோ இக்குருக்கத்திநீழல் வண்டலயர்ந்தார். எ-ம். திணையோடு ஆண்மை பெண்மை துணிந்த பன்மையொருமைப் பாலையமுங்கொள்ளப்படும்.

ஒருமையாற்கூறின் வழுப்படுதலுக்கிப் பன்மை கூறலென வழாநிலைபோலக் கூறினேனும், ஒருமையைப் பன்மையாற் கூறுதலும் வழுவாதலின், ஐயப்பொருண்மேற்சொன னிகழுமாறுணர்த்திய முகத்தாற் பால்வழுவமைத்தவாறும்.

உச. உருபென மொழியினு மஃறிணைப் பிரிப்பினு
மிருவீற்று முரித்தே சுட்டுங் காலை.

இ - ள். உருபெனச் சொல்லுமிடத்தும், ஒருமையும் பன்மையுமாகப் பிரிக்கப்படும் அஃறிணைப்பொதுச்சொற்கண்ணும்,இவ்விருகூற்றினும் ஐயப்புலப்பொதுச்சொல்லாதலுரித்து. எ-று. எனவே, ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டிகொல்லோ தோன்றுகின்றவுருபு. எ-ம். ஒன்றுகொல்லோ பலகொல்லோ செய் புக்கவுருபு. எ-ம். குற்றிகொல்லோ மகன்கொல்லோ தோன்றுகின்றவுருபு. எ-ம். ஒன்றுகொல்லோ பலகொல்லோ செய் புக்க பெற்றம். எ-ம். சொல்லுகவென்பதாம்.
ஐயக்கிளவியென்பது அதிகாரத்தாற்பெற்றாம்.

உருபினுமென்னாது உருபெனமொழியினுமென்றதனான், உருபின் பொருளவாகிய வடிவு பிழம்பு பிண்டமென்னுந் தொடக்கத்தனவுங்கொள்க.

பன்மைகூறல் உயர்திணைப்பாலையத்திற்குரித்தென்றும், உருபென மொழிதல் திணையையத்திற்குரித்தென்றும், உரையாசிரியர் கூறினாலெனின்;—அவை அவற்றிற்கே உரியவாயின், அஃறிணைப்பிரிப்பென்றாற்போல உயர்திணைப்பான்மையக்கூற்றவென்றும், திணையையத்தென்றும், விதந்தோதுவர் ஆசிரியர், அவ்வாறோதாமையானும், நடையுள் அவை பொதுவாய் வருதலானும், அவை போலியுரையென்க.

ஒருவன்கொல்லோ பலர்கொல்லோ என்றற்றொடக்கத்து உயர்திணைப்பன்மையொருமைப்பாலையத்திற்கு உருபு முதலாயினவேலாமையும், திணையையத்திற்கும் ஏனைப்பாலையத்திற்கும் ஏற்புடைமையும், சுட்டியுணர்கவென்பது போதரச் சுட்டுங்காலையென்றார். சுட்டுதல் கருதுதல். (உச)

உரு. தன்மை சுட்டலு முரித்தென மொழிப
வன்மைக் கிளவி வேறிடத் தான.

இ - ள். ஐயுற்றுத் துணியும்வழி அன்மைக்கிளவி அன்மைத்தன்மையைச் சுட்டி நிற்றலுமுரித்தென்று சொல்லுவர், ஆ

ணிந்து கூறிக்கொள்ளப்பட்ட பொருளின் வேறாய பொருளிடத்து. எ-று. என்றது, குற்றிகொல்லோ மகன்கொல்லோ என்றானும், ஒருவன்கொல்லோ ஒருத்திகொல்லோ என்றானும், ஒன்றுகொல்லோ பலகொல்லோ எனறானும், ஐயநிகழ்ந்தவழித் துணிதலுமுண்டு; பிறகடையுட்டுணிந்தவழி மறுக்கப்படும் பொருண்மேல் அன்மைத்தன்மையேற்றினுமமையுமென்றவாறு.

மகனென்று துணிந்தவழிக் குற்றியன்று மகனெனவும், குற்றியென்று துணிந்தவழி மகனல்லன் குற்றியெனவும், ஆண்மகனென்று துணிந்தவழிப் பெண்டாட்டியல்லள் ஆண்மகனெனவும், பெண்டாட்டியென்று துணிந்தவழி ஆண்மகனல்லன் பெண்டாட்டியெனவும், ஒன்றென்று துணிந்தவழிப் பலவல்ல ஒன்றெனவும், பலவென்று துணிந்தவழி ஒன்றன்று பலவெனவும், மறுக்கப்படும் பொருண்மேல் அன்மைக்கிளவி அன்மைத்தன்மையைச் சுட்டி நின்றவாறு.

உம்மை எதிர்மறையாகலான், வேறிடத்துச் சுட்டாமையே பெரும்பான்மையென்பதாம். ஆகவே, இவ்வுருபு குற்றியன்று மகனென ஐயப்புலமாகிய பொதுப்பொருண்மேலானும், குற்றியல்லன் மகனெனத் துணிபொருண்மேலானும், அன்மைக்கிளவி அன்மைசுட்டிநிற்றல் பெரும்பான்மையென்பதாம்; என்னை? வேறிடத்துச் சுட்டாமையாவது ஈண்டுச் சுட்டலேயாகலான்.

குற்றியன்று மகன் என்றவழி மகனென்பது நின்று வற்றுமெனின்;—“எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி-யவ்வியல் நிலையல் செவ்வி தென்ப” என்பதனான் எழுவாய் வெளிப்படாது நிற்றலுமுண்மையான், வெளிப்படாது நின்ற இவனென்னுமெழுவாய்க்கு அது பயனிலையாகலின், நின்று வற்றுதல் யாண்டையதென்க. அல்லனவற்றிற்குமீதொக்கும்.

குற்றியல்லன் என்புழிக் குற்றியென்பது அல்லனென்னுஞ் சொல்லோடியைந்தவாறென்னையெனின்;—இவ்வுருபு குற்

யாமென்ற வழி ஆமென்பதனோடு குற்றியென்பதூஉம் எழுவாயாய் நின்றே இயைந்தாற்போல, இவன் குற்றியல்லன் என்புழி ஆமென்பதனெதிர்மறையாகிய அன்மைக்கிளவியோடும் குற்றியென்பது எழுவாயாய் நின்றேயியையுமென்பது. எழுவாயாயியைதலின்றே யானீயல்லன் என்புழி நீயென்பது வேற்றுமைக்கேற்ற செய்கை பெறாது நின்றதெனக. (௨௫)

௨௬. அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.

இ - ள். பண்புச்சொல்லும், சினைச்சொல்லும், முதற்சொல்லுமென மூன்றுங் கூறப்பட்ட முறை மயங்காமல், வழக்கைப் பொருந்தி நடக்கும், வண்ணச்சொல்லோடு தொடர்ந்த சினைச்சொல்லையுடைய முதற்சொல். எ-று.

வடிவு முதலாகிய பிறபண்புமுளவேனும், வண்ணப்பண்பினது வழக்குப்பயிற்சி நோக்கி வண்ணச்சினைச்சொலென்றார்.

உ - ம். செங்கானாரை; பெருந்தலைச்சாத்தன் எனவரும். கால்செந்நாரை, தலைபெருஞ்சாத்தன் என முறை மயங்கிவரின், மரபுவழூவாமென்க.

மூன்றும் மயங்காது வருமெனவே, 'கவிசெந் தாழைக் குவிபுறத் திருந்த - செவிசெஞ் சேவலும் பொருவலும் வெருவா - வாய்வன் காக்கையுங் கூகையுங் கூடி' எனச் செய்யுளுள் மயங்கியும் வரப்பெறுமென்றவாறும். செவிசெஞ்சேவல். வாய்வன்காக்கை என்பன, செஞ்செவிச்சேவல், வல்வாய்க் காக்கை என்னும் பொருள்பட நின்றமையின், வண்ணச்சினைச்சொன்மயக்கமாயின. அஃதேல், சினையடையாகிய செம்மையும் வன்மையும்முதலடையாயினவாறென்னையெனின்;— சினையொடு முதற்கொற்றுமையுண்மையான் அவை முதலொடுமியையுமென்பது.

‘பெருந்தோட் சிறுநுசுப்பிற் பேரமர்க்கட் பேதை’ என்புழி மூன்றும்வழி முதல் கிடவாது பின்னும அடையுஞ்சினையும் புணர்த்தமையான் வண்ணச்சினைச்சொற்செய்யுளுண் மயங்கி வந்ததென்று உரையாசிரியர் கூறினாலெனின்;—மூன்றும்வழிப் புணர்க்கப்படும் பேதையென்னுமுதற்சொல் பேரமர்க்கண்ணென்னுந்தொகையோடு வேற்றுமைப்பொருள்படத் தொக்கு, அத்தொகை சிறுநுசுப்பென்னுந்தொகையோடும் அப்பொருள்படத் தொக்கு, ஒருசொல்லாய்; ‘பெருந்தோட்பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி’ என்றாற்போல மூன்றும்வழிப் பிறசொல்லடுத்துப் பேதையென்று முதல் கிடந்ததெனவேபடுதலின், மயக்கமின்மையான், அவ்வுரைக்கது கருத்தன்றென்க. அன்றிப் பெருந்தோண்முதலாகிய மூன்றும் பலபெயரும்மைத்தொகைபடத் தம்முட்டொக்கு ஒருசொல்லாய்ப் பின் பேதையென்பதனோடு வேற்றுமைத்தொகைபடத் தொக்கனவெனினும், அவை உம்மைத்தொகைபடத் தொகாது நின்று பேதையென்பதனோடு வேற்றுமைத்தொகைபட ஒருங்கு தொக்கனவெனினும், தம்முளியையாது பேதையென்பதனோடியைதலின், ஆண்டும் மயக்கமின்மையறிக. அஃதேல், இவ்வாறு வருதல் வழக்கிற்குமுரித்தோவெனின்:—அடுக்கிய அடையுஞ்சினையும் பொருமை நீக்குதற்கன்றி அணி குறித்து நிற்றலிற் செய்யுட்கே உரித்தென்க. சிறுபைந்தூவி எனச் சினையொடு குணமிரண்டடுக்கி வருதல் செய்யுட்குரித்தென்றும், இளம்பெருங்கூத்தன் என முதலொடு குணமிரண்டடுக்கி வருதல் வழக்கிற்குரித்தென்றும், பிறர்மதமேற்கொண்டு கூறினார். ஒன்றாக பலவாக இனஞ்சுட்டாதன செய்யுட்குரியவாம், இனஞ்சுட்டி நின்றன வழக்கிற்குரியவாமெனபதே உரையாசிரியர்கருத்தென்க. அன்றிப் பிறநூன்முடிந்தது தானுடன்படுதலென்பதனாற் சினையொடு குணமிரண்டடுக்கல் செய்யுளாறென்று கொள்ளினுமமையும்; “முதலொடு குணமிரண் டடுக்கல் வழக்கியல் - சினையொ டடுக்கல் செய்யு ளாறே” என்றாராகலின்.

வண்ணச்சினைச்சொலென்றதனான் வண்ணமுஞ் சினையு முதலுங்கூறுதற்கண்ணது இவ்வாராய்ச்சியென்பதாம். எனவே, இளம்பெருங்கூத்தன், பெரும்பலாக்கோடு என்னுந்தொடக்கத்தன வேண்டியவாறு வரப்பெறுமென்றவாறு.

மயங்காது வருகவென்ன மரபுவழுக் காத்தவாறு. (உ௬)

உ௭. ஒருவனைக் கூறும் பன்மைக் கிளவியு
மொன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி
யிலக்கண மருங்கிற் சொல்லா றல்ல.

இ - ள். ஒருவனையும் ஒருத்தியையுஞ் சொல்லும் பன்மைச்சொல்லும், ஒன்றனைச் சொல்லும் பன்மைச்சொல்லும், வழக்கின்கணுயர்த்துச் சொல்லுஞ்சொல்லாம், இலக்கணமுறைமையாற்சொல்லுநெறியல்ல. எ-று.

உ-ம். யாம் வந்தேம்; நீயிர் வந்தீர்; இவர் வந்தார் என வரும்.

உயர்சொல் உயர்க்குஞ்சொல்.

உயர்சொற்கிளவியென்புழிக் கூறியது கூறலன்மை பண்புத்தொகையாராய்ச்சிக்கட்சொல்லுதும்.*

தாம் வந்தார் தொண்டனார் எனப் பன்மைக்கிளவி இழித்தற்கண்ணும் வந்ததாலெனின்;—ஆண்டு உயர்சொற்றானே குறிப்புநிலையால் இழிபு விளக்கிற்றென்பது.

இலக்கணமருங்கிற் சொல்லாறல்லவென்றதனான் இலக்கணமன்மையும், வழக்கினாகியவுயர்சொற்கிளவியென்றதனான் வழுவன்மையுங்கூறினார்; கூறவே, வழுவமைதியென்றவாறாம். அஃதேல், வழக்கினாகிய வுயர்சொற்கிளவியெனவே வழுவமைதியென்பது பெறுதும்; இலக்கணமருங்கிற்சொல்லாறல்லவெனல்வேண்டாவெனின்;—அங்ஙனங்கூறிற் செய்யுள்வரைந்தவாறோ வழுவமைத்தவாறோவென ஐயமாக்கலின், அவ்வாறு கூறல்வேண்டுமென்பது.

---

*எச்சவியலில் "வண்ணத்தின் வடிவின்" என்னும் இருபசாஞ்சூத்திரவுரையிற்காண்க.

பன்மைக்கிளவியுமெனப் பொதுவகையாற்கூறினாரேனும், உயர்த்தற்கண் வழங்கப்பட்டு வரும் உயர்திணைப்பன்மையும் விரவுப்பன்மையுமே கொள்ளப்படுமென்றற்கு வழக்கினாகிய வென்றார்.

தன்வினைமுடித்தலென்பதனான் எருத்தையும் ஆவையும், எந்தை வந்தான், எம்மன்னை வந்தாள் எனவுயர்திணையாவுயர்த்து வழங்கலும், ஒன்றெனமுடித்தலென்பதனாற் கனனினாழல், கன்னியெயில் எனவஃறிணையாய் நின்று உயர்திணைவாய்பாட்டாற்கூறப்படுதலும், பண்புகொள்பெயர்க்கொடை, ழக்கினகத்தம், பெருங்கொற்றன், பெருஞ்சாத்தன் எனவில்குணமடுத்து உயர்சொல்லாய் வருதலுங்கொள்க. (உஎ)

உஅ. செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினு
நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்று
மம்மூ விடத்து முரிய வென்ப.

இ - ள். செலவுமுதலாகிய நான்குதொழிற்கண்ணும் நிலைபெறப் புலப்படாநின்ற அந்நான்குசொல்லும், தன்மை முன்னிலை படர்க்கையென்னும் அம்மூவிடத்திற்குமுரியவாய், வரும். எ-று.

செலவு முதலாகிய தொழிற்கட் சிறப்புவகையானிலைபெறாது பொதுவாய் வரும் இயக்குதல் ஈதலென்னுந்தொடக்கத்தனவற்றினிக்குதற்கு நிலைபெறத்தோன்றுமெனறார்.

முற்றும் எச்சமுமாந தொழிற்பெயருமாகி அத்தொழில்பற்றி வரும் வாய்பாடு பலவாயினும், அவையெல்லாம் இந்நான்கு தொழிலும்பற்றித்தோன்றுதலின், நான்குசொலலெனறார பொருள்வகையான் முன்னறியப்பட்டமையான் அந்நாற் சொல்லுமென்றார்.

இச்சூத்திரத்துள் ஈங்கு முதலாயின தன்மைக்கண்ணும்;ஆங்கு முதலாயின படர்க்கைக்கண்ணும், அடக்கப்பட்டன.

வினைச்சொன்மூன்றிடத்திற்குமுரியவாதல் வினையியலுட்பெறப்படுதலின் ஈண்டுக் கூறல்வேண்டாவெனின்;—ஆண்

டுப பாலுணர்த்துமீற்றான் இடத்திற்குரிமை கூறினார். ஈண்டு ஈற்றானன்றிச் செலவு முதலாயின முதனிலைதாமே இடங்குறித்து நிற்றலுடைமையான், இவ்வேறுபாடு ஆண்டுப் பெறப்படாமையின், ஈண்டுக் கூறினாரென்பது. அஃதேல், தருசொல் வருசொல் லாயிரு கிளவியுந் தன்மை முன்னிலை யாயிரிடத்த படர்க்கையிடத்த கொடைச்சொல்லுஞ் செலவுச்சொல்லும் எனவோதுக, இச்சூத்திரம் வேண்டாவெனின்;—அங்ஙனமோதின், இடஞ்சுட்டுமுதனிலை இந்நான்குமேயென்னும் வரையறை பெறப்படாமையின், இது வேண்டுமென்பது. அஃதேல், போதல் புகுதலென்னுந் தொடக்கத்தனவும் இடஞ்சுட்டுதலின் நான்கெனனும் வரையறை அமையாதெனின்;—அவை இக்காலத்துச் சிலவிடத்துப் பயின்று வருமாயினும் மூன்றிடத்திற்கும் பொதுவாகலினன்றே, ஆசிரியர் அந்நாற்சொல்லுமென இவற்றையே வரைந்தோதுவாராயிற்றென்பது. (உஅ)

உகூ. அவற்றுள், தருசொல் வருசொல் லாயிரு கிளவியும்
தன்மை முன்னிலை யாயி ரிடத்த.

இ - ள். கூறப்பட்ட நான்கு சொல்லுள், தருசொல்லும் வருசொல்லுமாகிய இரண்டும் தன்மை முன்னிலையாகிய இரண்டிடத்திற்குமுரிய. எ - று.

உ - ம். எனக்குத் தந்தான்; நினக்குத் தந்தான்; என்னுழை வந்தான்; நின்னுழை வந்தான். எ - ம். ஈங்கு வந்தான். எ - ம். வரும்.

தரப்படும் பொருளையேற்பான் தானும் முன்னின்றானுமாகலானும், வரவுத்தொழில் தன்கண்ணும் முன்னின்றான்கண்ணுஞ் சென்று முடிதலானும், ஈற்றானன்றி இவ்விருசொல்லுந் தன்மை முன்னிலைக்குரியவாயினவாறு கண்டுகொள்க.

“நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந் - தன்மை முன்னிலை படர்க்கை யென்னு - மம்மூ விடத்து முரிய” என்று மூன்றிடத்திற்கும வரைவின்றியாமெனவுங்கொள்ள வைத்த

மையான், 'பெருவிற லமரர்க்கு வென்றி தந்த.' எ-ம். 'தூண்டில் வேட்டுவன் வாங்கவா ராது.' எ-ம். மயங்கி வருவனவும் அமைக்கப்படும். அஃதேல், படர்க்கைச்சொன்மயக்கமுமெய்துமாலெனின்;—அஃதெச்சவியலுட் பெறப்படுதலின், ஈண்டுக் கொள்ளப்படாதென்க.

ஒருவன் செய்நிலத்து நின்றும் அணிநிலத்துப் புகுந்தானாயிற் செய்நிலநோக்க அணிநிலம் ஈங்கெனப்படுதலின், அவன்கண் வந்தான், ஆங்கு வந்தான் என்பன இலக்கணமேயாம். இந்நான்குங்கொடைப்பொருளனவென்று உரையாசிரியரொலெனின்;—தூண்டில் வேட்டுவன் வாங்கவாராது எனபதனை அமைத்தாராகலின், அவர்க்கது கருத்தன்றென்க.

. தரவு வரவையுணர்த்துவனவற்றைத் தருவதும் வருவதும்போலத் தருசொல், வருசொலென்ற். (உ௯)

௩0. ஏனை யிரண்டு மேனை யிடத்த.

இ - ள். செலவுசொல்லுங் கொடைச்சொல்லும் படர்க்கைக்குரிய. எ-று.

உ - ம். அவன்கட்சென்றான்; ஆங்குச் சென்றான்; அவற்குக் கொடுததான் என வரும்.

செலவுதொழில் படர்க்கையான்கட்சென்றுறுதலானும், கொடைப்பொருளேற்பான் படர்க்கையானாகலானும், ஈறுமன்றி இவ்விருசொல்லும படாக்கையிடததிறகுரியவாயின வாறு கண்டுகொள்க. (௩0)

௩க. யாதெவ னென்னு மாயிரு கிளவியு
மறியாப் பொருள்வயிற் செறியத் தோன்றும்.

இ - ள். யாது எவனென்னும் இரண்டுசொலலும் அறியாப்பொருளிடத்து வினாவாய் யாபபுறத தோன்றும். எ-று.

உ - ம். இச்சொறகுப் பொருள் யாது; இச்சொற்குப் பொருளெவன் என வரும்.

எவ்வகையானும் அறியாப்பொருள் வினவப்படாமையின், ஈண்டறியாப்பொருளென்றது பொதுவகையான் அறியப்பட்டுச் சிறப்புவகையான் அறியப்படாத பொருளையாம்.

யா. யாவை, யாவன், யாவள், யாவர், யார், யாண்டு, யாங்கு என்னுந்தொடக்கத்தன திணையும் பாலும் இடமுமுதலாகிய சிறப்புவகையானுஞ் சிறிதறியப்பட்டபொருளனவாகலின, அறியாப்பொருள்வயிற்செறியத்தோன்றாமையான், இவற்றையே விதந்து அறியாப்பொருள்வயிற்செறியத்தோன்றுமென்றார். இவையுந் திணையும் பாலுங்குறித்து வருதலிற் சிறப்புவகையானும் அறியப்பட்ட பொருளனவேயன்றோவெனின;— இச்சொற்குப் பொருள் யாது, எவன் என்று வினையவறி, இருப்பானும், அஃறிணையொருமையும் பொதுமையுந்துணிந்து அவற்றுட்பகுதியறிதற்கு வினவுகின்றானல்லன் பொதுவகையான வினவுகின்றானென்று உணரும். அவ்வாறுதல் வழக்கினகத்து வினவுவானதும் இறப்பானதுங் குறிப்போடுபடுத்துணர்க.

முன்னர் வழுவமைத்தற்கு அவை இன்னபொருட்குரிய வென அவற்றதிலக்கணங்கூறியவாறு. (௩௧)

௩௨. அவற்றுள், யாதென வரூஉம் வினாவின் கிளவி
அறிந்த பொருள்வயி னையந் தீர்தற்குத்
தெரிந்த கிளவி யாதலு முரித்தே.

இ - ள். கூறப்பட்ட இரண்டனுள் யாதென்னும் வினாச்சொல் அறியாப்பொருள்வினாவாதலேயன்றி அறிந்த பொருட்கண் ஐயநீக்குதற்கு ஆராய்ந்த சொல்லாதலுமுரித்து எ - று.

உ - ம். இம்மரங்களுட்கருங்காலி யாது; நம்மெருதைந்தனுட்கெட்டவெருதியாது என வரும்.

நமருள் யாவர் போயினார்; அவற்றுளெவ்வெருது கெட்டது எனப் பிறவும் அறிந்த பொருள்வயினையந்தீர்தற்குத் தெரிந்த கிளவியாய் வருதலின், அவையும் ஈண்டமைக்கற்பாலவெனின;—அவை அறிந்தபொருள்வயினையந்தீர்தற்கல்லது யாண்டும் வாராமையின், ஈண்டமைக்கப்படாவென்பது.

இதனுன் வினாவழுவமைத்தவாறு. (௩௨)

௩௩. இனைத்தென வறிந்த சினை முதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்.

இ - ள். கேட்போரான் இத்துணையெனவறியப்பட்ட சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும் வினைப்படுதொகுதிக்கண் உம்மை கொடுத்துச் சொல்லுக. எ-று.

உ - ம். 'பன்னிரு கையும் பாற்பட வியற்றி.' எ-ம். 'முரசு முழங்கு தானை மூவருங் கூடி.' எ-ம். வரும்.

அறிந்த சினைமுதற்கிளவியெனவே, முன்னறியப்படாக்கால், முருகற்குக் கை பன்னிரண்டு, தமிழ்நாட்டிற்கு வேந்தர் மூவர் என உம்மை பெறாது வருமெனபதாம்.

ஐந்தலைநாகமுடன்றது; நான்மறைமுதல்வர் வந்தார் என்புழி, இனைத்தெனவறிந்த சினைமுதற்கிளவியாயினும், வினைப்படுதொகுதியன்மையின், உம்மை பெறாவாயின. அஃதேல், பன்னிருகையுமென்புழியும் தொகுதிப்பெயர் வினையொடு தொடராது கையென்பதனோடொட்டி நிற்றலின் வினைப்படுதொகுதியன்றாம் பிறவெனின்;—ஒட்டி நின்றதாயினும், ஐந்தலைநாகம், நான்மறைமுதல்வர் என்பனபோலாது இருசொல்லும் ஒருபொருண்மேல் வருதலின்றி கையென்பதனோடியைந்த இயற்றியென்னும் வினை தொகுதிப்பெயரோடுமியைந்ததாம்; அதனான் அது வினைப்படுதொகுதியாமென்பது. அஃதேல், கண்ணிரண்டு நொந்த; [illegible] எனப் பெயர் கொண்டவழி உம்மை பெறா[illegible]வெனின்;—பெயராக வினையாக முடிக்குஞ்சொல்லொடு படுதலொன்றி வினைப்படுதலென்றாகலின், அவையும் வினைப்படுதொகுதியாமென்க. ஐந்தலை, நான்மறை என்பனவற்றிற்கு, நாகம், முதல்வர் என்பன முடிக்குஞ்சொல்லன்மையின், வினைப்படுதொகுதியாகாமையுணர்க.

சிறப்புடைப்பொருளைத் தானினிது கிளத்தலென்பதனாற் சினைமுதற்கிளவியென்றாராயினும், சிறவாத பண்பு முதலாயினவுங் கொள்ளப்படும். உ-ம். சுவையாறுமுடைத்திவ்வடிசில்; கதியைந்துமுடைத்திக்குதிரை என வரும்.

'இருதோடோழர்பற்ற.' எ-ம். 'ஒண்குழையொன்றொல் கியெருத்தலைப்ப' எ-ம். உம்மையின்றி வந்தனவாலெனின்;— ஆண்டும்மை செய்யுள்விகாரத்தாற்றொக்கு நின்றனவென் பது. (௩௩)

௩௪. மன்னாப் பொருளு மன்ன வியற்றே.

இ - ள். இல்லாப்பொருட்கும் இடமுங் காலமும் பொரு ளுமுதலாயினவற்றொடு படுத்து இன்மை கூறுதற்கண் உம் மை கொடுத்துச் சொல்லுக. எ-று.

உ - ம். பவளக்கோட்டு நீலயானை சாதவாகனன் கோயி லுள்ளுமில்லை. எ-ம். குருடு காண்டல் பகலுமில்லை. எ-ம். 'உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா.' எ-ம். வரும். இல்லா ப்பொருட்கு ஒருகாலுநிலையுறுதலின்மையின், மன்னாப்பொ ருளென்றார்.

இடமுதலாயினவற்றொடு படுத்தற்கணென்பது ஏற்புழிக் கோடலென்பதனாற்பெற்றாம். அவற்றொடு படாதவழிப் பவ ளக்கோட்டுநீலயானையில்லை என உம்மையின்றி வருமென்ப தாம்.

முற்றும்மையம் எச்சவும்மையுமாகிய வேறுபாடுடையவே னும், உம்மை பெறுதலொப்புமையால், அன்னவியற்றென றார்.

இரண்டுசூத்திரத்தானும் மரபுவழுக் காத்தவாறு. (௩௪)

௩௫. எப்பொரு ளாயினு மல்ல தில்லெனி
னப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்.

இ - ள். யாதாயினு மொருபொருளையாயினும் ஒருவன் அ ல்லதில்லென்னும் வாய்பாட்டான் இல்லையெனலுறின், அப் பொருடன்னையே கூறாது அப்பொருளல்லாத பிறிது பொரு ள் கூறுக. எ-று.

உ - ம். பயறுளவோவணிகீர் என்று வினவியவழி, உழுந்த ல்லதில்லை; கொள்ளல்லதில்லை என அல்லதில்லென்பான் பிறிது பொருள் கூறியவாறு கண்டுகொள்க.

அல்லதில்லெனின்னெனப் பொருள்பற்றியோதினாராகலின், அல்லதில்லென்னும் வாய்பாடேயன்றி, உழுந்தன்றியில்லை உழுந்தேயுள்ளது என அப்பொருள்படுவனவெல்லாங்கொள்க. உழுந்தல்லதில்லையெனப் பிறிது பொருள் கூறாது பயறல்லதில்லையென அப்பொருள் கூறின், பயறுள்ள அல்லனவில்லையென மறுதலைப்பொருள்பட்டுச் செப்புவழுவாமாறறிக.

யாதானுமாக அல்லதில்லெனிற் பிறிதுபொருள் கூறுகவென எஞ்சாமற்றழீஇ யாப்புறுத்தற்கு எப்பொருளாயினுமென்றார்.

அல்லதில்லென்பதற்குத் தன்னுழையுள்ளதல்லதென்றும், அப்பொருளல்லாப்பிறிதுபொருள்கூறலென்பதற்கு இனப்பொருள் கூறுகவென்றும, உரைத்தாரால் உரையாசிரியரொனின்;—பயறுளவோவென்று வினயவழிப் பயறில்லையென்றற்படும் வழுவின்மையானும், உள்ளதல்லதென்றல் கருத்தாயின் ஆசிரியர் அல்லதெனக் குறித்த பொருள் விளங்காமையின் அகப்படச் சூத்திரியாராகலானும், பாம்புணிக்கருங்கல்லும் பயறும் விற்பானொருவனுழைச் சென்று பயறுளவோவென்றவழிப் பாம்புணிக்கருங்கலல்லதில்லையென்றால் இனப்பொருள் கூறாமையாற்பட்ட இழுக்கின்மையானும், அவை போலியுரையென்க. அல்லதூஉம், இனப்பொருள் கூறுகவென்பதே கருத்தாயின், அப்பொருளல்லா இனப்பொருள் கூறலென்னாது பிறிது பொருள் கூறலென்றார் ஆசிரியர், அதனானும் அஃதுரையன்மையுணர்க. (௩௫)

௩௬. அப்பொருள் கூறிற் சுட்டிக் கூறல்.

இ - ள். அல்லதில்லென்பான், பிறிது பொருள் கூறாது அப்பொருடன்னையே கூறுமாயின், இப்பயறல்லதில்லையெனச் சுட்டிக் கூறுக. எ - று.

பயறுளவோ என்றவழிச் சுட்டாது பயறல்லதில்லையெனின் பயறுள உழுந்து முதலாயினவில்லையெனப் பிறிது பொருளேற்பித்துச் செப்புவழுவாமென்பது.

அல்லதில்லென்பது அதிகாரத்தாற்பெற்றும்.

தன்னினமுடித்தலென்பதனுல், பசும்பயறல்லதில்லை; பெரும்பயறல்லதில்லை எனக் கிளந்து கூறுதலுங்கொள்க.

"செப்பும்வினுவும்" என்றதனுன் இவ்வேறுபாடினிது விளங்காமையானும், "பொருளொடுபுணராச்சுட்டு" என வழுவமைக்கின்றுராகலானும், இவற்றை விதந்து கூறினுர். (௩௬)

௩எ. பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்
பொருள்வேறு படாஅ தொன்றா கும்மே.

இ - ள். சுட்டானன்றிப் பொருள் வரையறுத்துணர்த்தாச் சுட்டுப்பெயராற் கூறினும், பொருள் வேறாகாது இப்பயறெனச் சுட்டிக் கூறிய பொருளேயாம். எ-று.

என்சொல்லியவாறேவெனின்; — இவையல்லதில்லையென்றவழி, இவையென்பது பயற்றையே சுட்டாது உழுந்து முதலாயினவற்றிற்கும் பொதுவாய் நிற்றலின் வழுவாமன்றே; ஆயினும், முன் கிடந்த பயறு காட்டி இவையென்றுனுகலின், அவற்றையே சுட்டுமுதலானமைக்கவெனச் செப்புவழுவமைத்தவாறு.

சாதியும் பண்புந் தொழிலுமுதலாயினபற்றி ஒருபொருளை வரைந்துணர்த்தாது எல்லாப்பொருண்மேலுஞ்சேறலிற் பொருளொடு புணராச் சுட்டுப்பெயரென்றுர்.

வேறுபடாது, ஒன்றுகும் என்பனவற்றுள் ஒன்றே அமையுமெனின்;—பொருள்வரைந்துணர்த்தும் பெயரோடு பொருள் வரைந்துணர்த்தாச் சுட்டுப்பெயர் வேறுபாடுடைத்தேனும், ஒருபொருண்மேன்முடிதலின் ஒருபொருட்டாமென்பது விளக்கிய பொருள் வேறுபடாதொன்றுகுமென்றுர்.

அப்பொருள் கூறுதற்கணென்னுது பொதுப்படக்கூறியவதனுல், பிறிதுபொருள் கூறும்வழியும் இவையல்லதில்லையெனச் சிறுபான்மை சுட்டுப்பெயராற்கூறினுமமையுமென்பதாம்.

யானைநூல் வல்லானொருவன் காட்டுட்போவுழி ஓர்யானை யடிச்சுவடு கண்டு இஃதரசுவாவாதற்கேற்ற இலக்கணமுடைத்து என்றவழியும, "இஃதோர் செல்வற் கொத்தனென மா னே மெல்லவென் மகன்வயிற் பெயர்தந் தேனே" என்புழியும், சுட்டுப்பெயர் பொருளோடு புணராது நிற்றலின், அவற்றையே அமைக்கின்றது இச்சூத்திரமென்பாருமுளர்.

௩௭. இயற்பெயர்க்கிளவியுஞ்சுட்டுப்பெயர்க்கிளவியும்
வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றிற்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவா
ரியற்பெயர் வழிய வென்மனார் புலவர்.

இ - ள். இயற்பெயருஞ் சுட்டுப்பெயரும் ஒன்றனை ஒன்று கொள்ளாது இரண்டும் பிறிது வினைகோடற்கு ஒருங்கு நிகழுங்காலந்தோன்றுமாயின், உலகத்தார் சுட்டுப்பெயரை முற்படக்கூறார், இயற்பெயர்க்கு வழியவாகக் கூறுவரென்று சொல்லுவர் புலவர். எ-று.

வினைக்கொருங்கியலுங் காலப்பெயர் எழுவாயாயும் உருபேற்றும் நின்றனவெல்லாங்கொளப்படும்.

வினைக்கென்புழி அவ்விருபெயரும் ஒருவினைகோடலுந் தனித்தனிவினைகோடலுங்கொள்க.

ஒருங்கியலுமென்றதனால் அவையொருபொருண்மேல் வருதல் கொள்க.

உ - ம். சாத்தன் அவன் வந்தான்; சாத்தன் வந்தான் அவன் போயினான். எ-ம். சாத்தி வந்தாள் அவட்குப் பூக் கொடுக்க. எ-ம். வரும்.

அவன்றான் வந்தான்; அவனொருவனுமறங்கூறும்; ஈதொன்று குருடு என இயற்பெயரல்லா விரவுப்பெயர்க்கும் உயர்திணைப்பெயர்க்கும் அஃறிணைப்பெயர்க்கும் வரையறையின்றிச் சுட்டுப்பெயர் முற்கிளக்கவும்படுதலின், இயற்பெயர்க் கிளவியென்றார். அவ்வாறவை முற்கிளக்கப்படுவது ஒருவி

னை கோடற்கண்ணேயென்பது. அற்றேல், அவை முடவன் வந்தான் அவற்குச் சோறு கொடுக்க; நங்கை வந்தாள் அவட்குப் பூக்கொடுக்க; குதிரை வந்தது அதற்கு முதிரை கொடுக்க எனத் தனித்தனி வினைகோடற்கண் சுட்டுப்பெயர் பிறகிளக்கப்படுதல், முன்னையதிற்குத் தன்னினமுடித்தலினானும் ஏனையிரண்டற்கும் இயற்பெயரொன்ற மிகையானுங்கொள்க.

பிறிதுவினைகோடற்கணெனவே, அவன் சாத்தன்; சாத்தனவன் என ஒன்றற்கொன்று பயனிலையாதற்கண்ணும், ஒருபொருண்மேல் நிகழுமெனவே, அவனுஞ்சாத்தனும் வந்தார்; சாத்தனும் அவனும் வந்தார் என வேறுபொருளவாய் வருதற்கண்ணும், யாது முற்கூறினும் அமையுமென்பதாம்.

வினையென்றது முடிக்குஞ்சொல்லை.

சுட்டுப்பெயர் யாண்டும் இயற்பெயர்வழிக் கிளக்கப்படுமென யாப்புறுத்தற்கு, முற்படக்கிளவாவொன்றும், இயற்பெயர்வழியவென்றுங்கூறினார்.

சுட்டுப்பெயரொன்றாயினும், அகர இகரச்சுட்டுப்பெயரே கொள்க.

இதுவுமோர்மரபுவழாநிலை. (௩௭)

௩௮. முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே.

இ - ள். இயற்பெயருஞ் சுட்டுப்பெயரும் வினைக்கொருங்கியலும்வழிச் சுட்டுப்பெயரை முற்படக் கூறுதல் செய்யுளுளுரித்து. எ-று.

உ - ம். 'அவனணங்கு நோய்செய்தா னாயிழாய் வேலன்—விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி - முகனமர்ந்—தன்னை யலர்கடப்பந் தாரணியி லென்னைகொல்—பின்னை யதன்கண் விளைவு' எனவரும். இதனுட்சேந்தனென்பதியற்பெயர்.

ஒருவினை கொள்வழிச் சுட்டுப்பெயர் முற்கிளத்தல் வந்தவழிக் கண்டுகொள்க.

இது செய்யுளிடத்து மரபுவழுவமைத்தவாறு. (௩௮

௪0. சுட்டுமுத லாகிய காரணக் கிளவியுஞ்
சுட்டுப்பெய ரியற்கையிற் செறியத் தோன்றும்.

இ - ள். சுட்டை முதலாகவுடைய காரணப்பொருண்மையை உணர்த்துஞ்சொல்லுஞ் சுட்டுப்பெயர்போலத் தன்னாற்சுட்டப்படும் பொருளையுணர்த்துஞ்சொற்குப் பின் கிளக்கப்படும். எ-று.

ஈண்டுச் சுட்டப்படும் பொருள் தொடர்மொழிப்பொருள்.

உ - ம். சாத்தன் கையெழுதுமாறுவல்லன் அதனாற்றந்தையுவக்கும்; சாத்தி சாந்தரைக்குமாறு வல்லள் அதனாற்கொண்டானுவக்கும் என வரும்.

சுட்டுமுதலாகிய காரணக்கிளவி உருபேற்று நின்ற சுட்டுமுதற்பெயரோடொப்பதோரிடைச்சொல்லாகலின், சுட்டுப்பெயரியற்கையிற்செறியத்தோன்றுமென்றார். செயற்கென்னும் வினையெச்சம், உருபேற்று நின்ற தொழிற்பெயரோடு ஒப்புமையுடைத்தாயினும், உருபும் பெயருமொன்றாகாது பகுப்பப் பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத்தலான், அதனின் வேறாயினாற்போல, இதுவும் உருபேற்ற சுட்டுப்பெயரோடு ஒப்புமையுடைத்தாயினும் பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத்தலான், வேறாகவே கொள்ளப்படுமென்பது. அஃதேல், சாத்தன் வந்தான் அஃதரசற்குத் துப்பாயிற்று எனத் தொடர்மொழிப்பொருளையுஞ் சுட்டி வருஞ்சுட்டுப்பெயர் கூறாது காரணக்கிளவியே கூறியதென்னையெனின்;— அவ்வாறு வருவன தன்னினமுடித்தலென்பதனானடங்கும். ஈண்டுச்சுட்டப்படும் பொருளையுணர்த்துவது பெயரன்மையின், சுட்டுப்பெயரியற்கையென்றது வழக்கின்கத்துச் சுட்டப்படும் பொருளையுணர்த்துஞ்சொற்குப் பின்னிற்றலுஞ் செய்யுளகத்து முன்னிற்றலுமாகிய அத்துணையேயாம். செய்யுட்கண் முன்னிற்றல் வந்தவழிக் கண்டுகொள்க. பொருள்பற்றாது பண்பு முதலாயினபற்றி வந்த சுட்டாதலின் வேறோதப்பட்டதென்று உரையாசிரியர் கூறினாரால் எனின்;—சாத்தன் வந்தான் அஃதரசற்குத் துப்பாயிற்று. எ-ம். கிழவன்

பிரிந்தான் அதனைக் கிழத்தியுணர்ந்திலள். எ-ம். எழுவாயா யும் ஏனைவேற்றுமையேற்றும் அச்சுட்டுப் பயின்று வருதலா ற் பண்பு முதலாயினவற்றைச் சுட்டுஞ்சுட்டெனப் பொது வகையாற் கூறாது காரணக்கிளவியென ஒருசார்வேற்றுமை க்குரிய வாய்பாடுபற்றி யோதுதல் குன்றக்கூறலாகலானும், சுட்டுப்பெயராயிற் சுட்டுமுத லாகிய காரணக்கிளவி என் றும் சுட்டுப்பெய ரியற்கையிற் செறியத் தோன்றும் என றுங் கூறுதல் பொருந்தாமையானும், அது போலியுரையெ ன்க.

இதனான் வழக்கின்கண் மரபுவழாநிலையுஞ் செய்யுட்கண் மரபுவழுவமைதியுமுணர்த்தினார். (சo)

சக. சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு
மியற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.

இ - ள். வினைக்கொருங்கியலும்வழிச் சிறப்பினாகிய பெ யர்க்கும் இயற்பெயரை உலகத்தார் முற்படக் கிளவார் பிற் படக் கிளப்பர். எ-று.

வினைக்கொருங்கியலுமென்பது ஏற்புழிக்கோடலென்பத னாற்பெற்றாம்.

ஈண்டுச் சிறப்பாவது மன்னர் முதலாயினாராற்பெறும் வரிசை.

உ - ம். ஏனாதிநல்லுதடன்; காவிதிகண்ணந்தை என வ ரும்.

உம்மையால், தவம், கல்வி, குடி, உறுப்பு முதலாயினவற் றானாகிய பெயருங்கொள்ளப்படும். அவை முனிவனகத்திய ன். எ-ம். தெய்வப்புலவன்றிருவள்ளுவன். எ-ம். சேரமான் சேரலாதான். எ-ம். குருடன்கொற்றன். எ-ம். வரும்.

திருவிரவாசிரியன்; மாந்தக்கொங்கேனாதி என இயற்பெய ர் முன் வந்தனவாலெனின்;—அவை தொகைச்சொல்லாகலா ன், அவற்றின்கண்ணதன்று இவ்வாராய்ச்சியென்பது. ஆ

ண்டியற்பெயர் முன்னிற்றல் பண்புத்தொகையாராய்ச்சிக்க ட்பெறுதும். (சுக)

சுஉ. ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பி னொன்றிட னிலவே.

இ - ள். ஒருபொருளைக் குறித்து வந்த பலபெயர்ச்சொற் கள், ஒருதொழிலே முடிபாகக் கூறாது பெயர்தோறும் வேறாகிய தொழில்களைக் கொடுத்து முடிப்பின், ஒருபொருள வாயொன்றா. எ-று.

ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான் என்னாது, ஆசிரியன் வந்தான் பேரூர்கிழா னுண்டான் செயிற்றியன சென்றான் என வேறுவேறுதொழில் கிளந்தவழி, வந்தானும் உண்டானுஞ் சென்றானும் ஒருவ னாகாது வேறாய்த் தோன்றியவாறு கண்டுகொள்க.

எந்தை வருக எம்பெருமான் வருக மைந்தன் வருக மணாளன் வருக என்புழிக் காதன்முதலாயினபற்றி ஒருதொழில் பலகால் வந்தமையல்லது வேற்றுத்தொழிலன்மையான், ஒருதொழில் கிளத்தலேயாமென்பது.

ஈண்டுத் தொழிலென்றது முடிக்குஞ்சொல்லை.

ஆசிரியன் வந்தானென்று ஒருகாற்கூறி இடையிட்டு அவனையே பின்னொருகாற் பேரூர்கிழான் சென்றானென்று கூறியவழி, ஒருதொடரன்மையான் ஆண்டாராய்ச்சியில்லையென்பது. அஃதேல், ஆசிரியன் வந்தான் பேரூர்கிழானுண்டான் செயிற்றியன் சென்றான் எனவிடையின்றி நின்றனவும் ஒருதொடரன்மையின், ஆராய்ச்சியின்றாம் பிறவெனின்;—அற்றன்று: உட்டொடர்பலவாயினும், அவற்றின்றொகுதியாய் அவன்றொழில்பலவுங்கூறுதற்பொருண்மைத்தாகிய பெருந்தொடர் ஒன்றெனவேபடுமென்பது.

ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியனிளங்கண்ணன் சாத்தன் வந்துண்டு சென்றானென்னாது ஆசிரியன் வந்தான் பே

ரூர் கிழானுண்டான் செயிற்றியன் சென்றானெனப் பெயர் தோறும் வேறுதொழில் கிளத்தன்மரபன்மையின், மரபுவழுக் காத்தவாறாயிற்று. (சஉ)

சஙூ. தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவியென்
றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்.

இ - ள். தன்மைச்சொல்லும் அஃறிணைச்சொல்லும் எண்ணுதற்கண் விராய் வரப்பெறும். எ-று. என் சொல்லியவாறோவெனின்;—உயர்திணைச்சொல்லும் அஃறிணைச்சொல்லும எண்ணுதற்கண் விராய் வந்து உயர்திணைமுடிபு கொள்ளினும், அஃறிணைமுடிபு கொள்ளினும், வழுவாமாகலின், "மயங்கல்கூடா தம்மரபின" எனவே அவை விராயெண்ணப்படாமையும் எய்தி நின்றது; தன்மைப்பன்மைச்சொலால் அஃறிணைச்சொல்லுமுடியுமாகலால், தன்மைச்சொல்லும் அஃறிணைச்சொல்லும் விராய் வந்து உயர்திணைமுடிபு கொள்ளினும் அமையுமெனத் திணைவழுக் காத்தவாறு.

உ - ம். யானுமென்னெஃகமுஞ்சாறும் என வரும்.

பன்மைத்தன்மைவினை கோடல் எற்றாற்பெறுதுமோவெனின்;—தன்மைச்சொல்லேயென்றதனானும், "பன்மை யுரைக்குந் தன்மைக்கிளவி - யெண்ணியன் மருங்கிற் றிரிபவை யுளவே" என்பதனானும், பெறுதுமென்பது. அஃதேல், "எண்ணியன் மருங்கிற் றிரிபவை யுளவே" என்பதனான் விராய் வந்து உயர்திணைமுடிபு கோடலும் பெறப்படுதலின், இச்சூத்திரம் வேண்டாவெனின்;—உய்த்துணர்ந்திடர்ப்படுவது எடுத்தோத்தில்வழியென மறுக்க. (சஙூ)

சச. ஒருமை யெண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
லொருமைக் கல்ல தெண்ணுமுறை நில்லாது.

இ - ள். ஒருமையெண்ணினையுணர்த்தும் பொதுப்பிரிபாற்சொல்லாகிய ஒருவன் ஒருத்தியென்னுஞ்சொற்கள், ஒருமைக்கண்ணல்லது, இருமை முதலாகிய எண்ணுமுறைக்கணில்லா. எ-று. எனவே, பொதுப்பிரியாப் பாற்சொல்லாகிய

ஒருவனொன்னுஞ்சொல் இருவர் மூவரென எண்ணு முறைக்கண் ணுநிற்குமென்பதாம்.

பொதுப்பிரி பாற்சொலென்றுரேனும், ஒருவன் ஒருத்தி யெனபனவறறது பாலுணர்ததுமீறே கொள்ளபபடும். என் னை? எண்ணுமுறைநில்லாவென்று விலக்கப்படுவன அவையே யாகலினென்பது.

மகன் மகளென்னுந்தொடக்கத்துப் பெயர்ப்பொதுப்பிரி பாற்சொல்லினீக்குதற்கு ஒருமையெண்ணினென்றும், ஒரு வர் ஒன்றென்பனவறறினீக்குதற்குப் பொதுப்பிரி பாற்சொ லென்றுங்கூறினார்.

ஒருவனொன்னும் ஆண்மைப்பெண்மைப்பொதுவிற்பிரிதலிற் பொதுப்பிரி பாற்சொலென்றார்.

பொதுப்பிரி பாற்சொலென்னும் ஒற்றுமையான் நில்லா தென ஒருமையாற்கூறினார்.

ஒருவன் ஒருத்தியென ஒருமைக்கணிற்றலும், இருவன் மூவன் இருத்தி முத்தி என எண்ணுமுறைமைக்கணில்லாமை யுங்கண்டுகொள்க.

ஒன்றென முடித்தலென்பதனான் ஒருவேன் ஒருவையென் னுந்தன்மைமுன்னிலையீறும் எண்ணுமுறைநில்லாமை கொ ள்க.

இது பால்வழுக்காத்தவாறு. (சச)

சரு. வியங்கோளெண்ணுப்பெயர்திணைவிரவுவரையார்.

இ - ள். வியங்கோளோடு தொடருமெண்ணுப்பெயர் தி ணை விராய் வருதல் வரையார். எ-று.

உ - ம். ஆவுமாயனுஞ்செல்க என வரும்.

தன்மைப் பன்மை வினைபோலாது வியங்கோள் இருதி ணைக்குமுரிய சொல்லாகலான் இருதிணைச்சொல்லையுமுடிக்கு மன்றே, அதனான் ஆவுமாயனுஞ்செல்க என்புழி வழுவின் மையின் அமைக்கற்பாற்றன்றெனின்;—இருதிணைப்பொருட்

குமுரித்தேனும், ஒருதிணைப்பொருளைச் சொல்லுதற்கண் இருதிணைப்பொருளுமுணர்த்தாமையின், ஒருதிணையேயுணர்த்தல்வேண்டும்; ஒருதிணையுணர்த்தியவழி ஏனைத்திணைப்பெயரோடு இயையாமையிற்றிணைவழுவாம், அதனானமைக்கல் வேண்டுமென்பது.

எண்ணென்றுவுறழென்றுவாயிரண்டுமினைனென்றல்வேண்டுமென்பது இலக்கணமாகலான், யானுமென்னெஃகமுஞ்சாறும் என்புழியும் ஆவுமாயனுஞ்செல்க என்புழியும் இனனல்லன உடனெண்ணப்படுதலின் வழூவென்றுராலுரையாசிரியரெனின்;—திணைவேறுபாடுண்டேனும் யானுமென்னெஃகமும் என்புழி வினைமுதலுங்கருவியுமாகிய இயைபும் ஆவுமாயனும் என்புழி மேய்ப்பானும் மேய்க்கப்படுவனவுமாகிய இயைபு முண்மையான் உடனெண்ணப்படுதலானும், யானைதேர்குதிரைகாலாளெறிந்தான் என முன்னருதாரணங்காட்டுபவாகலானும், பிறுண்டும் "எண்ணுத்திணை விரவுப்பெயரஃறிணை முடிபின" எனவாசிரியர்க்கு ஆராய்ச்சிமுடிபு கோடற்கண்ணதாகலானும், அவர்க்கது கருத்தன்றென்க. அல்லதூஉம், திணைவிராயெண்ணல் வழூவென்பதே கருத்தாயின், 'நெடுநல் யானையுந் தேரு மாவும் - படையமை மறவரு முடையம்யாம்.' எ-ம். 'இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும்.' எ-ம். படர்க்கைச்சொல்லும் அஃறிணைக்கிளவியும் விராயெண்ணுதல் வழக்குப்பயிற்சியுடைமையான் அவையுமடங்க உயர்திணைச்சொல்லேயஃறிணைக்கிளவி எனப்பொதுப்படவோதாது "தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவி" எனத்தன்மைச்சொல்லையே விதந்தோதல் குன்றக்கூறலாமாகலானும், அவர்க்கது கருத்தன்மையறிக.

'ஆவு மானியற் பார்ப்பன மாக்களும் பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித் தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும் பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீருமெம் மம்புகடிது விடுது நும்மரண் சேர்மின்' எனத்திணைவிராய் வந்து முன்னிலைவினை கோடல் எற்றுற்பெறுதுமெனின்;—அந்நிகரன செய்யுண்முடிபெனப்படும், அவற்றையதிகாரப்புறனடையாற்கொ

ள்க. இணைவிராயெண்ணப்படும் பெயர் வியங்கோளல்லா விரவுவினையொடு தொடர்ந்து வருவன வழக்கினுளுளவேல, ஒன்றெனமுடித்தலென்பதனாற்கொள்க. (சரு)

சசு. வேறுவினைப் பொதுச்சொ லொருவினை கிளவார்.

இ-ள். வேறுபட்ட வினையையுடைய பலபொருட்குப் பொதுவாகிய சொல்லை ஒன்றற்குரிய வினையாற்கிளவார். எ-று. எனவே, பொதுவினையாற்கிளப்பரென்றவாறும். அவை அடிசில் அணி இயம் படையென்னுந்தொடக்கத்தன

அடிசிலென்பது உண்பன தின்பன பருகுவன நக்குவன வென்னு நால்வகைக்கும், அணியென்பது கவிப்பன கட்டுவன செறிப்பன பூண்பனவென்னுந்தொடக்கத்தனவற்றிற்கும், இயமென்பது கொட்டுவன ஊதுவன எழுப்புவனவென்னுந்தொடக்கத்தனவற்றிற்கும், படையென்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவென்னுந்தொடக்கத்தனவற்றிற்கும், பொதுவாகலின், அடிசிலயின்றார், மிசைந்தார். எ-ம். அணியணிந்தார், மெய்ப்படுத்தார். எ-ம். இயமியம்பினார், படுத்தார். எ-ம். படைவழங்கினார், தொட்டார். எ-ம். பொதுவினையாற்சொல்லுக. அடிசிறின்றார், பருகினார். எ-ம். அணி கவித்தார், பூண்டார். எ-ம். இயங்கொட்டினார், ஊதினார். எ-ம். படையெறிந்தார், எய்தார். எ-ம். ஒருசார்க்குரிய வினையாற்சொல்லின் மரபுவழுவாமென்பது.

பொருளின் பொதுமையைச் சொன்மேலேற்றி வேறுவினைப்பொதுச்சொலென்றார். (சசு)

சஎ. எண்ணுங் காலு மதுவதன் மரபே.

இ-ள். வேறுவினைப் பொருள்களைப் பொதுச்சொல்லாற் கூறாது பிரித்தெண்ணுமிடத்தும் அதனிலக்கணம் ஒருவினையாற்கிளவாது பொதுவினையாற்கிளத்தலேயாம். எ-று.

உ-ம். சோறுங்கறியுமயின்றார்; யாழுங்குழலுமியம்பினார் என வரும். சோறுங்கறியுந்தின்றார்; யாழுங்குழலுமூதினார் எனின் வழுவாம். அஃதேல், 'ஊன்றுவைகறிசோறுண்டுவருந்துதொழிலல்லது' என்புழி உண்டென்பது ஒன்றற்

கேயுரிய வினையாகலின் வழுவாம் பிறவெனின்;—உண்டலெ ன்பது உண்பன தின்பனவெனப் பிரித்துக் கூறும்வழிச் சிற ப்புவினையாம்; பசிப்பிணி தீர நுகரப்படும் பொருளெல்லாம் உணவெனப்படுமாகலிற்பொதுவினையுமாம், அதனானது வழு வன்றென்பது. கறிமொழிந்து ஏனையவற்றிற்கெல்லாம் உ ண்டற்சொழிலுரித்தாகலிற் பன்மைபற்றிக் கூறினானெனினும மையும். (சஎ)

சஅ. இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா.

இ - ள். இரட்டித்து நின்று பொருளுணர்த்துஞ்சொற்க ள் இரட்டித்து நிற்றலிற் பிரிந்து நில்லா. எ-று.

உ - ம். சுருசுருத்தது; மொடுமொடுத்தது என இசைபற் றியும், கொறுகொறுத்தார்; மொறுமொறுத்தார் எனக்குறி ப்புப்பற்றியும், குறுகுறுத்தது; கறுகறுத்தது எனப்பண்புப ற்றியும், இரட்டித்து வந்தன பிரிந்து நில்லாமை கண்டுகொ ள்க. அஃதேல், குறுத்தது குறுத்தது எனப்பிரிந்தும் வந்தன வாலெனின்;—அற்றன்று: குறுத்ததென்பதோர்சொல் குறு வென்பதோர்சொல்லடுத்துக் குறுகுறுத்ததென நின்று குறு மைமிகுதியுணர்த்திற்றாயிற் குறுத்ததென்பது குறுமையுண ர்த்தக் குறுவென்பது மிகுதியுணர்த்திற்றதல்வேண்டும். கு றுவென்பது மிகுதியுணர்த்தாமையிற் குறுகுறுத்ததென்பது ஒருசொல்லாய் நின்று அப்பொருளுணர்த்திற்றெனவேபடு ம். அதனாற்றான் அக்குறுமைமாத்திரமுணர்த்தி நிற்பது அத னின் வேறுமென்பது. கறுகறுத்ததென்பதற்கும் ஈதொக்கு ம். கறுத்தது கறுத்தது; குறுத்தது குறுத்தது எனச்சொன் முழுவதும் வாராமையின், அடுக்கன்மையறிக.

ஈண்டிரட்டைக்கிளவியென்றது, மக்களிரட்டை விலங்கிர ட்டைபோல வேற்றுமையுடையனவற்றையன்றி இலையிரட் டையும் பூவிரட்டையும்போல ஒற்றுமையும் வேற்றுமையு முடையனவற்றையென்றுணர்க.

இரட்டித்து நின்று பொருளுணர்த்துவனவற்றைப் பிரித் து வழங்கன்மரபன்மையின், மரபுவழுக்காத்தவாறு. (சஅ)

சக. ஒருபெயர்ப்பொதுச்சொலுள்பொருளொழியத்
தெரிபுவேறு கிளத்த றலைமையும் பன்மையு
முயர்திணை மருங்கினு மஃறிணை மருங்கினும்.

இ - ள். உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் ஒரு பெயராய்ப் பலபொருட்குப் பொதுவாகிய சொல்லைப் பிற உள்பொருளொழியத் தெரிந்துகொண்டு பொதுமையின் வேறாகச் சொல்லுக தலைமையானும் பன்மையானும். எ-று.

தெரிபென்பதற்குச் செயப்படுபொருள் தலைமையும் பன்மையுமேயாம்.

பிறரும் வாழ்வாருளரேனும் பார்ப்பனச்சேரியென்றல் உயர்திணைக்கட்டலைமை பற்றிய வழக்கு. எயினர்நாடென்பது அத்திணைக்கட்பன்மை பற்றிய வழக்கு. பிறபுல்லுமரனுமுளவேனும் கமுகந்தோட்டமென்றல் அஃறிணைக்கட்டலைமை பற்றிய வழக்கு. ஒடுவங்காடென்பது அத்திணைக்கட்பன்மை பற்றிய வழக்கு. பார்ப்பார் பலராயினுங் கமுகு பலவாயினும் அவைதாமே பன்மை பற்றிய வழக்காம்.

பலபொருளொருசொல்லினீக்குதற்கு ஒருபெயரென்றார்.

ஒன்றெனமுடித்தலென்பதனான், அரசர்பெருந்தெரு, வயிரகடகம், ஆதீண்டுகுற்றி, ஆனதர், எருத்தில் எனப்பொதுச்சொல்லின்றி வருவனவுங்கொள்க.

உள்பொருளெல்லாங்கூறாது ஒன்றனையெடுத்துக் கூறுதன் மரபன்றாகலின், பொதுச்சொன்மேறசொன்னிகழுமாறுணர்த்திய முகத்தான் மரபுவழுக்காத்தவாறு. (சக)

ருo. பெயரினுந் தொழிலினும் பிரிபவை யெல்லா
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன.

இ - ள். உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் பெயரினும் வினையினும் பொதுமை பிறப்பிரிந்து ஆண்மைக்குப் பெண்மைக்குமுரியவாய் வருவனவெல்லாம் வழுவாகா, வழக்குவழிப்பட்டனவாகலான். எ-று.

உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணுமென்பது அதிகாரத்தான் வந்தது.

தொடியோர் கொய்குழை யரும்பிய குமரி ஞாழல் என்பது உயர்திணைக்கட்பெயரிற்பிரிந்த ஆணொழி மிகுசொல். வடுகரசராயிரவர் மக்களையுடையரென்பது பெயரிற்பிரிந்த பெண்ணொழி மிகுசொல். இவர்வாழ்க்கைப்பட்டாரென்பது தொழிலிற்பிரிந்த ஆணொழி மிகுசொல். இவர்கட்டிலேறினாரென்பது தொழிலிற்பிரிந்த பெண்ணொழி மிகுசொல். நம்பி நூறெருமையுடையனென்பது அஃறிணைக்கட்பெயரிற்பிரிந்த ஆணொழி மிகுசொல். நம்மரசனாயிரம்யானையுடையனென்பது பெயரிற்பிரிந்த பெண்ணொழி மிகு சொல். தொடிசெறித்தலும், மக்கட்டன்மையும், இல்வாழ்க்கைப்படுதலும், கட்டிலேறுதலும், எருமைத்தன்மையும், யானைத்தன்மையும் ஒழிகப்படும் பொருட்குமுண்மையாற் பொதுவாய் நிற்கற்பாலன ஒருபாற்குரியவாய் வருதலின், மரபுவழுவமைத்தவாறு.

பிறசொல்லாற்பிரிவன "வேறுபடு வினையினு மினத்தினுஞ் சார்பினும்." எ-ம். "தெரிநிலை யுடைய வஃறிணை யியற்பெயர்." எ-ம். "நினையுங் காலைத் தத்த மரபின் வினையோ டல்லது பாறெரி பிலவே." எ-ம். முன்னோதப்படுதலானும், ஆண்டு வழுவின்மையானும், ஈண்டுத் தாமே பிரிவனவே கொள்க.

தம்மாற்றாம்பிரியுமென்பார் பெயரினுந்தொழிலினுமென்றார். பெயர்க்கண்ணும் வினைக்கண்ணுந்தாமே பிரிவனவெனினுமமையும்.

அஃறிணைக்கட்டொழிலிற்பிரிந்தனவுளவேற்கண்டுகொள்க. இன்றிவ்வூர்ப்பெற்றமெல்லாமறங்கறக்கும்; உழவொழிந்தன என உரையாசிரியர் காட்டினாராலோவெனின்;—பெற்றமென்னும் 'பொதுப்பெயர் கறத்தலுமுழுதலுமாகிய சிறப்புவினையாற்பொதுமை நீங்குதல் வழுவன்மையான் ஈண்டைக்கெய்தாமையின், அவர்க்கது கருத்தன்றென்பது. (௫0)

௫௧. பலவயி னானு மெண்ணுத்திணை விரவுப்பெய
ரஃறிணை முடிபின செய்யு ளுள்ளே.

இ - ள். திணை விராயெண்ணப்பட்ட பெயர் செய்யுளகத்துப் பெரும்பான்மையும் அஃறிணைச்சொற்கொண்டு முடியும். எ-று.

உ - ம். 'வடுக ரருவாளர் வான்கரு நாடர்—சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங்—குறுகா ரறிவுடை யார்.' எ-ம். 'கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவு - நெடுங்கொடிய நிமிர்தேரு நெஞ்சுடைய புகன்மறவருமெனநான்குடன் மாண்டதாயினும்.' எ-ம். வரும்.

எண்ணுத்திணைவிரவுப்பெயர் பெரும்பான்மையும் அஃறிணைச்சொற்கொண்டு முடியுமெனவே, சிறுபான்மை உயர்திணைச்சொற்கொண்டு முடியவும்பெறுமென்பதாம். உ-ம். 'பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்—மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டு.' எ-ம். 'பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்—மூத்தா ரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்—காற்ற வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்—போற்றி யெனப்படுவார்.' எ-ம். வரும்.

இருதிணைப்பெயரும் விராய் வந்து ஒருதிணைச்சொல்லான் முடிதல் வழுவாயினும், செய்யுளகத்தமைகவெனத் திணைவழுவமைத்தவாறு.

'பாணன் பறையன் றுடியன் கடம்பனென் றிந்நான் கல்லது குடியு மில்லை' எனவிருதிணைப்பெயரும் விரவி வாராது உயர்திணைப்பெயரே வந்து செய்யுளுள் அஃறிணைமுடிபு கொண்டனவென்று உரையாசிரியர் கூறினாராலெனின்;—பாணன் முதலாயினாரைக் குடியென்று சுட்டியவழிக் குடிக்கேற்ற தொகை கொடுத்தல் வழுவன்மையான், அவ்வுரை போலியுரையென்க. குடியென்று சுட்டாதவழிப் பாணன் பறையன்றுடியன்கடம்பனென்றந்நால்வருமல்லது குடியில்லையென்றேயாம்.

'தம்முடைய தண்ணளியுந் தாமுந்தம் மான்றேரு - மெம்மை நினையாது விட்டனரேல் விட்டகல்க.' எ-ம். 'யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித் - தானுந் தேரும் பா

கனும் வந்தென் னலனுண்டான்.' எ-ம். இவை யெவ்வாறு வந்தனவோவெனின்;—அவை தலைமைப்பொருளையும் தலைமையில் பொருளையும் விராயெண்ணித் தலைமைப்பொருட்கு வினை கொடுப்பவே தலைமையில் பொருளுமுடிந்தனவாவதோர் முறைமைபற்றி வந்தன, ஈண்டைக்கெய்தாவென்பது. தானுந்தன்புரவியுந்தோன்றினனென்பதுமது. (ருக)

ருஉ. வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வினைவேறுபடாஅப்பல்பொருளொருசொலென்
றாயிரு வகைய பலபொரு ளொருசொல்.

இ - ள். வினைவேறுபடும் பலபொருளொருசொல்லும் வினைவேறுபடாப்பலபொருளொருசொல்லுமென இரண்டுவகைப்படும் பல்பொருளொருசொல். எ-று.

இனமுஞ்சார்புமுளவேனும் வேறுபடுத்தற்கண் வினை சிறப்புடைமையின், அதனாற்பெயர் கொடுத்தார், ஆதீண்டுகுற்றியென்பதுபோல.

இலக்கணச்சூத்திரங்களேயமையும் இச்சூத்திரம் வேண்டாவெனின்;—இருவகையென்றும் வரையறை அவற்றாற் பெறப்படாமையானும், வகுத்துப் பின்னுமிலக்கணங்கூறியவழிப் பொருள் இனிது விளங்குதலானும், இச்சூத்திரம் வேண்டுமென்பது. (ருஉ)

ருங. அவற்றுள், வினைவேறு படூஉம் பலபொருளொரு
சொல், வேறுபடு வினையினு மினத்தினுஞ் சார்பி
னுந், தேறத் தோன்றும் பொருடெரி நிலையே.

இ - ள். அவ்விரண்டனுள்ளும், வினைவேறுபடும்பலபொருளொருசொல், ஒருபொருட்கே சிறந்தவினையானும், இனத்தானும், சார்பானும், பொருடெரிநிலைக்கட்பொதுமை நீங்கித் தெரியத்தோன்றும். எ-று.

மாவென்பது ஒருசார்விலங்கிற்கும் ஒருமரத்திற்கும் வண்டிற்கும் பிறபொருட்கும் பொது. குருகென்பது ஓர்பற

லைக்கும் உலமுக்கிற்கும் வளைக்கும் பிறவற்றிற்கும் பொது. நாகமென்பது மலைக்கும் ஒருசார்மரத்திற்கும் யானைக்கும் பாம்பிற்கும் பிறவற்றிற்கும் பொது. சேவென்பது ஒருசார்ப்பெற்றத்திற்கும் ஒருமரத்திற்கும் பிறவற்றிற்கும் பொது.

மாப்பூத்தது; மாவுமருதுமோங்கின என வேறுபடுவினையானும் இனத்தானும், மரமென்பது விளங்கிற்று. கவசம்புக்கு நின்று மாக்கொணாவென்றவழிக் குதிரையென்பது சார்பினால் விளங்கிற்று. குருகு முதலாயினவுமன்ன.

வேறுபடுவினையினுமென்றேனும், ஒன்றெனமுடித்தலென்பதனான், இம்மாவயிரம், வெளிறு என வேறுபடுக்கும் பெயருங்கொள்ளப்படும்.

இனத்தொடு சார்பிடை வேற்றுமையென்னையெனின்;—ஒருசாதிக்கணைந்த சாதி இனமெனப்படும்; அணைந்த சாதியன்றி ஒருவாற்றானியைபுடையது சார்பெனப்படுமென்பது.

௫௪. ஒன்றுவினை மருங்கி னொன்றித் தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொ
னினையுங் காலைக் கிளந்தாங் கியலும்.

இ - ள். வேறுபடாத வினை கொண்டவழி வேறுபடாது தோன்றும் வினை வேறுபடாப்பலபொருளொருசொல் ஆராயுங்காற் கிளந்து சொல்லப்படும். எ - று.

உ - ம். மாமரம் வீழ்ந்தது; விலங்குமா வீழ்ந்தது என வரும்.

வினைவேறுபடாப்பலபொருளொருசொலென வேறு நிற்பனவில்லை வேறுபடுவினைமுதலாயினவற்றான் வேறுபடுவன தாமே பொதுவினை கொண்டவழி வினைவேறுபடாப்பலபொருளொருசொல்லாமென்பது அறிவித்தற்கு ஒன்றுவினைமருங்கினொன்றித்தோன்றுமென்றார். ஒன்றுவினைமருங்கினொன்றித்தோன்றுமென ஒருசூத்திரமாக உரையாசிரியர் பிரித்தாராலெனின்;—அங்ஙனம் பிரிப்பின் ஒன்றுவினைமருங்கினொ

ன்றித் தோன்றுதலும் வினைவேறுபடூஉம் பலபொருளொரு சொற்கே இலக்கணமாய்.மாறுகோடலானும், வினைவேறுபடுவன தாமே பொதுவினை கொண்டவழி வினைவேறுபடாதனவாமென்பது அதனாற்பெறப்படாமையானும், அது போலியுரையென்க.

முன்னும் பின்னும் வருஞ்சார்பு முதலாயினவற்றாற் குறித்த பொருள் விளங்காக்கால் விளங்கத் சொல்லுகவென யாப்புறுத்தற்கு நினையுங்காலையென்றார்.

ஆங்கென்பது உரையசை.

குறித்த பொருள் விளங்காமைக் கூறல் மரபன்மையின் மரபுவழுக்காத்தவாறு. (ருச)

ருரு. குறித்தோன் கூற்றந் தெரித்துமொழி கிளவி.

இ - ள். ஒருபொருள்வேறுபாடு குறித்தோன், அஃதாற்றன்முதலாயினவற்றான் விளங்காதாயின், அதனைத் தெரித்துச் சொல்லுக, எ-று.

உ-ம். 'அரிதாரச் சாந்தங் கலந்தது போல—வுருவெழத் தோன்றி வருமே - முருதுறழு—மன்பன் மலைப்பெய்த நீர்.' எ-ம். 'வாரு மதச் சோலை வண்டுதிர்த்த நாண்மலரா - றுறு மருவி நளிமலைநன் னாடே.' எ-ம். வரும். கலந்ததுபோல வருமே யிலங்கருவி யன்பன் மலைப்பெய்த நீர். எ-ம். நாறு மருவி நளிமலை நன்னாடே. எ-ம். தெரித்து மொழியாதவழிக் குறித்தது விளங்காது வழுப்படுதலின் மரபுவழுக்காத்தவாறு. வடநூலார் இதனை நேயமென்ப.

'ஊட்டியன்னவொண்டளிர்ச்செயலை' என்புழி இன்னதனையென்று தெரித்து மொழியாமையின் வழுவாம் பிறவெனின்;—உவமையென்னுமலங்காரமாயினன்றே இன்னதொன்றனையெனல்வேண்டுவது. செயலையந்தளிரினது செய்யாத நிறத்தைச் செய்ததுபோலக் கூறுங்கருத்தினானுகலிற் பிறிதோரலங்காரமாம். அதனான் அது கடாவன்றென்பது. 'படுத்துவைத் தன்ன பாறை மருங்கி னெடுத்துநிறுத் தன்ன வி

ட்டருஞ் சிறுநெறி' எனவின்னோரன்னவெல்லாம் அவ்வலங் காரம்பற்றி வந்தன.

'ஒல்லேங் குவளைப் புலாஅன் மகன்மார்பிற்—புல்லெருக் கங் கண்ணி நறிது' என்புழிக் குவளை புலாலுறுதற்கும் எருக் கங்கண்ணி நறிதாதற்கும் காரணங்கூறாமையின் வழுவா ம் பிறவெனின்;—புதல்வற்பயந்த பூங்குழன்மடநதை பர த்தையிற்பிரிந்து வந்த கிழவனொடு புலந்துரைக்கின்றாளாக லிற் குவளை புலாலுறுதற்கு அவன்றவற்றோடு கூடிய அவள்கா தல் காரணமென்பதூஉம், எருக்கங்கண்ணி நறிதாதற்கு மகி ழ்நன் செய்த தனி கூர் வெப்பம் முகிழ்நகைமுகத்தாற்றணி க்கும் புதல்வன்மேல் ஒருகாலைக்கொருகாற்பெருகுமன்பு கா ரணமென்பதூஉம் பெறப்படுதலின், வழுவர்காதென்பது.

மீக்கூற்றமென்புழிப்போலக் கூற்றுக் கூற்றமென நின் றது. (ருரு)

ருசு. குடிமை யாண்மை யிளமை மூப்பே
யடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை யரசே மகவே குழவி
தன்மை திரிபெய ருறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென்
றவறு மூன்று முளப்படத் தொகைஇ
யன்ன பிறவு மவற்றொடு சிவணி
முன்னத்தி னுணருங் கிளவி யெல்லா
முயர்திணை மருங்கி னிலையின வாயினு
மஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்.

இ-ள். குடிமை முதலாக விறற்சொலீறாகச் சொல்லப் பட்ட பதினெட்டுமுளப்பட அன்னபிறவும் அவற்றொடு பொ ருந்தித் தொக்கு முன்னத்தினுணருங் கிளவிகளெல்லாம், உயர்திணைப்பொருண்மேல் நின்றனவாயினும், அஃறிணைப் பொருளையுணர்த்தி நின்றவழிப்போல, அஃறிணைமுடிபே கொ ள்ளும். எ-று.

உ-ம். அடிமை நன்று, குடிமை தீது; ஆண்மை நன்று; ஆண்மை தீது என வரும். ஒழிந்தனவற்றிற்கும் இவ்வாறு பொருந்துமவ்வினை தலைப்பெய்க.

தன்மைதிரிபெயர் அலி. இந்நான்றோடொருபொருட்கிளவியாய்ப் பலவுருவுளவாகக்கொள்க.

உறுப்பின்கிளவி குருடு முடம் என்னுந்தொடக்கத்தன. காதற்சொல் பாவை யானையென ஒப்புமை கருதாது காதல்பற்றி வருவன. சிறப்புச்சொல் கண்போலச் சிறந்தானைக் கண்ணென்றலும் உயிர்போலச் சிறந்தானை உயிரென்றலும் என இவை முதலாயின. செற்றச்சொல் செறுதலைப் புலப்படக் கூறும் பொறியன்ற கெழீஇயிலியென்னுந்தொடக்கத்தன. விறற்சொல் விறலையுணர்த்தும் பெருவிறல் அருந்திறலென்னுந்தொடக்கத்தன. தன்மைதிரிபெயர் முதலாயின பொருள் வகையான் ஆறாக வகுக்கப்பட்டன.

குடிமை, ஆண்மை, இளமை, மூப்பு, அடிமை, வன்மை, பெண்மை, உறுப்பின்கிளவி, சிறப்புச்சொல், விறற்சொல் லென்பன உயர்திணைக்கண் ஆகுபெயராயல்லது வாரா, அல்லன இருதிணைக்கண்ணும் ஒப்பவுரிமைய வெனக் கொள்க. காதல்பற்றிச் சிறுவனை யானையென்றலும் ஆகுபெயராமன்றோவெனின்;—யாதானுமோரியைபுபற்றி ஒன்றன்பெயரொன்றற்காயது ஆகுபெயராம்; இயைபு கருதாது காதன்முதலாயினவற்றான் யானையென்றவழி ஆகுபெயருள் அடங்கா வென்பது. ஒன்றன்பெயர் ஒன்றற்காதலொப்புமையான் ஆகுபெயரென்பாருமுளர்.

சொல்லானன்றித் திணைவேறுபாடு சொல்லுவானை குறிப்பொடு படுத்துணரப்படுதலின், முன்னத்தினுணருங்கிளவி யென்றார்.

அஃறிணைமுடிபினவென்றது அஃறிணை மருங்கிற் கிளந்தாங்கியலும் என்பது பொதுப்படக் கூறியவதனால், குடிமை நன்று, குடிமை நல்ல; அடிமை நன்று; அடிமை நல்ல எனவே

ற்புழி ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்றலுங் கொள்ளப்படும்.

அன்னபிறவுமென்றதனான் வேந்து வேள் குரிசில் அமைச்சு புரோகு என்னுந்தொடக்கத்தனவுங்கொள்க.

குடிமைமுதலாயின உயர்திணையுணர்த்தும்வழி அஃறிணையான் முடிதல் வழுவாயினும் அமைகவெனத் திணைவழுவமைத்தவாறு. (ருசு)

ருஎ. கால முலக முயிரே யுடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூத
ஞாயிறு திங்கள் சொல்லென வருஉ
மாயீ ரைந்தொடு பிறவு மன்ன
வாவயின் வருஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா வுயர்திணை மேன.

இ - ள். காலமுதலாகச் சொல்லப்பட்ட பத்தும் அத்தன்மைய பிறவுமாகிய அப்பகுதிக்கண வருஞ்சொல்லெல்லாம். உயர்திணைச்சொலலாயினும், உயர்திணைக்கட்பால்பிரிந்திசையா, அஃறிணைப்பாலாயிசைக்கும். எ-று.

உ - ம். இவற்குக் காலமாயிற்று; உலகம் பசித்தது; உயிர் போயிற்று; உடம்பு நுணுகிற்று; தெய்வஞ்செய்தது; வினை விளைந்தது; பூதம் புடைத்தது; ஞாயிறு பட்டது; திங்களெழுந்தது; சொன்னன்று என வரும்.

பிறவுமென்றதனால், பொழுது நன்று; யாக்கை தீது; வீறு வலிது; கனலி கடுகிறது; மதி நிறைந்தது; வெள்ளியெழுந்தது; வியாழநன்று என்பனபோல்வன கொள்க.

காலமென்றது காலக்கடவுளை. உலகமென்றது ஈண்டு மக்கட்டொகுதியை,

உயிரோயுடம்பேயெனப் பொதுவகையாற்கூறினோனும், மக்களுயிருமுடம்புமே கொள்ளப்படும். என்னை? உயர்திணை முடிபு கொள்ளாவென விலக்கப்படுவன அவையேயாகலி

னென்பது. "அஃறிணை யென்மனா ரவரல பிறவே" என்புழி அஃறிணையாயடங்கி உயர்திணைமுடிபெய்தாமையின், அவையும் விலக்கற்பாட்டிற்கேலாவெனின்;—அற்றன்று: மக்கட்சுட்டுடைமையான் அவை உயர்திணையேயாமென்பது. யாதோ மக்கட்சுட்டுடையவாறெனின்;—அறஞ்செய்து துறக்கம் புக்கான். எ-ம். உயிர்நீத்தொருமகன் கிடந்தான. எ-ம். உயிருமுடம்பும் அவரின் வேறன்றி அவராகவுணரப்பட்டு உயர்திணைக்கேற்ற முடிபு கொண்டு நிற்றலின் மக்கட்சுட்டுடையவெனபது. ஓராவை எம்மன்னை வந்தாளென்றும் ஓருத்தை எந்தை வந்தானென்றும் உயர்திணைவாய்பாட்டாற்கூறியவாறுபோல, உயிருமுடம்பும் அவ்வாறு கூறப்பட்டனவென்று கொள்ளாமோவெனின்;—கொள்ளாம; அவற்றான் வருமபயனோக்கிக காதலால எம்மன்னை எந்தையென்றான் ஆண்டு; ஈண்டுக் காதன்முதலாயின வின்மையின் மக்கட்சுட்டுடையவென்பது.

பால்வரைதெய்வமென்பது எல்லார்க்குமின்பத்துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுப்பது. வினையென்பது அறத்தெய்வம். சொல்லென்பது நாமகளாகிய தெய்வம்.

அஃதேல், குடிமையாண்மையென்பனவற்றோடு இவற்றிடைவேற்றுமையென்னையெனின்;—அவை இருதிணைப்பொருட்கணுஞ் சேறன்மாலைய; இவை அன்னவலலவென்பது.

உலகமென்பது இடத்தையும் ஆகுபெயரான் இடத்து நிகழ்பொருளாகிய மக்கட்டொகுதியையுமுணர்த்துமாகலான், இருதிணைக்கண்ணுஞ்சென்றதன்றோவெனின்;—அற்றன்று: வடநூலுள் உலகமென்பது இருபொருட்குமுரித்தாக ஓதப்பட்டமையின், மக்கட்டொகுதியையுணாத்தும்வழியும் உரியபெயரேயாகலின் ஆகுபெயரன்று; அதனால் ஒருசொலிருபொருட்கண்ணுஞ்சென்றதெனபபடாது இருபொருட்குமுரிமையான் இரண்டுசொல்லெனவேபடுமென்பது. வேறுபொருளுணர்த்தலின் வேறுசொல்லாதலே துணிவாயினும், பலபொருளொருசொலென்புழி எழுத்தொப்புமைபற்றி ஒருசொல்லென்றார்.

மேலென்பது ஏழாம்வேற்றுமைப்பொருளுணர்த்துவதோரிடைச்சொல்லாகலின், ஈறு திரிந்து மேனவென நின்றது.

இதுவுந்திணைவழுவமைதி. (ருஎ)

ருஅ. நின்றாங் கிசைத்த லிவணியல் பின்றே.

இ - ள். ஈறு திரியாது நின்றாங்கு நின்று உயர்திணையாயிசைத்தல் ஈண்டியல்பின்று. எ-று.

ஈண்டென்றது காலமுதலாகிய சொற்களை. அவை இடையீடின்றி மேற்சொல்லப்பட்டு நிற்றலின் இவணென்றார்.

இவணியல்பின்றெனவே, குடிமை ஆண்மை முதலாயின சொல்லின்கண், குடிமை நல்லன்; வேந்து செங்கோலன் என நின்றாங்கு நின்று உயர்திணையாயிசைத்தல் இயல்புடைத்தென்பதாம். (ருஅ)

ருகூ. இசைத்தலு முரிய வேறிடத் தான.

இ - ள். காலமுதலாகிய சொல் உயர்திணையாயிசைத்தலுமுரிய, ஈறு திரிந்து வாய்பாடு வேறுபட்டவழி. எ-று.

காலன் கொண்டான்; உலகர் பசித்தார் என வாய்பாடு வேறுபட்டவழி உயர்திணையாயிசைத்தவாறு கண்டுகொள்க.

சூ0. எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே.

இ - ள். இனமாகிய பலபொருட்கண் ஒன்றனை வாங்கிக் கூறிய வழி அச்சொற்றன் பொருட்கினமாகிய பிறபொருளைக் குறிப்பானுணர்த்தலுமுரித்து. எ-று.

உம்மை எதிர்மறையாகலான் உணர்த்தாமையுமுரித்தென்பதாம்.

உ - ம். அறஞ்செய்தான்றுறக்கம்புகும். எ-ம். இழிவறிந்துண்பான்கணின்பமெய்தும். எ-ம். வரும். இவை சொல்லுவார்க்கு இனப்பொருளியல் புணைக்குங்குறிப்புள்வழி, மறஞ்செய்தான்றுறக்கம்புகான்; கழிபேரிரையன் இன்பமெய்

தான் எனவினஞ்செப்புதலும், அக்குறிப்பில்வழி இனஞ் செப்பாமையுங் கண்டுகொள்க.

எடுத்த பொருளை உணர்த்துமொழியை எடுத்த மொழி யென்றார்.

இனனல்பொருளினீக்குதற்கு இனமென்றார்.

அஃதேல், மேற்சேரிக் கோழியலைத்தது எனக் கீழ்ச்சேரிக் கோழியலைப்புண்டது. எ-ம். குடங்கொண்டான் வீழ்ந்தான் எனக் குடம் வீழ்ந்தது. எ-ம். இவையினஞ் செப்புமென்றும், ஆ வாழ்க அந்தணர் வாழ்க என்பன இனஞ்செப்பாவென்றும் உரையாசிரியர் கூறினாராலெனின்;—அற்றன்று: கீழ்ச்சேரிக் கோழியலைப்புண்டலின்றி மேற்சேரிக்கோழியலைத்தலமை யாமையானும், குடம் வீழ்தலின்றிக் குடங்கொண்டான் வீழ்தலமையாமையானும், கீழ்ச்சேரிக் கோழியலைப்புண்டலும் குடம் வீழ்தலும் சொல்லானன்றி இன்றியமையாமையாகிய பொருளாற்றலாற் பெறப்படுமாகலான் ஈண்டைக்கெய்தா, இது சொல்லாராய்ச்சியாகலானென்பது. இன்னோரன்ன சொல்லாற்றலாற்பெறப்பட்டனவெனின்;—புகையுண்டென்றவழி எரியுண்மை பெறுதலுஞ் சொல்லாற்றலாற் பெறப்பட்டதாமென்பது. இனி ஆவாழ்க அந்தணர் வாழ்க என்புழிச் சொல்லுவான் ஒழிந்த விலங்கும் ஒழிந்த மக்களுஞ் சாக வென்னுங் கருத்தினனாயின் இவையுமினஞ்செப்புவனவன்றோவென்பது. அதனான் அவை போலியுரையென்க.

ஒரு தொடர் ஒருபொருளுணர்த்தியமையாது வேறொரு பொருளுங் குறித்து நிற்றல் வழுவாயினும் அமைகவென மரபுவழுக்காத்தவாறு. (கூ0)

கூக. கண்ணுந் தோளு முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறுங் கடப்பா டிலவே
தம்வினைக் கியலு மெழுத்தலங் கடையே.

தம்வினைக்கியலுமெழுத்தான் முடிதலும் தம்முதல்வினைக்கியலுமெழுத்தான் முடிதலுமெனச் சினைநிலைக்கிளவி இருமுடிபுடையவற்றுள், முதல்வினைக்கியலுமெழுத்தான் முடிவுழியென்பார், தம்வினைக்கியலுமெழுத்தலங்கடையென்றார்.

இச்சூத்திரத்தின் பொருள். கண் முதலாயவும் பிறவும் பன்மை குறித்து நின்ற சினைநிலைக்கிளவி; அவை தம்வினைக்கியலுமெழுத்தான் முடியாது தம்முதல்வினைக்கியலுமெழுத்தான் முடியும்வழிப் பன்மையாற்சொல்லப்படும் யாப்புறவுடையவல்ல; முதலொன்றாயின் ஒருமையானும், பலவாயிற்பன்மையானுங் கூறப்படும். எ-று.

உ-ம். கண்ணல்லள்; தோணல்லள்; முலைநல்லள். எ-ம். கண்ணல்லர்; தோணல்லர்; முலைநல்லர். எ-ம். வரும்.

பிறவுமென்றதனாற் புருவங்காதென்னுந்தொடக்கத்தனவுங்கொள்க.

பன்மைகூறுங்கடப்பாடிலவேயென்றதனாற் பால்வழுவும், தம்வினைக்கியலுமெழுத்தலங்கடையென்றதனாற்றிணைவழுவுமமைத்தார்.

பன்மை கொண்டன, பன்மையொருமைமயக்கமில்லாத் திணைவழுவாகலின், தம்வினைக்கியலுமெழுத்தலங்கடையென்பதனான் அமைக்கப்படும்.

மூக்கு நல்லள்; கொப்பூழ் நல்லள் என ஒருமைச்சினைப்பெயர் நின்று உயர்திணை கொண்டனவும், நிறங்கரியள்; கவவுக்கடியள் எனப் பண்புந்தொழிலும் நின்று உயர்திணை கொண்டனவும், தன்னினமுடித்தலென்பதனானமைக்கப்படும்.

கோடு கூரிது களிறு; குளம்பு கூரிது குதிரை எனவஃறிணைப்பன்மைச்சினைப்பெயர் நின்று முதல்வினையாகிய ஒருமையான் முடிந்தனவும் அமையுமாறென்னையெனின்;—ஆண்டுப் பன்மையொருமைமயக்கமல்லது திணைவழுவின்மையின் ஈண்டைக்கெய்தா; அப்பன்மையொருமைமயக்கம் ஒன்றெனமுடித்தலென்பதனானமைக்கப்படும். அஃதேல், இச்சூத்திரத்தா

ற்றிணைவழுவோடு கூடிய பால்வழுவமைக்கப்பட்டதென்பது எற்றாற்பெறுதுமெனின்;—சினைக்கிளவிக்குத் தம்வினைக்கியலுமெழுத்தாவது அஃறிணைவினைக்குரியவெழுத்தாம்; அஃதல்லாதது உயர்திணைவினைக்குரியவெழுத்தேயாம். என்னை? அஃறிணைக்கு மறுதலை உயர்திணையேயாகலான். அதனாற்றிணைவழுவுதலும் பெறுதுமென்பது. அஃதேல், தம்வினைக்கியலுமெழுத்தாவன சினைவினைக்குரியவெழுத்தென்றும், அவையல்லாதனவாவன முதல்வினைக்குரிய வெழுத்தென்றுமுரைக்க; உரைக்கவே, உயர்திணைச்சினையும் அஃறிணைசசினையுமெல்லாமடங்குமெனின்;—அற்றன்று: அஃறிணைககட்சினைவினைக்குரிய எழுத்தொடு முதல்வினைக்குரிய எழுத்திற்கு வேறுபாடின்றி எல்லாமஃறிணையெழுத்தேயாகலின், தம்வினைக்கியலுமெழுத்தலங்கடையென்பதற்கேலாதாகலால், கண் முதலாயின உயர்திணைச்சினையேயாமென்பது. (௬௧)

கிளவியாக்கமுற்றிற்று.

---

## இரண்டாவது

# வேற்றுமையியல்.

௬௨. வேற்றுமை தாமே யேழென மொழிப.

நான்குசொற்கும் பொதுவிலக்கணமுணர்த்தினார் அதற்கிடையீடின்றி அவற்றது சிறப்பிலக்கணமுணர்த்துதன்முறைமையாயினும், வேற்றுமையிலக்கணமுணர்த்துதற்கு வேறிடமின்மையானும், பொதுவிலக்கணமாதலொப்புமையானும், உருபேற்றல் பெயர்க்கிலக்கணமாகலின் வேற்றுமையுணர்த்திப் பெயருணர்த்தன்முறையாகலானும், கிளவியாக்கத்திற்கும் பெயரியற்குமிடை வேற்றுமையிலக்கணமுணர்த்தியவெடுத்துக்கொண்டார். வேற்றுமையாவன பெயரும் ஓரிடைச்சொல்லுமாகலின், அவற்றதிலக்கணமும் பொதுவிலக்கணமேயாம்.

வேற்றுமையிலக்கணமென ஒன்றாயினும், சிறப்புடைய எ ழுவகைவேற்றுமையும் அவற்றது மயக்கமும் விளிவேற்று மையுந் தனித்தனியுணர்த்தத்தகும் வேறுபாடு யாப்புடைமை யான், மூன்றோத்தானுணர்த்தினார்.

பொதுவிலக்கணமுணர்த்திச் சிறப்பிலக்கணமுணர்த்துத ன்முறையாகலின், முதற்கண்ணதாகிய பெயர்ச்சொற்குப் பயனிலை கோடலும் உருபேற்றலும் காலந்தோன்றாமையுமா கிய இலக்கணமுணர்த்துவார் இயைபுபட்டமையான் வேற்று மையிலக்கணமுணர்த்தினாரென மேலோத்திேனாடு இவ்வோ த்திடையியைபு கூறினாராலுரையாசிரியரெனின்;—அற்றன் று: இவ்வோத்துப் பெயரிலக்கணநுதலியெடுத்துக்கொள்ள ப்பட்டதாயின், உருபேற்றலும் பயனிலைகோடலுங் காலந் தோன்றாமையுமாகிய பெயரிலக்கணம் முன்னோதி, இயைபுப டுதலான் வேற்றுமையுணர்த்துங்கருத்தினராயின் அவற்றை யும் இன்னவிலக்கணத்தவென உணர்த்திப் பின்னும் எடுத்துக் கொண்ட பெயரிலக்கணமேபற்றியோதிப் பெயரியலென ஓ ரோத்தான் முடியற்பாற்றன்றே; அவ்வாறன்றி, வேற்றுமையி லக்கணமே முன் கூறி "அன்றி யனைத்தும் பெயர்ப்பய னி லையே" எனவும் "ஈறுபெயர்க் காகு மியற்கைய வென்ப" என வும் வேற்றுமையிலக்கணங்கூறி அச்சூத்திரத்தாற்பயனிலை கோடலும் உருபேற்றலும் பெயர்க்கிலக்கணமென்பது உய் த்துணரவைத்துப் பின்னும் வேற்றுமையிலக்கணமேயுணர் த்தி, இதனை வேற்றுமையோத்தென்றும், அவற்றது மயக்க முணர்த்தியவோத்தை வேற்றுமைமயங்கியலென்றும், சிறப் பில்லா விளிவேற்றுமையுணர்த்தியவோத்தை விளிமரபென் றும், நுதலியதனாற்பெயர் கொடுத்து, மூன்றோத்தாக வைத் து, பெயரியலென வேறோரோத்திற்குப் பெயர் கொடுத்தமை யானும், "எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" என் பது முதலாகிய ஐந்துசூத்திரமும் பெயரிலக்கணமுணர்த்து மோத்தின்முன் வையாது இடைவைத்தல் பொருந்தாமையா னும், இவ்வோத்துப் பெயரிலக்கணநுதலியெடுத்துக்கொள் ளப்பட்டதன்று, வேற்றுமையிலக்கணமே நுதலியெழுந்த

தெனவேபடும்; அதனுன் அவர்க்கது கருத்தன்றென்க. அஃ தேல், "பெயர்நிலைக் கிளவி காலந் தோன்ரு" எனப்பெய ரிலக்கணம் ஈண்டுக் கூறியதென்னையெனின்;—பயனிலை கோ டலும் உருபேற்றலும் பெயர்க்கிலக்கணமென்பது ஈண்டுப பெறப்பட்டமையான், அவற்ருேடியையக் காலந்தோன்ரு மையும் ஈண்டே கூறினர், பெயரிலக்கணமாதலொப்புமை யானென்பது.

இச்சூத்திரத்தின் பொருள். வேற்றுமையாவன ஏழென் று சொல்லுவர் தொல்லாசிரியர். எ - று.

செயப்படுபொருண்முதலாயினவாகப் பெயர்ப்பொரு ளை வேறுபடுத்துணர்ததலின், வேற்றுமையாயின. செயப்ப டுபொருண்முதலாயினவற்றின் வேறுபடுத்துப் பொருண்மா த்திரமுணர்த்தலின், எழுவாயும் வேற்றுமையாயிற்று. அல்ல தூஉம், வேற்றுமையென்பது பன்மை பற்றிய வழக்கெனினு மமையும்.

தாமேயென்பது கட்டுரைச்சுவைபட நின்றது. (௧)

௬௩: விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே.

இ - ள். விளிகொள்வதன்கண்ணதாகிய விளியோடு தலை ப்பெய்ய வேறறுமை எட்டாம். எ - று.

வேற்றுமையென்பது அதிகாரத்தான் வந்தது.

முன்னர் "விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு—தெ ளியத் தோன்று மியற்கைய வென்ப" என்பவாகலின், விளி கொள்வதென்றது விளி கொள்ளும் பெயரை. அதன்கண் வி ளியென்றதனுல், பெயருமன்று, பெயரின் வேறுமன்று, விளி வேற்றுமையாவது திரிந்தும் இயல்பாயும் நிற்கும் பெயரிறு தியென்பதாம்.

"வேற்றுமை தாமே யேழென மொழிப" எனப் பிறர்ம தங்கூறி இச்சூத்திரத்தாற்றனதுணிபுரைத்தார். (௨)

௬௪. அவைதாம், பெயர் ஐ ஒடு கு
இன் அது கண் விளி யென்னு மீற்ற.

இ - ள். எட்டெனப்பட்ட வேற்றுமையாவன விளிவேற்றுமையை இறுதியாகவுடைய பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண்ணும். எ - று.

பெயர் ஐ ஒடு கு இன் அது கண் என்பன பலபெயரும்மைத்தொகை. அஃதொருசொல்லாய் விளியென்னுமீற்ற வென்பதனுன் விசேடிக்கப்பட்டது. பெயரும் ஐயும் ஒடுவும் குவ்வும் இன்னும் அதுவும் கண்ணும் என விரியும்.

சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தலென்பதனுன் ஒடுவென்றும் அதுவென்றும் ஓதினுராகலின், ஆனுருபும் அகரவுருபுங் கொள்ளப்படும்.

விளிவேற்றுமையினது சிறப்பின்மை விளக்கிய பெயர் ஐ ஒடு கு இன் அது கண் விளியென்னுது விளியென்னுமீற்ற வெனப் பிரித்துக் கூறினுர். (௩)

சு௫. அவற்றுள், எழுவாய் வேற்றுமை பெயர்தோன்றுநிலையே.

இ - ள். மேற்சொல்லப்பட்ட வேற்றுமையுள், முதற்கட் பெயரென்று கூறப்பட்ட வேற்றுமையாவது பெயர் தோன்றிய துணையாய் நிற்குநிலைமையாம். எ - று.

பெயர் தோன்றிய துணையாய் நிற்குநிலைமையாவது உருபும் விளியுமேலாது பிறிதொன்றனேடு தொகாது நிற்குநிலைமை. எனவே, உருபும் விளியுமேற்றும் பிறிதொன்றனேடு தொக்கும் நின்ற பெயர் எழுவாய்வேற்றுமையாகாதென்றவாறும்.

உ - ம். ஆ, அவன் என வரும். (௪)

சுசு. பொருண்மை சுட்டல் வியங்கோள் வருதல்
வினைநிலை யுரைத்தல் வினுவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே.

பொருண்மைசுட்டல்—ஆவுண்டு என்பது. வியங்கோள்வருதல்—ஆசெல்க என்பது. வினைநிலையுரைத்தல்—ஆகிடந்தது என்பது. வினாவிற்கேற்றல்—அஃதியாது, அஃதெவன் என வினாச்சொல்லோடு தொடர்தல். பண்புகொளவருதல்—ஆகரிது என்பது. தன்னினமுடித்தலென்பதனால், ஆவில்லை, ஆவல்ல என்னுந்தொடக்கத்துக் குணப்பொருளவல்லா வினைக்குறிப்போடு தொடர்தலுங்கொள்க. பெயர்கொளவருதல்—ஆபல என்பது. அன்றியனைத்தும் பெயர்ப்பயனிலையேயென பது அவ்வாறும்பெயர்வேற்றுமைப்பயனிலையாமென்றவாறு.

முடிக்குஞ்சொற்பொருள் அத்தொடர்மொழிக்குப் பயனாகலிற்பயனிலையென்றார்.

உண்டென்பது பண்பு முதலாயின சுட்டாது உண்மையேசுட்டலின், வேறு கூறினார். பொய்ப்பொருளின் மெய்ப்பொருட்கு வேற்றுமை உண்மையாகலின், அவ்வுண்மையைப் பொருண்மையென்றார்.

வியங்கோள்வருதல் வினைநிலையுரைத்தற்கண்ணும், வினாவிற்கேற்றல் பெயர்கொளவருதற்கண்ணும், வினைக்குறிப்பாயவழிப் பண்புகொளவருதற்கண்ணும் அடங்குமாயினும், வினையும் பெயரும் பண்பும் முடிக்குஞ்சொல்லாதலேயன்றி முடிக்கப்படுஞ்சொல்லாதலுமுடைய, வியங்கோளும் வினாவும் முடிக்குஞ்சொல்லாயல்லது நில்லாமையின், அவ்வேறுபாடறிவித்தற்கு வேறு கூறினாரென்பது.

"பெயர்தோன்றுநிலை" என்றதனானும், அன்றியனைத்தும் பெயர்ப்பய னிலையே எனபதனானும், பெயர் தோன்றிய துணையாய் நின்று பயனிலைத்தாதல எழுவாய்வேற்றுமையதிலக்கணமென்பது பெற்றாம்.

ஆபல என்புழிப் பலவென்பதற்குப் பயனிலை யாதெனின்;—அது பயனிலையாய் ஆவென்பதனை முடித்தற்கு வந்ததாகலின், தான் பிறிதோர்சொன்னோக்காது ஆவென்பதனோடு தொடர்ந்து அதனை முடித்தமைந்து மாறுமென்பது. அஃதேல், பயனிலை கொள்ளாதது எழுவாய்வேற்றுமையாமாறென்

னையெனின்;—உருபேற்றல் பெயர்க்கிலக்கணமாயினும் உருபேலாதவழியும் பெயராமாறுபோல, எழுவாய்வேற்றுமை பயனிலை கொள்ளாதவழியும் எழுவாய்வேற்றுமையேயாமென்பது. இலக்கியமெங்குஞ்செல்லாதன இலக்கணமாமாறென்னையெனின்;—ஆண்டிலக்கண்மாவன உருபேற்றற்கேற்ற தன்மையும் பயனிலையும் பயனிலை கோடற்கேற்ற தன்மையுமாகலின், அத்தன்மை எல்லாவற்றிற்குமுண்மையின் இலக்கணமாமென்பது.

அகரச்சுட்டு அன்றியெனவீறு திரிநது நின்றது. அன்றியனைத்தும் பெயர்ப்பயனிலையெனவே, பயனிலைகோடல் பெயர்க்கிலக்கணமென்பதூஉம் பெற்றும். (ரு)

சூஎ. பெயரி ளுகிய தொகையுமா ருளவே
யவ்வு முரிய வப்பா லான.

இ - ள். பெயரும் பெயருந்தொக்க தொகையுமுள; அவையுமுரிய எழுவாய்வேற்றுமையாய்ப் பயனிலை கோடற்கு. எ - று.

உ - ம். யானைக்கோடு கிடந்தது; மதிமுகம் வியர்த்தது; கொல்யானை நின்றது; கருங்குதிரையோடிற்று; உவாப்பதினன்கு கழிந்தன; பொற்றொடி வந்தாள் என வரும்.

பெயரினுகிய தொகையுமென்னுமும்மையால், பெயரொடு பெயர் தொக்கனவேயன்றி, நிலங்கடந்தான்; மாக்கொணர்ந்தான் எனப் பெயரொடு வினை வந்து தொக்க வினையினுகிய தொகையுமுளவென்பதாம். ஆகவே, பெயரொடு பெயரும் பெயரொடு தொழிலுந் தொக்கன தொகையென்பது பெற்றும்.

அவ்வுமுரியவெனப் பொதுவகையாற்கூறினுரேனும், எற்புழிக்கோடலென்பதனன் எழுவாய்வேற்றுமையாதறகேற்புடைய பெயரினுகிய தொகையே கொள்ளப்படும்.

இருதொடர்படச் சூத்திரித்திடர்ப்படுவதென்னை? பெயரினுகிய தொகையும் எழுவாய்வேற்றுமையாமென்றோதவமையாதோவெனின்;—அங்ஙனமோதிற் பெயரொடு பெயரும் பெ

யரொடு வினையுந் தொக்கன தொகைச்சொல்லாமென்னுந் தொகையிலக்கணம் பெறப்படாதாம்; அவ்விலக்கணமுணர்த் துதற்கு இவ்வாறு பிரித்தோதினானென்பது.

பெயரினாகிய தொகையுமென்றவும்மையான் வினையினாகிய வினைத்தொகை தழுவப்பட்டதென்றும், "எல்லாத் தொகையு மொருசொன் னடைய" என்பதனால் தொகைச்சொல்லெல்லாம் எழுவாய்வேற்றுமையாதல் பெறப்படுதலின், ஈண்டு அவ்வுமுரியவப்பாலானவென்றது தொகைச்சொற்குப் பயனிலை கோடன்மாத்திரமெய்துவித்தற்கென்றும், உரையாசிரியர் கூறினாராலெனின்;—அற்றன்று: வினைத்தொகைக்கு நிலைமொழி வினையென்பது உரையாசிரியர்க்குக் கருத்தன்மை "வினையின் றொகுதி காலத் தியலும்" என்னுஞ்சூத்திரத்திற்சொல்லுதும். இனி "எல்லாத் தொகையு மொருசொன் னடைய" என்பதற்கு ஒருசொன்னடையவாமென்பதல்லது எழுவாய்வேற்றுமையாமென்னுங்கருத்தின்மையானும், அக்கருத்துண்டாயின் அவையும் எழுவாய்வேற்றுமையாய் நின்று "அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே" என்றதனாற் பயனிலையெய்துமாகலின் அவ்வுமுரியவப்பாலானவென்றல் கூறியதுகூறிற்றுமாகலானும், அதுவுமுரையாசிரியர் கருத்தன்றென்க.

அஃதேல், தொகையும் எழுவாய்வேற்றுமையாமென்பதே இச்சூத்திரத்திற்குக் கருத்தாயின் "எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே" என்னுஞ்சூத்திரத்தின் பின் வைக்கவெனின்;—பெயர் தோன்றிய துணையாய் நிற்றலும் பயனிலைகோடலுமாகிய எழுவாய்வேற்றுமையிலக்கணமிரண்டுந் தொகைச்சொற்குமெய்துவித்தற்கு அவ்விரண்டுசூத்திரத்திற்கும் பின் வைத்தாரென்பது. ஆண்டு வைப்பின், "அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே" என்றதனாற்பயனிலை கோடல் பெயர்க்கேயாய்த் தொகைக்கெய்தாதாமென்பது. (சு)

சு அ. எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
யவ்வியல் நிலையல் செவ்வி தென்ப.

இ - ள். மூன்றிடத்துப்பெயரும் செவிப்புலனாகத் தோன்றி நின்று பயனிலை கோடல் செவ்விதென்ப ஆசிரியர். எ-று. எனவே, அவ்வாறு தோன்றாது நின்று பயனிலை கோடலுமுண்டு, அது செவ்விதன்றென்றவாறும்.

பெயரென்றது ஈண்டெழுவாயை.

கருவூர்க்குச் செல்லாயோ சாத்தா என்றவழிச் செல்வல. எ-ம். யான் யாது செய்வல் என்றவழி இது செய். எ-ம். இவன் யார் என்ற வழிப் படைத்தலைவன். எ-ம். செப்பியவழி, யான் நீ இவனென்னும் எழுவாய் வெளிப்படாது நின்று, செல்வல், இது செய், படைத்தலைவன் என்னும் பயனிலை கொண்டவாறு கண்டுகொள்க.

எவ்வயிற்பெயருமென்றதென்னையெனின்;—செல்வல், இது செய் என்னுந்தன்மை முன்னிலைவினைகளான் யான் நீயென்பனவற்றின் பொருளுமுணரப்படுதலின், யான் செல்வல், நீயிதுசெய்யெனப்பெயர் வெளிப்படுத்தல் பயமின்றாயினும் வழக்குவலியுடைததாகலின், அவ்வாறு வருதல் பயமின்றெனப்படாதென்பது விளக்கிய எவ்வயிற்பெயருமென்றானென்பது.

அவ்வியலானிலையலென விரியும்.

பயனிலைக்கு இருநிலைமையுமோதாது எழுவாய்க்கேயோதுதலாற் பயனிலை வெளிப்பட்டே நிற்கும்.

எவ்வயிற்பெயரும் பயனிலை கோடல் செவ்விதென உருபேற்றல் செவ்விதன்றாமெனவுரைத்து அவ்வாய் நீயிரென்பன உருபேலாவென்று காட்டினாரால் உரையாசிரியரெனின்;—அவ்வாயென்பது இடைச்சொல்லாய் ஆண்டென்னும் பொருள்பட நின்றவழி உருபேயன்றிப் பயனிலையுமேலாதாம். இனி அல்வழிக்கண் நும்மென்பது திரிந்து நீயிரென நின்ற திரிபைப் பெயரெனக் கொண்டு உருபேலாதென்றாராயின், நீயென்பதன்றிரிபாகிய நின்னென்பதனையும் பெயராகக் கொணடு பயனிலை கொள்ளாதென்றுங்கூறல்வேண்டும்; அன்றி நும்மி

ன்றிரிபாகிய நீயிரென்பதனை "எல்லா நீயிர் நீயெனக் கிளந்து" என இயற்கைப்பெயரோடு ஒருங்கு வைத்தது நீயிரென்னுந்திரிபே இயல்பாக வேற்றுமைக்கண் நும்மெனத் திரிபினுமமையுமென்னுங்கருத்தினராயன்றே. அதனான் இயல்பாகக் கொள்ளப்பட்ட நிலைமைக்கண் நீயிரென்பதனை உருபேலாதென்றாராயின் நும்மெனத் திரிந்துருபேற்பதனை உருபேலாதென்றல் பொருந்தாதாம். அதனானது போலியுரையென்க. (எ)

சுசு. கூறிய முறையி னுருபுநிலை திரியா
தீறுபெயர்க் காகு மியற்கைய வென்ப.

எழுவாய்வேற்றுமையுணர்த்தி ஏனையறுவகைவேற்றுமையிலக்கணமுமுணர்த்தியவெடுத்துக்கொண்டார்.

பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்று கூறப்பட்ட முறைமையையுடைய உருபு தந்நிலை திரியாது பெயர்க்கீறாமியல்பையுடையவென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் என வரும்.

அம்முறைபற்றி அவையெண்ணுப்பெயரான் வழங்கப்படுதலிற் கூறிய முறையினுருபென்றார்.

வினைச்சொலிறுதி நிற்குமிடைச்சொற்றமென வேறுணரப்படாது அச்சொற்குறுப்பாய் நிற்குமன்றே, இவையவ்வாறு பெயர்க்குறுப்பாகாது தாமென வேறுணரப்பட்டிறுதி நிற்குமென்பார் நிலைதிரியாதென்றார்.

உருபு பெயர் சார்ந்து வருமெனவே, உருபேற்றலாகிய பெயரிலக்கணமும் பெறப்பட்டது. (அ)

எ0. பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழினிலை யொட்டு மொன்றலங் கடையே.

இ-ள். பெயர்ச்சொற்காலந்தோன்றா, வினைச்சொல்லோடொக்கும் ஒருகூறல்லாதவிடத்து. எ-று.

சாத்தன், கொற்றன், உண்டல், தின்றல் எனக்காலந்தோன்றாது நிற்றலும், உண்டான், தின்றான் எனத் தொழினிலையொட்டுவன காலந்தோன்றி நிற்றலுங்கண்டுகொள்க.

உண்டான், தின்றான் என்னுந்தொடக்கத்துப் படுத்துச் சொல்லப்படும் தொழிற்பெயர் வினைச்சொற்போலத் திணையும் பாலுங்காலமுமுதலாயினவற்றை விளக்கி, அன் ஆன் முதலாகியவீற்றவாய் வருதலின, தொழினிலையொட்டுமென்றார். ஒட்டுமென்பது உவமச்சொல.

பெயராகிய நிலையையுடையது பெயர்நிலையென அன்மொழித்தொகை.

பெயர் - பொருள், தொழினிலையுமது.

காலந்தோன்றாவென்பன ஒருசொல்லாய்ப் பெயர்நிலைக் கிளவியென்பதற்கு முடிபாயின.

பயனிலைகோடலும் உருபேற்றலுமாகிய பெயரிலக்கணம் ஈண்டுப் பெறப்படுதலின், அவற்றோடியையக் காலந்தோன்றாமையாகிய பெயரிலக்கணமும் ஈண்டே கூறினார். பெரும்பான்மைபற்றிக் காலநதோன்றாமை பெயரிலக்கணமாயிற்று. (க)

எக. இரண்டா குவதே,
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
யெவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்
பவ்விரு முதலிற் றோன்று மதுவே.

இ - ள். "பெயர் ஐ ஒடு கு" என்னுஞ்சூத்திரத்து ஐயெனப்பெயர் பெற்ற வேற்றுமைச்சொல் இரண்டாவதாம். அஃது யாண்டுவரினும் வினையும் வினைக்குறிப்புமாகிய அவ்விரண்டு முதற்கண்ணுந்தோன்றும், அவை பொருளாக வரும். எ-று.

உ - ம். குடத்தை வனைந்தான்; குழையையுடையன் என வரும்.

எண்ணுமுறையான் இரண்டாவதென்பது பெறப்படுமாயினும், இக்குறி தொல்லாசிரியர்வழக்கென்பதறிவித்தற்கு ஐ

யெனப்பெயரிய வேற்றுமைக்கிளவியிரண்டாவதென்றார். இது மூன்றாவது முதலாயினவற்றிற்குமொக்கும்.

பெயரியவென்பது பெயரென்பது முதலாக முடிந்ததோர் பெயரொச்சம்.

தம்மையுணர்த்துவனவும் பெயரெனப்படுதலின் ஐயெனப்பெயரியவென்றார்.

வினையே வினைக்குறிப்பென்றாராயினும் அவற்றின் செயப்படுபொருளை கொள்ளப்படும்; அவ்விருமுதலிற்றோன்றுமென்றமையான், முதலாதற்கும் வேற்றுமைப்பொருளாதற்குமேற்பன அவையேயாகலின். என்னை அவைமுதலாதற்கேற்றவாறெனின்;—செயப்படுபொருண்முதலாயின 'தொழிற்குக் காரணமாகலானும், "ஆயெட் டென்ப தொழின்முதனிலையே" எனவவற்றை முதனிலையென்று கூறுபவாகலானுமென்பது. அஃதேல், செயப்படுபொருளாவது தொழிற்பயனுறுவதாதலால், குழை முதலாயினவற்றிற்கு அவ்விலக்கணமேலாமையிற் செயப்படுபொருளன்மையான் வினைக்குறிப்பெனல்வேண்டாவெனின்;—அற்றன்று; "அம்முக் காலமுங் குறிப்பொடு கொள்ளு மெய்ந்நிலை யுடைய" என்றாராகலின், குறிப்புச்சொற் காலமொடு தோன்றித்தொழிற்சொல்லாதலும் குழை முதலாயின தொழிற்பயனுறுதலும் ஆசிரியர்துணிபாகலின், அவையுஞ்செயப்படுபொருளாமென்பது. ஆயின், செயப்படுபொருட்கட்டோன்றுமெனவமையும், வினையே வினைக்குறிப்பெனல்வேண்டாவெனின்;—அங்ஙனங்கூறின், செயப்பாடினிது விளங்குஞ்சிறப்புடைத்தெரிநிலைவினைச் செயப்படுபொருளையே கூறினரோ குறிப்புப்பொருளுமடங்கப் பொதுவகையாற்கூறினரோவென்றையமாம்; ஐயநீங்க வினையே வினைக்குறிப்பென்றானென்பது. வினைவினைக்குறிப்பென்பன ஈண்டாகுபெயர்.

புகழை நிறுத்தான்; புகழ் நிறுத்தல்; புகழையுடையான்; புகழையுடைமை எனவிரண்டாவது பெயரொடு தொடர்ந்தவழியும் வினைச்செயப்படுபொருளுங் குறிப்புச்செயப்

படுபொருளும்பற்றியே நிற்குமென்பார், எவ்வழிவரினுமென் றியாப்புறுத்தார்.

இயற்றப்படுவதும், வேறுபடுக்கப்படுவதும், எய்தப்படுவதுமெனச் செயப்படுபொருண்மூன்றும். இயற்றுதலாவது முன்னில்லதனையுண்டாக்குதல். வேறுபடுத்தலாவது முன்னுள்ளதனைத் திரித்தல். எய்தப்படுதலாவது இயற்றுதலும் வேறுபடுத்தலுமின்றித் தொழிற்பயனுறுந் துணையாய் நிற்றல். ( )

எ௨. காப்பி னொப்பி னூர்தியி னிழையி
னோப்பிற் புகழிற் பழியி னென்றா
பெறலி னிழவிற் காதலின் வெகுளியிற்
செறலி னுவத்தலிற் கற்பி னென்றா
வறுத்தலிற் குறைத்தலிற் றொகுத்தலிற்பிரித்தலி
னிறுத்தலி னளவி னெண்ணி னென்றா
வாக்கலிற் சார்தலிற் செலவிற் கன்றலி
னோக்கலி னஞ்சலிற் சிதைப்பி னென்றா
வன்ன பிறவு மம்முதற் பொருள
வென்ன கிளவியு மதன்பால வென்மனார்.

செயப்படுபொருண்மூன்றனையும் பற்றி வரும் வாய்பாடுகளை விரிக்கின்றார்.

இ - ள். காப்பு முதலாகச் சிதைப்பீறாகச் சொல்லப்பட்ட இருபத்தெட்டுப்பொருளும் அவைபோல்வன பிறவுமாகிய அம்முதற்பொருண்மேல் வரும் எல்லாச்சொல்லும் இரண்டாம்வேற்றுமைப்பாலவென்று சொல்லுவர் புலவர். எ-று.

என்றாவென்பது எண்ணிடைச்சொல்.

இன்னெல்லாம் புணரியனிலையிடைப்பொருணிலைக்குதவாது எண்ணின்கண் வந்தன, முன்னர் வருவனவற்றிற்கும் ஈதொக்கும்.

அம்முதலென்றது கூறப்பட்ட செயப்படுபொருளென்றவாறு.

உ-ம். எயிலையிழைத்தான் என்பது இயற்றப்படுவது. இளியையோப்பும்; பொருளையிழக்கும்; நாணையறுக்கும்; மரத்தைக் குறைக்கும்; நெல்லைத் தொகுக்கும்; வேலியைப் பிரிக்கும்; அறத்தையாக்கும்; நாட்டைச் சிதைக்கும் என்பன வேறுபடுக்கப்படுவன. குறைத்தல் சுருக்குதலும் சிறிதிழக்கச் சிதைத்தலுமாம். அறுத்தல் சிறிதிழவாமற் சினையாயினும் முதலையாயினும் இருகூறு செய்தல். ஊரைக் காக்கும்; தந்தையையொக்கும்; தேரையூரும்; குரிசிலைப் புகழும்; நாட்டைப் பழிக்கும்; புதல்வரைப் பெறும்; மனைவியைக் காதலிக்கும்; பகைவரை வெகுளும்; செற்றாரைச் செறும்; நட்டாரையுவக்கும்; நூலைக் கற்கும்; பொன்னை நிறுக்கும்; அரிசியையளக்கும்; அடைக்காயையெண்ணும்; ஊரைச் சாரும்; நெறியைச் செல்லும்; சூதினைக் கன்றும்; கணையை நோக்கும்; கள்வரையஞ்சும் என்பன எய்தப்படுவன. வெகுளலுஞ் செறலும் கொலைப்பொருளவாயவழி வேறுபடுக்கப்படுவனவாம். செறல் வெகுளியது காரியம்.

இயற்றப்படுவது ஒருதன்மைத்தாகலின், அதற்கொருவாய்பாடே கூறினார். ஏனைய பலவிலக்கணத்தவாகலிற் பலவாய்பாட்டான் விரித்துக் கூறினார்.

அன்னபிறவுமென்றதனால், பகைவரைப் பணித்தான்; சோற்றையட்டான்; குழையையுடையான்; பொருளையிலன் என்னுந்தொடக்கத்தன கொள்க.

காப்பு முதலாயின பொருள்பற்றியோதப்பட்டமையான், ஊரைப் புரக்கும்; ஊரையளிக்கும்; தந்தையை நிகர்க்கும்; தந்தையையொட்டும்; தேரைச் செலுத்தும்; தேரைக் கடாவும் என்பன போல்வனவெல்லாங்கொள்க.

இயற்றப்படுதன்முதலாகிய வேறுபாடு குறிப்புவினைச்செயப்படுபொருட்கணேற்பன கொள்க. (கக)

எங. மூன்றா குவதே,
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி யனைமுதற் றதுவே.

இ - ள். மேல் ஒடுவெனப் பெயர் கொடுத்தோதிய வேற்றுமைச்சொல் மூன்றுவதாம். அது வினைமுதலுங் கருவியுமாகிய இரண்டுமுதலையும் பொருளாகவுடைத்து. எ-று.

மேல் ஐயொடு குவ்வென்றோதியவழி ஆனுருபுந்தழுவப் பட்டமையான், ஈண்டும் அவ்வாறே கொளளப்படும்; படவே, மூன்றுவதாதலும் வினைமுதல் கருவிப்பொருட்டாதலும் ஆனுருபிற்குமெய்தும்.

வினைமுதலாவது கருவி முதலாயின காரணங்களைத் தொழிற்படுத்துவது. கருவியாவது வினைமுதற்றொழிற்பயனைச் செயப்படுபொருட்கணுய்ப்பது.

அனையென்பது அத்தன்மையவாகிய முதலென அவற்றதிலக்கணத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு.

முதலென்பதற்கு மேலேயுரைத்தாம்.

உ - ம். கொடியொடு துவக்குண்டான்; ஊசியொடு குயின்ற தூசும் பட்டும். எ-ம். அகத்தியனாற்றமிழுரைக்கப்பட்டது; வேலானெறிந்தான். எ-ம். வரும்.

பிறபொருளுமுளவேனும் வினைமுதல் கருவி சிறந்தமையான், வினைமுதல்கருவியனைமுதற்றென்றார்

வினைமுதல்கருவிக்கண் ஒடுவெனுருபு இக்காலத்தருகியல்லது வாராது. (௭௨)

எச. அதனி னியற லதற்றகு கிளவி
யதன்வினைப் படுத லதனி னாதல்
லதனிற் கோட லதனொடு மயங்க
லதனொ டியைந்த வொருவினைக் கிளவி
யதனொ டியைந்த வேறுவினைக் கிளவி
யதனொ டியைந்த வொப்ப லொப்புரை
யின்னா னேது வீங்கென வரூஉ
மன்ன பிறவு மதன்பால வென்மனார்.

அதனினியறல்—மண்ணானியன்ற குடம் என்பது. மண் முதற்காரணம். முதற்காரணமாவது காரியத்தோடொற்றுமையுடையது. அதற்றகுகிளவி—வாயாற்றக்கது வாய்ச்சி; அறிவானமைந்த சான்றோர் என்பன. இவை கருவிப்பாற்படும். அதன்வினைப்படுதல்—சாத்தனான் முடியுமிக்கருமம் என்பது. இது வினைமுதற்பாற்படும். அதனானாதல்—வாணிகத்தானாயினான் என்பது. அதனிற்கோடல்—காணத்தாற்கொண்டவரிசி என்பது. இவையுங் கருவிப்பாற்படும். இவையைந்துபொருளும் ஒடுவுருபிற்குஞ் சிறுபான்மையுரியவாயினும், பெரும்பான்மைபற்றி ஆனுருபிற்கேயுரியபோலக் கூறினார். அதனொடுமயங்கல்—எண்ணொடு விராயவரிசி என்பது. அதனொடியைந்தவொருவினைக்கிளவி — ஆசிரியனொடு வந்த மாணாக்கன் என்பது. வருதற்றொழில் இருவர்க்குமொத்தலின், ஒரு வினைக்கிளவியாயிற்று. அதனொடியைந்த வேறுவினைக்கிளவி — மலையொடு பொருத மால்யானை என்பது. பொருதல் யானைக்கல்லதின்மையின் வேறுவினைக்கிளவியாயிற்று. அதனொடியைந்தவொப்பலொப்புரை—பொன்னொடிரும்பனையர் நின்னொடுபிறரே என்பது. ஒப்பல்லதனையொப்பாகக் கூறலின் ஒப்பலொப்புரையாயிற்று. இம்மூன்றற்கும் உடனிகழ்தல் பொதுவென்பதூஉம் அவை ஒடுவெனுருபிற்கேயுரியவென்பதூஉமுணர்த்திய, அதனொடியைதல் மூன்றற்குங்கூறினார். அதனொடு மயங்கற்குமீதொக்கும். எல்லாப் பொருட்கண்ணும் அதுவென்றது உருபேற்கும் பெயர்ப்பொருளை. "அதற்கு வினையுடைமையின" என்பதற்கும் ஈதொக்கும். இன்னானேதுவென்பது முயற்சியிற் பிறத்தலானொலி நிலையாது என்பது. அதனினாதலெனக் காரகவேது முற்கூறப்பட்டமையான், இது ஞாபகவேதுவாம். இப்பொருள் ஆனுருபிற்கும் இன்னுருபிற்குமுரித்தென்பது விளக்கிய ஏதுவெனாது இன்னானேதுவென்றார். இன்னானென்பது உம்மைத்தொகை. அவற்றதேதுப்பொருண்மையென்றவாறு.

எனவென்பதனை மாற்றி ஏதுவென்பதன்பின் கொடுத்து, ஈங்குவரூஉமன்னபிறவுமெனவியைக்க. ஈங்ஙனமென்று பாடமோதுவாருமுளர்.

அதனினியறலென்பதற்குத் தச்சன் செய்த சிறுமாவையு மென்றும், இன்னுனென்பதற்குக் கண்ணுற்கொத்தை காலா னமுடவனென்றும், உதாரணங்காட்டினுரால் உரையாசிரிய ரெனின்;—அற்றன்று; தச்சன் செயத சிறுமாவையமென்ப து "வினைமுதல் கருவியனை முதற்று" என்புழியடங்குதலான் ஈண்டுப் பாற்படுககவேண்டாமையானும், சினைவிகாரத்தை முதன்மேலேற்றிக் கூறும் பொருண்மை இன்னுனென்பதனு ற்பெறப்படாமையானும், அது போலியுரையென்க.

ஓடுவும் ஆனும் இரண்டுவேற்றுமையாகற்பாலவெனின்;— அற்றன்று: வேற்றுமைமயக்கமாவது ஒருவேற்றுமையது ஒ ரு பொருட்கண்ணுக சில பொருட்கண்ணுக ஏனைவேற்றுமை யுஞ் சேறலன்றே; அவ்வாறன்றிச் சிறிதொழித்து எல்லாப் பொருட்கண்ணும இரண்டுருபுஞ்சேறலானும், வடநூலுட் பொருள்வேற்றுமையல்லது உருபுவேற்றுமையின் ஒருவே ற்றுமையாகவோதப்பட்டமையானும், ஈண்டெல்லாவாசிரிய ரும் ஒருவேற்றுமையாகவேயோதினுரென்க. வடநூலோடு மாறுகொள்ளாமைக்கூறல் ஆசிரியர்க்கு மேற்கோளாயின், விளிவேற்றுமையை எழுவாய்வேற்றுமைக்கணடக்கற்பால ராவர், அவ்வாறடக்கலிலரெனின்;—அற்றன்று: விளிவேற்று மையை எழுவாய்வேற்றுமைக்கணடக்கல் ஆண்டெல்லார்க் குமொப்பமுடிந்ததன்று; "ஏழியன் முறைய தெதிர்முக வே ற்றுமை—வேறெண விளம்பான் பெயரது விகாரமென்— ரேதிய புலவனு முளனொரு வகையா—னிந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன" என்பவாகலின், ஐந்திரநூலார் விளிவேற்றுமையை எட்டாம்வேற்றுமையாக நேர்ந்தாரென் பது பெறப்படும்; ஆசிரியர் அவர்மதம்பற்றிக் கூறினுராகலி ன், அதனேடு மாறுகொள்ளாதென்பது. இக்கருத்துவிளக் கியவன்றே, பாயிரத்துள் "ஐந்திர நிறைந்த தொல்காப்பிய ன்" எனக்கூறிற்றென்க.

அன்னபிறவுமென்றதனுல், கண்ணுற்கொத்தை; தூங்கு கையானேங்குநடைய; மதியொடொக்குமுகம்; சூலொடு க ழுதை பாரஞ்சுமந்தது என்பனபோல்வன கொள்க. (கரு)

எரு. நான்கா குவதே,
கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
யெப்பொரு ளாயினுங் கொள்ளு மதுவே.

இ - ள். மேல் கு எனப் பெயர் கொடுத்தோதப்பட்ட வேற்றுமைச்சொல் நான்காவதாம். அது யாதானுமொருபொருளாயினும் அதனையேற்றுநிற்கும். எ-று.

உ - ம். அந்தணற்காவைக் கொடுத்தான் என வரும்.

மாணுக்கற்கு நூற்பொருளுரைத்தான் எனக் கொடைப்பொருளவாகிய சொல்லானன்றிப் பிறவாய்பாட்டாற்கூறப்படுவனவும், மாணுக்கற்கு அறிவு கொடுத்தானெனக் கொடுப்பான்பொருளாய்க் கொள்வான்கட்செல்லாது ஆண்டுத் தோன்றும் பொருளுமெல்லாமடங்குதற்கு எப்பொருளாயினுமென்ருர்.

பிறபொருளுமுளவாயினும், கோடற்பொருள் சிறந்தமையின், எப்பொருளாயினுங்கொள்ளுமென்ருர். (கச)

எசு. அதற்குவினை யுடைமையி னதற்குடம் படுதலி
னதற்குப்படு பொருளி னதுவாகு கிளவியி
னதற்கியாப் புடைமையி னதற்பொருட் டாதலி
னட்பிற் பகையிற் காதலிற் சிறப்பினென்
றப்பொருட் கிளவியு மதன்பால வென்மனார்.

அதற்குவினையுடைமை—கரும்பிற்கு வேலி என்பது. வினை ஈண்டுபகாரம். அதற்குடம்படுதல்—சாத்தற்கு மகளுடம்பட்டார் என்பது. சான்ருர் கொலைக்குடம்பட்டார் என்பதுமது. அதற்குப்படுபொருளாவது பொதுவாகிய பொருளைப் பகுக்குங்கால் ஒருபங்கிற்படும் பொருள்; அது சாத்தற்குக் கூறு கொற்றன் என்பது. அதுவாகு கிளவி—கடிசூத்திரத்திற்குப் பொன் என்பது. பொன் கடிசூத்திரமாய்த் திரியுமாகலின் அதுவாகுகிளவியென்ருர். கிளவி பொருள். அதற்கியாப்புடைமை—கைக்கியாப்புடையது கடகம் என்பது.

அதற்பொருட்டாதல்—கூழிற்குக் குற்றேவல் செய்யும் என்பது. நட்பு—அவற்கு நட்டான்; அவற்குத் தமன் என்பன. பகை—அவற்குப் பகை; அவற்கு மாற்றான் என்பன. காதல்—நட்டார்க்குக் காதலன்; புதல்வற்கன்புறும் என்பன. சிறப்பு—வடுகரசர்க்குச் சிறந்தார் சோழியவரசர்; கற்பார்க்குச் சிறந்தது செவி என்பன.

அப்பொருளென்றது அன்னபொருளை; இவ்வாடையுமந்நூலானியன்றதென்றதுபோல. எனவே, அன்னபிறவுமென்றவாறும்.

அப்பொருட்கிளவியுமென்றதனால், பிணிக்கு மருந்து; நட்டார்க்குத் தோற்கும்; அவற்குத் தக்காளிவள்; உற்றார்க்குரியர் பொற்றொடிமகளிர் என்பன போல்வனவெல்லாங்கொள்க. (கரு)

எஎ. ஐந்தா குவதே,
இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
யிதனி னிற்றிது வென்னு மதுவே.

இ-ள். மேல் இன்னெனப் பெயர் கொடுத்தோதப்பட்ட வேற்றுமைச்சொல் ஐந்தாவதாம். அஃது இப்பொருளினித்தன்மைத்து இப்பொருளென்னும் பொருண்மையை உணர்த்தும். எ-று.

ஐந்தாவது நான்குபொருண்மையுடைத்து; பொருவும், எல்லையும், நீக்கமும், ஏதுவுமென. அவற்றுட்பொருவிருவகைப்படும்; உறழ்பொருவும், உவமப்பொருவுமென. ஏதுவுமிருவகைப்படும்; ஞாபகவேதுவும், காரகவேதுவுமென. அவற்றுண் ஞாபகவேதுப்பொருண்மை மேலே கூறப்பட்டது. காரகவேதுப்பொருண்மை அச்சமாக்கமென்பனவற்றாற பெறப்படும். நீக்கப்பொருண்மை தீர்தல் பற்றுவிடுதலென்பனவற்றாற்பெறப்படும். ஏனையிரண்டும் இதனினிற்றிதுவென்பதனாற் கொள்ளப்படும், அவ்விரண்டனையும் அஃதிருமுறையானுணர்த்துமாகலான். எல்லைப்பொருள்—கருவூரின்கிழக்கு; இத

னிறாங்கு என வரும். கிழக்கு ஊர்க்கென்பன, வினைக்குறிப் பலவேனும் இற்றென்னும் பொருள்பட நிற்றலின், இற்றெ னறலேயாம். பொரூஉப்பொருட்குதாரணம் முன்னர்ப்பெற ப்படும். (கக)

எஅ. வண்ணம் வடிவே யளவே சுவையே
தண்மை வெம்மை யச்ச மென்று
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை யென்று
முதுமை யிளமை சிறத்த லிழித்தல்
புதுமை பழமை யாக்க மென்று
மின்மை யுடைமை நாற்றந் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதலென்
றன்ன பிறவு மதன்பால வென்மனார்.

இ-ள். வண்ணமுதலாகப் பற்றுவிடுதலீறாகச் சொல்லப் பட்டனவும் அவைபோல்வன பிறவும் ஐந்தாம்வேற்றுமைத் திறத்தனவாம். எ-று.

வண்ணம் வெண்மை கருமை முதலாயின. வடிவு வட்டஞ் சதுரமுதலாயின. அளவு நெடுமை குறுமை முதலாயின. சுவை கைப்புப் புளிப்பு முதலாயின. நாற்றம் நறுநாற்றந்தீநா ற்றமுதலாயின.

உ-ம். காக்கையிற்கரிது களம்பழம்; இதனின்வட்டமிது; இதனினெடிது; இதனிற்றீவிது; இதனிற்றண்ணிது; இத னின்வெய்து; இதனினன்று; இதனிற்றீது; இதனிற்சிறி து; இதனிற்பெரிது; இதனின்வலிது; இதனின்மெலிது; இதனிற்கடிது; இதனின்முதிது; இதனினிளிது; இதனி ற்சிறந்ததிது; இதனினிழிந்ததிது; இதனிற்புதிது; இதனிற் பழைது; இவனினிலனிவன்; இவனினுடையனிவன்; இதனி னாறுமிது; இதனிற்பலவிவை; இதனிற்சிலவிவை. எ-ம். அச் சம்—கள்ளரினஞ்சும். எ-ம். ஆக்கம்—வாணிகத்தினாயினான்.

எ-ம். தீர்தல்—ஊரிற்றீர்ந்தான். எ-ம். பற்றுவிடுதல்—காமத்திற்பற்றுவிட்டான். எ-ம். வரும்.

அச்சமுதலிய நான்குமொழித்து ஒழிந்த இருபத்துநான்கும் ஒத்தபண்புவேறுபாடுபற்றிப் பொரூஉப்பொருள் விரித்தவாறு.

அன்னபிறவுமென்றதனால், அவனினளியனிவன்; அதனிற்சேய்த்திது; இகழ்ச்சியிற்கெட்டான்; மகிழ்ச்சியின் மைந்துற்றான் என்பனபோல்வன கொள்க.

பலவாய்பாட்டோடு வழக்கின்கட்பயின்று வருதலுடைமையாற் பொரூஉப்பொருள் இதற்குச் சிறப்புடைத்தாகலின், பெரும்பான்மையும் அதனையே விரித்தார். (கள)

எகூ. ஆறா குவதே,
அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினு மிதன திதுவெனு
மன்ன கிளவிக் கிழமைத் ததுவே.

இ - ள், அதுவெனப் பெயர் கொடுத்தோதப்பட்ட வேற்றுமைச்சொல் ஆறாவதாம், அது உடையதாய் நிற்குந்தன்னானும் பிறிதொன்றானும் இதனதிதுவென்பது பட நிற்குமதனாற் கிளவியிறறோன்றுங்கிழமையைப் பொருளாகவுடைத்து. எ-று. எனவே, ஆறுவது கிழமைப்பொருட்டென்றும், அக்கிழமை தனானை வந்த தற்கிழமையும் பிறிதான் வந்த பிறிதின்கிழமையுமென இரண்டென்றுங் கூறியவாறும்.

தன்னென்றது தன்னோடொற்றுமையுடைய பொருளை. பிறிதென்றது தனனின் வேறாகிய பொருளை.

அஃதேல், தன்னினும் பிறிதினுமாகிய கிழமைத்தென்னாது இதனதிதுவெனு மன்னகிளவிக்கிழமைத்தென்றதென்னையெனின்;—பொருட்கிழமையும், பண்புக்கிழமையும், தொழிற்கிழமையும், அவைபோலவனவுமெனக் கிழமைதாம் பல, அவற்றுளொன்று சுட்டாது இதனதிதுவென்னுஞ்சொல்லாற்

ரேன்றுங் கிழமைமாத்திரம் சுட்டுமென்றற்கு இதனதிது வெனுமன்னகிளவிக்கிழமைத்தென்றார்.

இதனவிவையென்னும் பன்மையுருபுத்தொடருமடங்குதற்கு அன்னகிளவியென்றார்.

ஒன்று பல குழீஇய தற்கிழமையும், வேறு பல குழீஇய தற்கிழமையும், ஒன்றியற்கிழமையும், உறுப்பின்கிழமையும், மெய்திரிந்தாய தற்கிழமையுமெனத் தற்கிழமை ஐந்துவகைப் படும்.

பொருளின்கிழமையும், நிலத்தின்கிழமையும், காலத்தின் கிழமையுமெனப் பிறிதின்கிழமை மூவகைப்படும். அவற்றிற்குதாரணம் முன்னர்க் காட்டுதும். (கஅ)

அ0. இயற்கையி னுடைமையின் முறைமையிற் கிழமையிற்
செயற்கையின் முதுமையின் வினையி னென்றாற் [ற்
கருவியிற் றுணையிற் கலத்தின் முதலி
னொருவழி யுறுப்பிற் குழுவி னென்றா
தெரிந்துமொழிச்செய்தியி னிலையின்வாழ்ச்சியிற்
றிரிந்துவேறு படூஉம் பிறவு மன்ன
கூறிய மருங்கிற் றோன்றுங் கிளவி
யாறன் பால வென்மனார் புலவர்.

இ - ள். இயற்கை முதலாக வாழ்ச்சியீறாகச் சொல்லப் பட்டனவும் திரிந்து வேறுபடூஉமன்னபிறவுமாகிய மேற்கூறப்பட்ட கிழமைப்பொருட்கட் டோன்றுஞ் சொல்லெல்லாம் ஆறாம்வேற்றுமைத்திறத்தனவென்று சொல்லுவர் புலவர். எ-று.

திரிந்து வேறுபடூஉமன்னபிறவுமென்றானும், திரிந்து வேறுபடுதல் அன்னபிறவுமென்றதனாற்றழுவப்படுவனவற்றுள் ஒருசாரனவற்றிற்கே கொள்க.

உ - ம். எள்ளது குப்பை; படையது குழாம் என்பன குழூஉக்கிழமை. அவை முறையானே ஒன்று பல குழீஇயது

ம் வேறு பல குழீஇயதுமாம். சாத்தனதியற்கை; நிலத்த தகலம் என்பன இயற்கைக்கிழமை. சாத்தனது நிலைமை; சாத்தனதில்லாமை என்பன நிலைக்கிழமை. இவையொன்றியற்கிழமை. யானையது கோடு; புலியதுகிர் என்பன உறுப்பின்கிழமை. உறுப்பாவது பொருளினேகதேசமென்பதறிவித்தற்கு ஒருவழியுறுப்பென்முர். சாத்தனது செயற்கை; சாத்தனது கற்றறிவு என்பன செயற்கைக்கிழமை. அரசனது முதுமை; அரசனது முதிர்வு என்பன முதுமைக்கிழமை. முதுமையென்பது பிறிதோர்காரணம் பற்முது காலம் பற்றி ஒருதலையாக அப்பொருட்கட்டோன்றும் பருவமாகலிற் செயற்கையுளடக்காது வேறு கூறினர். சாத்தனது தொழில்; சாத்தனது செலவு என்பன வினைக்கிழமை. இவை மெய்திரிந்தாய தற்கிழமை. சாத்தனதுடைமை; சாத்தனது தோட்டம் என்பன உடைமைக்கிழமை. மறியது தாய்; மறியது தந்தை என்பன முறைமைக்கிழமை. இசையது கருவி; வனைகலத்தது திகிரி என்பன கருவிக்கிழமை. அவனது துணை; அவனதிணங்கு என்பன துணைக்கிழமை. நிலத்ததொற்றிக்கலம்; சாத்தனது விலைத்தீட்டு என்பன கலக்கிழமை. ஒற்றியது முதல்; ஒற்றியது பொருள் என்பன முதற்கிழமை. கபிலரது பாட்டு; பரணரது பாட்டியல் என்பன செய்யுட்கிழமை. தெரிந்து மொழியாற்செய்யப்படுதலிற் றெரிந்துமொழிச்செய்தியாயின. இவை பொருட்பிறிதின்கிழமை. முருகனது குறிஞ்சிநிலம்; வெள்ளியதாட்சி என்பன கிழமைக்கிழமை. காட்டதியானை; யானையது காடு என்பன வாழ்ச்சிக்கிழமை. அவற்றுண் முருகனது குறிஞ்சிநிலம்; யானையது காடு என்பன நிலப்பிறிதின்கிழமை. காட்டதியானை என்பது பொருட்பிறிதின்கிழமை. ஏனையது காலப்பிறிதின்கிழமை.

திரிந்து வேறுபடூஉமன்னபிறவுமென்றதனல், எட்சாந்து; கோட்டுநூறு; சாத்தனதொப்பு; தொகையது விரி; பொருளது கேடு; சொல்லது பொருள் என்னுநதொடக்கத்தன கொள்க. அவற்றுள் எட்சாந்து; கோட்டது நூறு என்பன முதலாயின முழுவதூஉந்திரிதலின், வேறு கூறினர்.

மேற்சொல்லப்பட்ட தற்கிழமை பிறிதின்கிழமையென்பனவற்றை விரித்தவாறு. (கக)

அக. ஏழா குவதே,
கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் யிடத்தி னிலத்திற் காலத்தி
னனைவகைக் குறிப்பிற் றோன்று மதுவே.

இ - ள். கண்ணெனப் பெயர் கொடுத்தோதப்பட்ட வேற்றுமைச்சொல் ஏழாவதாம். அது வினைசெய்யாநிற்றலாகிய இடத்தின்கண்ணும், நிலமாகிய இடத்தின்கண்ணும், காலமாகிய இடத்தின்கண்ணுமென அம்மூவகைக்குறிப்பின்கண்ணுந்தோன்றும். எ-று. எனவே, ஏழாவது இடப்பொருண்மைத்தென்றவாறாம்.

குறிப்பிற்றோன்றுமதுவென்றது அவற்றையிடமாகக் குறித்தவழி அவ்வேற்றுமை தோன்றுமென்றவாறு. எனவே, இடமாகக் குறிக்கப்படாதவழி அப்பெயர்க்கண் வேற்றுமை தோன்றாதென்பதாம்.

தன்னினமுடித்தலென்பதனான் ஏனைவேற்றுமைச்சொற்களும் அவ்வப்பொருட்கட்குறிப்பில்வழி அவ்வப்பெயர்க்கண் வாராமை கொள்க.

உ - ம். தட்டுப்புடைக்கண் வந்தான்; மாடத்தின்கணிருந்தான்; கூதிர்க்கண் வந்தான் என வரும். (உ0)

அஉ. கண்கால் புறமக முள்ளுழை கீழ்மேல்
பின்சா ரயல்புடை தேவகை யெனாஅ
முன்னிடை கடைதலை வலமிட மெனாஅ
வன்ன பிறவு மதன்பால வென்மனார்.

இ - ள். கண் முதலாக இடமீறாகச் சொல்லப்பட்ட பத்தொன்பதும்பொருளும் அவைபோல்வன பிறவும் ஏழாவதன் றிறத்தன. எ-று.

கண்ணென்னும் பொருளாவது 'கண்ணின்று கூறுதலாற் றூனவளுயின்.' எ-ம். 'கண்ணகன்ஞாலம்.' எ-ம். கண்ணென்னுமிடைச்சொல்லானுணர்த்தப்படும் இடப்பொருண்மை. தேவகையென்பது திசைக்கூறு. கண்கால்புறமகமுள்ளென்பன முதலாயினவற்றது பொருள்வேற்றுமை வழக்கு நோக்கி யுணர்ந்துகொள்க.

கண்ணின்று சொல்லியானை என்கண்ணின்றிவைசொல்லற்பாலையல்லை என்றும், ஊர்க்காற்செய்யை ஊர்க்கட்செய் என்றும், ஊர்ப்புறத்து நின்ற மரத்தை ஊர்க்கண்மரம் என்றும், எயிலகத்துப் புக்கானை எயிற்கட்புக்கான் என்றும், இல்லுளிருந்தானை இற்கணிருந்தான் என்றும், அரசனுழையிருந்தானை அரசன்கணிருந்தான் என்றும், ஆலின்கீழ்க்கிடந்தவானை ஆலின்கட்கிடந்தது என்றும், மரத்தின்மேலிருந்த குரங்கை மரத்தின்கணிருந்தது என்றும், ஏர்ப்பின்சென்றானை ஏர்க்கட்சென்றான் என்றும், காட்டுச்சாரோடுவதனைக் காட்டின்கணோடும் என்றும், உறையூர்க்கயனின்ற சிராப்பள்ளிக்குன்றை உறையூர்க்கட்குன்று என்றும், எயிற்புடைநின்றாரை எயிற்கணின்றார் என்றும், வடபால்வேங்கடம் தென்பாற்குமரி என்பனவற்றை வடக்கண்வேங்கடம் தெற்கட்குமரி என்றும், புலிமுன்பட்டானைப் புலிக்கட்பட்டான் என்றும், நூலினிடையுங்கடையுந்தலையுநின்ற மங்கலத்தை நூற்கண்மங்கலம் என்றும், கைவலத்துள்ளதனைக் கைக்கணுள்ளது என்றும், தன்னிடத்து நிகழ்வதனைத் தன்கணிகழ்வது என்றும், அவ்விடப்பொருள்பற்றி ஏழாம்வேற்றுமை வந்தவாறு கண்டுகொள்க.

எனுஅவென்பது எண்ணிடைச்சொல்.

கண் முதலாயினவெல்லாம் உருபென்றால் உரையாசிரியரொனின்;—உருபாயின், ஏழாவதற்குக் கண்ணென்பது உருபாதல் மேலே பெறப்பட்டமையாற் பெயர்த்துங் கண்காலென்றல் கூறியது கூறிற்றுமாகலானும், ஊர்ப்புறத்திருந்தான், ஊரகத்திருந்தான், கைவலத்துள்ளது கொடுக்கும் எனப் புறம் அகம் வலமென்பனவற்றுவழி அத்துச்சாரியை கொடுத்து

தாரணங்காட்டினமையானும், அவர்க்கது கருத்தன்றென்க. உருபல்லவேல், என்னுழை, என்முன் என நிலைமொழி உருபிற் கோதிய செய்கை பெற்றவாறென்னையெனின்;—'அதற்பொருட்டாகலின்'. எனவும் 'தம்முடைய தண்ணளியுந் தாமும்' எனவும் உருபின்பொருள்பட வரும் பிறமொழி வந்துழியும் நிலைமொழி அச்செய்கை பெற்று நிற்றலின், அச்செய்கை உருப்புணர்ச்சிக்கேயென்னும் யாப்புறவின்றென்க.

அன்னபிறவுமென்றதனால், பொருட்கணுணர்வு, என்கணன்புடையன், மலர்க்கணாற்றம், ஆகாயத்துக்கட்பருந்து எனனுந்தொடக்கத்தன கொள்க. (உக)

அகூ. வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
யீற்றுநின் றியலுந் தொகைவயிற் பிரிந்து
பல்லா றுகப் பொருள்புணர்ந் திசைக்கு
மெல்லாச் சொல்லு முரிய வென்ப. *

இ - ள். வேற்றுமைத்தொகையை விரிக்குமிடத்து, வேற்றுமையேயன்றி, அனமொழித்தொகையை விரிப்புழிப் பல்லாற்றான் அன்மொழிப்பொருளொடு புணர்ந்து வரும் எல்லாச்சொல்லும், விரிக்கப்படும். எ-று.

உருபு தொகப் பொருணிற்றலின், வேற்றுமைத்தொகையை வேற்றுமைப்பொருளென்றார். தொகையை வேற்றுமைப்பொருளென்றும், பொருளென்றும், யாண்டுமாள்ப.

அன்மொழித்தொகை பண்புத்தொகை முதலாகிய தொகை இறுதி நின்றியறலின், ஈற்றுநின்றியலுந்தொகையென்றார்.

தாழ்குழல், பொற்றொடி, மட்காரணம் என்னும் அன்மொழித்தொகைகளை விரிப்புழி, தாழ்குழலையுடையாள், பொற்றொடியையணிந்தாள், மண்ணாகிய காரணத்தானியன்றது

* இச்சூத்திரத்துக்குச் சேனாவரையர் முதலாயினார் உரைத்த உரையைச் சிவஞானமுனிவர் மறுத்து வேறுரையுரைத்தார். தொல்காப்பியச்சூத்திரவிருத்தி கூஎ ம் கூஅம் பக்கங்களிற்காண்க.

என வரும் உடைமையும், அணிதலும், இயறலும், கருங்குழற்பேதை, பொறறொடியரிவை, மட்குடம் என்னும் வேற்றுமைத்தொகைகளை விரிப்புழியும், கருங்குழலையுடைய பேதை, பொற்றொடியையணிந்தவரிவை, மண்ணானியன்ற குடம் என வந்தவாறு கண்டுகொள்க.

பொருள்புணர்ந்திசைக்குமெனவே, இருதொகைக்கண்ணும், ஒருவாய்பாட்டானன்றிப் பொருள் சிதையாமலுணர்த்துதற்கேறற வாய்பாடெல்லாவற்றானும், வருமென்பதாம். அவ்வாறுதல் மேற்காட்டப்பட்டனவற்றுட்கண்டுகொள்க.

அன்மொழித்தொகையிற் சொற்பெய்து விரித்தல் யாண்டுப் பெற்றுமெனின்;—அதுவும் அநுவாதமுகத்தான் ஈண்டே பெற்றுமென்க. பெறவே, இரண்டுதொகையும் விரிப்புழி வரும் வேறுபாடு கூறியவாறும்.

இதனை "வேற்றுமைத் தொகையே யுவமைத் தொகையே" என்னுஞ்சூத்திரத்தின் பின் வைக்கவெனின்; — அதுவுமுறையாயினும், இனி வருஞ்சூத்திரங்களான் வேற்றுமைத்தொகை விரிபற்றிய மயக்கமுணர்த்துதலான், ஆண்டுப்படுமுறைமையுணர்த்துதல் ஈண்டுமியைபுடைத்தென்க.

உரையாசிரியர் இரண்டுசூத்திரமாக அறுத்து ஆசிரியர்மதவிகற்பங்கூறித் தம்மதமிதுவென்பது போதர வொன்றாகவுரைப்பாருமுளரொன்றார். இரண்டாய் ஒன்றுயவழிப் பிறிதுரையின்மையின், உரையாசிரியர்கருத்திதுவேயாம். (உஉ)

வேற்றுமையியன்முற்றிற்று.

---

மூன்றுவது

## வேற்றுமைமயங்கியல்.

அச. கருமமல்லாச் சார்பென் கிளவிக்
குரிமையு முடைத்தே கண்ணென்வேற்றுமை.

மேற்கூறப்பட்ட வேற்றுமை தம்முண்மயங்குமாறுணர்த்தியவெடுத்துக்கொண்டார். அம்மயக்கம் இருவகைப்படு

ம்; பொருண்மயக்கமும், உருபுமயக்கமுமென. பொருண் மயக்கமாவது தன்பொருளிற்றீராது பிறிதொன்றன்பொரு ட்கட்சேறல். உருபுமயக்கமாவது தன்பொருளிற்றீர்ந்து சே றல். "யாத னுருபிற் கூறிற் றாயினும" என்பதனுன் உருபும யக்கமுணர்த்தினுர்; அல்லனவற்ருனெல்லாம் பொருண்மய க்கமுணர்த்தினுர். இவ்விருவகைமயக்கமுமுணர்த்துதலான், இவ்வோத்து வேற்றுமைமயங்கியலென்னும் பெயர்த்தாயிற் று. மயக்கமேயன்றி வேறறுமைக்கோதிய இலக்கணத்திற்பி றழ்ந்து வழீஇயமைவனவும் பிறவும் இயைபுடையன ஈண்டு ணர்த்துதலான், இக்குறி பன்மை நோக்கிச் சென்ற குறியெ னவுணர்க.

இச்சூத்திரத்தின் பொருள். இரண்டாவதற்கோதப்பட்ட சார்புபொருண்மை கருமச்சார்புங் கருமமல்லாச்சார்புமெ ன இரண்டுவகைப்படும். அவற்றுள், கருமச்சார்பு தூணைச் சார்ந்தான் எனவொன்றனையொன்று மெய்யுறுதலாம். க ருமமல்லாச்சார்பு மெய்யுறுதலின்றி அரசரைச்சார்ந்தான் என வருவதாம். கருமமல்லாத சார்புபொருண்மைக்கு உரி த்தாய் வருதலுமுடைத்து ஏழாவது. எ-று.

உ - ம். அரசர்கட்சாரந்தான் என வரும்.

கருமமாவது ஈண்டு மெய்யுறுதலாயின், அரசர்கட்சார்ந தான் எனபுழி உறுதலின்மையிற் சார்பாமாறென்னையெனி ன்;—தூண் பற்ருக ஒருசாத்தன் சார்ந்தாற்போல அரசர் பறருக அச்சார்நதானெழுகுதலிற் சார்பாயிற்றென்பது.

உம்மை எதிர்மறை.

தூணின்கட்சார்ந்தான் எனக் கருமச்சார்ச்சிக்கண் ஏழா வது சென்ருற்படுமிழுக்கெனனையெனின்;—அன்னதோாவழ க்கின்மையே பிறிதில்லையென்க. இக்காலத்து அவ்வாறு வ ழங்குபவாலெனின்;—கருமமல்லாச்சார்ச்சிக்கண் வருமுரு பைச் சார்தலொப்புமையாற் கருமச்சார்ச்சிக்கண்ணுங்கொ டுத்து உலகத்தார் இடைத்தெரிவின்றி வழங்குகின்ருரொன வேபடும்; ஆசிரியர் கருமமல்லாச்சார்பென்கிளவியென வித ந்து கூறினமையானெனபது. (க)

அரு. சினைநிலைக் கிளவிக் கையுங் கண்ணும்
வினைநிலை யொக்கு மென்மனார் புலவர்.

இ - ள். சினைமேனிற்குஞ்சொல்லிற்கு இரண்டாவதும் ஏழாவதும் வினைநிலைக்கண் ஒக்குமென்று சொல்லுவர் புலவர். எ-று.

உ - ம். கோட்டைக்குறைத்தான்; கோட்டின்கட்குறைத்தான் என வரும்.

வினைக்குறிப்பை நீக்குதற்கு வினையென்றார்.

வினைநிலையொக்குமென்றாரேனும், புகழ்தல் பழித்தலென்னுநதொடக்கத்தனவொழித்து மயஙகுதறகேற்கும் அறுததல குறைத்தன்முதலாயின வினையே கொள்ளப்படும்.

இரண்டாவதன்பொருட்கண் ஏழாவது சென்றதாயினும், சிறுவரவிற்றன்றி இரண்டாவதுபோல ஏழாவது வழக்கின்கட்பயின்று வருதலின், ஒக்குமென்றார்; அது காரணத்தால, கருமமல்லாச்சார்ச்சிக்குஞ் சினைக்கிளவிக்கும் ஏழாவது உரிமையுடைத்தென உடன்கூறாது, வேறு கூறினானொன்பது. (உ)

அகூ. கன்றலுஞ் செலவு மொன்றுமார் வினையே.

இ - ள். கன்றற்பொருண்மேல் வருஞ்சொல்லும் செல்வுபொருண்மேல் வருஞ்சொல்லும் இரண்டாவதற்கும் ஏழாவதற்கும் ஒருதொழில. எ-று.

உ - ம். சூதினைக்கன்றினான்; சூதின்கட்கன்றினான்; நெறியைச் சென்றான்; நெறிக்கட்சென்றான் என வரும்.

பொருள்பற்றியோதினமையால். சூதினையிவறினான்; சூதின்கணிவறினான்; நெறியைநடந்தான்; நெறிக்கணடந்தான் என வருவனவுங்கொள்க.

இரண்டாவதற்கு இப்பொருள் மேலே கூறப்பட்டமையால், கன்றல் செலவென்னும் பொருட்கு ஏழாவதுமுரித்தென்றோதவமையுமெனின்; — அங்ஙனமோதின் ஏழாவதன்வரவு சிறுபான்மையென்பதுபடும்; ஆகலின் உடனோதினானொன்பது.

சினைநிலைக்கிளவி நிலைமொழிவரையறையாகலானும், இது வருமொழிவரையறையாகலானும், வேறு கூறினானென்பது.

அஎ. முதற்சினைக் கிளவிக் கதுவென் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கை வருமே.

இ - ள். முதற்சொல்லோடு தொடர்ந்த சினைச்சொல்லிற்கு, ஆறும்வேற்றுமை முதற்கண் வருமாயின், சினைச்சொல்லின்கண் இரண்டாம்வேற்றுமையே வரும். எ-று.

உ - ம். யானையது கோட்டைக் குறைத்தான் என வரும்.

"சினைநிலைக் கிளவிக் கையுங் கண்ணும்" என்றதனான் முதற்சினைக்கிளவிக்கும் இரண்டுவேற்றுமையுமெய்துவதனை நியமித்தவாறு. இது வருஞ்சூத்திரத்திற்குமொக்கும். (௪)

அஅ. முதன்மு னைவரிற் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருத றெள்ளி தென்ப.

இ - ள். அம்முதற்சினைக்கிளவிக்கண், முதற்சொன்முன் ஐகாரவேற்றுமை வரின், சினைச்சொன்முன் கண்ணென்னும் வேற்றுமை வருதறெள்ளிது. எ-று.

உ - ம். யானையைக் கோட்டின்கட்குறைத்தான் என வரும்.

தெள்ளிதென்றதனான, யானையைக் கோட்டைக் குறைத்தான் எனச் சிறுபான்மை ஐகாரவேற்றுமையும் வருமென்பதாம்.

சினைக்கிளவிக்கண் மயக்கமுணர்த்துகின்ற சூத்திரத்திடைக் "கன்றலுஞ்செலவும்" என்னுஞ்சூத்திரம் வைத்ததென்னையெனின்;—ஐயுங்கண்ணுமெனபது அதிகாரத்தான் வரச் சூத்திரஞ்சுருங்குமாகலின், "சினைநிலைக்கிளவிக்கு" என னுஞ்சூத்திரத்தின்பின் அதனை வைத்தானென்பது. (௫)

அகூ. முதலுஞ் சினையும் பொருள்வேறு படாஅ
நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே.

இ - ள். முதலுஞ்சினையும் முதலாயது முதலேயாய்ச் சினையாயது சினையேயாய்த் தம்முள் வேறுபொருளாகா. செ

ல்லுங்கால், சொல்லுவானது சொல்லுதற்குறிப்பினுன் முத லென்றுஞ்சினையென்றும் வழங்கப்படும். எ-று.

சொற்குறிப்பினவென்றது முதலெனப்பட்டதுதானே ன்னைப் பிறிதொன்றற்கு ஏகதேசமாகக் குறித்தவழிச் சினை யுமாம்; சினையெனப்பட்டதுதானே தன்கணேகதேசத்தை நோக்கி முதலெனக் குறித்தவழி முதலுமாமென்றவாறு.

கோட்டது நுனியைக் குறைத்தான்; கோட்டைநுனிக்க ட்குறைத்தான்; கோட்டை நுனியைக் குறைத்தான் என முதற்கோதப்பட்ட உருபு சினைக்கண்ணும் வந்ததாலென்று ஐயுற்றார்க்கு, கருத்துவகையாற் சேரடென்பது ஆண்டு முத லாய் நிற்றலின், முதலிற்கோதிய உருபே முதற்கண் வந்த தென, ஐயமகற்றியவாறு. (௬)

௯0. பிண்டப் பெயரு மாயிய றிரியா
பண்டியன் மருங்கின் மரீஇய மரபே.

இ - ள். பிண்டத்தையுணர்த்தும் பெயரும் முதற்சினைப் பெயரியல்பிற்றிரியா; அவ்வாறு அவற்றை முதலுஞ்சினையு மாக, வழங்குதல் மேற்றொட்டு வழங்கி வாராநின்ற கூற்று ன் மருவிய முறை. எ-று.

பிண்டம் பலபொருட்டொகுதி.

ஈண்டு ஆயியறிரியாவென மாட்டெறிந்தது, முதற்சினைக் கிளவிக்குப்போலப் பிண்டப்பெயர்க்கு முதற்கண் ஆறாவது வரிற் சினைக்கு இரண்டாவது வருதலும், முதற்கு இரண்டா வது வரிற் சினைக்கு ஏழாவது வருதலும், சிறுபான்மை இர ண்டாவது வருதலுமாம்.

உ - ம். குப்பையது தலையைச் சிதறினுன்; குப்பையைத் தலைக்கட்சிதறினுன்; குப்பையைத் தலையைச் சிதறினுன் என வரும்.

பிண்டமும் முதலுஞ்சினையுமேயாகலின் வேறு கூறல்வே ண்டாவெனின்;—குப்பையென்புழி, தொக்க பலபொருளா ல்லது, அவற்றின் வேறாய் அவற்றானியன்றது தானென்றெ

ப்படும் பொருளின்மையின், தொல்லாசிரியர் அதனை முதலெ ன்று வேண்டார்; அதனான் வேறு கூறினாரென்பது. படை காடு கா முதலாயினவுமன்ன. (எ)

கூக. ஒருவினை யொடுச்சொ லுயர்பின் வழித்தே.

இ - ள். அதனொடியைந்த ஒருவினைக்கிளவியென மூன்றா வதற்கோதிய ஒருவினையொடுச்சொல் உயர்பொருளையுணர் த்தும் பெயர்வழித் தோன்றும். எ-று.

உ - ம். அரசனொடிளையர் வந்தார்; ஆசிரியனொடு மாணாக் கர் வந்தார் என வரும்.

உயர்பொருட்பெயர்வழி ஒடுக்கொடுக்கவெனவே, உயர் பில்வழிச் சாத்தனுங் கொற்றனும் வந்தார் என இருபெயரும் எழுவாயாய் நிற்குமென்பதாம். நாயொடு நம்பி வந்தான் என இழிபெயர்க்கண்ணும் ஒருவினையொடுச்சொல் வந்ததாலெனி ன்;—யாதானுமோராற்றான் அதற்குயர்புண்டாயினல்லது அ வ்வாறு கூறார்; கூறுபவாயின், அஃது ஒருவினையொடுச்சொ லெனப்படாது, கைப்பொருளொடு வந்தான் என்பது போ ல, அது தனக்குண்டாக வந்தானெனப் பிறிதுபொருள் படு வதோரொடுவுருபாமென்க.

இதனை வேற்றுமையோத்தின்கண் "அதனினியறல்" என் னுஞ் சூத்திரத்தின்பின் வையாது ஈண்டு வைத்ததென்னையெ னின்;—வேற்றுமையது பெயரும் முறையுந் தொகையும் பொதுவகையான் அவற்றதிலக்கணமும் உணர்த்தியதல்லது, இன்னவேற்றுமை இன்னபொருட்கண் இன்னவாறாமென்னு ம் விசேடவிலக்கணவதிகாரம்பட்டின்றாகலான், ஆண்டு வை யாது, மூன்றாவது இப்பொருட்கண் இவ்வாறாமென விசேட விலக்கணம் "மூன்றனு மைந்தனும்" எனக் கூறுகின்றாராகலி ன், அதனோடியைய ஈண்டு வைத்தார்; இதுவும் ஒருபொருள் பற்றி யோதுகின்ற விசேடவிலக்கணமாகலானென்பது. (அ)

கூ௨. மூன்றனு மைந்தனுந் தோன்றக் கூறிய
வாக்கமொடு புணர்ந்த வேதுக் கிளவி
நோக்கோ ரனைய வென்மனார் புலவர்.

இ - ள். மூன்றாம்வேற்றுமைக்கண்ணும் ஐந்தாம்வேற்றுமைக்கண்ணும் விளங்கச் சொல்லப்பட்ட ஆக்கத்தோடு கூடிய ஏதுச்சொல் அவ்வேதுப்பொருண்மையை நோக்கு நோக்கு ஒருதன்மைய. எ-று.

உ-ம். வாணிகத்தானாயினான்; வாணிகத்தானாய பொருள். எ-ம். வாணிகத்தினாயினான்; வாணிகத்தினாய பொருள் எ-ம். வரும்.

வாணிகத்தான், வாணிகத்தின் எனவுருபொடு தொடர்ந்து நின்ற சொல்லை ஏதுக்கிளவியென்றார்.

"அதன்வினைப்படுதலதனினாதல்" என்றும் "புதுமைபழமையாக்கம" என்றும் மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் ஏதுப்பொருண் மேற்கூறப்பட்டமையான் இச்சூத்திரம் வேண்டாவெனின்;—அற்றன்று: பிரிநிலையேகாரமுதலாகிய இடைச்சொல்லும் ஒருசார்வினைச்சொல்லும் முன்னோதபபட்டனவேனும், எச்சமாதலொப்புமையான் எச்சவாராய்ச்சிக்கண் அவை தம்மையே " பிரிநிலை வினையே பெயரோ யொழியிசை—யெதிர்மறை யும்மை யெனவே சொல்லே" எனப்பின்னுங்கூறினாற்போல, ஏதுப்பொருண்மை மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் மேற்கூறப்பட்டதாயினும், மயக்கமாதலொபபுமையான் மயக்கவாராய்ச்சிக்கண் ஈண்டுங்கூறினாராகலின், கூறியது கூறலென்னுங்குற்றமின்றென்பது. இஃது "அச்சக்கிளவி" என்பதற்குமொக்கும்.

அஃதேல், மயக்கமாவது ஒருவேற்றுமை பிறிதொன்றன் பொருட்கட்சேறலன்றே; ஏதுவின்கண் வரும் மூன்றாவதும் ஐந்தாவதுந் தம்பொருளேபற்றி நிற்றலின் மயங்கினவெனப்படாவெனின்;—நன்று சொன்னாய். ஏதுப்பொருண்மை தனக்குரியவாற்றான் அவற்றிற்குத் தன்பொருளாயினவாறு போலப் பிறிதொன்றற்குரியவாற்றாற் பிறிதொன்றன்பொருளாதலுமுடைமையின், அம்முகத்தான் மயங்கினவெனவேபடுமென்பது. அல்லதூஉம், ஒருபொருட்கண் இரண்டுருபு சென்ற துணையான் மயக்கமாயிற்றெனினுமமையும்.

ஆக்கமொடு புணர்ந்தவேதுக்கிளவியெனவே, ஆக்கமொடு புணராது ஞாபகவேதுப்பொருண்மைக்கண் வரும் இன்னும் ஆனும் ஒத்த வரவினவல்லவென்பதாம். ஆண்டைந்தாவது பெருவரவிற்றெனக் கொள்க. (௯)

௯௫. இரண்டன் மருங்கி னோக்க நோக்கமவ்
விரண்டன் மருங்கி னேதுவு மாகும்.

இ - ள். "நோக்கலினஞ்சலின்" என இரண்டாவதற்கோதிய நோக்கப்பொருண்மை நோக்கிய நோக்கமும் நோக்க நோக்கமுமென இரண்டுவகைப்படும். நோக்கிய நோக்கம் கண்ணானோக்குதல். நோக்கநோக்கம் மனத்தானென்றனை நோக்குதல. அநநோக்கநோக்கமாகிய பொருள் மூன்றாவதற்கும் ஐந்தாவதற்குமுரிய ஏதுப்பொருண்மையுமாம். எ-று.

நோக்கநோக்கத்தானோக்கப்படும் பொருளை நோக்கநோக்கமென்றார்.

நோக்கநோக்கமவ்விரண்டன்மருங்கினேதுவுமாகுமெனவே, அவ்வேதுப்பொருண்மைக்குரிய இரண்டுருபும் அவ்வேதுப்பொருண்மையிற்றீராது இரண்டாவதன்பொருட்கண் வருமென்பதாம். ஒம்படைப்பொருட்கண் வருவனவற்றிற்குமிதொக்கும்.

உ - ம். 'வானோக்கி வாழு முயிரெல்லா மன்னவன்—கோ னோக்கி வாழுங் குடி' என்புழி, வானை நோக்கி வாழும், கோலை நோக்கி வாழும் எனவிரண்டாவது வருதலேயன்றி, வானானோக்கி வாழும், வானினோக்கி வாழும, கோலானோக்கி வாழும், கோலினோக்கி வாழும் என மூன்றாவதும் ஐந்தாவதும் வந்தவாறு கண்டுகொள்க.

ஏதுவாயினவாறென்னையெனின்;—உயிருங்குடியும் வானையுங்கோலையுநோக்குவது அவற்றானாய பயன்பற்றி அவற்றைத் தாமின்றியமையாமையன்றே; அதனான் அவ்வாறு பயன்படுவன அவற்றதின்றியமையாமைக்கு ஏதுவாதலுமுடையவென்பது. அஃதேல், வானுங்கோலும் ஏதுவாயவழி நோக்கப

படுவன பிறவாவான் செல்லுமெனின்;—அற்றன்று: கண்ணு ட்குத்தினுன் என்றவழிக் கண்ணே செயப்படுபொருளாதலு ம் பெறப்பட்டாற்போல, வாளுேேக்கும், கோலாேேக்கும் என்புழியும் அவைதாமே செயப்படுபொருளாதலும் பெறப் பட்டமையால், நோக்கப்படுவன பிறவாவான் செல்லாவெ ன்பது. (௯0)

௯௪. அதுவென்வேற்றுமையுயர்திணைத்தொகைவயி
னதுவெ னுருபுகெடக் குகரம் வருமே.

இ - ள். ஆறும்வேற்றுமைப்பொருண்மேல் வரும் உயர்தி ணைத்தொகைக்கண் உருபு விரிப்புழி அதுவென்னுமுருபு கெ ட அதன்பொருட்கண் நான்காமுருபு வரும். எ-று.

ஈண்டு அதுவெனுருபு கெடுதலாவது அவ்வுருபாண்டு வா ராமை.

நம்பி மகன், நங்கை கணவன் என்னுந்தொகைகளை விரிப் புழி, நம்பிக்கு மகன், நங்கைக்குக் கணவன என நான்கனுரு பு வந்தவாறு கண்டுகொள்க.

உயர்திணைத் தொகைவயி னதுவெனுருபு கெடக் குகரம் வருமென்றதனுன், ஆறனுருபு அஃறிணைப்பாலேன்ற நிற்றல் பெற்றும்.

உயர்திணைத்தொகைவயின் ஆறுவதனை விலக்கி நான்காவ தே சேறலின், "இதனதிதுவிற்று" என்னுஞ்சூத்திரத்தாற்கூ றப்படும் பொருளோடு உடன் வையாது இதனை வேறு கூறி னார். (௯௧)

௯௫. தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டு மூன்றுங்
கடிநிலை யிலவே பொருள்வயி னான.

இ - ள். தனக்கேயுரித்தாய் நில்லாது ஒருகால் ஈற்றுப்பெ யரொடுஞ் சென்று தடுமாறுதொழிலொடு தொடர்ந்த பெய ர்க்கு இரண்டாவதும் மூன்றுவதுங் கடியப்படா, அவ்வேற றுமை தோக அவற்றின்பொருணிற்குந் தொகையிடத்து. எ-று.

உ-ம். புலிகொன்றயானை; புலிகொல்யானை என்புழிப் புலியைக் கொன்ற யானை. எ-ம். புலியாற்கொல்லப்பட்ட யானை. எ-ம். இரண்டாவதும் மூன்ருவதும் மயங்கியவாறு கண்டுகொள்க.

கொன்ற, கொல்லென்பன வினைமுதற்பொருட்குரியவாகப் புலியென்பது செயப்படுபொருளாயவழியல்லது இரண்டாவது வாராமையானும், அச்சொற்கள் செயப்படுபொருட்குரியவாகப் புலி வினைமுதலாயவழியல்லது மூன்ருவது வாராமையானும், இவை ஒருபொருட்கண் வந்தனவன்மையின், மயக்கமாமாறென்னையெனின்;—ஒருபொருட்கண் வாராமையின் மயக்கமெனப்படாதாயினும், தம்மாறுதொழிற்றொகைக்கண் இரண்டும் வந்து நிற்றலின் மயக்கப்பாற்படுமென்பது. (கஉ)

கூகூ. ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப வுணரு மோரே.

இ-ள். தம்மாறுதொழிலொடு புணர்ந்த பெயருள், இறுதிப்பெயர்முன்னர்ப் பொருள்வேறுபாடுணர்த்துஞ்சொல் வரின், அச்சொல்லான் அப்பொருள்வேற்றுமை தெரிவர் உணர்வோர். எ-று.

உ-ம். புலிகொல்யானையோடாநின்றது;புலிகொல்யானைக்கோடு வந்தன என வரும்.

பிறமபக்கம்போலாது ஈண்டுப் பொருள்வேறுபாடுணர்ந்தல்லது உருபு விரிக்கலாகாமையின், மெய்யறிபனுவலின் வேற்றுமைதெரிபவென்ருர்.

முன் புலியைக் கொன்ற யானை பின் பிறிதொன்றனுணிறந்துழியும் புலிகொல்யானைக்கோடு வந்தனவென்ப; அவ்வழிக் கொன்றது, கொல்லப்பட்டதென்னும் வேறுபாடு குறிப்பானுணரப்படுமென்பார் உணருமோரென்ருர். பிறவுமன்ன.

கூஎ. ஓம்படைக் கிளவிக் கையு மானுந்
தாம்பிரி விலவே தொகைவரு காலை.

இ - ள். ஓம்படைப்பொருண்மைக்கு ஐகாரவுருபும் ஆனுருபும் ஒத்தவுரிமைய, அவ்வேற்றுமை தொக்கவழி. எ-று.

ஓம்படுத்தல் பாதுகாத்தல்.

புலிபோற்றிவா என்புழி ஓம்படைக்கிளவி இரண்டாவதற்கோதிய காப்பின்கணடங்குதலின், புலியைப் போற்றி வாவென ஐகாரவுருபும், புலி அவன் போற்றி வருதற்கு ஏதுவாதலுமுடைமையாற் புலியாற்போற்றி வாவென ஆனுருபும், ஒத்தவுரிமையவாய் வந்தவாறு கண்டுகொள்க.

புலியேதுவாதலுமுடைத்தாயின், இரண்டன் மருங்கி னோக்க னோக்கமு மோம்படைக் கிளவியு மேதுவு மாகும் எனவமையும் இச்சூத்திரம் வேண்டாவெனின்;—அங்ஙனமோதின ஓம்படைப்பொருண்மைக்கு ஐந்தாமுருபுமெய்தும்; அதனை விலக்குதற்கு ஐயுமானுநதாம்பிரிவில வென வேறு கூறினார். இவை பிரிவிலவெனவே, இன்னுருபு பிரிவுடைத்தாய், புலியிற்போற்றிவாவெனச் சிறுபான்மை வருமென்பதாம்.

இரண்டுவேற்றுமைக்கும் ஓம்படைப்பொருண்மை இச்சூத்திரத்தானெய்துவித்தாரெனினுமமையும்.

தாமென்பது செய்யுட்சுவைபட நின்றது. (கச)

கூஅ. ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்
கேழு மாகு முறைநிலத் தான.

இ - ள். ஆறும்வேற்றுமைக்கணோதிய வாழ்ச்சிக்கிழமைக்கு உறைநிலத்தின்கண் ஏழாவதும் வரும். எ-று.

காட்டியானை என்பது காட்டதியானையென விரிதலேயன்றிக் காட்டின்கண்யானையெனச் சிறுபான்மை ஏழாவது விரியினுமமையுமென்றவாறு.

யானைக்காடு, நம்பியூர் என்பன வாழ்ச்சிக்கிழமைப்பொருளவாயினும், ஆண்டேழாவது மயங்காதென்றற்கு உறைநிலத்தானவென்றார். எனவே, உறைநிலப்பெயர் பின்மொழியாயவழியது இம்மயக்கமென்பதாம். (கரு)

௯௯. குத்தொக வரூஉங் கொடையெதிர் கிளவி
யப்பொரு ளாறற் குரித்து மாகும்.

இ - ள். குவ்வென்னுமுருபு தொக வரும் கொடையெதிர் கிளவியாகிய தொகையினது கொடையெதிர்தலாகிய அப் பொருண்மை ஆறும்வேற்றுமைக்குரித்துமாம். எ-று.

நாகர்பலி என்பது நாகர்க்கு நேர்ந்த பலியென விரிதலே யன்றி நாகரது பலியென விரியினுமமையுமென்றவாறு.

கொடையெதிர்கிளவியென்பதற்குத் தருசொல் வருசொற் குறைத்ததுரைக்க.

கொடையெதிர்தல் கொடையை விரும்பி மேற்கோடல்.

நாகர்க்குக் கொடுத்தலை விரும்பி மேற்கொண்டவழித் திரிபின்றி அவர்க்கஃதுடைமையாதலின், கிழமைப்பொருட்குரிய உருபாற்கூறினுமமையுமென்றவாறு. (௧௬)

௧00. அச்சக் கிளவிக் கைந்து மிரண்டு
மெச்ச மிலவே பொருள்வயி னான.

இ - ள். அச்சப்பொருண்மைக்கு ஐந்தாம்வேற்றுமையும் இரண்டாம்வேற்றுமையும் ஒத்த கிழமைய, வேற்றுமை தொக அவற்றின்பொருணின்றவழி. எ-று.

பழியஞ்சும் என்புழி, பழியினஞ்சும், பழியையஞ்சும் எனவிரண்டும், ஒத்த கிழமையவாய் நின்றவாறறிக.

அஃதேல், ஒருபொருட்கண் வரினன்றே மயக்கமாவது; இவை செயப்படுபொருளும் ஏதுவுமாகிய பொருள்வேறுபாடுடையவாகலின் மயக்கமாமாறென்னையெனின்; — அற்றன்று: ஈண்டேதுவாதலே அஞ்சப்படுதலாய் வேறன்றி நிற்றலின், ஒருபொருட்கண் வந்தனவேயாம்; அதனான் மயக்கமாமென்பது. (௧௭)

௧0௧. அன்ன பிறவுந் தொன்னெறி பிழையா
துருபினும் பொருளினு மெய்தடு மாறி
யிருவயி னிலையும் வேற்றுமை யெல்லாந்
திரிபிட னிலவே தெரியு மோர்க்கே.

இ - ள். மேன்மயக்கங்கூறப்பட்ட வேற்றுமையேயன்றி, அவை போல்வன பிறவும், தொன்று தொட்டு வரும் வழக்கிற்பிழையாது, உருபானும் பொருளானும் ஒன்றனிலேக்களத்து ஒன்று சென்று, பிறிதொன்றன்பொருளுந் தன்பொருளுமாகிய ஈரிடத்தும் நிலேபெறும் வேற்றுமையெல்லாந்திரிபுடையவல்ல தெரிந்துணர்வோர்க்கு. எ-று.

பொதுவகையான் இருவயினிலேயுமென்ருரேனும், வழிபோயிஞரெல்லாங் கூறைகோட்பட்டார் என்றவழிக் கூறைகோட்படுதல் கடவுளரையொழித்து ஏனேயோர்க்கேயாயினவாறுபோல, ஏதுப்பொருட்கண் வரும் மூன்ருவதும் ஐந்தாவதும் ஒருபொருளேபற்றி நிற்றலின் இருவயினிலேயற்கேலாமையான், அவற்றையொழித்து அஃதேனேயவற்றிற்கேயாம். என்னே! தன்பொருளிற்றீராது பிறிதொன்றன்பொருட்கட்சேறலுடைமையான் இருவயினிலேயற்கேற்றவாறறிக.

அன்ன பிறவாவன—நோயினீங்கினன்; நோயை நீங்கினன். எ-ம். சாத்தனே வெகுண்டான்; சாத்தனெடு வெகுண்டான். எ-ம். முறையாற்குத்துங்குத்து; முறையிற்குத்துங்குத்து. எ-ம். கடலொடு காடொட்டாது; கடலேக் காடொட்டாது. எ-ம். வருவனவும் பிறவுமாம்.

இக்காலத்துச் சிதைந்து வழங்குமயக்கமுமுண்மையால், தொன்னெறி பிழையாதன ஆராய்ந்துணரப்படுமென்பார் தெரியுமோர்க்கென்ருர். (கஅ)

கOஉ. உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
யொருசொன்னடையபொருள்சென் மருங்கே.

இ - ள். பலவுருபுந் தம்முட்டொடர்ந்தடுக்கி வந்த வேற்றுமைச்சொற்களெல்லாம் முடிக்குஞ் சொல்லொன்றனுன் முற்றுப்பெற்று நடக்கும், அவ்வொன்றனுற்பொருள் செல்லுமிடத்து. எ-று.

ஈண்டு வேற்றுமைக்கிளவியென்றது வேற்றுமையுருபையிறுதியாகவுடைய சொல்லே.

உ - ம். 'என்னொடு நின்னொடுஞ்சூழாது.' எ-ம். 'அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்—நின்றது மன்னவன் கோல்.' எ-ம். வரும்.

சாத்தன்றாயைக்காதலன்; நாய்தேவனாயிற்று என்புழி, தாயை, தேவனென்பன, காதலன், ஆயிற்றென்னும் பயனிலைக்கு அடையாய் இடைநின்றாற்போல, கோட்டைநுனிக்கட் குறைத்தான்; தினையிற்கிளியைக் கடியும் என்புழி, நுனிக்கண், கிளியையென்பன, குறைத்தான், கடியுமென்னுமுடிக்குஞ்சொல்லிற்கு அடையாய் இடைநின்றவாகலான், அவையடுக்கன்மையின், அவையுதாரணமாதல் உரையாசிரியர் கருத்தன்றென்க.

குழையைச் சாத்தனது கள்ளரின் என இவ்வாறு தொடராது வருவனவற்றை நீக்குதற்கு உருபுதொடர்ந்தடுக்கியவென்றும், நீ தந்த சோற்றையுங்கூறையையுமுண்டுடுத்திருந்தேம் என இன்னோரன்னுழி ஒருசொல்லாற்பொருள் செல்லாமையின் அவற்றை நீக்குதற்குப் பொருள்சென்மருங்கென்றும், கூறினார். பிறவுமன்ன. (கக)

க0ரு. இறுதியு மிடையு மெல்லா வுருபு
நெறிபடுபொருள்வயி னிலவுதல்வரையார்*

இ - ள். வேற்றுமைத்தொடரிறுதிக்கண்ணும் அதனிடைநிலத்தும் ஆறுருபுந் தத்தமக்கோதிய பொருட்கணிற்றலை வரையார். எ-று.

உ - ம். கடந்தானிலத்தை; வந்தான் சாத்தனொடு; கொடுத்தான் சாத்தற்கு; வலியன் சாத்தனின்; இருந்தான் குன்றத்துக்கண். எ-ம். நிலத்தைக் கடந்தான்; சாத்தனொடு வந்தா

* இச்சூத்திரத்திற்கும் மேல் வரும் "பிறிதுபிறிதேற்றலும்" என்னுஞ் சூத்திரத்திற்குஞ் சேனாவரையர் முதலாயினார் உரைத்த உரையை மறுத்துச் சிவஞானமுனிவர் வேறுரையுரைத்தார். தொல்காப்பியச்சூத்திரவிருத்தி.ருஅ, ருக, ருச, ருரு ம் பக்கங்களிற் காண்க.

ன்; சாத்தற்குக் கொடுத்தான்; சாத்தனின் வலியன்; சாத்தனதாடை; குன்றத்துக்கணிருந்தான். எ-ம். வரும்.

நெறிபடுபொருள்வயினிலவுதல்வரையாரெனவே, அப்பொருளுணர்த்தாக்கால் நிலவுதல் வரையப்படுமென்பதாம். அங்ஙனம் வரையப்படுவன யாவையெனின்;—ஆறுவதும் ஏழாவதும், சாத்தனதாடை, குன்றத்துக்கட்கூகை எனவிடைநின்று தம்பொருளுணர்த்தினாற்போல, ஆடைசாத்தனது, கூகை குன்றத்துக்கண் எனவிறுதிநின்றவழி அப்பொருளுணர்த்தாமையான், அவ்வுருபுகள் ஆண்டு வரையப்படும். ஆறனுருபேற்ற பெயர் உருபொடு கூடிப் பெயராயும் வினைக்குறிப்பாயும் நிற்றலுடைமையான், அந்நிலைமைக்கண் ஆடை சாத்தனது என இறுதிக்கண்ணுநிற்குமென்பது. இவ்வரையறையுணர்த்துதற்கும், "மெய்யுருபு தொகாஅ விறுதி யான" என முன்னருணர்த்தப்படும் வரையறைக்கு இடம்படுத்தற்கும், "ஈறுபெயர்க்காகும்" என்றோதப்பட்ட உருபுதம்மையே இறுதியுமிடையும் நிற்குமென வகுத்துக் கூறினாரென்பது.

௧0௪. பிறிதுபிறி தேற்றலு முருபுதொக வருதலு
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப.

இ - ள். பிறிதோருருபு பிறிதோருருபையேற்றலும் ஆறுருபுந்தொக்கு நிற்றலும், நெறிபட வழங்கிய வழக்கைச் சார்ந்து வருதலான், வழுவாகா. எ-று.

ஏற்புழிக்கோடலென்பதனால், பிறிதோருருபேற்பது ஆறுவதேயாம்.

பிறிதேற்றலுமென்றஉம்மையால், தானல்லாப்பிறவுருபேற்றல் கொள்க.

உ - ம். சாத்தனதனை, சாத்தனதனொடு, சாத்தனதற்கு, சாத்தனதனின், சாத்தனதன்கண் என உருபு உருபேற்றவாறும், நிலங்கடந்தான், தாய்மூவர், கருப்புவேலி, வரைவீழருவி, சாத்தன்கை, குன்றக்கூகை. எ-ம். கடந்தானிலம், இருந்தான்குன்றத்து. எ-ம். உருபு தொக்குநின்றவாறுங்கண்டு கொள்க.

இறுதியுமிடையுமென்பதனை அதிகாரத்தான் வருவித்து இரண்டிடத்துங்கூட்டியுரைக்க.

சாத்தனதனது எனச் சிறுபான்மை தன்னையுமேற்றல் உரையிற்கோடலென்பதனாற்கொள்க.

பெயரிறுதி நின்ற உருபு தன்பொருளொடு தொடராது பிறிதோருருபையேற்றலும், தாம் நின்று தம்பொருளுணர்த்தற்பாலன தொக்கு நிற்றலும், இலக்கணமன்மையின், வழுவமைத்தவாறு. (௨௧)

௧0௫. ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ விறுதி யான.

இ - ள். ஐகாரவேற்றுமைப்பொருளுங் கண்ணென்வேற்றுமைப்பொருளுமல்லாத பிறபொருண்மேனின்ற உருபு தொடர்மொழியிறுதிக்கட்டொக்கு நில்லா. எ-று.

இறுதியுமிடையுமென்பது அதிகரிக்க உருபுதொகவருதலுமென்றமையான் வரைவின்றி எல்லாவுருபும் இறுதிக்கண்ணுந்தொகுமென்பதுபட்டதனை விலக்கி, இவ்விருபொருட்கண்ணும் வருவனவே இறுதிக்கட்டொகுவன அல்லன தொகாவென வரையறுத்தவாறு.

அறங்கறக்கும் என இடைக்கட்டொக்கு நின்ற நான்காவது கறக்குமறம் என இறுதிக்கட்டொக்கு நில்லாமை கண்டுகொள்க. பிறவுமன்ன. (௨௨)

௧0௬. யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

இ - ள். ஒருதொடர் யாதானுமோர்வேற்றுமையதுருபு கொடுத்துச் சொல்லப்பட்டதாயினும், அவ்வுருபு தன்பொருளான் அத்தொடர்ப்பொருள் செல்லாதவழிப் பொருள் செல்லும் பக்கத்து வேற்றுமையைச் சாரும். எ-று.

பொருள்செல்லாமையாவது உருபேற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லுந் தம்முளியையாமை. அவ்வேற்றுமையைச் சார்தலாவது அதன்பொருட்டாதல்.

'இளையரி நாணற் கிழங்குமணற் கீன்ற—முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்' என்றவழி நான்காவதன்பொருளான் அவ்வுருபேற்ற சொல்லும் அவ்வுருபு நோக்கிய சொல்லும் தம்முளியையாமையின், அவற்றையியைக்கும் ஏழாவதன்பொருட்டாயினவாறு கண்டுகொள்க.

உருபு தன்பொருளிற்றீர்ந்து பிறவுருபின்பொருட்டாயும் நிற்குமென உருபுமயக்கங்கூறியவாறாயிற்று.

அஃதேல், அரசர்கட்சார்ந்தான் என்புழியும் இரண்டாவதன்பொருட்கண் ஏழாவது சென்றதென்றமையான், அதனோடிதனிடை வேற்றுமையென்னையெனின்;—அரசர்கட்சார்ந்தான் என்புழி, அரசரது சார்தற்கிடமாதலே சாரப்படுதலுமாய் இருபொருண்மையும் ஒற்றுமைப்பட்டு நிற்றலின், தத்தம்பொருள்வயிற்றம்மொடு சிவணுமாகுபெயர்போல, இடப்பொருண்மைக்குரிய கண்ணென்னுருபு அவ்விடப்பொருண்மையோடு ஒற்றுமையுடைத்தாகிய செயப்படுபொருட்கும் ஆண்டுரித்தேயாம். மணற்கீன்ற என்புழி, நான்காவதன்பொருளோடு ஏழாவதன்பொருட்கென்னுமியைபின்மையான், ஒப்பில்வழியாற் பிறிதுபொருள் சுட்டுமாகுபெயர்போல, அப்பொருட்குரித்தன்றி வந்ததெனப்படும். அன்னபிறவற்றுள்ளும் இவ்வேறுபாடு தெரிந்துணர்க.

தன்பொருளிற்றீர்தல் இலக்கணமன்மையின், இதனையிலக்கணத்தோடுறழ்ந்து வருவனவற்றோடு வைத்தார். (உ௬)

**க0எ. எதிர்மறுத்து மொழியினுந் தத்த மரபிற்**
**பொருணிலை திரியா வேற்றுமைச் சொல்லே.**

இ - ள். விதிமுகத்தாற்கூறாது எதிர்மறுத்துக் கூறினும், தத்தமிலக்கணத்தான் வரும் பொருணிலைமை திரியா வேற்றுமையுருபு. எ-று.

உ - ம். மரத்தைக் குறையான்; வேலானெறியான் என வரும்.

என் சொல்லியவாறோவெனின்;—குறையான், எறியான் என்றவழி வினை நிகழாமையின், மரமும் வேலுஞ் செயப்படு

பொருளுங் கருவியுமெனப்படாவாயினும், எதிர்மறைவினையு ம் விதிவினையோடொக்குமென்பது நூன்முடிபாகலான், ஆ ண்டு வந்த உருபுஞ்செயப்படுபொருண்முதலாயினவற்றுமே ல் வந்தனவெனப்படுமென வழுவமைத்தவாறு. பிறவுமன்ன.

௧0௭. கு ஐ ஆனென வரூஉ மிறுதி
அவ்வொடு சிவணுஞ் செய்யு ளுள்ளே.

இ - ள். கு ஐ ஆனென வரூஉமூன்றுருபும், தொடரிறுதிக் கண்ணின்றவழி, அகரத்தொடு பொருந்தி நிற்றலுமுடைய, செய்யுளுள். எ-று.

உ - ம். 'கடிநிலை யின்றே யாசிரி யற்க.' எ-ம். 'காவ லோ னக் களிறஞ் சும்மே.' 'களிறு மஞ்சுமக் காவ லோன.' எ-ம். 'புரைதீர் கேள்விப் புலவ ரான.' எ-ம். 'உள்ளம் போல வுற்றுழி யுதவும்—புள்ளியற் கலிமா வுடைமை யான.' எ-ம். வரும்.

குகரமும் ஐகாரமும் ஈறு கெட அகரத்தொடு சிவண லுடைமையான், ஐ ஆன் கு என முறையிற்கூறாது, கு ஐ எ ன அவற்றை இயைய வைத்தார். இயைய வைக்கின்றவர் ஐகாரம் முன் வைக்கவெனின்;—முறை அதுவாயினுஞ் செ ய்யுளின்பநோக்கிக் குகரம் முன் வைத்தாரென்பது.

அஃதேல், இத்திரிபு "தம்மீறு திரிதல்" என இடைச்சொ ற்கோதிய பொதுவிலக்கணத்தாற் பெறப்படுதலின் ஈண்டுக் கூறல்வேண்டாவெனின்;—அப்பொதுவிலக்கணத்தான் எய் துவன உருபிற்குமெய்துமேல், பிறிதுபிறிதேற்றலும் "பிறித வணிலைய" லாயடங்குதலான், ஈண்டுக் கூறல்வேண்டாவா ம்; அதனான் அன்னபொதுவிலக்கணம் உருபிற்கெய்தாதென மறுக்க. (௨௫)

௧0௯. அ எனப் பிறந்த லஃறிணை மருங்கிற்
குவ்வும் ஐயு மில்லென மொழிப.

இ - ள். அஃறிணைப்பெயர்க்கண் அகரத்தொடு சிவணி ஈ று திரிதல் குவ்வும் ஐயுமில்லென எய்தியது விலக்கியவாறு.

அ எனத் திரிதலை அ எனப் பிறத்தலென்றார். (உசு)

கக0. இதனை திதுவிற் றென்னுங் கிளவியு
மதனைக் கொள்ளும் பொருள்வயி னானு
மதனாற் செயற்படற் கொத்த கிளவியு
முறைக்கொண் டெழுந்த பெயர்சசொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பி னாக்கமுங்
காலத் தினறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியுந் தீர்ந்துமொழிக் கிளவியு
மன்ன பிறவு நான்க னுருபிற்
றென்னெறி மரபின தோன்ற லாறே.

இ - ள். இதனதிது இத்தன்மைத்தென்னும் ஆறுவதன்பொருண்மையும, ஒன்றனையொனறு கொளளுமென்னும் இரண்டாவதன்பொருணமையும், ஒன்றனொனறு தொழிற்படற கொக்குமென்னும் மூன்றுவதனபொருணமையும், முறைப பொருண்மையைக்கொணடு நினற பெயர்ச்சொல்லினது ஆறும்வேற்றுமைப்பொருண்மையும், நிலத்தை வரைநது கூறும் பொருண்மையும் பணபினகணும் பொருவுமாகிய ஐநதாவதன்பொருண்மையும், காலததின்கணறியப்படும் ஏழாம் வேற்றுமைப்பொருண்மையும், பற்றுவிடுபொருண்மையும் தீாநதுமொழிப்பொருண்மையுமாகிய ஐநதாவதனபொருண்மையும், அவைபோல்வன பிறவும், நான்கனுருபாற்றோனறு தற்கட்டொனனெறிமரபின. எ-று.

உ - ம். யானைக்குக் கோடு கூரிது. எ-ம். இவட்குக் கொள்ளுமிவ்வணி. எ-ம். அவற்குச் செய்யத்தகுமக்காரியம். எ-ம். ஆவிற்குக கன்று. எ-ம். கருவூர்க்குக் கிழக்கு. எ-ம். சாததற்கு நெடியன். எ-ம். காலைக்கு வரும். எ-ம். மனைவாழ்க்கைக்குப் பற்றுவிட்டான். எ-ம். ஊர்க்குத் தீர்ந்தான். எ-ம். அப பொருளெல்லாவற்றின்கண்ணும் நான்காமுருபு வந்தவாறு கணடுகொள்க.

வன்பால் மென்பால் என்பவாகலின் நிலத்தைப் பாலென்றார்,

"சிறப்பே நலனே காதல் வலியோ—டந்நாற் பண்பு நிலைக்கள மென்ப" எனவுவமைநிலைக்களத்தைப் பண்பென்பவாகலின், பண்பினுக்கமென்றார்.

இதுவும் வேற்றுமைமயக்கமாகலின் மேற்கூறப்பட்டவற்றோடு வையாது இத்துணையும் போதந்து வைத்ததென்னையெனின்;—அது தொகை விரிப்ப மயங்குமதிகாரம்; இது தொகையல்வழி யானையது கோடு கூரிது என்னுந்தொடர்மொழிப்பொருள் சிதையாமல் யானைக்குக் கோடு கூரிது என நான்காவது ஆண்டுச் சென்று நின்றதாகலான், அவற்றோடு வையாராயினுரென்பது.

அஃதேல், ஆவின்கன்று எனவுங் கருவூர்க்கிழக்கு எனவுந் தொகையாயும் வருதலின், அப்பொருட்கண் நான்காவது வருதல ஈண்டுக் கூறற்பாற்றன்றெனின்;—அஃதொக்குமன்றாயினும், பிறவேற்றுமைப்பொருட்கண் நான்காவது சேறலொப்புமையான் அவற்றிற்கு வேறோர்சூத்திரஞ்செய்யாது இவற்றோடொருங்கோதினுரென்பது.

அன்னபிறவுமென்றதனுன், ஊர்க்கட்சென்றான், ஊர்க்கணுற்றது செய்வான் என்னுமேழாவதன்பொருட்கண்ணும், ஊரிறசேயன் என்னும் ஐந்தாவதன பொருட்கண்ணும், ஊர்க்குச்சென்றான், ஊர்க்குற்றது செய்வான், ஊர்க்குச் சேயன் என நான்காவது வருதல் கொள்க. பிறவுமன்ன. (உஎ)

கககூ. வினை யுருபு மன்ன மரபின
மான மிலவே சொன்முறை யான.

இ - ள். நான்கனுருபல்லாத பிறவுருபுந தொகையல்லாத தொடர்மொழிக்கண் ஒன்றன்பொருள் சிதையாமை ஒன்று மயங்குதற்கட்குற்றமில, வழங்குமுறைமையான். எ-று.

உ - ம். நூல்து குற்றங்கூறினுன் என்னுந்தொடர்மொழிக்கண் நூலைக் குற்றங்கூறினுன். எ-ம். அவட்குக் குற்றேவல் செய்யும் என்னுநதொடர்மொழிக்கண் அவளது குற்றேவல் செய்யும். எ-ம், வருவன கொள்க. பிறவுமன்ன, (உஅ)

கக௨. வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலங் கருவி யென்றா
இன்னதற் கிதுபய னாக வென்னு
மன்ன மரபி னிரண்டொடுந் தொகைஇ
யாயெட் டென்ப தொழின்முத னிலையே.

இ - ள். வினையும், வினைமுதலும், செயப்படுபொருளும், நிலமும், காலமும், கருவியுமாகிய ஆறும், இன்னதற்கு, இது பயனாக என்று சொல்லப்படும் இரண்டொடுந்தொகுத்த தொழிலது முதனிலையெட்டாமென்று சொல்லுவர் ஆசிரியர். எ - று.

ரண்டேதுப்பொருண்மை கருவிக்கணடக்கப்பட்டது.

தொழின்முதனிலையென்றது தொழிலது காரணத்தை. காரியத்தின் முன்னிற்றலின் முதனிலையாயிற்று. காரணமெனினும் காரகமெனினுமொக்கும்.

வனைந்தான் என்றவழி, வனைதற்றொழிலும், வனைந்த கருத்தாவும், வனையப்பட்ட குடமும், வனைதற்கிடமாகிய நிலமும், அதடொழினிகழுங்காலமும், அதற்குக் கருவியாகிய திகிரி முதலாயினவும், வனையப்பட்ட குடத்தைக் கொள்வானும், வனைந்ததனாய பயனுமாகிய எட்டுமபற்றி அதடொழினிகழ்ந்தவாறு கண்டுகொள்க.

அஃதேல், தொழில்ன வேறாயது காரகமாகலின், வனைதற்றொழிற்கு அதடொழிறான காரகமாமாறென்னையெனின்,— வனைந்தானென்பது வனைதலைச் செய்தானென்னும் பொருட்டாகலின், செய்தற்கு வனைதல் செயப்படுபொருணீனமைந்தாய காரகமாமெனபது. அற்றாகலினன்றே, கொளலோ கொண்டானெனபது இரண்டாம்வேற்றுமைத்தொடராயிற்றெனபது.

இன்னதற்கு, இதுபயனாக எனனும் இரண்டும் அருகியலலது வாராமையின், அன்னமரபினிரண்டொடுமெனப பிரித்துக் கூறினார்.

அஃதேல், செய்வது முதலாகிய முதனிலை வேற்றுமையோத்தினுட்கூறப்பட்டமையின் இச்சூத்திரம் வேண்டாவெனின்;—அற்றன்று: இரண்டாவதற்கோதிய பொருளெல்லாவற்றையுஞ் செயப்படுபொருளெனத் தொகுத்து, ஏதுவைக் கருவிக்கண்ணும் வினைசெய்யிடத்தைக் காலத்தின்கண்ணும் அடக்கி, ஏழாகச் செய்து, அவற்றோடு ஆண்டுப் பெறப்படாத வினையென்னுமுதனிலை கூட்டி, எட்டென்றாராகலின், இப்பாகுபாடு ஆண்டுப் பெறப்படாமையான், இச்சூத்திரம் வேண்டுமென்பது.

இதனாற்பயன் "நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்" எனவும் "செயப்படு பொருளைச் செய்தது போல" எனவும் வினைக்கிலக்கணங்கூறுதலும் பிறவுமாம். (உ௯)

௧௧௩. அவைதாம்,
வழங்கியன் மருங்கிற் குன்றுவ குன்றும்.

இ - ள். மேற்கூறப்பட்ட தொழின்முதனிலைதாம் எல்லாத் தொழிற்கும் எட்டும் வருமென்னும் யாப்புறவில்லை; வழக்கின்கட்சிலதொழிற்கட் குனறத்தகுவண குன்றி வரும். எ-று.

குன்றத்தகுவனவாவன செயப்படுபொருளும் ஏற்பதும் பயனுமாம்.

கொடியாடிற்று; வளிவழங்கிற்று என்புழி, செயப்படுபொருளும் ஏற்பதும் பயனுமாகிய முதனிலையில்லையாயினும், ஒழிந்தனவற்றான் ஆடுதலும் வழங்கலுமாகிய தொழினிகழ்ந்தவாறு கண்டுகொள்க.

இதனாற்பயன், எல்லாத்தொழிற்கும் முதனிலையெட்டுங் குன்றாது வருமோ சிலதொழிற்குச் சில குன்றிவருமோவென்னும் ஐயநீங்குதலும், செயப்படுபொருள் குன்றிய வினையையுணர்த்துஞ்சொல் இரண்டாவதனோடியையாதென்பது பெறுதலுமாம். (௩0)

கக௪. முதலிற் கூறுஞ் சினையறி கிளவியுஞ்
சினையிற் கூறு முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரு
மியன்றது மொழிதலு மிருபெய ரொட்டும்
வினைமுதலுரைக்குங் கிளவியொடுதொகைஇ
யனையமர பினவே யாகுபெயர்க் கிளவி.

இ - ள். முதற்சொல்வாய்பாட்டாற் கூறப்படுஞ்சினையறி கிளவியும், சினைச்சொல்வாய்பாட்டாற் கூறப்படுமுதலறிகிளவியும், நிலத்துப் பிறந்த பொருண்மேல் அந்நிலப்பெயர் கூறலும், பண்புப்பெயர் அப்பண்புடையதனையுணர்த்திப் பண்பு கொள் பெயராய் நின்றதூஉம், முதற்காரணப்பெயரான். அக்காரணத்தானியன்ற காரியத்தைச் சொல்லுதலும், அன்மொழிப்பொருண்மேனின்ற இருபெயரொட்டும், செயப்பட்டபொருண்மேல் அதனைச் செய்தான்பெயரைச் சொல்லுஞ்சொல்லுமென அப்பெற்றிப்பட்ட இலக்கணத்தையுடையன ஆகுபெயர். எ-று.

உ - ம். கடுத்தின்றான்; தெங்கு தின்றான் என முதற்பெயர் சினைமேலும், இலை நட்டு வாழும்; பூ நட்டு வாழும் எனச் சினைப்பெயர் முதன்மேலும், குழிப்பாடி நேரிது என நிலப்பெயர் அந்நிலத்துப் பிறந்த ஆடைமேலும், இம்மணி நீலம் எனப் பண்புப்பெயர் அப்பண்புடையதன்மேலும், இக்குடம் பொன் எனக் காரணப்பெயர் அதனானியன்ற காரியத்தின் மேலும், பொற்றொடி வந்தாள் எனவிருபெயரொட்டு அன்மொழிப்பொருண்மேலும், இவ்வாடை கோலிகன் எனச் செய்தான்பெயர் செயப்பட்டதன்மேலும், வந்தவாறு கண்டு கொள்க.

அன்மொழித்தொகை எச்சவியலுள் உணர்த்தப்படுதலின் ஈண்டுக் கூறல்வேண்டாவெனின்; — அன்மொழித்தொகை தொகையாதலுடைமையான் ஆண்டுக் கூறினார்; இயற்கைப் பெயர் ஆகுபெயரெனப் பெயர் இரண்டாயடங்கும்வழி ஒரு பெயர்ப்பட்டதென மேலும் வந்தவாறு கண்டுகொள்க. அன்

மொழித்தொகை எச்சவியலுளுணர்த்தப்படும்; அதனால் அவ்வாகுபெயராதலுடைமை பற்றி ஈண்டுக் கூறினார்; எச்சவியலுட்கூறப்பட்டவாயினும் வினையெச்சமுதலாயின வினைச்சொல்லாதலும் இடைச்சொல்லாதலுமுடைமையான் அவற்றை வினையியலுள்ளும் இடையியலுள்ளுங் கூறியவாறுபோலவென்பது. *

தொல்காப்பியனானுங் கபிலனானுஞ்செய்யப்பட்ட நூலைத் தொல்காப்பியங் கபிலமென்றல் வினைமுதலுரைக்குங்கிளவியென்றாரால் உரையாசிரியரெனின்;—அற்றன்று: ஒருமொழியிலக்கணம் ஈண்டுக் கூறாராயினும், வெற்புச் சேர்ப்பு என்னும் பெயரிறுதி இதனையுடையானென்னும் பொருடோன்ற அன்னென்பதோரிடைச்சொல் வந்து வெற்பன் சேர்ப்பன் என நின்றாற்போல, தொல்காப்பியன் கபிலன் என்னும் பெயரிறுதி இவனாற்செய்யப்பட்டதென்னும் பொருடோன்ற அம்மென்பதோரிடைச்சொல் வந்து அன் கெடத் தொல்காப்பியம் கபிலம் என நின்றனவென்பது ஆசிரியர் கருத்தாம்; அதனான் அவையுதாரணமாதல் உரையாசிரியர்கருத்தன்றென்க.

அனையமரபினவென்றது அவ்வாறியாதானுமோரியைபுபற்றி ஒன்றன்பெயர் ஒன்றற்காதலென ஆகுபெயரிலக்கணத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு. ஒன்றன்பொருட்கண் ஒன்று சேறலென்னுமொப்புமையான் இவற்றையீண்டுக் கூறினார். அஃதேல், ஆகுபெயர் எழுவாய்வேற்றுமைமயக்கமாதலான் ஈண்டுக் கூறினானென்றாரால் உரையாசிரியரெனின்;—ஆகுபெயர் ஏனைவேற்றுமையுமேற்று நிற்றலானும், எழுவாய்வேற்றுமையாய் நின்றவழியும் அது பிறிதோர்வேற்றுமைப்பொருட்கட்சென்று மயங்காமையின் வேற்றுமைமயக்கமெனப்படாமையானும், அது போலியுரையென்க. (ருக)

* ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் ஒன்றென்றல் பொருந்தாமை தொல்காப்பியச்சூத்திரவிருத்தி ருச ம் பக்கத்திற்காண்க.

கக௫. அவைதாம்,
தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணலு
மொப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலு
மப்பண் பினவே நுவலுங் காலை
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

இ - ள். மேற்கூறப்பட்ட ஆகுபெயர்தாந் தத்தம்பொருளி னீங்காது தம்பொருளின் வேறல்லாத பொருளொடு புணர் தலும், தம்பொருட்கியைபில்லாத பிறிதுபொருளைச் சுட்டி நிற்றலுமென இரண்டியல்புடைய வேறுபாடு போற்றியுணர ப்படும். எ-று.

கடுவென்னுமுதற்பெயர் முதலொடொற்றுமையுடைய சினைமேனிற்றல் தத்தம்பொருள்வயிற்றம்மொடு சிவணலாம். குழிப்பாடியென்னுமிடப்பெயர் இடத்தின் வேறாய ஆடைமேனிற்றல் ஒப்பில்வழியாற்பிறிதுபொருள் சுட்டலாம். அஃதேல், குழிப்பாடியும் ஆடையும் இடமும் இடத்துநிகழ்பொருளு மாகிய இயைபுடையவாகலினன்றே அதன்பெயர் அதற்கா யிற்று; அதனான் அஃதொப்பில்வழியாற் பிறிதுபொருள் சுட்டலாமாறென்னையெனின்;—நன்று சொன்னாய்: அவ்வியைபு டையவேனும், முதலுஞ் சினையும் பண்பும் பண்புடையதுமா தன்முதலாகிய ஒற்றுமையாகிய இயைபிலவாகலின் அவை தம்முள் வேறெனவேபடும்; அதனாற் குழிப்பாடியென்பது ஒ ப்பில்வழியாற்பிறிதுபொருள் சுட்டலேயாமென்பது. ஒற்று மையாகிய இயைபுள்வழி அது தத்தம்பொருள்வயிற்றம்மொ டு சிவணிற்றென்றும், அவ்வியைபின்றி இடமும் இடத்துநிகழ் பொருளுமாதன்முதலாகிய இயைபேயாயவழி இஃதொப்பி ல்வழியாற்பிறிதுபொருள் சுட்டிற்றென்றும், வேறுபடுத்து ணரப்படுமென்பார், வேற்றுமைமருங்கிற்போற்றல்வேண்டு மென்றாரென்பது. அஃதேல், இதனைப் பிரித்து ஒருசூத்திர மாக உரைத்தாரால் உரையாசிரியரெனின்;—அங்ஙனம் பிரி ப்பின், தம்மொடு சிவணலும் பிறிதுபொருள் சுட்டலுமாகிய இவற்றது வேறுபாட்டின்கணென்பது இனிது பெறப்படா

மையானும், எழுத்தோத்தினுள் "புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியும்" என்னுஞ்சூத்திரத்து இந்நிகர்ப்பாதுகாவலைப் பிரியாது ஒன்றாகவேயுரைத்தலானும், அவர்க்கது கருத்தன்றென்க.

௧௧௬. அளவு நிறையு மவற்றொடு கொள்வழி
யுளவென மொழிப வுணர்ந்திசி னோரே.

இ - ள். அளவுப்பெயரும் நிறைப்பெயரும் ஆகுபெயராகக் கொள்ளுமிடமுமுடையவென்று சொல்லுவர் உணர்ந்தோர். எ-று.

பதக்குத் தூணியென்னும் அளவுப்பெயர் இந்நெற்பதக்கு, இப்பயறு தூணி எனவும், தொடி துலாமென்னு நிறைப்பெயர் இப்பொன்றொடி, இவ்வெள்ளி துலாம் எனவும், அளக்கப்பட்ட பொருண்மேலும், நிறுக்கப்பட்டபொருண்மேலும், ஆகுபெயராய் நின்றவாறு கண்டுகொள்க.

ஒன்று இரண்டென்னுந்தொடக்கத்து எண்ணுப்பெயரும் எண்ணப்பட்டபொருண்மேனின்றவழி ஆகுபெயரேயாகலின் அவற்றையொழித்ததென்னையெனின்;—அவை எண்ணப்படுபொருட்குமுரியவாகலின், ஆகுபெயரெனப்படா; அதனான் அவற்றையொழித்தாரென்பது. * (௩௩)

௧௧௭. கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே.

இ - ள். சொல்லப்பட்டனவேயன்றிப் பிறவும் ஆகுபெயருளவேல், அவையெல்லாஞ் சொல்லப்பட்டவற்றதியல்பானுணர்ந்துகொள்க. எ-று.

சொல்லப்பட்டவற்றதியல்பாவது யாதானுமோரியைபுபற்றி ஒன்றன்பெயர் ஒன்றன்மேல் வழங்கப்படுதல்.

---

* எண்ணுப்பெயர் ஆகுபெயராகாதென்றல் பொருந்தாமை. தொல்காப்பியச்சூத்திரவிருத்தி ௬௩ம் பக்கத்திற்காண்க.

யாழ் குழல் என்னுங்கருவிப்பெயர் யாழ் கேட்டான்; குழல் கேட்டான் என அவற்றானாகிய ஓசைமேலும் ஆகுபெயராய் நின்றன. யானை பாவை என்னுமுவமைப்பெயர் யானை வந்தான்; பாவை வந்தாள் என உவமிக்கப்படும் பொருண்மேலும், ஏறு குத்து என்னுந்தொழிற்பெயர் இஃதோரேறு; இஃதோர்குத்து என அத்தொழிலாளும் வடுவின்மேலும், வருவனவெல்லாங்கொள்க. பிறவுமன்ன.

இயைபுபற்றி ஒன்றன்பெயர் ஒன்றற்காங்கால் அவ்வியைபு ஓரிலக்கணத்ததன்றி வேறுபட்டவிலக்கணத்தையுடைத்து அவ்விலக்கணமெல்லாம் கடைப்பிடித்துணர்கவென்பார், வேறு பிற தோன்றினுமென்றார். (௩௪)

வேற்றுமைமயங்கியன் முற்றிற்று.

---

நான்காவது

## விளிமரபு.

---

**கக௭. விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு தெளியத் தோன்று மியற்கைய வென்ப.**

நிறுத்த முறையானே விளிவேற்றுமையுணர்த்தியவெடுத்துக்கொண்டார்; அதனான் இவ்வோத்து விளிமரபென்னும் பெயர்த்தாயிற்று.

இச்சூத்திரத்தின்பொருள். விளியென்று சொல்லப்படுவன தம்மையேற்கும் பெயரோடு விளங்கத் தோன்றுமியல்பையுடையவென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

விளிவேற்றுமை எதிர்முகமாக்குதற்பொருட்டாதல் பெயரானே விளங்குதலிற் கூறாராயினார்.

ஈறுதிரிதலும், ஈற்றயனீடலும், பிறிது வந்தடைதலும், இயல்பாதலுமென்னும் வேறுபாடுடைமையான் விளியெனப்படுபவென்றார்.

கொள்ளும்பெயரொடெனவே, கொள்ளாப்பெயருமுள வென்பதாம்.

இயல்புவிளிக்கண் திரியாது நின்ற பெயரீறே விளியென படுதலின், ஆண்டுநின்றதென விளங்குமென்பார் தெளிய த்தோன்றுமென்றார். (௧)

௧௧௯. அவ்வே,
இவ்வென வறிதற்கு மெய்பெறக் கிளப்ப.

இ - ள். விளி கொள்ளும் பெயரும் கொள்ளாப்பெயரும் இவையென மாணாக்கருணர்தற்பொருட்டு அவையிவ்வோ றிலக்கணத்தாற் பொருள்படக் கிளக்கப்படும். எ-று.

இது கூறுவாமென்னுந்தந்திரவுத்தி.

அவ்வேயெனக் "கொள்ளும் பெயரொடு தெளியத்தோன் றும்" எனப் பெயரானுணர்த்தப்படுவதாய் நின்ற விளியைச் சுட்டிய பெயரைச் சுட்டுதல் இடருடைத்தெனின்; — விளி வேற்றுமையாவது கொள்ளும் பெயரின் வேறன்றி அவை தாமேயாய் நிற்றலின், அப்பெயரைச் சுட்டவே விளியுஞ் சுட் டப்பட்டதேயாம்; அதனான் இழுக்கின்றென்பது. இவ்வாறு ரையாது அவ்வேயெனச் சுட்டப்பட்டன விளிவேற்றுமை யெனின்;—வருஞ்சூத்திரத்தின் அவைதாமெனப்பட்டனவும் விளிவேற்றுமையேயாய் "மெய்ப்பொருள் சுட்டிய விளி கொள் பெயர்" என்பதனோடு இயையாவாமென்பது. விளிகொ ள்ளும் பெயரும், கொள்ளாப்பெயரும், உயர்திணைவிரவுப்பெ யர் அஃறிணைப்பெயருள்ளுமடங்குதலும், நுண்ணுணர் வினோர்க்கல்லது அறியலாகாமையின், ஏனோருமறிதற்கு அ வை கிளக்கப்படுமென்பார் இவ்வெனவறிதற்கென்றார். (௨)

௧௨0. அவைதாம்,
இ உ ஐ ஓ வென்னு மிறுதி
யப்பா னான்கே யுயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே.

இ - ள். சொல்லப்படுவனவாகிய பெயர்தாம் இ உ ஐ ஓ என்னுமிறுதியையுடைய அக்கூற்றுநான்குபெயரும் உயர்திணைப்பெயருள் விளிகொள்ளும் பெயர். எ-று.

அஃறிணைப்பெயர் ஆகுபெயராயும் உயர்திணைக்கண் வந்து நியம், விரவுப்பெயர் உயர்திணைக்கண் வருவகாலும், அவை விளியேற்குமிடத்து உயர்திணைப்பெயராமென்றற்கு, உயர்திணைமருங்கினமெய்ப்பொருள் சுட்டியவென்றார்.

உ - ம். 'சுடர்த்தொடீ கேளாய்.' எ-ம். சாத்தீ. எ-ம். அவை உயர்திணைப்பெயராய் விளியேற்றவாறு கண்டுகொள்க.

மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயர் அப்பாலனை கெடபா எழுவாயும் பயனிலையுமாய் இயைந்து, ஒருசொன்னீர்மையவாய், அவைதாமொன்றுமெழுவாய்க்குப் பயனிலையாயின.

அஃதேல், உயர்திணை விரவுப்பெயரைப் பொருள்பற்றி உயர்திணைப்பெயர்க்கண் அடக்கினாரேலெனின், முன்னர் "விளம்பிய நெறிய விளிக்குங் காலை" எனல்வேண்டாவாம் பிறவெனின்;—நன்று சொன்னாய்: "விளம்பிய நெறிய விளிக்குங் காலை" என்புழி, விரவுப்பெயரொன்றாது அஃறிணைவிரவுப்பெயரென அஃறிணைக்கண் வருவனவற்றை விதந்தோதுதலான், உயர்திணைக்கண் வருவன உயர்திணைப்பெயருள் அடங்குமென்பதற்கு அச்சூத்திரமே கரியாயிற்றென்பது. அல்லதூஉம், புள்ளியிறுதியுயர்திணைப்பெயர்க்கண் அவ்வீற்றுயர்திணை விரவுப்பெயருமடங்கி விளிகோடலெய்துதலானன்றே, தாம் நீயிரென்பன விளிகொள்ளாவென எய்தியதுவிலக்கு வாராயிற்று; அதனானுமடங்குதல் பெறுதுமென்பது. அல்லதூஉம், உயர்திணையதிகாரத்து முறைப்பெயர் விளியேற்குமாறு கூறினமையானும் பெறப்படும். விரவுப்பெயரை உயர்திணைப்பெயரோடு மாட்டெறிபவாகலின், மாட்டேற்றான் முறைப்பெயர் ஆகாரமும் ஏகாரமும் பெறறு விளியேற்றலையுதாமையின் ஈண்டுக் கூறிற்றொன்றுரால் உரையாசிரியரெனின்;—அககருத்தினராயின் அஃறிணையென்னுஞ்சொல்லொழி

த்துக் "இளந்த விறுதி விரவுப்பெயர் விளம்பிய நெறிய விளிக்குங் காலை" எனவும், இதன்பின் "முறைப்பெயர் மருங்கி னையெ னிறுதி—யாவொடு வருதற் குரியவு முளவே" எனவும், இதன்பின் னகாரளகாரவீற்றிருவகைமுறைப்பெயருமடங்கப் "புள்ளி யிறுதி யேயொடு வருமே" எனவும் ஓதுவாரமன்றாசிரியர். என்னை? மயங்கக்கூறலென்னுங்குற்றமும் நீங்கிச் சூத்திரமுஞ்சுருங்குமாதலான். அவ்வாறோதாமையானும், முறைப்பெயரோயன்றித் தாம் நீயிரென்பனவும் ஈண்டுக் கூறப்பட்டமையானும், உரையாசிரியர்க்கு அது கருத்தன்றெனக. (௩)

கஉ௧. அவற்றுள், இ ஈ யாகும் ஐயா யாகும்.

மேற்கூறப்பட்ட நான்கீறும் விளியேற்குமாறு கூறுகின்றார்.

இ - ள். அவற்றுள். எ-து. அந்நான்கீற்றினுள். எ-று. நம்பி, நம்பீ என இகரம் ஈகாரமாயும், நங்கை, நங்காய் என ஐகாரம் ஆயாயும், ஈறு திரிந்து விளியேற்கும். எ-று. (௪)

கஉ௨. ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்.

இ - ள். கோ, கோவே. எ-ம். வேந்து, வேந்தே. எ-ம். ஓகாரமும் உகரமும் ஏகாரம் பெற்று விளியேற்கும். எ-று. ()

கஉ௩. உகரந் தானே குற்றிய லுகரம்.

இ - ள். மேற்கூறப்பட்ட உகரமாவது குற்றியலுகரம். எ-று.

திரு, திருவே எனச் சிறுபான்மை முற்றுகரவீறுமுளவேனும், ஓதிய முறையானே விளியேற்பன குற்றுகரவீறேயாகலிற் குற்றியலுகரமென்றார். (௬)

கஉ௪. ஏனை யுயிரே யுயர்திணை மருங்கிற்
றாம்விளி கொள்ளா வென்மனார் புலவர்.

இ - ள். மேற்கூறப்பட்ட நான்கீறுமல்லா உயிரீறு உயர்திணைக்கண் விளி கொள்ளாவென்று சொல்லுவர் புலவர். எ-று.

கொள்வனவிவையென வரையறுத்துணர்த்தவே, ஏனைய கொள்ளாவென்பதுணரப்படும், வரையறைக்குப் பயன் அது வாகலான்; அதனுனிச்சூத்திரம் வேண்டாவெனின்; — அஃ தொக்கும்: வரையறையாற்பெறப்படுவதனையே ஒருபயனுக் கிக் கூறினார். யாதோ பயனெனின்;—ஏனையுயிர் விளி கொள் ளாவென, மேற்கூறப்பட்ட உயிர் கூறியவாறன்றிப் பிறவாற் றுனும் விளி கொள்வனவுளவென்பதுணர்த்துதற்கென்பது.

உ-ம். கணி, கணியே; கரி, கரியே எனவரும். பிறவுமன்ன.

தாமென்றதனுன் ஏனையுயிர் தம்மியல்பாற்கொள்ளாவா யினுஞ் சொல்லுவான்குறிப்புவகையாற் கொள்வனவுமுள வென்பதாம். மகவென்பது விளி பெறுதாயினுஞ் சொல்லு வான்குறிப்பான் மகவேயென விளியேற்றவாறு கண்டுகொ ள்க. (எ)

கஉரு. அளபெடை மிகூஉ மிகர விறுபெய
ரியற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப.

இ - ள். அளபெடை தன்னியல்புமாத்திரையின் மிக்கு நா ன்கும் ஐந்தும் மாத்திரை பெற்று நிற்கும் இகரவீற்றுப்பெயர் இ ஈயாகாது இயல்பாய் விளியேறகுஞ்செயற்கையையுடைய வாம், எ-று.

அளபெடைமிக்கியற்கையவாகுஞ்செயற்கையவென்னுது மிகூஉமிகரவிறுபெயரென அநுவதித்தாரேனும், மாத்திரை மிக்கியல்பாமென்பது அதனுற்பெறப்படும்.

உ-ம். தோழீஇஇ இஇ. எ-ம்.தோழீஇஇஇஇ. எ-ம். வரும்.

இ ஈயாகாமையின் இயற்கையவாகுமென்றும், மாத்திரை மிகுதலாகிய செயற்கையுடைமையாற் செயற்கையவென்று ங்கூறினார்.

இகரவிறுபெயரென்பது•இகரத்தானிற்ற பெயரென விரி யும். (அ)

கஉசு. முறைப்பெயர் மருங்கி னையெ னிறுதி
யாவொடு வருதற் குரியவு முளவே.

இ - ள். முறைப்பெயரிடத்து ஐயென்னுமுடிபு ஆயாகாது ஆவொடு வருதற்குமுரியனவுள. எ-று.

உ - ம். அன்னை, அன்னா. எ - ம். அத்தை, அத்தா. எ - ம். வரும்.

உம்மையான் அன்னாய் அத்தாய் என ஆயாதலுமுடைய வென்பதாம். உம்மை பிரிந்து நின்றது. (௯)

கஉஎ. அண்மைச் சொல்லே யியற்கை யாகும்.

இ - ள். நான்கீற்றண்மைச்சொல்லும் இயற்கையாய் விளியேற்கும். எ - று.

அண்மைக்கண் விளி கொள்வதனை அண்மைச்சொல்லென்றார்.

உ - ம். நம்பி வாழி; வேந்து வாழி; நங்கை வாழி; கோ வாழி என வரும். (க0)

கஉஅ. ணரலள வென்னு மந்நான் கென்ப
புள்ளி யிறுதி விளிகொள் பெயரே.

உயிரீற்றுயர்திணைப்பெயர் விளியேற்குமாறுணர்த்தி, இனிப் புள்ளியீறுயர்திணைப்பெயர் விளியேற்குமாறுணர்த்துகின்றார்.

இ - ள். புள்ளியீற்றுயர்திணைப்பெயர் ண ர ல ளவென்னும் அந்நான்கிற்றவென்று சொல்லுவர் ஆசிரியர். எ - று.

ணரலளவென்னுமொற்றை ஈறாகவுடைய சொல்லை ணரலளவென்றார். (கக)

கஉகூ. ஏனைப் புள்ளி யீறுவிளி கொள்ளா.

இ - ள். அந்நான்குமல்லாத புள்ளியீற்றுப் பெயர் விளி கொள்ளா. எ - று.

ஏனைப் புள்ளி விளிகொள்ளாவென்றதனாற் பயன், கூறப்பட்ட புள்ளியீறு பிறவாறாலும் விளி கொள்வனவுளவென்பதுணர்த்தலாம்.

உ - ம். பெண்டிர், பெண்டிரோ. எ-ம். தம்முன், தம்முனா. எ - ம். வரும். பிறவுமன்ன.

விளங்குமணிக்கொடும்பூணாய் எனவேனைபுள்ளி சிறுபான்மை விளியேற்றலுங்கொள்க. (௧௨)

**௧௩௦. அவற்றுள், அன்னெ னிறுதி யாவா கும்மே.**

இ - ள். அவற்றுள் அன்னென்னும் னகரவீறு ஆவாய் விளியேற்கும். எ - று.

உ - ம். சோழன், சோழா; சேர்ப்பன், சேர்ப்பா என வரும். (௧௩)

**௧௩௧. அண்மைச் சொல்லிற் ககர மாகும்.**

இ - ள். அண்மைவிளிக்கண் அன்னீறு அகரமாம். எ-று.

உ - ம். துறைவன், துறைவ; ஊரன், ஊர என வரும். ( )

**௧௩௨. ஆனெ னிறுதி யியற்கை யாகும்.**

இ - ள். ஆனென்னும் னகரவீறு இயல்பாய் விளியேற்கும். எ - று.

சேரமான், மலையமான் என்பன கூவுதற்கண்ணும் அவ்வாறு நிற்றல் கண்டுகொள்க. (௧௫)

**௧௩௩. தொழிலிற் கூறு மானெ னிறுதி**
**யாயா கும்மே விளிவயி னான.**

இ - ள். தொழிலானொருபொருளைச் சொல்லும் ஆனீற்றுப்பெயர் விளிக்கண் ஆயாம். எ-று.

உ - ம். வந்தான், வந்தாய்; சென்றான், சென்றாய் என வரும்.

விளியதிகாரமாகலான் விளிவயினான வெனல் வேண்டாவெனின்;—சொல்லில்வழி உய்த்துணர்வதெனறு மறுக்க. ( )

கருச. பண்புகொள் பெயரு மதனோ ரற்றே.

இ - ள். ஆனீற்றுப்பண்புகொள்பெயரும் அவ்வீற்றுத்தொழிற்பெயர்போல ஆயாய் விளியேற்கும். எ-று.

உ - ம். கரியான், கரியாய்; செய்யான், செய்யாய் என வரும். (கஎ)

கரு௫. அளபெடைப் பெயரோ யளபெடை யியல.

இ - ள். ஆனீற்றளபெடைப்பெயர் இகரவீற்றளபெடைப் பெயரேபோல மூன்றுமாத்திரையினீண்டு இயல்பாய் விளியேற்கும். எ-று.

உ - ம். உழாஅஅன், கிழாஅஅன் எனவரும்.

அளபெடை மூன்றுமாத்திரையின் நீண்டிசைத்தலாகிய விகாரமுடைமையான் "ஆனெ னிறுதி யியற்கை யாகும்" என்புழி அடங்காமையறிக. (கஅ)

கருகூ. முறைப்பெயர்க் கிளவி யேயொடு வருமே.

இ - ள். னகாரவீற்றுமுறைப்பெயர் ஏகாரம் பெற்று விளியேற்கும். எ-று.

உ - ம். மகன், மகனே; மருமகன், மருமகனே என வரும். (ககூ)

கருஎ. தானென் பெயருஞ் சுட்டுமுதற் பெயரும்
யானென் பெயரும் வினாவின் பெயரு
மன்றி யனைத்தும் விளிகோ ளிலவே.

இ - ள். தானென்னும் பெயரும், அவன் இவன் உவனென்னுஞ்சுட்டுமுதற்பெயரும், யானென்னும் பெயரும், யாவனென்னும் வினாப்பெயருமாகிய அவ்வனைத்தும், னகரவீறேயாயினும், விளி கொள்ளா. எ-று. (உ0)

கருஅ. ஆரு மருவு மீரொடு சிவணும்.

நிறுத்த முறையானே ரகாரவீறு விளியேற்குமாறுணர்த்துகின்றார்.

இ-ள். ரகாரவீற்றுள் ஆர், அர் என நின்ற இரண்டும் ஈராய் விளியேற்கும். எ-று.

உ-ம். பார்ப்பார், பார்ப்பீர்; கூத்தர்; கூத்தீர் என வரும்.

கஙகூ. தொழிற்பெய ராயி னேகாரம் வருதலும்
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே.

இ - ள். மேற்கூறிய இரண்டீற்றுத்தொழிற்பெயர்க்கும் ஈரோடு ஏகாரம் வருதலுங்குற்றமன்று. எ-று.

உ - ம். வந்தார், வந்தீரே; சென்றார், சென்றீரோ எனவரும்.

அர் ஈற்றுத்தொழிற்பெயர் வந்தவழிக் கண்டுகொள்க.

ஏகாரம் வருதலும் வழுக்கின்றென்றதனான், ஏகாரம் பெறாது ஈரொடு நிவணலே பெரும்பான்மையென்பதாம். (உஉ)

கச0. பண்புகொள் பெயரு மதனோ ரற்றே.

இ - ள். அவ்விரண்டீற்றுப்பண்புகொள்பெயரும், அவ்வீற்றுத்தொழிற்பெயர்போல, ஈரொடு நிவணியும், சிறுபான்மை ஈரொடேகாரம் பெற்றும், விளியேற்கும். எ-று.

உ - ம். கரியார், கரியீர்; இளையர், இளையீர். எ-ம். கரியீரே, இளையீரோ. எ-ம். வரும். (உ௩

கசக. அளபெடைப் பெயரோ யளபெடை யியல.

இ - ள். ரகாரவீற்றளபெடைப்பெயர், முற்கூறிய அளபெடைப்பெயரோபோல, மூன்று மாத்திரையின் மிக்கியல்பாய் விளியேற்கும். எ-று.

உ - ம். சிறுஅஅர், மகாஅஅர் என வரும். (உச)

கசஉ. சுட்டுமுதற் பெயரோ முற்கிளந் தன்ன.

இ - ள். அவர், இவர், உவர் என வரும் ரகாரவீற்றுச்சுட்டுமுதற்பெயர், ணகாரவீற்றுச் சுட்டுமுதற்பெயரோபோல, விளிகொள்ளா. எ-று. (உரு)

கசங. நும்மின் றிரிபெயர் வினாவின் பெயரொன்
றம்முறை யிரண்டு மவற்றியல் பியலும்.

இ - ள். நும்மின்றிரிபாகிய நீயிரும் வினாவின்பெயராகிய யாவரும் இரண்டும், மேற்கூறிய சுட்டுப்பெயரேபோல, விளியேலா. எ-று.

நீயிரென்பதனை நும்மெனத் திரியாது நும்மென்பதனை நீயிரெனத் திரிப்பினும் இழுக்காதென்னுங்கருத்தான் எழுத்தோத்தினுள் நும்மென நிறுத்தித் திரித்தாராகலான், அதுபற்றி நீயிரென்பதனை நும்மின்றிரிபெயரென்றார். (உகூ)

கசச. எஞ்சிய விரண்டி னிறுதிப் பெயரே
நின்ற வீற்றய னீட்டம் வேண்டும்.

நிறுத்த முறையானே லகார ளகாரவீற்றுப்பெயர் விளியேற்குமாறுணர்த்தியவெடுத்துக்கொண்டார்.

இ - ள். உணர்த்தாது நின்ற லகார ளகாரமென்னும் இரண்டுபுள்ளியையிறுதியாகவுடைய பெயர் ஈற்றயலெழுத்து நீண்டு விளியேற்கும். எ-று.

உ - ம். குரிசில், குரிசீல்; மக்கள், மக்காள் என வரும். ()

கசரு. அயனெடி தாயி னியற்கை யாகும்.

இ - ள். ஈற்றயலெழுத்து, நெட்டெழுத்தாயின், இயல்பாய் விளியேற்கும். எ-று.

உ - ம். பெண்பால், கோமாள் என வரும். (உஅ)

கசசு. வினையினும் பண்பினு
நினையத் தோன்று மாளெ னிறுதி
யாயா கும்மே விளிவயி னான.

இ - ள். வினையின்கண்ணும் பண்பின்கண்ணும் வரும் ஆளீற்றுப்பெயர், இயல்பாகாது, ஆயாய் விளியேற்கும். எ-று.

உ - ம். நின்றாள், நின்றாய். எ-ம். கரியாள், கரியாய். எ-ம். வரும்.

விளிவயினான என்பதனை முன்னும் பின்னுங் தருவனவற்றோடு கூட்டுக. (உக)

கசஎ. முறைப்பெயர்க் கிளவி முறைப்பெய ரியல.

இ - ள். ளகாரவீற்றுமுறைப்பெயர், னகாரவீற்று முறைப்பெயர்போல, ஏகாரம் பெற்று விளியேற்கும். எ-று.

உ - ம். மகள், மகளே; மருமகள், மருமகளே என வரும்.

கசஅ. சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரு
முற்கிளந் தன்ன வென்மனார் புலவர்.

இ - ள். அவள், இவள், உவளென்னும் ளகாரவீற்றுச்சுட்டுமுதற்பெயரும், யாவளென்னும் வினாப்பெயரும், மேற்கூறிய சுட்டுமுதற்பெயரும் வினாப்பெயரும்போல, விளி கொள்ளா. எ-று. (௩௧)

கசகூ. அளபெடைப் பெயரே யளபெடை யியல.

இ - ள். லகார ளகாரவீற்றளபெடைப்பெயர், மேற்கூறிய அளபெடைப்பெயரேபோல, அளபு நீண்டு இயல்பாய் விளியேற்கும். எ-று.

உ - ம். மாஅஅல், கோஒஒள் என வரும்.

இவை அளபெடைப்பெயராயின், மால் கோளென அளபெடையின்றி வருவன செய்யுளுக்கு அளபு சுருங்கி வந்தனவாம்; இவை அளபெடைப்பெயரல்லவாயின், அளபெடைப்பெயர் வந்தவழிக் கண்டுகொள்க. (௩உ)

க௫0. கிளந்த விறுதி யஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங் காலை.

உயர்திணைப்பெயரும் உயர்திணைவிரவுப்பெயரும் விளிகொள்ளுமாறுணர்த்தி, இனியஃறிணைவிரவுப்பெயர் விளிகொள்ளுமாறுணர்த்துகின்றார்.

இ - ள். கிளந்தவிறுதியாவன, உயிரீறுநான்கும் புள்ளியீறுநான்குமாம். அவற்றையிறுதியாகவுடைய அஃறிணைக்கண் வரும் விரவுப்பெயர் மேற்கூறிய நெறியான் விளியேற்கும். எ-று.

உ - ம். சாத்தி, சாத்தீ; பூண்டு, பூண்டே; தந்தை, தந்தாய். எ-ம். சாத்தன், சாத்தா; கூந்தல், கூந்தால்; மக்கள், மக்காள். எ-ம். வரும். சாத்தி, பூண்டு, தந்தை, சாத்த எனவண்மைவிளியாய் வருவனவுங்கொள்க.

ஓகாரவீறும் ஆகாரவீறுமாய் வருவன விரவுப்பெயருளவேற்கொள்க. பிறவுமன்ன. (௩௩)

கருக. புள்ளியு முயிரு மிறுதி யாகிய
வஃறிணை மருங்கி னெல்லாப் பெயரும்
விளிநிலை பெறாஉங் காலந் தோன்றிற்
றெளிநிலை யுடைய வேகாரம் வரலே.

இ - ள். புள்ளியீறும் உயிரீறுமாகிய அஃறிணைப்பெயரெல்லாம், விளி கொள்ளுங்காலந்தோன்றின், ஏகாரம் பெறுதலைத் தெற்றெனவுடைய. எ - று.

உ - ம். மரம், மரமே; அணில், அணிலே; நரி, நரியே; புலி, புலியே என வரும்.

அஃறிணைப்பெயருள் விளி கேட்கும் ஒருசார்விலங்கினபெயரும், விளி கேளாதனவற்றைக் கேட்பனவாகச் சொல்லுவார் கருதியவாற்றான் விளியேற்பனவுமல்லது, ஒழிந்த பெயரெல்லாம் விளியேலாமையின், விளிநிலைபெறாஉங்காலந்தோன்றினென்றார். அதனானே சுட்டுப்பெயர் முதலாயின விளியேலாமையுங்கொள்க.

தெளிநிலையுடையவேகாரம்வரலே எனவேகாரம் பெற்று விளியேற்றலை யாப்புறுப்பவே, யாப்புறவின்றிச் சிறுபான்மை பிறவாற்றான் விளியேற்பனவுமுளவென்பதாம். அவை 'வருந்தினைவாழியென்னெஞ்சம்;' 'கருங்கால்வெண்குருகொ

னறுகேண்மதி;' 'காட்டுச்சாரோடுங்குறுமுயால்;-' 'ஒண்டுவி
நாராய்' எனனுநதொடககத்தன. (௩௪)

க௫௨. உளவெனப் பட்ட வெல்லாப் பெயரு
மளபிறந் தனவே விளிக்குங் காலைச்
சேய்மையி னிசைக்கும் வழக்கத் தான.

இ - ள. உயர்திணைககண்ணும் அஃறிணைக்கண்ணும விளி
யேற்பனவாகசச் சொல்லபபட்ட எல்லாப்பெயரும், விளிககு
மிடத்து, தததமாத்திரையினிறநதிசைத்தனவாம், சேயமை
ககணணிசைக்கும் வழககத்தின்கண. எ-று.

உ - ம். நம்பீஇ, சாத்தாஅ என வரும்.

அளபெடைமிகூஉமென்றமையான, அளபெடைபபெட
மொழிதது நின்ற பெயா கொளக

அளபிறநதனவென்றது, நெட்டெழுதது அளபெடையாய
ம், அளபெடை மூன்றுமாததிரையினிறநதும, சேய்மைக்கு-
ததகவாறு நீண்டிசைக்குமென்றவாறு.

சேரமான, மலையமான் என்னுமீற்றயல் அளபிறந்தன்
இயல்புவிளியென்றது ஈற்றயனீண்டதாகக் கொள்க. அள
பிறப்பன எழுத்தாகலின், ஒற்றுமைநயத்தாற் பெயரளபிறந
தனவென்றார். (௩௫)

க௫௩. அம்ம வென்னு மசைச்சொ னீட்ட
மம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே.

இ - ள். அம்மவென்னும் அசைச்சொல்லினது நீட்டம், வி
ளி கொள்ளும் பெயரோடு தோன்றாது, இடைச்சொல்லோடு
தோன்றிற்றாயினும், விளியாகக் கொளவா தெளிவோர். எ-று.

உ - ம். அம்மா சாத்தா எனவரும்.

சாத்தாவென்பதே எதிர்முகமாக்குமாயினும், அம்மாவென
பதும் அவ்வெதிர்முகமாக்குதலே குறித்து நிற்றலின், விளியா
கக கொள்ளப்படுமென்பார் விளியொடு கொள்பவென்றா

கடுஅ. தநநு எ எனவவைமுத லாகித்
தன்மை குறித்த னரளவெ னிறுதியு
மன்ன பிறவும் பெயர்நிலை வரினே
யின்மைவேண்டும் விளியொடுகொளலே.

இ - ள். த ந நு என்னுமுயிர்மெய்யையும் எ என்னுமுயி ரையும் முதலாகவுடையவாய் ஒருவனது கிளைமைப்பொருண் மையைக் குறித்து நின்ற ன ர ளவென்னுமூன்றுபுள்ளியை யிறுதியாகவுடைய சொல்லும் அவைபோல்வன பிறவுமாகி ய பெயர்ச்சொல் வருமாயின், விளியொடு பொருந்துதலில்' எ-று.

உ - ம். தமன், தமர், தமள்; நமன், நமர், நமள்; நுமன், நுமர், நுமள்; எமன், எமர், எமள். எ-ம. தம்மான், தம்மார், தம்மாள்; நம்மான், நம்மார், நம்மாள்; நும்மான், நும்மார், நும்மாள்; எம்மான், எம்மார், எம்மாள். எ-ம். வரும்.

அன்னபிறவுமென்றதனுன், மற்றையான், மற்றையார், மற்றையாள்; பிறன், பிறர், பிறள் என வருவன கொளக.

அஃதேல், இவற்றைத் தத்தமீற்றகத்துணர்த்தாது ஈண்டுக் கூறியதென்னையெனின்;—இவற்றையீற்றகத்துணர்த்தின் மூன்றுசூத்திரத்தானுணர்த்தல்வேண்டுதலிற் சூத்திரம் பல்கும்; அதனுனீண்டுணர்த்தாராயினுர். அஃதேல், உயர்திணையதிகாரத்துப் பின் வைக்கவெனின்;—ஆண்டு வைப்பின் "விளம்பிய நெறிய விளிக்குங் காலை" என்னுமாட்டேற்று இனிது பொருள்கொள்ளாதாம், அதனுற்பிறிதிடமின்மையின் ஈண்டு வைத்தாரென்பது. (௩எ)

விளிமரபு முற்றிற்று.

ஐந்தாவது

# பெயரியல்.

கருரு. எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.

நான்குசொல்லும் பொதுவகையானுணர்த்தி, பொதுவிலக்கணமாதலொப்புமையானும் வேற்றுமை பெயரோடியையுடைமையானும் பெயரிலக்கணத்திற்கும் பொதுவிலக்கணத்திற்குமிடை வேற்றுமையிலக்கணமுணர்த்தி, இனிச்சிறப்புவகையான் நான்குசொல்லுமுணர்த்துவானெடுத்துக்கொண்டு, இவ்வோத்தான் அவற்றின்முதற்கண்ணதாகிய பெயரிலக்கணமுணர்த்துகின்றார். அதனானிது பெயரியலென்னும் பெயர்த்தாயிற்று.

இச்சூத்திரத்தின்பொருள். பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே, பொருள் குறியாது நில்லா. எ-று.

"ஆயிருதிணையினிசைக்கும்" என்றதனான் இது பெறப்படுதலின் இச்சூத்திரம் வேண்டாவெனின்;—அற்றன்று: சொல்லிசைக்கும் பொருளாவன இவ்விரண்டுதிணையுமே பிறிதில்லையென்பதல்லது, சொல்லெல்லாம் பொருளுணர்த்துதன்மாலையவே உணர்த்தாதனவில்லையென்னும் யாப்புறவு அதனாற் பெறப்படாமையின், அசைநிலை முதலாயினவும் பொருளைகுறித்துநிற்குமென ஐயமறுத்தற்கு இச்சூத்திரம் வேண்டுமென்பது. அசைநிலை முதலாயின பொருளுணர்த்துமாறு மேலே கூறிப் போந்தாம்.

முயற்கோடு, யாமைமயிர்க்கம்பலம் என்பனபொருளுணர்த்தாவாலெனின்; — அவை தொடர்மொழியாகலான் ஈண்டைக்கெய்தாவென்பது. அஃதேல், தொடர்மொழிதான் பொருள் குறியாது வருமோவெனின்; — வாரா. அவை

மெய்ப்பொருள் குறிப்பனவும் பொய்ப்பொருள் குறிப்பனவு மென் இருவகைப்படும். அவற்றுள், பொய்ப்பொருள் குறிப பனவும் பொருளுணர்த்துவனவேயாம். அல்லாக்கால், இல லொன்றலைவருக வருந்தொடர்நிலைச்செய்யுள் பொருளுணர த்தாமையின், அவை புலவராற்கொள்ளப்படாவென்பது.

அஃதேல், இச்சூத்திரம் முதலாக ஐந்துசூத்திரத்தாற்கூற பட்டன பொதுவிலக்கணமாகலான், இவற்றை ஈண்டு வை யாது கிளவியாக்கத்துள் வைக்கவெனின் — இவை பொதுவி லக்கணமேயெனினும், ஆண்டுச் கூறப்பட்டன வழூஉக்காத் தலும் வழூஉக்காத்தற்குபகாரமுடையனவுமன்றே; "எல்லா ச்சொல்லும் பொருள்குறித்தன" என ஐயமகற்றலும் சொற பொருள் இனைத்துப்பாகுபடுமெனறலும் சொல்லினைத்தென் றலுமென வழூஉக்காத்தலும், வழூஉக்காத்தற்குபகாரமுடை யனவுமன்மையான், ஆண்டுணர்த்தாது, பொருள்வேறுபா டுபற்றிச் சிறப்புவகையான் நான்குசொல்லுமுணர்த்துங்கா ல அவையுணர்த்தியல்லது உணர்த்தலாகாமையின், அவற் றையீண்டுணர்த்தினரென்பது. பொருள்வேறுபாடுபற்றிச் சொல்லுணர்த்துமாறு முன்னர்க் காணப்படும். (க)

கடுசு. பொருண்மைதெரிதலுஞ் சொன்மைதெரிதலுஞ்
சொல்லி னாகு மென்மனார் புலவர்.

இ - ள். தன்னின் வேறாகிய பொருளறியப்படுதலும் பொ ருளறியப்படாது அச்சொற்றானேயறியப்படுதலும் இரண் டுஞ்சொல்லானாமென்று சொல்லுவர் புலவர். எ-று.

உ - ம். சாத்தன், வந்தான், பண்டு, காடு, மன், உறு, கால் என்பனவற்றால் பொருளுணரப்பட்டவாறும், நீயென்கிளவி, செய்தெனெச்சம், தஞ்சக்கிளவி, கடியென்கிளவி என்பனவ ற்றாற்பொருளுணரப்படாது அச்சொற்றேயுணரப்பட்ட வாறுங்கண்டுகொள்க.

"ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே" "எல்லாச் சொ ல்லும் பொருள்குறித் தனவே" "ஈறுபெயர்க் காகு மியற

கைய வென்ப" என்புழிச் சொல்லெனனுஞ்சொல்லும் பெயரொன்னும் பெயரும் அறியப்படுதற்கட்சொன்மை தெரிதலாம்; ஏனைச்சொல்லும் ஏனைப்பெயருமறியப்படுதற்கட்பொருண்மை தெரிதலாம். அதனானுண்டுச் சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும் ஒருங்கு வந்தனவெனப்படும். அல்லாக்கால், சொல்லென்னுஞ்சொற்பொருளுணர்த்துதலும் பெயரொன்னும் பெயரிறுதியுருபு வருதலும் பெறப்படாவாமென்பது.

மேலைச்சூத்திரத்தாற் சொற்கள் பொருளுணர்த்துமென்பது பெறப்பட்டமையால், தானும் பிறிதுமெனப் பொருள் இரண்டுவகைப்படுமென அதனது பாகுபாடுணர்த்தியவாறு.

இதனாற்பயன், சொற்றன்னையுணர நின்றவழியுஞ் சொல்லேயாமென ஐயமறுத்தலாம். (உ)

**கடுஎ. தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலு மிருபாற் றென்ப பொருண்மை நிலையே.**

இ - ள். மேற்கூறப்பட்ட பொருண்மை தெரிதல், சொன்மாத்திரத்தான் விளங்கி வேறுநிற்றலுஞ் சொன்மாத்திரத்தாற்றோன்றாது சொல்லொடு கூடிய குறிப்பாற்றோன்றலுமென, இரண்டுகூற்றையுடைத்தென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

உ - ம். அவன், இவன், உவன்; வந்தான், சென்றான் என்றவழிப் பொருடெரிபு வேறு நின்றன. ஒருவர் வந்தார் என்றவழி ஆண்பால் பெண்பாலென்பதூஉம், சோறுண்டாநின்றான கற்கறித்து நன்கட்டாய் என்றவழித் தீங்கட்டாய எனபதூஉம், குறிப்பாற்றோன்றின. கடுத்தின்றான், தெங்குதின்றான் எனப் பிறிதின்பெயராற் பிறிதுபொருடோன்றலுங் குறிப்பிற்றோன்றலாம். தின்றானென்னுந்தொழிலோடு முதற்பொருள் இயையாமையின் அதனோடியையுஞ்சினைப்பொருள் அத்தொடராற்றலாற்பெறப்பட்டமையாற் குறிப்பிற்றோன்றலாகாதெனின்;—அற்றன்று: அவ்வியையாமை சொல்லுவான் குறிப்புணர்தற்கேதுவாவதல்லது முதற்பெயரைச் சினை

ப்பொருட்டாக்குமாற்றலின்றுகலான், அதுவுங்குறிப்பிற்றோன்றலேயாமென்க. பிறவுமன்ன. 'இளைதாக முண்மரங் கொல்க களையுநர்—கைகொல்லுங் காழ்த்த விடத்து' என்னுந் தொடர்மொழியான், நிலைபெற்றபின் களையலுறிற் களையலுற்றாரை அவர்தாங்கொல்வர் அதனாற்றீயாரை அவர் நிலைபெறாக் காலத்தே களைக என்னும் பொருள் விளங்குதலுங்குறிப்பிற்றோன்றலாம். அணியிலக்கணங்கூறுவார் இன்னோரன்னவற்றைப் பிறிதுமொழிதலென்பதோரணியென்ப. (ந)

கருஅ. சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப வறிந்திசி னோரே.

இ - ள். சொல்லாவன பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமென இரண்டென்று சொல்லுவர் அறிந்தோர். எ-று.

பெயர்ச்சொற்கிலக்கணம் வேற்றுமையோத்தினுட்கூறினார்; வினைச்சொற்கிலக்கணம் வினையியலுட்கூறுப.

பிறசொல்லுமுளவாயினும், இவற்றது சிறப்புநோக்கிப் பெயரே வினையென் றாயிரண்டென்பவென்றார். இவற்றுள்ளும் பொருளது புடைபெயர்ச்சியாகிய தொழில் பற்றாது அப்பொருள்பற்றி வருஞ்சிறப்புடைமையாற் பெயரை முற்கூறினார். (ச)

கருக. இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு
மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப.

இ - ள். இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையுஞ்சார்ந்து தோன்றும். எ-று.

அவற்றுவழிமருங்கிற்றோன்றுமென்றாரேனும், பெயரையும் வினையையுஞ்சார்ந்து தோன்றும் இவ்விரண்டையும் அவற்றொடு தலைப்பெய்யச் சொன்னாரெனக் கருத்தாகக் கொள்க. சார்ந்து தோன்றுமெனவே, அவற்றது சிறப்பின்மை பெறப்படும். வழக்குப்பயிற்சி நோக்கி இடைச்சொன் முற்கூறினார். (டு)

கசுo. அவற்றுள்,
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
யுயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு
மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே.

பொருள்வேறுபாடுபற்றிச் சிறப்புவகையான் நான்குசொல்லுமுணர்த்துதற்கு உபகாரமுடைய பொதுவிலக்கணமுணர்த்தி, நிறுத்த முறையானே இனிப்பெயர்ச்சொலுணர்த்துகின்றார்.

இ - ள். மேற்கூறப்பட்ட நான்கனுள், பெயரென்று சொல்லப்படுவன, உயர்திணைக்குரியவாய் வருவனவும், அஃறிணைக்குரியவாய் வருவனவும், இரண்டுதிணைக்குமொத்தவுரிமையவாய் வருவனவுமென, மூன்றுவேறுபாட்டனவாம், தோன்றுநெறிக்கண். எ-று. (சு)

கசுக. இருதிணைப் பிரிந்த வைம்பாற் கிளவிக்கு
முரியவை யுரிய பெயர்வயி னான.

இ - ள். இருதிணைப்பிரிந்த ஐம்பாற்கிளவியாதற்குப் பெயருள் உரியன உரியவாம். எ-று.

அவன், பெண்மகன், சாத்தன் என னகரவீறு ஆடூவிறகும், மகடூவிற்கும், அஃறிணையாண்பாற்கும் உரித்தாய் வருதலானும், அவள், மக்கள், மகள் என ளகரவீறு மகடூவிறகும், பல்லோர்க்கும், அஃறிணைப்பெண்பாறகும் உரித்தாய் வருதலானும், பெண்டாட்டி, நம்பி. எ-ம். ஆடூ, மகடூ. எ-ம். இகரவீறும் ஊகாரவீறும் இருபாற்குமுரியவாய் வருதலானும், வினைச்சொற்போல இன்னவீறு இன்னபாற்குரித்தெனப் பெயர்ச்சொல் ஈறுபற்றி உணர்தலாகாமையின், உரியவையுரியவென்றார். பிறவுமன்ன.

பல்குமென்றஞ்சி இன்னபெயர் இன்னபாற்குரித்தெனக் கிளந்தோதாராயினார். அஃதேல், இவற்றது பாற்குரிமையெற்றாற்பெறுதுமோவெனின்;—உரியவையென்றது வழக்கின்க

ட்பாலுணர்த்துதற்குரியவாய் வழங்கப்படுவனவென்றவாற னறே; அதனான் வழக்கு நோக்கிக் கொள்ளப்படுமென்பது.

மற்றும், நஞ்சுண்டான் சாம் என்பது ஒருபாற்குரிய சொ லலாயினும், நஞ்சுண்டாள் சாம், நஞ்சுண்டார் சாவர், நஞ்சு ண்டது சாம், நஞ்சுண்டன சாம் என ஏனைப்பாற்குமுரித்தா ம அச்சொல்லென இப்பொருண்மையுணர்த்துகின்றது இச்சூ த்திரமென்றுரால் உரையாசிரியரொனின்;—நஞ்சுண்டல் சாத ற்கு காரணமென்பான் ஒருபான்மேல் வைத்து நஞ்சுண்டா ன சாமென்றதல்லது, ஆண்டுத் தோன்றும் ஆண்மையும் ஒரு மையுஞ் சாதற்குக் காரணமென்னுங்கருத்தினனல்லன்; அத னாற்சொல்லுவான்கருத்தொடு கூடிய பொருளாற்றலாற் சாத ல் ஏனைப்பாற்குமொக்குமெனச் சேறல் சொல்லிலக்கணத்திற் கூறப்படாமையான், ஆசிரியர் "ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும்—வருவன தாமே வழக்கென மொழிப" எனவிப் பொருண்மை பொருளியலிற்கூறினாராகலின், இச்சூத்திரத் திற்கு அஃதுரையாதல் உரையாசிரியர் கருத்தன்றென்க. அல் லதூஉம், பார்ப்பான் கள்ளுண்ணான் என்றவழிக் கள்ளுணா மை சாதிபற்றிச் செல்வதொன்றாகலின் பார்ப்பனிக்கும் பார்ப்பார்க்குமல்லது பிறசாதியார்க்கும் அஃறிணைக்குஞ்செ ல்லாமையின், ஐம்பாற்கிளவிக்குமுரியவென்றல் பொருந்தா மையானும், அவர்க்கது கருத்தன்மையறிக. (௭)

கக௨. அவ்வழி,

அவனிவ னுவனென வரூஉம் பெயரு
மவளிவ ளுவளென வரூஉம் பெயரு
மவரிவ ருவரென வரூஉம் பெயரும்
யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவ ரென்னு
மாவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த வுயர்திணைப் பெயரே.

இ - ள். மூவகையாக மேற்சொல்லப்பட்ட பெயருள், அவ னென்பது முதலாக யாவரென்பதீறாகச் சொல்லப்பட்ட ப தினைந்தும் பால் விளங்க நிற்கும் உயர்திணைப்பெயர். எ-று.

யானென்பது, ஒருவன் ஒருத்தியென்னும் பகுதியுணர்த் தாதாயினும், அத்திணையொருமையுணர்த்தலிற் பாலறிவந்த பெயராம். அல்லதூஉம், பாலறிவந்தவெனப் பன்மைபற்றிக் கூறினொனினுமமையும். (அ)

கசுௗ. ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்
பெண்மை யடுத்த மகளென் கிளவியும்
பெண்மை யடுத்த விகர விறுதியு
நம்மூர்ந்து வரூஉ மிகரவை காரமு
முறைமை சுட்டா மகனு மகளு
மாந்தர் மக்க ளென்னும் பெயரு
மாடூ மகடூ வாயிரு பெயருஞ்
சுட்டுமுத லாகிய வன்னு மானு
மவைமுத லாகிய பெண்டென் கிளவியு
மொப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
யப்பதி னைந்து மவற்றோ ரன்ன.

இ - ள். இப்பெயர் பதினைந்தும் மேற்கூறப்பட்டனபோலப் பாலறிவந்தவுயர்திணைப்பெயராம். எ-று.

ஆண்மையடுத்த மகனென்கிளவி ஆண்மகனென்பது. ஒற்றுமைநயத்தான் ஆண்மையுணர்த்துஞ்சொல்லை ஆண்மையென்றார். இது பெண்மையடுத்தவென்புழியுமொக்கும். பெண்மையடுத்த மகளென்கிளவியும் பெண்மையடுத்த இகரவிறுதியுமாவன பெண்மகள், பெண்டாட்டி என்பன. நம்மூர்ந்து வரூஉமிகரமும் ஐகாரமுமாவன நம்பி, நங்கை என்பன. நமக்கின்னொன்னும் பொருள்பட வருதலின் நம்மூர்ந்து வரூஉமென்றார். அவை நம்மென்பது முதனிலையாக அப்பொருளுணர்த்தாவாயின், நம்மூர்ந்து வரூஉமிகரமும் நம்மூர்ந்து வரூஉமைகாரமுமெனப் பிரித்துக் கூறல்வேண்டுமென்பது. இவையுயர்சொல். முறைமை சுட்டா மகனுமகளுமாவன முறைப்பெயரன்றி மகன் மகளென ஆடூ மகடூவென்றுந் துணையாய் வருவன. மாந்தர் மக்களென்பன பன்மைப்பெ

யர். ஆடூ மகடூவென்பன மேற்சொல்லப்பட்டன. சுட்டுமுதலாகிய அன்னும் ஆனுமாவன அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன்; அம்மாட்டான், இம்மாட்டான் உம்மாட்டான் என்பன. இவற்றுள் ஆனீறு இக்காலத்துப் பயின்று வாரா. அவை முதலாகிய பெண்டென்கிளவி இக்காலத்து வீழ்ந்தனபோலும். பெண்டன்கிளவியென்று பாடமோதி, அவையாவன அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி என்பாருமுளர். ஒப்பொடு வருஉங்கிளவியாவன பொன்னன்னான், பொன்னன்னாள் என்னுந்தொடக்கத்தன. இவை மேலனபோலப் பயின்று வாராமையின், அவற்றோடொருங்கு வையாது வேறு கூறினார். (௯)

௧௯௪. எல்லாரு மென்னும் பெயர்நிலைக் கிளவியு
மெல்லீரு மென்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை யடுத்த மகனென் கிளவியு
மன்ன வியல வென்மனார் புலவர்.

இ - ள். எல்லாருமெனவும் எல்லீருமெனவும் பெண்மகனெனவும் வருமூன்றும் மேற்கூறப்பட்டனபோலப் பாலறிவந்த உயர்திணைப்பெயராம். எ - று.

புறத்துப் போய் விளையாடும் பேதைப்பருவத்துப் பெண்மகளை மாறோகத்தார் * இக்காலத்தும் பெண்மகனென்று வழங்குப.

எல்லாரும் எல்லீரும் என்புழிப் படர்க்கைப்பன்மையுணர்த்தும் ஆரும் முன்னிலைப்பன்மையுணர்த்தும் ஈரும் உம்மையடுத்து வருதலானும், பெண்மகனெனப் பாறிரிதலானும், இவற்றை வேறு கூறினார். (௧௦)

௧௯௫. நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயருடைப்பெயர் பண்புகொள்பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே

---

* மாறோகம்—கொற்கை சூழ்ந்த நாடு.

பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரோ
கூடிவரு வழக்கி னுடியற் பெயரோ
டின்றிவ வொன்று மெண்ணியற் பெயரோ
டன்றி யனைத்து மவற்றியல் பினவே.

இ - ள். நிலப்பெயர் முதலாகச் சொல்லப்பட்டனவும் மேலனபோலப் பாலறிவந்த உயர்திணைப்பெயராம். எ-று.

நிலப்பெயர்—அருவாளன், சோழியன் என்பன. குடிப்பெயர்—மலையமான், சேரமான் என்பன. குழூவின்பெயர்—அவையத்தார்; அத்திகோசத்தார் என்பன. வினைப்பெயர்—வருவார், செல்வார் என்பன. தச்சன், கொல்லன் என்பனவுமவை. உடைப்பெயர்—அம்பர்கிழான், பேரூர்கிழான் என்பன. வெற்பன், சேர்ப்பன் என்பனவுமவை. பண்புகொள் பெயர்—கரியான், செய்யான் என்பன. பல்லோர்க்குறித்த முறைநிலைப்பெயா—நந்தையர், தாயர் என்பன. பல்லோர்க்குறித்த சினைநிலைப்பெயர்—பெருங்காலர், பெருந்தோளர் என்பன. பல்லோர்க்குறித்த திணைநிலைப்பெயர்—பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர் என்பன. பல்லோர்க்குறித்தவென்று விசேடித்தலான், இம்மூவகைப்பெயருள் ஒருமைப்பெயர் இரண்டுதிணைக்குமுரியவாம். கூடிவருவழக்கினுடியற்பெயர் — பட்டிபுத்திரர், கங்கைமாத்திரர் என்பன. இவை ஆடல்குறித்தினையார் பகுதிபடக் கூடியவழியல்லது வழங்கப்படாமையிற் குழூவினபெயரின் வேறாயின. அக்குழூவின்பெயர் ஒருதுறைக்கணுரிமை பூண்ட பல்லோர்மேல் எக்காலத்தும் நிகழ்வன. இன்றிவ வொன்றுமெண்ணியற்பெயராவன ஒருவர், இருவர், முப்பத்துமூவர் என்பன. இன்றிவவொன்பது இத்துணையவொன்றும் பொருட்டுப்போலும். எண்ணாகியவியல்புபற்றிப் பொருளுணர்த்துதலான் எண்ணியற்பெயரென்றார்.

ஒருநிமித்தம்பற்றிச் சேறலிற் பலபெயர் ஒருபெயராக அடக்கப்பட்டமையான், நிலப்பெயர் முதலாயினவற்றை வேறு கூறினார். அஃதேல், ஒப்பொடுவருஉங்கிளவியும் அன்

தாகலின் இவற்றொடு வைக்கற்பாற்றெனின்;—அற்றேனும், வழக்குப்பயிற்சியின்மையான் அவற்றொடு வைத்தாரொன்க.

கசுசு. அன்ன பிறவு முயர்திணை மருங்கிற்
பன்மையு மொருமையும் பாலறிவந்த
வென்ன பெயரு மத்திணை யவ்வே.

இ - ள். மேற்சொல்லப்பட்ட பெயர்போல்வன பிறவும், உயர்திணைக்கட்பன்மையும் ஒருமையுமாகிய பாலறிவந்த எல்லாப்பெயரும், உயர்திணைப்பெயராம். எ-று.

முப்பாலறிவந்தவென்னுது, ஒருமைப்பாலுணர்த்துவனவும் அடங்குதற்குப் பன்மையுமொருமையும் பாலறிவந்தவென்றார்.

அன்னபிறவுமாவன—ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான், பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார் எனனுந்தொடக்கத்தன. (கஉ)

கசுஎ. அதுவிது வுதுவென வரூஉம் பெயரு
மவைமுத லாகிய வாய்தப் பெயரு
மவையிவை யுவையென வரூஉம் பெயரு
மவைமுத லாகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை யென்னும் பெயரு
மாவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த வஃறிணைப் பெயரே.

நிறுத்தமுறையானே உயர்திணைப்பெயருணர்த்தி, இனியஃறிணைப்பெயருணர்த்துகின்றார்.

இ - ள். அது, இது, உதுவென் வரூஉம் பெயரும், அப்பெயாக்கு முதலாகிய சுட்டே முதலாக ஆய்தத்தோடு கூடி அஃது, இஃது, உஃது என வரூஉம் பெயரும், அவை, இவை, உவையென வரூஉம் பெயரும், அச்சுட்டே முதலாக அவ், இவ்,

உவ் என வரூஉம் வகரவீற்றுப்பெயரும், யாது, யா, யாவை என்னும் வினாப்பெயருமென இப்பதினைந்துபெயரும், பால் விளங்க வரூஉம அஃறிணைப்பெயராம். எ-று.

சுட்டு முதலாகிய ஆய்தப்பெயரும் அவை முதலாகிய வகரவீற்றுப்பெயரும் அவையல்லதின்மையின், அவ்வாறு கூறினார். (௧௩)

௧௬அ. பல்ல பலசில வென்னும் பெயரு
முள்ள வில்ல வென்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரு
மினைத்தெனக் கிளக்கு மெண்ணுக்குறிப்பெய
மொப்பி னாகிய பெயர்நிலை யுளப்பட [ரு
வப்பா லொன்பது மவற்றோ ரன்ன.

இ - ள். பல்லவென்பது முதலாகக் கூறப்பட்ட ஒன்பது பெயரும் மேறகூறப்பட்ட அஃறிணைப்பெயர்போலப் பாலுணர நிற்கும். எ-று.

பல்ல, பல, சில, உள்ள, இல்லவென்னும் ஐந்துபெயரும் தம்மையுணர்த்தி நின்றன. அல்லன பொருளுணர்த்தி நின்றன.

வினைப்பெயர்க்கிளவியாவன வருவது, செல்வது என்பன. பண்புகொள்பெயராவன கரியது, செய்யது என்பன. இனைத்தெனக்கிளக்குமெண்ணுக்குறிப்பெயர் ஒன்று, பத்து, நூறு எனவெண்பற்றி எண்ணப்படும் பொருண்மேனின்றன. ஒப்பினாகிய பெயர்நிலையாவன பொன்னன்னது, பொன்னன்னவை என்பன.

முன்னையவைபோலப் பல்ல முதலாயின வழக்கின்கட்பயின்று வாராமையின், வேறு கூறினார். பல சிலவென்பன பயின்றவாயினும், பல்ல இல்ல உள்ளவென்பனவற்றோடு ஒப்புமையுடையவாகலின், இவற்றொடு கூறினார். (௧௪)

௧௬௯. கள்ளொடு சிவணு மவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே.

இ - ள். கள்ளொன்னுமீற்றொடு பொருந்தும் அஃறிணையிய ற்பெயர் கள்ளீற்றொடு பொருந்துதற்கட்பலவறிசொல்லாம். எ-று.

அஃறிணையியற்பெயராவன ஆ, நாய், குதிரை, கழுதை, தெங்கு, பலா, மலை, கடல் எனனுந்தொடக்கத்துச் சாதிப் பெயர். ஒருமைக்கும் பனமைக்கும் பொதுவாய் நிற்றலின் இயற்பெயரென்றார். இவை கள்ளென்னுமீற்றவாய், ஆக்கள், குதிரைகள் என நின்றவழிப் பன்மை விளக்கலிற பலவறி சொல்லாயினவாறு கண்டுகொள்க.

அஃறிணையியற்பெயரெனவே, பாலறிபெயரேயன்றி அஃறிணைப்பொதுப்பெயருமுளவென்பது பெறரும்.

பாற்குரிமை சுட்டாது அஃறிணைக்குரிமை சுட்டிய, அவ்வி யற்பெயரென்றார். (௧௫)

**௧௭0.** அன்ன பிறவு மஃறிணை மருங்கிற்
பன்மையு மொருமையும் பாலறி வந்த
வென்ன பெயரு மத்திணை யவ்வே.

இ - ள். மேற்கூறப்பட்ட பெயர்போல்வன பிறவும், அஃறிணைக்கட்பன்மையும் ஒருமையுமாகிய பால் விளங்க வந்த எல்லாப்பெயரும், அத்திணைக்குரிய. எ-று.

அன்னபிறவுமென்றதனாற்கொள்ளப்படுவன பிறிது, பிற, மற்றையது, மற்றையன, பல்லவை, சில்லவை, உள்ளது, இல்லது, உள்ளன, இல்லன என்னுந்தொடக்கத்தன. (௧௬)

**௧௭௧.** தெரிநிலை யுடைய வஃறிணை யியற்பெய
ரொருமையும்பன்மையும் வினையொடுவரினே.

இ - ள். கள்ளொடு சிவணாத அஃறிணையியற்பெயர் ஒருமையும் பன்மையும் விளங்குநிலையுடைய, அதற்கேற்ற வினையொடு தொடர்ந்தவழி. எ-று.

உ - ம். ஆ வந்தது, ஆ வந்தன; குதிரை வந்தது, குதிரை வந்தன என வினையாற் பால் விளங்கியவாறு கண்டுகொள்க.

இஃதஃறிணைப்பெயரிலக்கணமாயினும், பொதுப்பெயர் வினையொடு வந்து பால் விளங்குதலொப்புமை நோக்கி ஈண்டு வைத்தாரென்பது. அஃதேல், கள்ளொடு சிவணுமென்பதனையும் ஈண்டு வைக்கவெனின்;—இயற்பெயர்முன்னராரைக்கிளவிபோலக் கள்ளென்பது அஃறிணையியற்பெயர்க்கு ஈறாய் ஒன்றுபட்டு நிற்றலின், வினையானன்றிப் பெயர்தாமே பன்மையுணர்த்தியவாம்; அதனால் அதனைப் பாலறிவந்த பெயருணர்த்துமதிகாரத்து வைத்தார். (கள)

கஎஉ. இருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமையிற்
திரிபுவேறு படூஉ மெல்லாப் பெயரு
நினையுங் காலைத் தத்த மரபின்
வினையோ டல்லது பாறெரி பிலவே.

இ - ள். இருதிணைச்சொற்குமொத்த உரிமையவாதலின் உயர்திணைக்கட்சென்றுழி உயர்திணைப்பெயராயும அஃறிணைக்கட்சென்றுழி அஃறிணைப்பெயராயும் வேறுபடும் விரவுப்பெயரெல்லாம், ஆராயுங்கால், தத்தமரபின் வினையோடியைந்தல்லது, திணை விளங்க நில்லா. எ-று.

வினையொடல்லதெனவே, திணைக்கேற்றவாற்றான் ஈறு வேறுபடாது ஓரீற்றவாய் நிற்றலின், பெயர்தாமே நின்று தத்தமரபினென்றதனாற்பொதுவினையொடு வந்து திணை விளக்காவென்பது பெறப்படும்.

இனி அவை தந்தமரபின் வினையொடு பால் விளக்குமாறு:—சாத்தன் வந்தான்; சாத்தன் வந்தது; முடவன் வந்தான்; முடவன் வந்தது என வந்தவாறு கண்டுகொள்க.

தத்தமரபின் வினையாவன உயர்திணைக்கும் அஃறிணைக்குமுரிய பதினோரீற்றுப்படர்க்கைவினை.

எல்லாப்பெயருமென்பதனை ஆறு போயினாரெல்லாருங்கூறைகோட்பட்டார் என்பதுபோலக் கொள்க.

இருதிணைக்கும் பொதுவாகிய சொல் வினையாற்பொதுமை நீங்கி ஒருதிணைச்சொல்லாமென்பது கருத்தாகலின், ஈண்டுப் பாலெனப்பட்டது திணையேயாம்.

சிறப்புடைப்பொருளைத்தானினிதுகிளத்தலென்பதனால் தத்தமரபின்வினையொடல்லது பாறெறிபிலவென்றாரேனும், சாத்தனொருவன்; சாத்தனொன்று எனத் தத்தமரபிற்பெயரொடு வந்து பால் விளக்குதலுங்கொள்க. (கஅ)

**களஅ. நிகழூஉ நின்ற பலர்வரை கிளவியி**
**னுயர்திணை யொருமை தோன்றலு முரித்தே**
**யன்ன மரபின் வினைவயி னான.**

இ - ள். நிகழ்காலம்பற்றி வரும் பலர்வரைகிளவியான் உயர்திணையொருமைப்பாறேன்றுதலுமுரித்து, அவ்வொருமைப்பாறேன்றுதறகேற்ற வினையிடத்து. எ-று.

பலர்வரைகிளவியென்றது செய்யுமென்னுமுற்றுச்சொல்லை.

உ - ம். சாத்தன் யாழெழூஉம்; சாத்தி சாந்தரைக்கும் என்றவழி யாழெழூஉதலுஞ் சாந்தரைத்தலுமாகிய வினை அஃறிணைக்கேலாது ஒருவற்கும் ஒருத்திக்குமேற்றலின், உயர்திணையொருமைப்பால் விளங்கியவாறு கண்டுகொள்க.

நிகழூஉநின்ற தொழிலையுணர்த்துஞ்சொல்லை ஒற்றுமைநயத்தான் நிகழூஉநின்ற பலர்வரைகிளவியென்றார். நிகழூஉநின்றவென்றது நிகழாநின்றவென்றவாறு.

நடத்தல் கிடத்தன்முதலாகிய பிறதொழில்பற்றி வரும் பலர்வரைகிளவியான் உயர்திணையொருமை தோன்றாமையின், அன்னமரபின்வினைவயினனவென்றார்.

தோன்றலுமுரித்தென்னும் எதிர்மறையும்மையான், அன்னமரபின் வினைக்கட்டோன்றாமையுமுரித்தென்றது, பலர்வரைகிளவியாற்றோன்றாமையுமுரித்தென்று கொள்க.

அஃதேல், யாழெழூஉதலுஞ் சாந்தரைத்தலுமுதலாகிய தொழில்வேறுபாடுபற்றி வருமுன்னிலைவினையானும் வியங்

கோளானும் இருவகையெச்சத்தானுமெல்லாம் உயர்திணைப் பாலேறான்றுதலாற் பலர்வரைகிளவியினென வரைந்து கூறல் பொருந்தாதெனின்;—அற்றன்று: "முன்னஞ் சேர்த்தி முறையி னுணர்தல்" என முன்னிலைப்பெயராற்பாலுணருமாறு முன்னருணர்த்தப்படுதலானும், அன்னமரபின் வினை பற்றி வரும் வியங்கோள் ஏவற்பொருண்மைத்தாகலின் ஏயதுணர்ந்து செய்யுமுயர்திணை சுட்டியல்லது பெரும்பான்மையும் வாராமையான் ஆண்டன்னமரபின் வினையாற்பாலுணர்தல் ஒருதலையன்றாகலானும், பெயரொச்சத்திற்கு முடிவாகிய பெயரும் வினையெச்சமுஞ் சிறுபான்மை பொதுவினை கொண்டவழியல்லது தத்தமரபின் வினைகொண்டவழி அவ்வினையே பால் விளக்கலான் ஆண்டெச்சம் பால் விளக்கல் வேண்டாமையானும், அவையொழித்துப் பலர்வரைகிளவியே விதந்து கூறினார். இருவகையெச்சத்தானும் வியங்கோளானுஞ் சிறுபான்மை உயர்திணைப்பாலேறான்றல் ஒன்றெனமுடித்தலென்பதனாற்கொள்க.

நிகழ்காலத்துப் பிறசொல்லை நீக்குதற்குப் பலர்வரைகிளவியென்றார்.

பன்மைவிரவுப்பெயரை நீக்குதற்கு நிகழூஉநின்றவென்றார்.

மேல் விரவுப்பெயர் தத்தமரபின்வினையொடல்லது பாறெரிபிலவென்றார் இனி அவற்றானன்றிப் பொதுவினையானும் பாறெரிய நிற்குமென்பதுணர்த்தியவாறு. அஃதேல், சாத்தன் புற்றின்னும், சாத்தி கன்றீனும் எனச் செய்யுமென்னுஞ்சொல்லான் அஃறிணைப்பாலுந்தோன்றுதலின், அது கூறாயிற்றென்னையெனின்;—எழுதலும் அரைத்தலும் அஃறிணைக்கென்னுமியையில்லாதவாறுபோலப் புற்றின்றல் உயர்திணைக்கு எவ்வாற்றானுமியைபின்றெனப்படாமையானும், கன்றீனும் என்புழி ஈனுமென்னும் வினையானன்றிக் கன்றென்னுஞ் சார்பான் அஃறிணைப்பாலேறான்றுதலானும், ஒருமைவினையான் ஒருவழி அஃறிணைப்பாலேறான்றினும் அது சிறுபான்மையாகலானும், கூறாராயினாரென்பது. (கக)

கஎச. இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற்பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
யெல்லா நீயிர் நீயெனக் கிளந்து
சொல்லிய வல்ல பிறவு மாஅங்
கன்னவை தோன்றி னவற்றொடுங் கொளலே.

விரவுப்பெயர் பாறெரிய நிற்குமாறுணர்த்தி, இனி அவை தம்மையுணர்த்துவானெடுத்துக்கொண்டார்.

இ-ள். இயற்பெயர் முதலாக நீயென்பதீறாக எடுத்துச் சொல்லப்பட்டனவல்லாத அன்னபிறவும் ஆண்டு வருமாயிற் சொல்லப்பட்டவற்றொடுங் கூட்டுக. எ-று.

இயற்பெயராவன சாத்தன் கொற்றன் எனவழங்குதற்பயத்தவாய் நிமித்தமின்றிப் பொருளேபற்றி வருமிடுபெயர். இயற்பெயரெனினும் விரவுப்பெயரெனினுமொக்குமாயின், அவற்றுள் ஒருசாரனவற்றிற்கு அப்பெயர் கொடுத்ததென்னையெனின்;—அவற்றது சிறப்பு நோக்கி அப்பெயர் கொடுத்தார்; பாணியுந்தாளமும் ஒருபொருளவாயினும் இசைநூலார் தாளத்துள் ஒருசாரனவற்றிற்குப் பாணியென்னும் பெயர் கொடுத்தாற்போலவென்பது.

சினைப்பெயராவன பெருங்காலன், முடவன் என அச்சினையுடைமையாகிய நிமித்தம்பற்றி முதன்மேல் வரும் பெயர். சினைமுதற்பெயராவன சித்தலைச்சாத்தன், கொடும்புறமருதி எனச் சினைப்பெயரொடு தொடர்ந்து வருமுதற்பெயர். சாத்தன், மருதியென்னுமுதற்பெயர் சினைப்பெயரொடு தொடர்ந்தல்லது பொருளுணர்த்தாமையிற் சினைமுதற்பெயராயின. முறைப்பெயராவன தந்தை தாயென முறைபற்றி முறையுடைப்பொருண்மேல் வருவன. முறையாவது பிறவியான் ஒருவனேடொருவற்கு வருமியைபு. அல்லனவைந்துந் தம்மையுணர்த்தி நின்றவாகலான், தாமென்பது முதலாகிய சொல்லேயாம்.

பிறவுமென்றதனான், மக, குழவி போல்வன கொள்க. இவற்றை உயர்திணைப்பெயரென்றால் உரையாசிரியரெனின்;—

மரபியலுள் "மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பு—மவையு மன்ன வப்பா லான" எனவும், "குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை" எனவும், அவை அஃறிணைக்காதல் கூறி, 'குழவியு மகவு மாயிரண் டல்லன—கிழவ வல்ல மக்கட் கண்ணே" என்வுயர்திணைக்குமோதினைத்தாராகலின், அவை விரவுப்பெயரோயாம்; அதனுன் அது போலியுரையென்க.

ஒருநிமித்தத்தான் இரண்டுதிணைப்பொருளுமுணர்த்துதலி ன் விரவுப்பெயர் பொருடோறு நிமித்தவேறுபாடுடைய பல பொருளொருசொலன்மையறிக. (உ0)

கஎ௫. அவற்றுள்,

நான்கே யியற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி யிரண்டா கும்மே
யேனை பெயரே தத்த மரபின.

இ - ள். மேற்கூறிய விரவுப்பெயருள் இயற்பெயருஞ் சி னைப்பெயருஞ் சினைமுதற்பெயரும் ஓரொன்று நந்நான்காம்; முறைப்பெயர் இரண்டாம்; ஒழிந்தன ஐந்துபெயருந் தத்தமி லக்கணத்தனவாம். எ-று.

தத்தமிலக்கணத்தனவென்றது பொதுவிலக்கணத்தனவல் ல சிறப்பிலக்கணத்தனவே பாமென்றவாறு. எனவே, அவை ஓரொன்றுகி நிற்குமென்றவாறும். ஈண்டுத்தத்தமென்பது, அந்நிகரனவெனப் பொருளை சுட்டாது, ஓரொன்றாய் நின்ற பெயரைச் சுட்டி நின்றது. தனிப்பெயரைந்தும் விரிப்பெயர் பதினான்குமாகப் பத்தொன்பதென்றவாறும்.

கூறப்பட்ட பெயரது பாகுபாடாகிய ஒருபொருணுதலுத ல்பற்றி ஒருசூத்திரமாயிற்று. நான்காய் விரிதலும் இரண்டா ய் விரிதலுந் தாமேயாதலுமாகிய பொருள்வேறுபாடுமையான் மூன்றுசூத்திரமெனினுமமையும். (உக)

கஎசு. அவைதாம்,

பெண்மை யியற்பெய ராண்மை யியற்பெயர்

பன்மை யியற்பெய ரொருமையியற் பெயரொன்
றந்நான் கென்ப வியற்பெயர் நிலையே.

கஎஎ. பெண்மைச் சினைப்பெய ராண்மைச் சினைப்பெயர்
பன்மைச்சினைப்பெயரொருமைச்சினைப்பெயரொ
றந்நான் கென்ப சினைப்பெயர் நிலையே. [ன்

கஎஅ. பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
யாண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
யொருமை சுட்டிய சினைமுதற் பெயரொன்
றந்நான் கென்ப சினைமுதற் பெயரே.

கஎகூ. பெண்மைமுறைப்பெயராண்மைமுறைப்பெய
ருயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே. [ரொன்

இயற்பெயர் முதலிய நான்கன் விரியாகிய பதினொன்கும் இவையெனவுணர்த்தியவாறு.

இவற்றிற்குதாரணம் முன்னர்க்காட்டுதும்.

இயற்பெயர்முதன்மூன்றும் ஓரொன்று நான்காய் விரிதலும், முறைப்பெயர் இரண்டாதலும், மேலைச்சூத்திரத்தாற் பெறப்பட்டமையான் அந்நான்கும் இரண்டுமாவன இவை யென்பது இச்சூத்திரங்கட்குக் கருத்தாகக் கொள்க. இவ்வாறிடர்ப்படாது தொகைச்சொற்களைப் பயனிலையாகக் கொள்ளவே, இச்சூத்திரங்களான் அவையின்னவென்றலும் இத்துணையவென்றலும் பெறப்படுமாகலின், மேலைச்சூத்திரம வேண்டாவெனின்; — அற்றன்று: இவற்றுன் விரவுப்பெயர் பததொன்பதென்னும் வரையறை பெறப்படாமையானும், வகுத்துக்கூறல் தந்திரவுத்தியாகலானும், அது வேண்டு மென்பது. (உஉ) (உங) (உச) (உரு)

கஅ0. பெண்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றற்கு மொருத்திக்கு மொன்றிய நிலையே.

மேற்கூறிய பதினான்குபெயரும் இருதிணையும்பற்றிப் பா லுணர்த்தியவெடுத்துக்கொண்டார். அவை பெண்மைப்பெ யர் நான்கும், ஆண்மைப்பெயர் நான்கும், பன்மைப்பெயர் மூன்றும், ஒருமைப்பெயர் மூன்றுமாம்.

இ - ள். பெண்மைபற்றி வருநான்குபெயரும், அஃறிணைப் பெண்ணொன்றற்கும் உயர்திணையொருத்திக்கும் உரிய. எ-று.

அந்நான்குமாவன, பெண்மையியற்பெயரும், பெண்மைச் சினைப்பெயரும், பெண்மைச்சினைமுதற்பெயரும், பெண்மை முறைப்பெயருமேயாம்.

உ - ம். சாத்தி வந்தது; சாத்தி வந்தாள். எ-ம். முடத்தி வந்தது; முடத்தி வந்தாள். எ-ம். முடக்கொற்றி வந்தது; மு டக்கொற்றி வந்தாள். எ-ம். தாய் வந்தது; தாய் வந்தாள். எ-ம். அவை முறையானே அஃறிணைப்பெண்மைக்கும், உயர் திணைப் பெண்மைக்கும், உரியவாய் வந்தவாறு கண்டுகொள் க. முடமென்பது சினையது விகாரமாகலிற் சினையாயிற்று.

ஒன்றற்குமெனப் பொதுப்படக் கூறினோனும், பெண்மை சுட்டிய பெயரொன்றனமையான் அஃறிணைப்பெண்ணொன்றேயா ம். இஃது "ஆண்மை சுட்டிய வெல்லாப் பெயரும்" என்பு ழியுமொக்கும்.

ஒன்றிய நிலையுடையவற்றை ஒன்றியநிலையென்றார். (உசு)

கஅக. ஆண்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றற்கு மொருவற்கு மொன்றிய நிலையே.

இ-ள். ஆண்மை பற்றி வரு நான்குபெயரும், அஃறிணையா ணொன்றற்கும், உயர்திணையொருவனுக்கும், உரிய. எ-று.

அந்நான்குமாவன, ஆண்மையியற்பெயரும், ஆண்மைச்சி னைப்பெயரும், ஆண்மைச்சினைமுதற்பெயரும், ஆண்மைமு றைப்பெயருமேயாம்.

உ - ம். சாத்தன் வந்தது; சாத்தன் வந்தான். எ-ம். முட வன் வந்தது; முடவன் வந்தான். எ-ம். முடக்கொற்றன் வந்

தது; முடக்கொற்றன் வந்தான். எ-ம். தந்தை வந்தது; தந்தை வந்தான். எ-ம். அவை முறையானே அஃறிணையாறென்றற்கும், உயர்திணையாண்பாற்கும், உரியவாய் வந்தவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. (உஎ)

கஅஉ. பன்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றே பலவே யொருவ னொன்று
மென்றிப் பாற்கு மோரன் னவ்வே.

இ - ள். பன்மை சுட்டி வருமூன்றுபெயரும், அஃறிணையொருமையும் அத்திணைப்பன்மையும் உயர்திணையொருமையுமெனச் சொல்லப்பட்ட மூன்றுபாற்கும், உரிய. எ-று.

அம்மூன்றுமாவன, பன்மையியற்பெயரும், பன்மைச்சினைப்பெயரும், பன்மைச்சினைமுதற்பெயருமாம்.

உ - ம். யானை வந்தது; யானை வந்தன; யானை வந்தான; யானை வந்தாள். எ-ம். நெடுங்கழுத்தல் வந்தது; நெடுங்கழுத்தல் வந்தன; நெடுங்கழுத்தல் வந்தான்; நெடுங்கழுத்தல் வந்தாள். எ-ம். பெருங்கால் யானை வந்தது; பெருங்கால் யானை வந்தன; பெருங்கால்யானை வந்தான்; பெருங்கால்யானை வந்தாள். எ-ம். அவை முறையானே அஃறிணையொருமைக்கும், அத்திணைப்பன்மைக்கும், உயர்திணையொருமைக்கும், உரியவாய் வந்தவாறு கண்டுகொள்க.

பன்மை ச்சேயன்றி ஒருமைக்குமுரியவாய் வருவனவற்றைப் பன்மைப்பெயரென்றதென்னையெனின்;—நன்று சொன்னாய்: பெண்மைப்பெயர் முதலாயினவும் பிறபெயராலுணர்த்தப்படாத் பெண்மை முதலாயினவற்றையுமுணர்த்தலானன்றே அப்பெயரவாயின, என்னை! பெண்மை முதலாயின பிறபெயராலுணர்த்தப்படுமாயின் அப்பெண்மை முதலாயினவற்றான் அப்பெயர் வரைந்து சுட்டலாகாமையின். பன்மைப்பெயர், ஒருமையுணர்த்துமாயினும், பிறவாற்றானுணர்த்தப்படாத பன்மையை ஒருகாலுணர்த்தலின் அப்பன்மையான் அவை வரைந்து சுட்டப்படுதலின், அப்பெயரவாயின.

அற்றேனும், பன்மை சுட்டிய பெயரொன்றமையாற் பன்மையேயுணர்த்தல்வேண்டுமெனின்;—அற்றன்று: இயைபின்மை நீக்கலும் பிறிதினியைபு நீக்கலுமென விசேடித்தல் இருவகைத்து. வெண்குடைப்பெருவிறல் என்றவழிச் செங்குடை முதலியவற்றோடு இயைபு நீக்காது வெண்குடையோடு இயைபின்மைமாத்திரை நீக்கி வெண்குடையானென்பது பட நிற்றலின், அஃதியைபின்மை நீக்கலாம். கருங்குவளை என்றவழிச் செம்மை முதலாயினவற்றோடு இயைபு நீக்கலின், இது பிறிதினியைபு நீக்கலாம். பன்மை சுட்டிய பெயரொன்பது, வெண்குடைப்பெருவிறல் என்பதுபோல, ஒருமையியைபு நீக்காது பன்மை சுட்டுதலோடு இயைபின்மை மாத்திரை நீக்கிப் பன்மை சுட்டுமென்பது பட நின்றது. அதனான் விசேடிக்குங்காற் பிறிதினியைபு நீக்கல் ஒருதலையன்றென்க. அஃறிணையொருமையும் அத்திணைப்பன்மையும் உயர்திணையொருமையுமாகிய பலவற்றையும் உணர்த்தலாற் பன்மை சுட்டிய பெயரொன்பாருமுளர். அஃதுரையாசிரியர் கருத்தன்மை அவ்வுரையான் விளங்கும்.*

என்றிப்பாற்குமென்னுமும்மை, இம்மூன்றுபாற்குமென்பது பட நிற்றலின், முற்றும்மை. (உ௫)

கசுரு. ஒருமை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றற்குமொருவர்க்குமொன்றியநிலையே.

இ - ள். ஒருமை சுட்டி வருமூன்று பெயரும், அஃறிணையொருமைக்கும், உயர்திணையொருமைக்கும், உரிய. எ-று.

அம்மூன்றுமாவன, ஒருமையியற்பெயரும், ஒருமைச்சினைப்பெயரும், ஒருமைச்சினைமுதற்பெயருமாம்.

---

* பன்மை சுட்டிய பெயரொன்றது இயைபின்மை மாத்திரை நீக்கிய விசேடணமடுத்து நின்றதெனச் சேனவரையரும நச்சினார்க்கினியரும் உரைத்ததனை மறுத்துப் பிறிதினியைபு நீக்கிய விசேடணமடுத்து நின்றதென நாட்டினார் நன்னூல்விருத்திகாரர். பெயரியலில் "ஒன்றே யிருதிணைத்தன்பா லேற்கும்" என்னுஞ்சூத்திரவுரையிற் காண்க.

உ - ம். கோதை வந்தது; கோதை வந்தான்; கோதை வந்தாள். எ-ம். செவியிலி வந்தது; செவியிலி வந்தான்; செவியிலி வந்தாள். எ-ம். கொடும்புறமருதி வந்தது; கொடும்புறமருதி வந்தான்; கொடும்புறமருதி வந்தாள். எ-ம். அவை முறையானே அஃறிணையொருமைக்கும், உயர்திணையொருமைக்கும், வந்தவாறு கண்டுகொள்க.

பெண்மைப்பெயரும் ஆண்மைப்பெயரும் ஒருமையுணர்த்துமாயினும், இவை பெண்மை ஆண்மையென்னும் வேறுபாடுணர்த்தாது ஒருமையுணர்த்தலான், இவற்றை ஒருமைப்பெயரென்றார். (உக)

கஅச. தாமென் கிளவி பன்மைக் குரித்தே.

தத்தமரபினவெனப்பட்ட பெயர் பாற்குரியவாய் வருமாறுணர்த்துகின்றார்.

இ - ள். தாமென்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மைப்பாற்குரித்து. எ-று.

உ - ம். தாம் வந்தார்; தாம் வந்தன என வரும். (ரு0)

கஅரு. தானென் கிளவி யொருமைக் குரித்தே.

இ - ள். தானென்னும் பெயர் இருதிணைக்கண்ணும் ஒருமைப்பாற்குரித்து. எ-று.

உ - ம். தான் வந்தான்; தான் வந்தாள்; தான் வந்தது என வரும். (ருக)

கஅசா. எல்லா மென்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே.

இ - ள். எல்லாமென்னும் பெயர் இரண்டுதிணைக்கண்ணும் பன்மை குறித்து வரும். எ-று.

வழியென்றது இடம். பொருள் சொன்னிகழ்தற்கிடமாகலிற் பல்பொருளைப் பல்வழியென்றார்.

உ - ம். எல்லாம் வந்தேம்; எல்லாம் வந்தீர்; எல்லாம் வந்தார்; எல்லாம் வந்தன என வரும்.

எல்லாமென்னும் பெயர் இரண்டுதிணைக்கண்ணும் புன்மை குறித்து வருமென்றறது பலவழியென்றது, மேனியெல்லாம் பசலையாயிற்று என ஒருபொருளின் பலவிடங்குறித்து நிற்ற லுமுடைத்தென்பதூஉம் கோடற்குப் போலும். அஃது எஞ் சாப்பொருட்டாய் வருவதோருரிச்சொலென்பாருமுளர். ()

க அஎ. தன்னு ளுறுத்த பன்மைக் கல்ல
துயர்திணை மருங்கி னாக்க மில்லை.

இ - ள். எல்லாமென்னுஞ்சொல், உயர்திணைக்காங்கால், த ன்மைப்பன்மைக்கல்லது முன்னிலைப்பன்மைக்கும் படர்க்கை ப்பன்மைக்கும், ஆகாது. எ-று.

'நெறிதா ழிருங்கூந்த னின்பெண்டி ரெல்லாம்' எனப்படர் க்கைக்கண்ணும் வந்ததாலெனின்;—எழுத்ததிகாரத்துள் "உ யர்திணை யாயி னம்மிடை வருமே" எனத்தன்மைக்கேற்ற சாரியை கூறினமையானும், ஈண்டு நியமித்தலானும், அஃதிட வழுவமைதியாமென்பது.

தன்மைச்சொல் அஃறிணைக்கின்மையின், எல்லாமென்பது பொதுமையிற்பிரிந்து தன்னுளுறுத்த பன்மைக்கண் வந்துழி உயர்திணையீற்றுப்பெயரொனப்படினும், இருதிணைப்பன்மையு முணர்த்துதற்கேற்றுப் பொதுப்பிரியாது நின்றவழி விரவுப் பெயராதற்கிழுக்கின்மையறிக.

எல்லாப்பார்ப்பாரும், எல்லாச்சான்றாரும் எனப் படர்க் கைக்கண் வருதலும் கோடற்குத் தன்னுளுறுத்த பன்மைக் காங்கால் உயர்திணைமருங்கினல்லதாகாதென மொழிமாற்றி யுரைத்தாரால் உரையாசிரியரொனின்; — படர்க்கைக்கண் வரு தல் இடவழுவமைதியென்றவழிப்படுமிழுக்கின்மையானும், "தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவி" எனவும், "யான் யா ம் நாமென வரூஉம் பெயர்" எனவும், பிறண்டுமோதியவாற் றால், தன்மைச்சொல் அஃறிணைக்கின்மை பெறப்படுதலின் ஈ ண்டுக் கூறல்வேண்டாமையானும், எழுத்ததிகாரத்துள் "உய ர்திணை யாயி னம்மிடை வருமே" எனத் தன்மைக்குரிய சாரி யையே கூறலானும், அது போலியுரையென்க.

ஈண்டாக்கம் பெருக்கம். பெருக்கமில்லையெனவே, சிறுபான்மை ஏனையிடத்திற்குமுரித்தாமென்பாருமுளர். (௩௩)

க அ அ. நீயிர் நீயென வரூஉங் கிளவி
பாறெரி பிலவே யுடன்மொழிப் பொருள.

இ - ள். நீயிர் நீயென்னுமிரண்டுபெயர்ச்சொல்லும் திணைப்பகுதி தெரிய நில்லா; இருதிணையுமுடன்றேன்றும் பொருள. எ-று.

உடன்மொழிப்பொருளவென்றது, இருதிணைப்பொருளும் ஒருங்கு வரத்தோன்றுமென்றவாறு: பிரித்தொருதிணை விளக்காவென்றவாறு.

உ - ம். நீயிர் வந்தீர்; நீ வந்தீய் என இருதிணைக்கும் பொதுவாய் நின்றவாறு கண்டுகொள்க.

இருதிணைக்குமுரிய பெயரொல்லாந் தத்தமரபின் வினையொடு வந்து திணை விளக்குமன்றே; இவற்றிற்கு அன்னவினையின்மையின் ஒருவாற்ருனுந்திணை விளக்காமையின், பாறெரிபிலவேயுடன்மொழிப்பொருளவென்ருர். (௩௪)

க அகூ. அவற்றுள்,
நீயென் கிளவி யொருமைக் குரித்தே.

இ - ள். மேற்சொல்லப்பட்ட இரண்டுபெயருள் நீயென்னும் பெயர் ஒருமைக்குரித்து. எ-று.

ஒருமையாவது, ஒருவன், ஒருத்தி, ஒன்றென்பனவற்றிறகெல்லாம் பொதுவாகிய ஒருமை.

உ - ம். நீ வந்தாய் என வந்தவாறு கண்டுகொள்க. (௩௫)

ககூ0. ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே.

இ - ள். நீயிரென்னும் பெயர் பன்மைக்குரித்து. எ-று.

பன்மையாவது பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொதுவாகிய பன்மை.

உ-ம். நீயிர் வந்தீர் என வந்தவாறு கண்டுகொள்க.

"எல்லாம்" "நீயிர் நீ" எனவோதியவாறன்றி, ஒருமை பன்மையென்னும் முறைபற்றி ஈண்டு நீயென்பதனை முற்கூறினார். அன்றி, முந்துமொழிந்ததன்றலைதடுமாற்றமென்னுந் தந்திர வுத்தியெனினுமமையும்.

நீயிர் நீயென இருதிணையைம்பாலுள் ஒன்றனை வரைந்துணர்த்தாவாயினும், ஒருமை பன்மையென்னும் பொருள்வேறுபாடுடையவென வரையறைப்படுவழி, வரையறுத்தவாறு. ()

கசுக. ஒருவ னொன்னும் பெயர்நிலைக் கிளவி
யிருபாற்கு முரித்தே தெரியுங் காலை.

இ-ள். மேல் இன்றிவனொன்னுமெண்ணியற்பெயனொன்றே தப்பட்டவற்றுள், ஒருவனொன்னும் பெயர்ச்சொல், உயர்திணை முப்பாலுள் ஒருபால் விளக்காது, ஒருவன் ஒருத்தியென்னும் இருபாற்கும் பொதுவாய் நிற்கும். எ-று.

உ-ம். ஒருவர் வந்தார் எனப்பொதுவாய் நின்றவாறு கண்டுகொள்க.

இருபாற்குமெனப் பொதுப்படக் கூறினேனும், ஒருவனொன்னும் ஒருமைப்பெயரானுணர்த்தப்படுதற்கேற்பன ஒருவன் ஒருத்தியென்பனவேயாகலான், அவையே கொள்ளப்படும்.

உயர்திணையொருமைப்பால் இரண்டென்றறியப்பட்டமையான், இருபாற்குமுரித்தென்னுமும்மை முற்றும்மை. உயர்திணைப்பெயராயினும், பாலுணர்த்தாமையும் முன்னத்தானுணர்த்தலும் இதற்குமொக்குமாகலின், ஈண்டுக் கூறினொன்பது. (ஙஎ)

கசுஉ. தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும்.

இ-ள். ஒருவனொன்னும் பெயரதியல்பு கருதின், அஃது, ஒருமைப்பெயராயினும், பல்லோரறியுஞ்சொல்லொடு தொடர்தற்கேற்கும். எ-று.

உ-ம். ஒருவர் வந்தார்; ஒருவரவர் என வரும்.

ஒருமைப்பெயர் பன்மை கொள்ளாதாயினும், இது வழுவமைதியிலக்கணமென்பதறிவித்தற்குத் தன்மை சுட்டினென்ருர். (௬அ)

கசுரு. இன்ன பெயரோ யிவையெனல் வேண்டின் முன்னஞ் சேர்த்தி முறையி னுணர்தல்.

இ-ள். நீயிர் நீ ஒருவரொன்பனவற்றை இன்னபாற்பெயரொன்றறியலுறின், சொல்லுவான் குறிப்பொடு கூட்டி முறையானுணர்க. எ-று.

ஒருசாத்தன், ஒருவனும் ஒருத்தியானும் பலரானும் ஒன்றும் பலவானுந்தன்னுழைச் சென்றவழி, நீ வந்தாய்; நீயிர் வந்திர் என்னுமன்றே; ஆண்டது கேட்டான் இவனின்னபால் கருதிக்கூறினன் என்பதுணரும். இனி ஒருவரொருவரைச் சார்ந்தொழுகலாற்றின் என்றவழிச் சொல்லுவானொடு கேட்டான் இவனொருமை குறித்தானென விளங்கும். பிறவுமன்ன.

இனி இடமுங்காலமும்பற்றிப் பால் விளங்கும்வழியும் அறிந்துகொள்க.

ஏகாரம் தேற்றேகாரம்.

முறையினுணர்தலென்பது பாதுகாவல். (௬௧)

கசுச. மகடூ மருங்கிற் பாறிரி கிளவி மகடூ வியற்கை தொழில்வயி னான.

இனியொருசாருயர்திணைப்பெயர்க்கும் விரவுப்பெயர்க்கும் எஞ்சி நின்ற இலக்கணங்கூறுகின்ருர்.

இ-ள். மகடூப்பொருண்மைக்கண் பாறிரிந்து வரும் பெண்மகனென்னும் பெயர், வினை கொள்ளுமிடத்து, மகடூவிற்குரிய வினை கொள்ளும். எ-று.

உ-ம். பெண்மகன் வந்தாள் எனவரும்.

பொருண்மைபற்றி மகடூஉவினை கொள்ளுமோ ஈறுபற்றி ஆடூஉவினை கொள்ளுமோ என்றையுற்றார்க்கு ஐயமகற்றிய வாறு.

சிறப்புடைப்பொருளைத் தானினிது கிளத்தலென்பதனால் தொழில்வயினானவென்றாராகலின், சிறப்பில்லாப்பெயர்வயினும் பெண்மகனிவள் என மகடூவியற்கையாமென்பதாம்,

**கசூ௫. ஆவோ வாகும் பெயருமா ருளவே**
**யாயிட னறிதல் செய்யு ளுள்ளே.**

இ - ள். ஆகாரம் ஓகாரமாய்த் திரியும் பெயர்களுமுள; அத்திரியுமிடமறிக செய்யுளுள். எ-று.

உ - ம். 'வில்லோன் காலன கழலே;' 'தொடியோண் மெல்லடி மேலவுஞ் சிலம்பே;' 'நல்லோர் யார்கொ லளியா தாமே;' 'வேய்பயில் பழுவ முன்னி யோரோ.' எ-ம். 'கழனி நல்லூர் மகிழ்நர்க் கென்னிழை நெகிழப் பருவரல செப்பா தோயே.' எ-ம். ஆகாரம் ஓகாரமாய்த் திரிந்தவாறு கண்டுகொள்க.

ஆன், ஆள், ஆர், ஆய் என்னுமீற்றவாகிய பெயரல்லது, சேரமான், மலையமான் என்னுந்தொடக்கத்தன அவ்வாறு திரியாமையின், ஆயிடனறிதலென்றார். உழாஅன், கிழாஅன் என்பனவோவெனின்;— அவை அன்னீற்றுப்பெயர் ஒருமொழிப்புணர்ச்சியான் அவ்வாறு நின்றனவெனபது. ஆனீறாயவழி, உழவோன், கிழவோன் எனத் திரியுமாறறிக. (சுக)

**கசூசா. இறைச்சிப் பொருள்வயிற் செய்யுளுட் கிளக்கு**
**மியற்பெயர்க் கிளவி யுயர்திணை சுட்டா**
**நிலத்துவழி மருங்கிற் றோன்ற லான.**

இ - ள். செய்யுளுட்கருப்பொருண்மேற கிளக்கப்படும் இருதிணைக்குமுரிய பெயர் உயர்திணையுணர்த்தா; அவ்வவ்நிலத்துவழி அஃறிணைப்பொருளவாய் வழஙகப்பட்டு வருதலான். எ-று.

உ-ம். 'கடுவன் முதுமகன கல்லா மூலற்கு—வதுவை யயநத வன்பறழ்க் குமரி' என்புழி, கடுவன், மூலன், குமரியென

பன அஃறிணைப்பொருளவாயல்லது நிலத்துவழி மருங்கிற் றோன்றாமையின், உயர்திணை சுட்டாதவாறு கண்டுகொள்க.

நிலமாவது, முல்லை குறிஞ்சி மருத நெய்தலென்பன.

அஃதேல், இவை உயர்திணையுணர்த்தாவாயின் அஃறிணைப்பெயரேயாம்; ஆகவே, இச்சூத்திரம் வேண்டாம் பிறவெனின்;—அற்றன்று : கடுவன் மூலனென்பன அன்னீறு ஆண்மையுணர்த்துமன்றே; அஃறிணைப்பெயர் அவ்வீற்றான் அப்பொருளுணர்த்தாமையின், அவை விரவுப்பெயரேயாமென்பது. அலவன், கள்வனென்பனவொவெனின்;—அவை சாதிப்பெயரொனப்படுவதல்லது ஆண்மைப்பெயரொனப்படாவென்க. குமரியென்பது, வடமொழிச்சிதைவாய் வடமொழிப்பொருளே உணர்த்தலின், விரவுப்பெயரேயாம். (சஉ)

கசுஎ. திணையொடு பழகிய பெயரலங் கடையே.

இ - ள். கருப்பொருளுணர்த்தும் விரவுப்பெயர் உயர்திணை சுட்டாது அஃறிணை சுட்டுவது, அவ்வத்திணைக்குரியவாய் வழங்கப்பட்டு வரும் பெயரல்லாதவிடத்து. எ-று. எனவே, திணைக்குரியவாய் வழங்கப்பட்டு வரும் பெயர் இருதிணையுஞ்சுட்டி வருமென்பதாம்.

திணையொடு பழகிய விரவுப்பெயராவன காளை, விடலையென்னுந்தொடக்கத்தன.

உ - ம். 'செருமிகு முன்பிற் கூர்வேற் காளை.' எ-ம். 'திருந்துவேல் விடலையொடு வருமென தாயே.' எ-ம். உயர்திணை சுட்டி வந்தவாறு கண்டுகொள்க. இவை உயர்திணைப்பொருளன்றோவெனின்;—ஒருத்தையும் காளை விடலையென்பவாகலின், விரவுப்பெயரொனவேபடுமென்பது.

கடுவன், மூலன், குமரியென்பனவும் கருப்பொருளுணர்த்தலிற்றிணையொடு பழகிய பெயராம் பிறவெனின்;—அற்றன்று : விலங்கும் புள்ளுமுதலாகிய பொருள்வழியெல்லாம் அவற்றிற்குரிய பெயர் சொல்வதல்லது, பொருளுண்டாயினும், இந்நிலத்து இப்பொருள் இப்பெயரால் வழங்கப்படாவெ

ன்னும் வரையறையில்லை. தலைமக்கள் எந்நிலத்துமுளராயி னும், பாலைநிலத்துக் காளை மீளியென்னும் பெயர் செல்லா மருதநிலத்து; மகிழ்நன் ஊரனென்னும் பெயர் செல்லா பா லைநிலத்து. அதனாற்பொருள்வகையானன்றிப் பெயர் தந்தி ணைக்குரிமை பூண்டு நிற்றலின், அவற்றைத் திணையொடு பழ கிய பெயரொன்றாரொன்பது. (சாடு)

பெயரியன் முற்றிற்று.

---

## ஆறாவது
## வினையியல்.

**கசூஅ. வினையெனப்படுவதுவேற்றுமைகொள்ளாது நினையுங் காலைக் காலமொடு தோன்றும்.**

நிறுத்த முறையானே வினைச்சொல்லாமாறுணர்த்தியவெ டுத்துக்கொண்டார். அதனானிவ்வோத்து வினையியலென்னும் பெயர்த்தாயிற்று.

இச்சூத்திரத்தின் பொருள். வினையென்று சொல்லப்படுவ து வேற்றுமையொடு பொருந்தாது ஆராயுங்கால் காலத்தொ டு புலப்படும். எ-று.

ஈண்டு வேற்றுமையென்றது உருபை.

உ-ம். உண்டான், கரியன் என வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றியவாறு கண்டுகொள்க.

வேற்றுமை கொள்ளாதென்றது காலமொடு தோன்றுமெ னின் தொழினிலையொட்டுந்தொழிற்பெயரும் வினைச்சொல் லாவான் செல்லுமாகலானும், காலமொடு தோன்றுமென்ற து வேற்றுமை கொள்ளாதெனின் இடைச்சொல்லும் உரிச் சொல்லும் வினைச்சொல்லெனப்படுமாகலானும், அவ்விருதிற முநீக்குதற்கு வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்று மென்றார்.

வினைச்சொல்லுள் வெளிப்படக் காலம் விளக்காதனவுமு ள அவையும் ஆராயுங்காற் காலமுடையவென்றற்கு, நினையு ங்காலையென்றார். அவையிவையென்பது முன்னர்ச் சூத்திர த்தாற்பெறப்படும்.

உணர்த்தப்படும் வினைச்சொற்கெல்லாம் பொதுவிலக்க ணமுணர்த்தியவாறு. (க)

கசகக. காலந் தாமே மூன்றென மொழிப.

இ - ள். மேற்கூற்றுவாய் செய்யப்பட்ட காலம் மூன்றெ னறு சொல்லுவர் புலவர். எ-று.

தாமென்பது கட்டுரைச்சுவைபட நின்றது. (உ)

உ00. இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றா
வம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளு
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே.

இ - ள். இறப்பும், நிகழ்வும், எதிர்வும் என்று சொல்லப் படும அம்மூன்றுகாலமுங் குறிப்புவினையொடும் பொருந்து ம் மெய்ந்நிலைமையயுடைய, வினைச்சொல்லானவை தோன் றுநெறிக்கண். எ-று. எனவே, காலமூன்றாவன இறபபும் நிக ழவும் எதிாவுமென்பதூஉம், வெளிப்படக காலம் விளக்காத ன குறிப்புவினையென்பதூஉம, பெற்றாம்.

உ-ம். உண்டான், உண்ணாநின்றான், உண்பான் என வரும்.

இறப்பாவது தொழிலது கழிவு. நிகழவாவது தொழிறொ டங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை. எதிாவாவது தொழில் பிறவாமை. தொழிலாவது பொருளினது புடைபெயர்ச்சியா கலின், அஃதொருகண நிற்பதல்லது இரண்டுகணநில்லாமை யின், நிகழ்ச்சியென்பதொன்று அதற்கில்லையாயினும், உண் டல் தின்றலெனப் பஃறொழிற்றொகுதியை ஒருதொழிலாகக் கோடலின், உண்ணாநின்றான், வாராநின்றான் என நிகழ்ச்சி யுமுடைத்தாயிற்றெனபது.

வினைக்குறிப்புக் காலமொடு தோன்றுங்கால், பண்டு கரிய ன், இதுபொழுது கரியன் என இறந்தகாலமும் நிகழ்காலமு

ம் முறையானே பற்றி வருதலும், நாளைக்கரியனும் என எதிர்காலத்து ஆக்கமொடு வருதலும், அறிக.

மெய்ந்நிலையுடையவென்றது, விளங்கித் தோன்றுவாயினுங் காலம் வினைக்குறிப்பொடு கோடல் மெய்ம்மையென வலியுறுத்தவாறு. (௩)

உ0க. குறிப்பினும் வினையினு நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொ லெல்லா
முயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு
மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே.

பொதுவகையாற் கூறிய வினைச்சொல்லைச் சிறப்புவகையானுணர்த்தியவெடுத்துக்கொண்டார்.

இ - ள். குறிப்புப்பொருண்மைக்கண்ணுந் தொழிற்பொருண்மைக்கண்ணுந் தோன்றிக் காலத்தோடு வரும் எல்லா வினைச்சொல்லும், உயர்திணைக்குரியனவும் அஃறிணைக்குரியனவும் இரண்டுதிணைக்கும் ஒப்பவுரியனவுமென, மூன்றுகூற்றனவாம், தோன்றுநெறிக்கண். எ-று.

கரியன், செய்யன் என்புழித் தொழின்மை தெற்றென விளங்காது குறித்துக்கொள்ளப்படுதலிற் குறிப்பென்றார்.

உ - ம். உண்டான், கரியன்; சென்றது, செய்யது; வந்தனை, வெளியை எனவரும்.

"குறிப்பொடுங்கொள்ளும்"என மேற்குறிப்பினைபுபட்டு நிற்றலிற் குறிப்பினும் வினையினுமென்றார்.

முன் ஈறுபற்றி உணர்த்தப்படும் வினைச்சொற்களை, இஃது இறந்தகாலத்திற்குரித்து, இஃது நிகழ்காலத்திற்குரித்து, இஃதெதிர்காலத்திற்குரித்து என வழக்கு நோக்கி, உணர்ந்துகொள்கவென்பது விளக்கிய, காலமொடு வரூஉமென்றார்.

வினைச்சொற்காலமுணர்த்துங்காற் சிலநெறிப்பாடுடையவென்பது விளக்கிய, நெறிப்படத்தோன்றியென்றார். நெறிப்பாடாவது அவ்வீற்றுமிசை நிற்கும் எழுத்துவேறுபாடு.

துவை முற்றவுணர்த்தலாகாவாயினும், அவ்வீறுணர்ததும்வ ழிச் சிறிய சொல்லுதும். (சு)

உ0உ. அவைதாம்,

அம்மா மெம்மே மென்னுங் கிளவியு
மும்மொடு வரூஉங் கடதற வென்னு
மந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே.

நிறுத்த முறையானே உயர்திணைவினையாமாறுணர்த்துகின் றார். அவைதாம் இருவகைய; தன்மைவினையும் படர்க்கைவி னையுமென. தன்மைவினையும் இருவகைத்து; பன்மைத்தன் மையும் ஒருமைத்தன்மையுமென. தனித்தன்மையும் உளப் பாட்டுத்தன்மையுமெனினுமமையும். இச்சூத்திரத்தாற்பன் மைத்தன்மையுணர்த்துகின்றார்.

இ - ள். மேன் மூவகையவெனப்பட்ட வினைச்சொற்றும், அம் ஆம் எம் ஏம் என்னுமீற்றவாகிய சொல்லும், உம்மொடு வரூஉங் கடதறவாகிய கும்மும் டும்மும் தும்மும் றும்மும் என்னுமீற்றவாகிய சொல்லுமென, அவ்வெட்டும் பன்மையு ணர்த்துந்தனமைச்சொல்லாம். எ-று.

தனக்கு ஒருமையல்லதின்மையிற் றன்மைப்பன்மையாவ து தன்னொடு பிறரை உளப்படுத்ததேயாம். அவ்வுளப்படுத்த ன்மூவகைப்படும்; முன்னின்றாரை உளப்படுத்தலும், படர்க் கையாரை உளப்படுத்தலும், அவ்விருவரையும் ஒருங்குளப்ப டுத்தலுமென.

அம் ஆம் என்பன முன்னின்றாரை உளப்படுக்கும்; தமராய வழிப் படர்க்கையாரையும் உளப்படுக்கும். எம் ஏம் என்ப ன படர்க்கையாரை உளப்படுக்கும். உம்மொடு வரூஉங்கடத ற அவ்விருவரையும் ஒருங்குளப்படுத்தலுந் தனித்தனியுளப் படுத்தலுமுடைய.

ஈண்டும் அவைதாமென்பதற்கு முடிபு "அவைதாம் இ உ ஐ ஓ" என்புழி உரைத்தாங்குரைக்க.

அம், ஆம், எம், ஏம் என்பன மூன்றுகாலமும்பற்றி வரும். உம்மொடு வரூஉங்கடதற எதிர்காலம்பற்றி வரும்.

முன்னின்ற நான்கிறும் இறந்தகாலம்பற்றி வருங்கால், அம்மும் எம்மும் கடதறவென்னுநான்கன்முன் அன் பெற்று வரும். எம் அன் பெற்றும் பெறாதும் வரும். ஆம் அன் பெறாது வரும். உ - ம். நக்கனம், நக்கனெம்; உண்டனம், உண்டனெம்; உரைத்தனம், உரைத்தனெம்; தின்றனம், தின்றனெம். எ-ம். நக்கனேம், நக்கேம்; உண்டனேம், உண்டேம்; உரைத்தனேம், உரைத்தேம்; தின்றனேம், தின்றேம். எ-ம். நக்காம், உண்டாம், உரைத்தாம், தின்றாம். எ-ம். வரும்.

அந்நான்கிறும் ஏனையெழுத்தின்முன் ஙகாரமும் ழகாரமுமொழித்து இன் பெற்று வரும். உ - ம். அஞ்சினம், அஞ்சினாம்; அஞ்சினெம், அஞ்சினேம்; உரிஞினம், உரிஞினாம்; உரிஞினெம், உரிஞினேம் என வரும். பிறவெழுத்தோடுமொட்டிக்கொள்க. கலக்கினம், தெருட்டினம் என்னுந்தொடக்கத்தன குற்றுகரவீறுகலான், அதுவும் ஏனையெழுத்தேயாம்.

இனி அவை நிகழ்காலம்பற்றி வருங்கால், நில், கின்று என்பனவற்றோடு வரும். நில்லென்பது லகாரம் னகாரமாய் றகாரம் பெற்று நிற்கும். உ - ம். உண்ணாநின்றனம், உண்கின்றனம்; உண்ணாநின்றாம், உண்கின்றாம்; உண்ணாநின்றனெம், உண்கின்றனெம்; உண்ணாநின்றேம், உண்கின்றேம்; உண்ணாநின்றனேம், உண்கின்றனேம் என வரும். ஈண்டன்பெற்ற விகற்பம் இறந்தகாலத்திற்கூறியவாறே கொள்க.

உண்ணாகிடந்தனம், உண்ணாவிருந்தனம் எனக் கிட இரு என்பனவுஞ் சிறுபான்மை நிகழ்காலத்து வரும்.

நிகழ்காலத்திற்கு உரித்தென்ற நில்லென்பது, உண்ணாநிற்கும், உண்ணாநிற்பல் எனவெதிர்காலத்தும், வந்ததாலெனின்;—அற்றன்று: பண்டொருநாளிச்சோலைக்கண் விளையாடாநின்றேன் அந்நேரத்தொருதோன்றல் வந்தான் என்றவழி, அஃதிறந்தகாலத்து நிகழ்வுபற்றி வந்தாற்போல, ஆண்டெதி

ர்காலத்தது நிகழ்வுபற்றி வருதலான், ஆண்டும் அது நிகழ் காலத்திற்றீர்ந்தினறென்க.

அவை எதிர்காலம்பற்றி வருங்காற் பகரமும் வகரமும் பெற்று வரும். வசரமேற்புழிக் குகரமும் உகரமும் அடுத்து நிற்கும். உ - ம். உணாப்பம், செல்வம்; உண்குவம், உரிஞு வம் என வரும். ஒழிந்தவீற்றோடுமொட்டிக்கொள்க. பாடு கம், செல்கம் என ஏற்புழிச் சிறுபான்மை ககரவொற்றுப் பெறுதலுங்கொள்க.

உம்மொடு வரூஉங்கடதற—உண்கும், உண்டும், வருதும், சேறும் என வரும். உரிஞுதும், திருமுதும் என ஏற்புழி உக ரம் பெற்று வரும்.

கும்மீறு, வினை கொண்டு முடிதலின், ஒழிந்த உம்மீற்றின் வேறெனவேபடும். ட த றவென்பன, எதிர்காலத்திற்குரிய எழுத்தன்மையால், பாலுணர்த்தும் இடைச்சொற்கு உறுப் பாய் வந்தனவெனவேபடும். படவே, அவற்றை உறுப்பாகவு டைய ஈறு மூன்றும்; அதனுன் உம்மென ஓரீறாகவடக்கலா காமையின், அந்நாற்கிளவியொடென்றார். (ரு)

உ0சு. கடதற வென்னு,
மந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ
டென்னே னல்லென வரூஉ மேழுந்
தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே.

இ - ள். கடதறவென்னுநான்குமெய்யையூர்ந்து வருங்கு ற்றியலுகரத்தை ஈறாகவுடைய சொல்லும், என் ஏன் அல்லெ ன்னுமீற்றவாகிய சொல்லுமென அவ்வேழும், ஒருமையுணர் த்துந்தன்மைச்சொல்லாம். எ-று.

குற்றுகரநான்கும், அல்லும், எதிர்காலம்பற்றி வரும். குற் றுகரம், காலவெழுத்துப் பெறுங்கால், உமமீற்றோடொக்கும். அல்லீறு பகரமும் வகரமும் பெற்று வரும். என ஏன் என் பன மூன்றுகாலமும் பற்றி வரும்.

உ - ம். உண்கு, உண்டு, வருது, சேறு. எ-ம். உரினுகு, இருமுகு. எ-ம். உண்டனென், உண்ணாநின்றனென், உண்குவென். எ-ம். உண்டேன், உண்ணாநின்றேன், உண்பேன். எ-ம். உண்பல், வருவல். எ-ம். வரும்.

காலவெழுத்தடுத்தற்கண் எம்மீற்ருேடு என்னீறும், ஏமீற்ருேடு ஏனீறுமொக்கும். ஆண்டுக் கூறிய விகற்பமெல்லாம் அறிந்தொட்டிக்கொள்க.

குற்றியலுகரமென ஒன்ருகாது நான்காதற்கு முன்னுரைத்தாங்குரைக்க.

எதிர்காலம்பற்றி வழக்குப்பயிற்சியுமில்லாக் குற்றுகரத்தை, அங்ஙனம் வரும் அல்லோடு பின் வையாது, மூன்றுகாலமும்பற்றிப் பயின்று வரும் என் ஏன் என்பனவற்றின் முன் உம்மீற்ருேடியைய வைத்தது, செய்கென்பதுபோலச் செய்குமென்பதூஉங் காண்கும் வந்தேம் என வினை கொண்டு முடியுமென்பதறிவித்தற்கெனக் கொள்க. (௯)

உ0௪. அவற்றுள்,

செய்கென் கிளவி வினையொடு முடியினு
மவ்விய றிரியா தென்மனார் புலவர்.

இ - ள். மேற்கூறப்பட்ட ஒருமைத்தன்மைவினையேழனுள், செய்கென்னுஞ்சொல், வினையொடு முடியுமாயினும், முற்றுச்சொல்லாதலிற்றிரியாது. எ-று.

உ - ம். காண்கு வந்தேன் என வரும்.

செய்கென்கிளவியவ்வியறிரியாதெனவே, 'பெயர்த்தனென் முயங்கயான்.' எ-ம். 'தங்கினை சென்மோ.' எ-ம். 'மோயினளுயிர்த்த காலை.' எ-ம். ஏனைமுற்றுச்சொல் வினைகொள்ளுங்கால் அவ்வியறிரியுமென்பதாம். அவை திரிந்தவழி வினையெச்சமாதல் "வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" என்புழிப் பெறப்படும்.

இருசாரனவும் பெயர் கொள்ளாது வினை கொண்டவழிச் செய்கென்கிளவி திரியாதென்றும் ஏனைய திரியுமென்றுங்கூ

தியகருத்தென்னையெனின்;—நன்று சொன்னாய்: காண்குவந் தேன என்றவழிச் செய்தென்கிளவி வினையெச்சமாய்த் திரிந் ததாயிற் செயதெனெச்சமாதற்கேலாமையின், செயவெனெ ச்சமாய்த் திரிந்ததெனல்வேண்டும். வேண்டவே, செயவெ னெச்சத்திற்குரிய வினைமுதல்வினையும் பிறவினையும் அது கொள்வான் செல்லும்; வினைமுதல்வினையல்லது கொள்ளா மையிற் செயவெனெச்சமாய்த் திரிந்ததெனறல் பொருந்தா து. பிறிதாறின்மையின, முற்றுச்சொலலாய் நின்றதெனவே படும். அதனான் அவ்வியறிரியாதென்றாரெனபது. அல்ல தூஉம், செய்கென்கிளவி பெயர்கொள்ளும் பான்மையல்லது பெயர்கொள் ளாமையின், பெரும்பான்மையாகிய வினைகோடல்அதற்கியல் பேயாம்; ஆகவே, அது திரிந்து வினை கொள்ளுமெனல்வேண் டாவாம்; அதனானும் முற்றாய் நின்று வினை கொண்டதென் றலே முறைமையென்றுணர்க. "முற்றுச் சொற்கும் வினை யொடு முடியினு—முற்றுச்சொலென்னு முறைமையி னிற வா" என்றார் பிறருமெனக் கொளக.

'பெயர்த்தனென்முயங்க' என்னுந்தொடக்கத்தன இறந்த காலமுணர்த்தலிற் செய்தெனெச்சமாதறகேற்புடைமையா ன், அவற்றைத் திரியென்றார்.

முன்னர் "எத்திறத் தானும் பெயர்முடி பினவே" என்பத னாற் பெயரொடு முடிதலெய்துவதனை விலக்கியவாறு. (எ)

உ0ரு. அன் ஆன் அள் ஆ ளென்னு நான்கு
மொருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

தன்மைவினையுணர்த்தி, இனியுயர்திணைப்படர்க்கைவினையு ணர்த்துகின்றார்.

இ - ள். அன், ஆன், அள், ஆள் என்னுமீற்றையுடைய நா ன்குசொல்லும் உயர்திணையொருமையுணாத்தும் படர்க்கை ச்சொல்லாம். எ-று.

இவை நான்கீறும் மூன்றுகாலமும்பற்றி வரும்.

உ - ம். உண்டனன், உண்ணாநின்றனன, உண்பன். எ-ம். உண்டான், உண்ணாநின்றான், உண்பான். எ-ம். உண்டனள்,

உண்ணாநின்றனள், உண்பள். எ-ம். உண்டாள், உண்ணாநின்ருள், உண்பாள். எ-ம். வரும்.

காலத்துக்கேற்ற எழுத்துப்பெறுங்கால், அன்னும் அள்ளும் அம்மீற்ரோடும், ஆனும் ஆளும் ஆமீற்ரோடுமொக்கும். அவ் வேறுபாடெல்லாமறிந்தொட்டிக்கொள்க. (அ)

உ0சு. ஆர் ஆர் ப என வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

இ - ள். அர் ஆர் ப என்னுமீற்றையுடையவாய் வருமூன்று சொல்லும் பல்லோரையுணர்த்தும் படர்க்கைச்சொல்லாம். எ-று.

ரகாரவீறு இரண்டும் மூன்றுகாலமும் பற்றி வரும்; பகாரம் எதிர்காலம்பற்றி வரும்.

உ - ம். உண்டனர், உண்ணாநின்றனர், உண்பர். எ-ம். உண்டார், உண்ணாநின்ருர், உண்பார். எ-ம். உண்ப. எ-ம். வரும்.

அன்னீற்றிற்குரிய காலவெழுத்து அர் ஈற்றிற்கும், ஆனீற்றிற்குரிய காலவெழுத்து ஆரீற்றிற்குமுரிய.

பகரம் உகரம் பெற்றும் பெருதும், உரிஞுப, உண்ப என வரும். வருகுப எனச் சிறுபான்மை குகரமும் பெறும். இவ் வேறுபாடு ஏற்புழியறிந்தொட்டிக்கொள்க. (கூ)

உ0எ. மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியு மென்ப.

இ - ள். முன்னையனவேயன்றி மாரீற்றுச்சொல்லும் பல்லோர்படர்க்கையையுணர்த்தும்; அஃது அவைபோலப் பெயர் கொள்ளாது வினை கொண்டு முடியும். எ-று.

பகரத்திற்குரிய காலவெழுத்து மாரைக்கிளவிக்குமொக்கும்.

உ - ம். எள்ளுமார் வந்தார், கொண்மார் வந்தார் என வரும். குகரம் வந்தவழிக் கண்டுகொள்க.

மாரைக்கிளவி வினையோடல்லது பெயரோடு முடியாமை யின், எச்சமாய்த் திரிந்து வினை கொண்டதெனப்படாமை யறிக. அஃதேல், 'பீடின்று பெருகிய திருவிற்—பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே.' எ-ம். 'காமம் படாஅ வருந்தி ய—நோய்மலி வருத்தங் காணன்மா ரெமரே.' எ-ம். மாரீ ற்றுச்சொற்பெயர் கொண்டு வந்தனவாலெனின்;—அவை பாடுவார் காண்பார் என்னும் ஆரீற்றுமுற்றுச்சொல்லின் எதிர் மறையாய் ஒருமொழிப்புணர்ச்சியான் மகரம் பெற்று நின் றன. மாரீறுயின், அவை பாடாதொழிவார், காணுதொழிவா ர் என ஏவற்பொருண்மையுணர்த்துமாறில்லையென்க., (கo)

உoஅ. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வந்நா லைந்து மூன்றுதலை யிட்ட
முன்னுறக் கிளந்த வுயர்திணை யவ்வே.

இ-ள். பன்மையும் ஒருமையுமாகிய பாலுணர வந்த இருபத்துமூன்றீற்றுவினைச்சொல்லும் முன்னுறக் கிளக்கப்பட்ட உயர்திணையுடையன. எ-று.

ஈண்டுக் கூறிய படர்க்கைவினையே கிளவியாக்கத்துட்கூற ப்பட்டன, அவை வேறல்லவென்பார், முன்னுறக்கிளந்தவெ ன்றார். அதனாற்பயன், அன் ஆன் அள் ஆளென்பன ஆண் பால் பெண்பாலுணர்த்துதல் ஈண்டுப் பெறுதலும், னஃகா னொற்று முதலாயின படர்க்கைவினைக்கீறாய் நின்று பாலுண ர்த்துதல் ஆண்டுப் பெறுதலுமாம். அஃதேல், முற்றுப்பெற ஓரிடத்துக் கூறவமையும் ஈரிடத்துக் கூறிப் பயந்ததென்னை யெனின்;—பாலுணர்த்தும் இடைச்சொற்பற்றி உயர்திணைப் படர்க்கை வினையுணர்த்துதல் ஈண்டுக் கூறியதனாற் பயன்; ஆண்டுக் கூறியதனாற்பயன் வழுக்காத்தற்கு இவற்றைத் தொகுத்திலக்கண வழக்குணர்த்துதலாமென்க. பெயரியலோக்கி ப் "பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்" என்றாற்போல, வினையியலோக்கி, "வினையிற் றோன்றும் பாலறி கிளவியு—மயங்கல் கூடா" எனவமையும்; ஆண்டுக் கூறல்வேண்டாவெனி ன்;—அற்றன்று: இருதிணையைம்பாற்சொலுணர்த்தாக்கால்,

திணைபால்பற்றி வழுவற்கவெனவும் வழீஇயமைகவெனவும் வழுக்காத்த சூத்திரங்களெல்லாவற்றானும் பொருளினிது விளங்காமையானும், வினையுள்ளுந்திரிபின்றிப் பால் விளக்கு தற்சிறப்புடையன படர்க்கைவினையேயாகலானும், அவற்றைப் பிரித்து ஆண்டுக் கூறினாரென்பது. படர்க்கைப் பெயர்போந் திரிபின்றிப் பாலுணர்த்தாமையின், இலக்கணவெழுத்தோடு கூறாது, எதிரது நோக்கிக் கொள்ள வைத்தாரென்க.

மூன்றுதலையிட்டவந்நாலைந்துமாவன இவையென இனிது விளங்கப் பன்மையுமொருமையும்பாலறிவந்தவென்றார்.

இதனாற்பயன், உயர்திணைவினை மூன்றுதலையிட்ட நாலைந் தென்னும் வரையறை. (கச)

உ0௬. அவற்றுள்,

பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி
யெண்ணியன் மருங்கிற் றிரிபவை யுளவே.

இ - ள். கூறப்பட்ட இருபத்துமூன்று சொற்களுள், பன்மையுணர்த்துந்தன்மைச்சொல் எண்ணியலும்வழி அஃறிணையையுளப்படுத்துத் திரிவனவுள. எ-று.

உ - ம். யானுமென்னெஃகமுஞ்சாறும் என வரும்.

தன்மைப்பன்மைவினைச்சொல், உயர்திணைவினையாகலின், உயர்திணையே உளப்படுத்தற்பாலன; அஃறிணையை உளப்படுத்தல் வழுவாயினும் அமைகவென்பார், திரிபவையுளவென்றார். அதனான் இச்சூத்திரத்தை "முன்னுறக் கிளந்த வுயர்திணை யவ்வே" என்னுஞ்சூத்திரத்தின் பின் வைத்தார்.

திரியுமென்னாது திரிபவையுளவென்றதனான், எல்லாந்திரியா சிலவே திரிவனவெனபதாம். (கஉ)

உக0. யாஅ ரென்னும் வினாவின் கிளவி
யத்திணை மருங்கின் முப்பாற்கு முரித்தே.

இ - ள். யாரென்னும் வினாப்பொருளையுணர்த்துஞ்சொல் உயர்திணைமருங்கின் முப்பாற்குமுரித்து. எ-று.

உ-ம். அவன் யார்; அவள் யார்; அவர் யார் என வரும்.

'ஊதைகூட் டுண்ணு முகுபனி யாமத்தெங் - கோதைகூட் டுண்ணிய தான்யார்மன் - போதெலாந் - தாதோடு தாழுந் தார்க் கச்சி வளநாடன் - றூதோடு வாராத வண்டு' என்புழி, வண்டுதான் யார் என யாரெனபது அஃறிணைககண்ணும் வநததாலெனின்;—அது திணைவழுவமைதியெனப்படும்.

இது வினைக்குறிபபாயினும், பலலோர்படர்க்கையுணர்த்தும் மாரீறறின் மூன்றுபாலுணர்ததும் வேறுபாடுடைமையின், அவற்றொடு வையாது ஈண்டு வைத்தார்.

செய்யுளின்பநோக்கி அளபெழுந்து நின்றது.

வினாவினகிளவியென அதன்பொருளுணர்ததியவாறு. (கங)

உகக. பாலறி மரபி னம்மூ வீற்று
மாவோ வாகுஞ் செய்யு ளுள்ளே.

இ-ள். பால் விளங்க வருமியல்பையுடைய அம்மூன்றீற்றின்கண்ணும் ஆகாரம் ஓகாரமாகுஞ் செய்யுளிடத்து. எ-று.

பாலறிமரபினென்றதனால், பாலுணர்ததுதற்கட்டிரிபுடைய ஆயீறு விலக்குண்ணும். மார் சிறுவழக்கிற்றாகலானும், ஆகாரம் ஓகாரமாதறகேலாமையானும், அம்மூவீறாவன ஆன ஆள் ஆர் என்பனவேயாம்.

உ-ம். 'வினவிநிற்றந்தோனே' 'நல்லை மன்னென நகூஉப் பெயர்ந் தோளே;' 'பாசிலை வாடா வள்ளியங் காடிறந் தோரோ' என ஆகாரம ஓகாரமாய்த் திரிநதவாறு கண்டுகொள்க.

வநதோம், சென்றோம் என வழககினுள் வருவனவோவெனின;—அவை ஏமீறறின் சிதைவென மறுக்க. (கச)

உகஉ. ஆயென் கிளவியு மவற்றொடு கொள்ளும்.

இ-ள். முன்னிலையீற்றுள், ஆயென்னுமீறு மேற்கூறபபட்டனபோல ஆகாரம் ஓகாரமாஞ்செய்யுளுள். எ-று.

உ-ம். 'வநதோய் மன்ற தெணகடற சோப்ப' என வரும்.

கூறப்பட்ட நான்கிற்றுத்தொழிற்பெயரும் ஆகாரம் ஓகாரமாதல் பெயரியலுட்கொள்ளப்படும்.

ஆவென்கிளவி ஆவோவாவது பெரும்பான்மையும் உயர்திணைக்கண் வந்தவழியென்பதறிவித்தற்கு, முன்னிலையதிகாரத்துக் கூறாது ஈண்டுக் கூறினார்.

அவற்றொடு கொள்ளுமென்றது அவற்றோடொக்குமென்றவாறு. (கரு)

உகஙு. அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானுங்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானு
மொப்பி னானும் பண்பி னானுமென்
றப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும்.

இ - ள். ஆறாம்வேற்றுமையது உடைமைப்பொருட்கண்ணும், ஏழாம்வேற்றுமையது நிலப்பொருட்கண்ணும், ஒப்பின் கண்ணும், பண்பின்கண்ணுமென அப்பகுதிக்காலங்குறிப்பாற்றோன்றும். எ-று.

அப்பகுதிக்காலமாவது அப்பொருட்பகுதிபற்றி வருஞ்சொல்லகத்துக் காலமாம்.

அப்பகுதிக்காலங்குறிப்பாற்றோன்றுமெனவே, அப்பொருள்பற்றி வினைக்குறிப்பு வருமென்றவாறாம்.

உடையானது உடைமைத்தன்மையேயன்றி உடைப்பொருளும் உடைமையெனப்படுதலின், உடைமையானுமென்பதற்கு உடைப்பொருட்கண்ணுமெனவுமுரைக்க. உரைக்கவே, உடைப்பொருட்கண் வருங்கால், உடைப்பொருட்சொல்லாகிய முதனிலைபற்றி வருதலும் பெறப்படும். கருமையனென்பது உடைமைப்பொருளாயடங்கலின், பண்பினானும் என்புழிக் கரியனென இன்னனென்பது பட வருதலே கொள்க. வாளாது உடைமையானும் என்றவழி "அன்மையின்" என்பதுபோல அவ்வொருவாய்பாடேபற்றி நிற்கும். இதனை இஃதுடைத்தென்பது பட வரும் எல்லாவாய்பாடுந்தழுவுதற்கு அதுச்சொல்வேற்றுமையுடைமையானுமென்றார். கண்ணென்வே

ற்றுமைநிலத்திறனுமென்பதற்கும் ஈதொக்கும். ஆயின், இஃ திரண்டாம்வேற்றுமைப்பொருளாமெனின்; — ஆண்டுடை மை உருபு நோக்கிய சொல்லாய் வருவதல்லது இரண்டாம் வேற்றுமைப்பொருளெனப்படாது. என்னை? அது செயப்படு பொருண்மைத்தாகலின். அதனுன் உடைமை ஆறுவதன்பொ ருளெனவேபடுமென்பது.

உ-ம். கச்சினன், கழலினன். எ-ம். இல்லத்தன், புறத்தன் எ-ம். பொன்னன்னன், புலிபோல்வன். எ-ம். கரியன், செய்யன். எ-ம். வரும்.

கச்சினன், இல்லத்தான் எனப் பெயருங் குறிப்பாற் கா லம் விளக்கலின், அப்பாற்காலங் குறிப்பொடு தோன்றுமென் றதனுன் வினைக்குறிப்பென்பது பெறுமாறென்னையெனின்;— "தொழினிலை யொட்டு மொன்றலங்கடை", எனத் தொழிற் பெயரல்லன காலந்தோன்றுவென்றமையால், கச்சினன் இல் லத்தானென்பன காலம் விளக்காமையின், குறிப்பாற்காலம் விளக்குவன வினைக்குறிப்பாதல்பெறுதும். அல்லதூஉம், வினை க்குறிப்பும் காலந்தோன்றுதலை இலக்கணமாகவுடைய வினைச் சொல்லேயாதலின், தெற்றென விளக்காவாயினுங் காலமு டையவெனவேபடும். பெயர்க்கு அனனதோரிலக்கணமின்மை யின், காலநதெறறென விளககுவன உளவேற் கொள்வதல்ல து, காலம் விளக்காத பெயருங் காலமுடையவென உய்த்து ணருமாறில்லை. அதனுனுங்குறிப்பாற்காலமுணர்த்துவன வி னைக்குறிப்பேயென்பது பெறப்படுமென்க.

தன்வினைமுடித்தலென்பதனுன், ஐயாட்டையன், துணங் கையன் எனச் சிறுபான்மை காலமும் வினைசெய்யிடமும் பற்றி வருவனவுங்கொள்க. (கரு)

உகச. அன்மையி னின்மையி னுண்மையின் வன்மையி
னன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளு
மென்ன கிளவியுங் குறிப்பே காலம்.

இ-ள். அன்மை இன்மை உண்மை வன்மையென்னும் பொருள்பறறி வருவனவும், அவை போல்வன பிறவும், குறிப்

புப்பொருண்மையோடு பொருந்தும் எல்லாச்சொல்லுங் காலங் குறிப்பானுணரப்படும். எ-று.

காலங்குறிப்பானுணரப்படுமெனவே, இவையும் வினைக்குறிப்பாமென்றவாறும்.

உ-ம். அல்லன், அல்லள், அல்லர். எ-ம். இலன், இலள், இலர். எ-ம். உளன், உளள், உளர். எ-ம். வல்லன், வல்லள், வல்லர். எ-ம். வரும்.

பொதுப்படக் கூறியவதனான், பொருளிலன், பொருளிலள், பொருளிலர் என உடைமைக்கு மறுதலையாகிய இன்மையுங்கொள்ளப்படும்.

இவை ஒருவாய்பாடேபற்றிப் பிறத்தலின், வேறு கூறினார்.

பண்போடு இவற்றிடை வேற்றுமையென்னையெனின்;—இன்மை, பொருட்கு மறுதலையாகலின்,பொருளின்கட்கிடக்கும் பண்பெனப்படாது. அன்மையும் உண்மையும் பண்பிற்கொத்தலிற் பண்பெனப்படா. என்னை? குணத்திற்குக் குணமின்மையின். வன்மை ஆற்றல்; அதுவுங்குணத்திற்குமுண்டாகலிற் குணமெனப்படாது. உளதெனின், அது பண்பாயடங்கும். அதனாற் பொருட்கட்கிடந்து தனக்கோர்குணமின்றித் தொழிலின் வேறாய குணத்தின் அன்மை முதலாயின வேறெனப்படும். பணபெனினுங்குணமெனினுமொக்கும். இக்கருத்தேபற்றியன்றே, ஆசிரியர் இன்மையும் உண்மையுமுணர்த்துஞ்சொற்களை முடிப்பாராயிற்றென்பது.

என்னகிளவியுமென்றது அன்னபிறவுமெனப்பட்டவற்றையேயாகக் கொள்க.

குறிப்பேகாலம் என்றவழிக் குறிப்பென்றது குறிக்கப்படுவதனை.

அன்னபிறவுமென்றதனான், நல்லன், நல்லள், நல்லர்; தீயன், தீயள், தீயர்; உடையன், உடையள், உடையா எனவித் தொடக்கத்தனவெல்லாங்கொள்க. (கஎ)

உகரு. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வன்ன மரபிற் குறிப்பொடு வருஉங்
காலக் கிளவி யுயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

இ - ள். பன்மையும் ஒருமையுமாகிய பால் விளக்கிக் குறிப்புப்பொருண்மையுடையவாய் வரும் வினைச்சொல், மேல் வருமுயர்திணைக்கட்கூறிய தெரிநிலைவினையோடொக்கும். எ-று.

தெரிநிலைவினையோடொத்தலாவது, உயர்திணைத்தெரிநிலைவினைக்கோதிய ஈற்றுள் தமக்கேற்பனவற்றோடு வினைக்குறிப்பு வந்தவழி, அவ்வவ்விற்றான் அவ்வப்பாலும் இடமும் விளக்கலாம்.

மேல் வினைக்குறிப்பு இன்னபொருள்பற்றி வருமென்றதல்லது இன்னவீற்றான் இன்னபால் விளக்குமென்றிலர்; அதனான் அஃதீண்டுக் கூறினார்.

கூறப்பட்ட பொருட்கண் வந்தனவாயினும், இல்லை, இல், இன்றி என்பன பால் விளக்காமையின், அவற்றை நீக்குதற்குப் பன்மையுமொருமையும்பாலறிவந்தவென்றார்.

ஒருபொருட்கட்பலவாய்பாடும் ஒருபொருட்கண் ஒருவாய்பாடும் பற்றி வரும் இருதிறமும் எஞ்சாமற்றழுவுதற்கு, அன்னமரபினென்றார்.

தன்மையும் படர்க்கையும் உணர்த்துந்தெரிநிலைவினையீற்றுட்குறிப்புவினைக்கேற்பன:—அம், ஆம், எம், ஏம், என், ஏன் என்னுந்தன்மையீறாறும், அன், ஆன், அள், ஆள், அர், ஆர் என்னும் படர்க்கையீறாறும் எனப் பன்னிரண்டாம்.

உ - ம். கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியென், கரியேன். எ-ம். கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார். எ-ம். அவ்வவ்வீறு அவ்வவ்விடமும் பாலும் விளக்கியவாறு கண்டுகொள்க. ஒழிந்தபொருட்கண்ணுமொட்டிக்கொள்க.

ஆன், ஆள், ஆர் என்பன நிலப்பொருண்மைக்கணல்லது பிறபொருட்கட்பயின்று வாரா.

இன்னும், மேலைக் கிளவியொடு வேறுபா டிலவென்றதனுன், வந்தனன் எனத் தெரிநிலைவினை தொழின்மை மேற்படத் தொழிலுடைப்பொருள் கீழ்ப்பட முற்றாய் நின்றுணர்த்தியவாறு போல, உடையன் எனக் குறிப்புவினையும் உடைமை மேற்பட உடையான் கீழ்ப்பட முற்றாய் நின்றுணர்த்துதலுங்கொள்க. வந்தான், உடையான் எனப் பெயராயவழித் தொழிலுடைப்பொருளும் உடையானும் மேற்பட்டுத் தோன்றுமாறறிக. இஃது "அஃறிணை மருங்கின்—மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே" என்பதற்குமொக்கும். (கஅ)

உகசு. அ ஆ வ என வரூஉ மிறுதி
யப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை.

உயர்திணைவினையுணர்த்தி, இனியஃறிணைவினையுணர்த்துகின்றார்.

இ - ள். அகரமும் ஆகாரமும் வகரவுயிர்மெய்யுமாகிய ஈற்றையுடைய அக்கூற்றுமூன்றும் அஃறிணைப்பன்மைப்படர்க்கையாம். எ-று.

அகரம் மூன்றுகாலமும்பற்றி வரும். ஆகாரம், எதிர்மறைவினையாய் மூன்றுகாலத்திற்கும் உரித்தாயினும், எதிர்காலத்துப் பயின்று வரும். அகரம், இறந்தகாலம்பற்றி வருங்கால், க ட த ற வென்னுநான்கன்முன், அன் பெற்றும், பெறாதும், வரும். ஏனையெழுத்தின்முன் ஙகார முகாரமொழித்து இன் பெற்று வரும். யகரத்தின்முன் சிறுபான்மை இன்னேயன்றி அன் பெற்றும் பெறாதும் வரும். நிகழ்காலத்தின்கண் நில், கின்றென்பனவற்றோடு அன் பெற்றும் பெறாதும் வரும். எதிர்காலத்தின்கண் பகர வகரத்தோடு அன் பெற்றும் பெறாதும் வரும்.

உ - ம். தொக்கன, தொக்க; உண்டன, உண்ட; வந்தன, வந்த; சென்றன, சென்ற. எ-ம். அஞ்சின, எ-ம். போயின,

போயன, போய. எ-ம். உண்ணாநின்றன, உண்ணாநின்ற; உண்கின்றன, உண்கின்ற. எ-ம். உண்பன, உண்ப; வருவன, வருவ. எ-ம். வரும். உரிஞுவன, உரிஞுவ என உகரத்தோடு ஏனையெழுத்துப்பேறும் ஏற்றவழிக் கொள்க.

வருவ, செல்வ என்னுந்தொடக்கத்தன அகரவீறுதலும், வகரவீறுதலுமுடையவென்பது கிளவியாக்கத்துட்கூறினாம்.

ஆகாரம் காலவெழுத்துப் பெறாது, உண்ணா, தின்னா என வரும். வகரம், உண்குவ, தின்குவ எனவெதிர்காலத்திற்குரித்தாய்க் குகரமடுத்தும், ஓடுவ, பாடுவ எனக் குகரமடாதும, வரும். உரிஞுவ, திருமுவ என உகரம் பெறுதலும் ஏற்றவழிக் கொள்க. ஒழிந்தவெழுத்தோடுமொட்டிக்கொள்க. (கக)

உகஎ. ஒன்றன் படர்க்கை தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

இ - ள். ஒன்றனையுணர்த்தும் படர்க்கைவினையாவது, தறடவென்பனவற்றை யூர்ந்து நின்ற குற்றியலுகரத்தை ஈறாகவுடைய சொல்லாம். எ-று.

தகரவுகரம் மூன்றுகாலத்திற்குமுரித்து. றகரவுகரம் இறந்தகாலத்திற்குரித்து. டகரவுகரம் மூன்றுகாலத்திற்குமுரிய வினைக்குறிப்பிற்கல்லது வாராது. அஃதேல், வினைக்குறிப்புக் கூறும்வழிக் கூறாது ஈண்டுக் கூறியதென்னையெனின்;— "அஃறிணை மருங்கின் மேலைக் கிளவியொடு வேறுபாடிலவே" என வினைக்குறிப்புப் பாலுணர்த்துமாறு தெரிநிலைவினையோடு மாட்டெறியப்படுமாகலின், டகரமூர்ந்த குற்றியலுகரம் தெரிநிலைவினைக்கீறாகாமையின், மாட்டேற்றுவகையாற் பாலுணர்த்துதல் பெறப்படாதாம்; அதனான் ஈண்டு வைத்தார்.

தகரவுகரம், இறந்தகாலத்து வருங்கால், புக்கது, உண்டது, வந்தது, சென்றது, போயது, உரிஞியது எனக் கடதறவும் யகரமுமாகிய உயிர்மெய்ப்பின் வரும். போனது என னகரவுயிர்மெய்ப்பின் வருவதோவெனின்;—அது சான்றோர்செய்யுளுள் வாராமையின், அது சிதைவெனப்படும். நிகழ்கால

த்தின்கண், நடவாநின்றது, நடக்கின்றது; உண்ணாநின்றது, உண்கின்றது என, நில், கின்றென்பனவற்றோடு அகரம் பெற்று வரும். எதிர்காலத்தின்கண், உண்பது, செல்வது எனப் பகரவகரம் பெற்று வரும்.

றகரவுகரம், புக்கன்று, உண்டன்று, வந்தன்று, சென்றன்று எனக் கடதறவென்பனவற்றின்முன் அன் பெற்று வரும். கூயின்று, கூயிற்று; போயின்று, போயிற்று என ஏனையெழுத்தின்முன் இன் பெற்று வரும். ஆண்டு இன்னின் னகரந் திரிந்துந் திரியாதும் வருதல் கொள்க. வந்தின்றென்பதோவெனின்;—அஃது எதிர்மறுத்தலையுணர்த்துதற்கு வந்த இல்லினது லகரம் னகரமாய்த் திரிந்த எதிர்மறைவினையென மறுக்க. அஃதெதிர்மறையாதல், வந்தில, வந்திலன், வந்திலள் வந்திலர் என வரும் ஏனைப்பாற்சொல்லானறிக.

டகரவுகரம் குண்டுகட்டு, குறுந்தாட்டு எனவரும். (உ௦)

உகஅ. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வம்மூ விரண்டு மஃறிணை யவ்வே.

இ-ள். பன்மையும் ஒருமையுமாகிய பாலறிய வந்த அவ்வாறீற்றுச்சொல்லும் அஃறிணையனவாம். எ-று.

பன்மையுமொருமையும்பாலறிவந்தவென்பதற்கு முன்னுரைத்தாங்குரைக்க.

இதனாற்பயன், அஃறிணைச்சொல் ஆறே பிறிதில்லையென வரையறுத்தலெனக் கொள்க. (உக)

உகக. அத்திணை மருங்கி னிருபாற் கிளவிக்கு
மொக்கு மென்ப வெவனென் வினாவே.

இ-ள். எவனென்னும் வினாச்சொல் மேற்கூறப்பட்ட அஃறிணையிரண்டுபாற்கும் உரித்தென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். அஃதெவன், அவையெவன் என வரும்.

னகரவீறாய் இரண்டுபாற்கும் பொதுவாய் வருதலின், இதனை வேறு கூறினார். அஃதேல், நுமக்கிவன் எவனும் என

வுயர்திணைக்கண்ணும் வருமாலெனின்;—ஆண்டு அது முறை பற்றி நிற்றலின், அஃறிணைக்கண் வந்ததெனவேபடுமென்பது. அஃதேல், நுமக்கிவனென்னமுறையனும் என்பதல்லது என்னமுறையாம் என்பது பொருந்தாதெனின்;—என்னமுறை என்பது ஆண்டு முறைமேனில்லாது ஒற்றுமைநயத்தான் முறையுடையான்மேனிற்றலின், அமையுமென்க. எவனென்பதோர்பெயரும் உண்டு; அஃதிக்காலத்து என்னென்றும் என்னையென்றும் நிற்கும். ஈண்டுக் கூறப்பட்டது வினைக்குறிப்புமுற்றென்க. (உ௨)

உ௨0. இன்றில வுடைய வென்னுங் கிளவியு
மன்றுடைத் தல்ல வென்னுங் கிளவியும்
பண்புகொள் கிளவியு முளவென் கிளவியும்
பண்பி னாகிய சினைமுதற் கிளவியு
மொப்பொடு வரூஉங் கிளவியொடுதொகைஇ
யப்பாற் பத்துங் குறிப்பொடு கொள்ளும்.

இ - ள். இன்று, இலவென்பன முதலாகிய பத்தும் வினைக்குறிப்புச்சொல்லாம். எ-று.

அவற்றுள், இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல, உள என்பன தம்மையுணர்த்தி நின்றன. அல்லன பொருளுணர்த்தி நின்றன.

உ-ம். இன்று, இல, கோடுடைத்து, கோடுடைய, அதுவன்று, அவையல்ல, உள என வரும். ஈண்டும், கோடின்று, கோடில என உடைமைக்கு மறுதலையாய இன்மைபற்றி வருவனவுங்கொள்க.

உடையவென்பது முதலாயவற்றைச் செய்யுளின்பநோக்கி மயங்கக் கூறினார்.

அவ்வேறுணையும் பொருள்பற்றியோதாராயினார்; கிளந்தோதியவழியுஞ்சூத்திரஞ்சுருங்குமாகலானென்பது.

உளதென்பது பெருவழக்கிற்றன்மையின், உளவென்பதே கூறினார். அது தன்னினமுடித்தலென்பதனாற்கொள்ளப்படும்.

பண்புகொள்கிளவி—கரிது, கரிய; செய்யது, செய்ய என வரும்.

பண்பினாகிய சினைமுதற்கிளவி—நெடுஞ்செவித்து, நெடுஞ்செவிய என வரும். பண்படுத்த சினைபற்றியல்லது அவ்வினைக்குறிப்பு நில்லாமையின், பண்பினாகியவெனப் பண்பை முதனிலையாகக் கூறினார். பெருந்தோளன் என உயர்திணைக்கண்ணும் பண்படுத்து வருதல் ஒன்றெனமுடித்தலென்பதனாற்கொள்க. வேற்றுமைப்பொருள்பற்றி வருங்கால், பிறிதின்கிழமையும் உறுப்பின்கிழமையல்லாத தற்கிழமையும் ஏழாம்வேற்றுமைப்பொருண்மையும்பற்றி அஃறிணைவினைக்குறிப்புப் பயின்று வாராமையின், சினைக்கிழமையே கூறினார். அப்பொருள்பற்றிப் பயிலாது வருவன உரையிற்கோடலென்பதனாற்கொள்ளப்படும். சிறப்புடைப்பொருளைத் தானினிது கிளத்தலென்பதனாற் கொள்ளினுமமையும். 'அறிந்த மாக்கட்டாகுக தில்ல மெல்விரன் மந்தி குறைகூறுஞ் செம்மற்றே.' எ-ம். 'அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே.' எ-ம். வரும். வடாது, தெனாது என்பனவும் ஏழாம்வேற்றுமைப் பொருண்மைக்கண் வந்த வினைக்குறிப்பு; பெயருமாம்.

ஒப்பொடு வரூஉங்கிளவி—பொன்னன்னது, பொன்னன்ன என வரும். ஒப்பொடு வருதலாவது பொருள்பற்றி வருதல்.

வழக்குப்பயிற்சி நோக்கிப் பத்தென வரையறுத்தவாறு.

உஉக. பன்மையு மொருமையும் பாலறிவந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉங்
காலக் கிளவி யஃறிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

இ - ள். பன்மையும் ஒருமையுமாகிய பால் விளக்கிக் குறிப்புப்பொருள்பற்றி வரும் வினைச்சொல் மேற்கூறப்பட்ட அஃறிணைவினையோடொக்கும். எ-று.

வாய்பாடுபற்றியும் பொருள்பற்றியும் கூறிய இருவகையும் எஞ்சாமற்றழுவுதற்கு அன்னமரபினென்றார்.

ஒத்தலாவது, அஃறிணைவினைக்கோதிய ஈற்றுட்பொருந்துவன வினைக்குறிப்பின்கண் வருங்காலும், அவ்வவ்வீற்றான் அவ்வவ்விடமுங்காலமும் விளக்குதல்.

பொருந்துவனவாவன, ஆகாரமும் வகாரமுமொழித்துக் குற்றுகரமூன்றும் அகரமுமாம், அவற்றுட்டகரமூர்ந்த குற்றுகரம் "ஒன்றன்படர்க்கை" என்புழிக் கூறுதலான், ஒழிந்த மூன்றும் ஈண்டுக் கொள்ளப்படும். அவை அப்பால் விளக்குதல் மேற்காட்டப்பட்டனவற்றுட்கண்டுகொள்க. (உச)

உஉஉ. முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
யின்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யுஞ் செய்த வென்னு
மம்முறை நின்ற வாயெண் கிளவியும்
பிரிபுவேறு படூஉஞ் செய்திய வாகி
யிருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமைய.

இ - ள். முன்னிலை முதலாகச் செய்தவென்பதீறாகக் கூறிய முறையானின்ற எட்டுச்சொல்லும், பொதுமையிற்பிரிந்து ஒருகால் உயர்திணையுணர்த்தியும், ஒருகால் அஃறிணையுணர்த்தியும், வேறுபடுந்தொழிலையுடையவாய், இருதிணைச்சொல்லாதற்கும் ஒத்தவுரிமைய. எ-று.

முன்னிலைவினைச்சொல்லாவது எதிர்முகமாய் நின்றான்றொழிலுணர்த்துவது.

வியங்கோள் ஏவற்பொருட்டாய் வருவது. வாழ்த்துதன் முதலாகிய பிறபொருளுமுடைத்தாகலின், இக்குறி மிகுதி நோக்கிச் சென்ற குறியெனவுணர்க.

வினையெஞ்சுகிளவி வினையையொழிபாகவுடைய வினை.

இன்மை செப்பல் இல்லை, இல் என்பன.

வேறென்பது தன்னையுணர்த்தி நின்றது.

செய்ம்மனவென்பது மனவீற்று முற்றாய் எதிர்காலமுணர்த்தும். செய்யுமென்பது முற்றும் எச்சமுமாகிய இருநிலைமையுமுடைத்தாய் உம்மீற்றான் நிகழ்காலமுணர்த்தும். செய்தவென்பது அகரவீற்றெச்சமாய் இறந்தகாலமுணர்த்தும்.

செய்ம்மன முதலாகிய மூன்றுவாய்பாட்டானும், அவ்வீற்றவாய்க் காலமுணர்த்தும் உண்மன, உண்ணும், உண்ட என்னுந்தொடக்கத்தனவெல்லாந்தழுவப்பட்டன. அவற்றான் அவை தழுவப்பட்டவாறென்னையெனின்;—எல்லாத்தொழிலுஞ் செய்தல்வேறுபாடாகலின், பொதுவாகிய செய்தல் எல்லாத்தொழிலையும் அகப்படுத்து நிற்கும்; அதனான் அவற்றான அவை தழுவப்படுமென்க. அவை பொதுவுஞ்சிறப்புமல்லவேல், என் செய்யாநின்றான் என்று வினயவழி, உண்ணாநின்றான் எனச் செப்புதல் இயையாதாமென்க. இது செய்து செய்பென்பனவற்றிற்குமொக்கும்.

அஃதேல், சிலவற்றை ஈற்றானுணர்த்திச் சிலவற்றை வாய்பாட்டானுணர்த்தியதென்னையெனின்;—அம்மீறும் அன்னீறும் ஐயீறும் முதலாகிய சொற்கள் காலப்பன்மையான் வரும் வாய்பாட்டுப்பன்மையாற் சூத்திரம் பெருகுமென்றஞ்சி, அவற்றை ஈற்றானுணர்த்திக் காலவேறுபாடு இலேசாற்கொள்ள வைத்தார். காலப்பன்மையில்லனவற்றை வாய்பாட்டானுமுணர்த்துப, ஈற்றானுமுணர்த்துப.

முற்றுதலும் பலவாய்பாட்டாற்பயின்று வருதலுமுடைமையான், முன்னிலைவினையை முன் வைத்தார். ஏவற்பொருண்மை முன்னிலைவினைக்கண்ணுமுண்மையிற் பொருளியையுடைத்தாகலானும், இடங்குறித்து முற்றாய் வருதலொப்புமையானும், அதன்பின் வியங்கோள் வைத்தார். அதன்பின், முற்றுதலொப்புமையான் இன்மை செப்பல் வேறென்கிளவி செய்ம்மனவென்பனவற்றை வைத்தன்முறைமையாயினும், முற்றின்கண் வினையெச்சமுண்மையானும், ஈற்றுப்பன்மையொடு பயின்று வருதலானும், வினையெச்சம் வைத்தார். இன்மைபற்றி வரும் வினையெச்சமுமுண்மையான், அதனோடி

யைய இன்மை செப்பல் வைத்தார். வினைக்குறிப்பாதலொப் புமையானும், செய்ம்மனவிற் பயிற்சியுடைமையானும், அத ன்பின் வேறென்கிளவி வைத்தார். முற்றாதலொப்புமையான், அதன்பின் செய்ம்மன வைத்தார். முற்றுநிலைமையுமுடைத்தா கலின், அதன்பின் செய்யுமென்பது வைத்தார். பெயரெச்ச மாதலொப்புமையான், அதன்பின் செய்தவென்பது வைத்தா ர். இவ்வாறியைபுபற்றி வைத்தமையான், அம்முறை நின்ற வென்றார்.

திரிபுவேறுபடூஉஞ்செய்தியவாகியெனவே, வேறு வேறுண ர்த்தினல்லது ஒரு சொற் சொல்லுதற்கண் இருதிணையுமுண ர்த்தாமை பெறுதும். (உரு)

உஉ௬. அவற்றுள், முன்னிலைக் கிளவி
இ ஐ ஆயென வரூஉ மூன்று
மொப்பத் தோன்று மொருவற்கு மொன்றற்கும்.

இ - ள். கூறப்பட்ட விரவுவினைகளுள், முன்னிலைச்சொல், இகரவீறும் ஐகாரவீறும் ஆயீறுமாகிய மூன்றும் ஒருவற்கும் ஒருத்திக்கும் ஒன்றற்கும் ஒப்பச் செல்லும். எ-று.

முன்னிலைக்கிளவியென்பதற்கு முடிபு "அவைதாம் அம்மா மெம்மேம்" என்புழி 'அவைதாம்' என்பதற்குரைத்தாங்குரை க்க.

இகரம் தடறவூர்ந்து எதிர்காலம் பற்றி வரும். ஐகாரம் அம் மீற்றிற்குரிய எழுத்துப் பெற்றும், ஆயீறு ஆமீற்றிற்குரிய எழுத்துப் பெற்றும், மூன்றுகாலமும்பற்றி வரும்.

உ - ம், உரைத்தி, உண்டி, தின்றி. எ-ம். உண்டனை, உண்ணா நின்றனை, உண்பை. எ-ம். உண்டாய், உண்ணாநின்றாய், உண் பாய். எ-ம். வரும். ஒழிந்தவெழுத்தோடுமொட்டிக்கொள்க. 'ஐயசிறிதென்னையூக்கி' என இகரம் சிறுபான்மை ககரம் பெற்று வரும்.

உண், தின், நட, கிட என்னுந்தொடக்கத்து முன்னிலை ஒரு மை பெறுமாறென்னையெனின்; — அவை ஆயீறுதல் எச்சவி யலுட்பெறப்படுமென்க. (உசு)

உஉச. இர் ஈர் மின்னென வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினுஞ்
சொல்லோ ரனைய வென்மனார் புலவர்.

இ - ள். இர், ஈர், மின்னென்னும் ஈற்றையுடைய மூன்று சொல்லும், பல்லோர்கண்ணும் பலவற்றின்கண்ணுஞ் சொல்லுதற்கண், ஒத்தவுரிமைய. எ-று.

இர் ஈறு அர் ஈற்றிற்குரிய எழுத்துப் பெற்றும், ஈரீறு ஆரீற்றிற்குரிய எழுத்துப் பெற்றும், மூன்றுகாலமும்பற்றி வரும். மின்னீறு பிறவெழுத்துப் பெறாது, ஏற்றவழி உகரம் பெற்று, எதிர்காலம் பற்றி வரும்.

உ - ம். உண்டனிர், உண்ணாநின்றனிர், உண்குவிர். எ-ம். உண்டீர், உண்ணாநின்றீர், உண்குவீர். எ-ம். உண்மின், தின்மின், உரிஞுமின். எ-ம். வரும். ஒழிந்தவெழுத்தோடுமொட்டிக்கொள்க.

முன்னிலைவினைக்குறிப்பு, உயர்திணைவினைக்குறிப்பிற்கோதிய பொருள்பற்றி ஐகாரமும் ஆயும் இருவும் ஈருமென்னுநான்கீற்றவாய், கழலினை, நாட்டை, பொன்னன்னை, கரியை. எ-ம். கழலினாய், நாட்டாய், பொன்னன்னாய், கரியாய். எ-ம். கழலினிர், நாட்டினிர், பொன்னன்னிர், கரியிர். எ-ம். கழலினீர், நாட்டினீர், பொன்னன்னீர், கரியீர். எ-ம். வரும். ஒழிந்த பொருளோடுமொட்டிக்கொள்க. போறி என இகரவீற்று வினைக்குறிப்புமுண்டாலெனின்;—போன்றனன், போன்றான் என்பனபோல வந்து தெரிநிலைவினையாய் நின்றதென மறுக்க.

அஃறிணைவினைக்குறிப்பும் உயர்திணைவினைக்குறிப்பிற்கோதிய பொருள்பற்றி வருதலின், அவற்றையெடுத்தோதிற்றென்னையெனின்; — அன்மைமுதலாயின பொருள்பற்றி வந்தனவெனக் கிளந்தோதலாஞ்சுருக்கத்தனவகையானும், சினைமுதற்கிளவி பண்புமடுத்து வருதல் உயர்திணையதிகாரத்துப் பெறப்படாமையானும், அவற்றையோதுவார் ஏனைப்பொருளுமுடனோதினார்.

முன்னிலைவினைக்குறிப்புப் பலவாதலானும் எடுத்தோதா வழிப் படுவதோர்குறைபாடின்மையானும், இவற்றையுயத்து ணரவைத்தாரென்பது. அல்லது, எடுத்தோத்தில் வழி உய்த் துணர்வதெனினுமமையும்.

முன்னிலைவினையீற்றுன் எதிர்காலம்பற்றி வரும் இகரத்தை யும் மின்னையும் முதலும் இறுதியும் வைத்து, மூன்றுகாலமும் பற்றி வரும் நான்கீற்றையுந் தம்முளியைய இடை வைத்தா ர். அல்லது, பொருண்மை கருதாது சூத்திரயாப்பிற்கேற்ப வைத்தாரெனினுமமையும். (உஎ)

உஉரு. எஞ்சிய கிளவி யிடத்தொடு சிவணி
ஐம்பாற்கு முரிய தோன்ற லாறே.

இ-ள். முன்னிலைவினையொழித்து ஒழிந்த ஏழுவினைச்சொ ல்லும் மூன்றிடத்திற்கும் ஐந்துபாற்குமுரிய, தத்தம்பொரு ட்கட்டோன்றுமிடத்து. எ-று.

இவ்வாறு பொதுவகையான் எல்லாவிடத்தோடும் எல்லா ப்பாற்கும் உரியவாதலெய்தினவெனினும், முன்னர் விலககப் படுவனவொழித்து ஒழிந்தவிடமும் பாலும் பற்றி வருமாறு ஈண்டுக் காட்டப்படும்.

உ-ம். அவன் செல்க; அவள் செல்க; அவர் செல்க; அது செல்க; அவை செல்க. எ-ம். உழுது வந்தேன்; உழுது வந் தேம்; உழுது வந்தாய்; உழுது வந்தீர்; உழுது வந்தான்; உழு து வந்தாள்; உழுது வந்தார்; உழுது வந்தது; உழுது வந்த ன. எ-ம். யானில்லை; யாமில்லை; நீயில்லை; நீயிரில்லை; அவனி ல்லை; அவளில்லை; அவரில்லை; அதுவில்லை; அவையில்லை. எ-ம். யான் வேறு; யாம் வேறு; நீ வேறு; நீயிர் வேறு; அவன் வே று; அவள் வேறு; அவர் வேறு; அது வேறு; அவை வேறு. எ-ம். யானுண்மன; யாமுண்மன; நீயுண்மன; நீயிருண்மன; அவனுண்மன; அவளுண்மன; அவருண்மன; அதுவுண்மன; அவையுண்மன. எ-ம். யானுண்ணூமூண்; யாமுண்ணூமூண்; நீயுண்ணூமூண்; நீயிருணணூமூண்; அவனுண்ணூமூண்; அவளு

ண்ணுமூண்; அவருண்ணுமூண்; அதுவுண்ணுமூண்; அவையு ண்ணுமூண். எ-ம். அவன் வரும்; அவள் வரும்; அது வரும்; அவை வரும். எ-ம். யானுண்டவூண்; யாமுண்டவூண்; நீயுண் டவூண்; நீயிருண்டவூண்; அவனுண்டவூண்; அவளுண்டவூண்; அவருண்டவூண்; அதுவுண்டவூண்; அவையுண்டவூண். எ-ம். வரும். (உஅ)

உஉகூ. அவற்றுள்,

முன்னிலை தன்மை யாயீ ரிடத்தொடு
மன்னு தாகும் வியங்கோட் கிளவி.

இ - ள். மேல் "எஞ்சியகிளவி" எனப்பட்ட ஏழனுள், விய ங்கோட்கிளவி, முன்னிலையும் தன்மையுமாகிய இரண்டிடத் தோடு, நிலைபெறுதாம். எ-று.

ஆயீரிடத்தொடு கொள்ளாதென்னாது மன்னுதாகுமென்ற தனான், அவ்விடத்தொடு சிறுபான்மை வருதல் கொள்க. ம ன்னுதல் பெரும்பான்மையும் நிகழ்தல். சிறுபான்மை வருவ ன, நீ வாழ்க என்னும் வாழ்த்துதற்பொருண்மைக்கண்ணும், யானுநின்னொடுடனுறைக என்னும் வேண்டிக்கோடற்பொரு ண்மைக்கண்ணும், வருவனவாம். 'கடாவுக பாகநின் கால் வ னெடுந்தேர்' என்பதும் வேண்டிக்கோடற்பொருண்மைக் கண் வந்ததாம்.

தன்மைக்கண் ஏவலில்லை. முன்னிலைக்கண் ஏவல் வருவது ண்டேற்கண்டுகொள்க.

அஃதேல், வியங்கோளீறு கூறுராயிற்றென்னையெனின்;— எழுத்தோத்தினுள் "ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவி யும்" என அகரவீற்றுள் எடுத்தலாற்பொருந்திய மெய்யூர் ந்து அகரவீறாய் வருதலும், "செப்பும் வினவும் வழாஅ லோம்பல்" எனவும், "சொல்வரைந தறியப் பிரித்தனர் காட்டல்" எனவும், "மறைக்குங் காலை மரீஇய தொராஅல்" எனவும், உடம்பொடுபுணர்த்தலான் அல்லீறாய் வருதலும், ஆலீறாய் வருதலும் பெறுதலின், வியங்கோளீறுங்கூறினுரெ னவேபடும். பிறவுமுளவேற்கொள்க. (உக)

உஉஎ. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா.

இ - ள். பல்லோர்படர்க்கையும் முன்னிலையும் தன்மையு மாகிய அவ்வயின்மூன்றும், நிகழ்காலத்து வருஞ்செய்யு மென்னுஞ்சொல்லோடு, பொருந்தா. எ-று.

அவ்வயினென்றது, இடமும் பாலுமாகிய எஞ்சிய கிளவிக் குரிய பொருட்கணென்றவாறு.

நிகழுங்காலத்துச் செய்யுமென்னுங்கிளவியொடென அத ளூற்றோன்றுங்காலமுணர்த்தியவாறு.

இவையிரண்டுசூத்திரமும் பொதுவகையானெய்தியனவற் றை விலக்கி நின்றன. (ஙO)

உஉஅ. செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர்செய்யியசெயின்செயச்செயற்கென
வவ்வகை யொன்பதும்வினையெஞ்சு கிளவி.

பொதுவகையானெய்தியவற்றுள், வியங்கோட்கிளவிக்கு ஞ் செய்யுமென்னுங்கிளவிக்கும் எய்தாதன விலக்கி, இனி நி றுத்த முறையானே வினையெச்சத்தினது பாகுபாடுணர்த்து கின்றார்.

இ - ள். செய்தென்பது முதலாகச் சொல்லப்பட்ட ஒன்ப தும் வினையெச்சமாம். எ-று.

அவ்வகையொன்பதுமென்றது இறுதி நின்ற இடைச்சொல் லான் வேறுபட்ட ஒன்பதுமென்றவாறு. அவ்விடைச்சொல் லாவன உகரமும், ஊகாரமும், புகரமும், எனவும், இயரும், இயவும், இன்னும், அகரமும், குகரமுமாம்.

"செய்கென் கிளவி வினையொடு முடியினும்" எனவும், "செய்யா வென்னு முன்னிலை வினைச்சொல்" எனவும், இறு தியிடைச்சொலேற்றவாற்றாற் பிரித்துணர வாய்பாடோதினு

ற்போல, ஏற்றவாற்றான் இறுதியிடைச்சொற்பிரித்துணர்ந்து கொள்ள ஈண்டும் வாய்பாடுபற்றியோதினார்.

உகரம், கடதறவூர்ந்து இயல்பாயும், ஏனையெழுத்தூர்ந்து இகரமாய்த் திரிந்தும், நெடிலீற்றுமுதனிலைமுன்னர் யகரம் வரத் தான் கெட்டும், இறந்தகாலம்பற்றி வரும். இவ்வுகரவீறு இகரமாதலும், யகரம் வரக் கெடுதலும் "வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" என்பதனாற்பெறப்படும்.

உ - ம். நக்கு, உண்டு, வந்து, சென்று. எ-ம். எஞ்சி, உரிஞி, ஓடி. எ-ம். ஆய், போய். எ-ம். வரும். சினைஇ, உரைஇ, இரீஇ, உடீஇ, பராய், தூஅய், ஆய் என்பனவோவெனின்;—அவை செய்யுண்முடிபென்க. ஆகி, போகி, ஓடி, மலர்த்தி, ஆற்றி என்புழி, முதனிலை குற்றுகரவீறாதலின், ஏனையெழுத்தாதலறிக.

கடதறவென்பன குற்றுகரத்தோடு வருமிடமும் தனிமெய்யாய் வருமிடமுந்தெரிந்துணர்க.

அஃதேல், ஆய் என்பதனை யகரவீறென்றும், ஓடியென்பதனை இகரவீறென்றுங்கொள்ளாது, உகரவீறென்றதென்னையெனின்;—நன்று சொன்னாய்: இகரவிறுதி இடைச்சொல்லாயின், இறுதியிடைச்சொல் எல்லாத்தொழிலும்பற்றி வருதலிற் செலவு வரவென்பனவற்றோடும் வரல்வேண்டும். இனிச் செய்தெனெச்சத்துகரமும் இறுதியிடைச்சொல்லாதலின் ஆகுதல் ஓடுதலென்னுந்தொழில்பற்றியும் வரல்வேண்டும். செலவு வரவுபற்றி இகரம் வாராமையானும், ஆகுதல் ஓடுதல்பற்றி உகரம் வாராமையானும், இறுதியிடைச்சொல் இகரமேயாக உகரமேயாக ஒன்றாவதல்லது இரண்டெனப்படாதாம். உகரம் ஒன்றாய் நின்று கடதறவூர்ந்த விதிவினைக்கட் பயின்று வருதலானும், எதிர்மறையெச்சமெல்லாம் பெரும்பான்மையும் உகரவீறாயல்லது வாராமையானும், உகரம் இயல்பாக இகரம் அதன்றிரிபென்றலே முறைமையென்க. யகரவீற்றிற்கும் இஃதொக்கும்.

ஊகாரம் உண்ணூவந்தான், தின்னூவந்தான் எனப் பின் வருந்தொழிற்கு இடையின்றி முன் வருந்தொழின்மேல் இறந்த காலம்பற்றி வரும். அஃது உண்ணு என ஆகாரமாயும் வரும்.

பகரவுகரம் நகுபு வந்தான் என நிகழ்காலம்பற்றி வரும். நகாநின்று வந்தான் என்றவாறு. ஈண்டு நிகழ்காலமென்றது முடிக்குஞ்சொல்லானுணரப்படுந்தொழிலோடு உடனிகழ்தல். உரிஞுபு என உகரமும், கற்குபு எனக் குகரமும், ஏற்ற வழிப் பெறுதல் கொள்க.

எனவென்பது கடந்தவூர்ந்து இறந்தகாலம்பற்றி முடிக்குஞ்சொல்லானுணர்த்தப்படுந்தொழிற்குத் தன்முதனிலைத்தொழில் காரணமென்பது பட வரும். உ-ம். சோலைபுக்கென வெப்பநீங்கிற்று; உண்டெனப் பசி கெட்டது; உரைத்தென உணர்ந்தான்; மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று என வரும். எஞ்சியென. எ-ம். உரிஞியென. எ-ம். ஏனையெழுத்தோடும் வருமாறறிந்தொட்டிக்கொள்க.

இயர், இய என்பன, எதிர்காலம்பற்றி, உண்ணியர், தின்னியர்; உண்ணிய, தின்னிய என வரும். போகியர், போகிய என ஏற்றவழிக் ககரம் பெற்று வருதலுங்கொள்க.

இன் எதிர்காலம்பற்றிக் காரணப்பொருட்டாய் வரும். உ-ம். மழை பெய்யிற்குளநிறையும்; மெய்யுணரின் வீடெளிதாம் என வரும். நடப்பின், உரைப்பின் என ஏற்றவழிப் பகரம் பெற்று வருதலுங்கொள்க.

அகரம், மழை பெய்யக் குளநிறைந்தது; ஞாயிறு பட வந்தான்; உண்ண வந்தான் என மூன்றுகாலமும் பற்றி வரும். உரைப்ப, உரைக்க என ஏற்றவழிப் பகரமுங் ககரமும் பெறுதல் கொள்க.

குகரம் உணற்கு வந்தான்; தினற்கு வந்தான் எனவெதிர்காலம் பற்றி வரும்.

புகரமும் குகரமும் உகரத்தின்கண்ணும், எனவும் இயவும் அகரத்தின்கண்ணும், அடங்குமெனின்;—ஆசிரியர் மார் அடங்காமைக்கு உரைத்தாங்குரைக்க.

செயறகெனனும வினையெசசம நானகனுருபேற்று நினற தொழிறபெயரின வேறுதல இளவியாககததுட கூறினும.

திரியாது நிறகும ஊகாரமும, புகரமும, எனவும, இயரும, இயவமெனனும ஐநதிறறுவினையெசசமும வழககினுள இககாலதது வாராவாயினும, சானரோரசெயயுளுள அவறறு வாயபாடடுவேறறுமையெலலாஙகணடுகொளக. (௩௧)

உஉகூ. பினமுன காலகடை வழியிடத தெனனு
மனன மரபிற காலங கண்ணிய
வெனன கிளவியு மவறறியல பினவே.

இ - ள். பினனும, முனனும, காலும, கடையும, வழியும, இடததும எனனுமீறறவாய வருவனவும, அவைபோலக காலஙகணணி வருவன பிறவும, வினையெசசமாம. எ-று.

உ - ம. நீயிர பொய கூறியபின மெய கூறுவார யார. எ-ம. நீயிவவாறு கூறுகினறபினுரைபபதுணடோ. எ-ம. பின இறபபும நிகழவும பறறியும, மருநது தினறுமுனனேயதீரநதது என முன இறநதகாலம பறறியும, 'வலனுக வினையெனறு வணஙகிநாம விடுததககால.' எ-ம. 'அகனறவா திறநதினி நாடுஙகால.' எ-ம. காலீறு மூனறுகாலமும பறறியும, 'தொடர கூரத துவவாமை வநதக கடை' எனக கடையீறு இறநதகாலமபறறியும, உரைததவழி, உரைககுமவழி, உரைததவிடதது, உரைககுமிடதது என வழியெனனுமீறும இடதெனனுமீறும மூனறுகாலமும பறறியும, வரும. கால, வழி, இடதெனபனவறறின நிகழகாலதது வாயபாடு எதிரகாலததிறகுமேறறலறிக.

கூதிர போயபின வநதான. எ-ம். நினறவிடதது நினறான. எ-ம. பின முதலாயின பெயரொசசததோடும வநதவழி, இறபபு முதலாகிய காலஙகணணுமையின, அவறறை நீககுதறகுக காலஙகணணியவென்றார.

காலவேறுபாடடான வரும் வாயபாட்டுபபன்மையெலலாம ஒருவாயபாட்டாறறழுவலாகாமையின், இவறறை ஈறு பறறியோதினார.

அன்ன மரபிற் காலங் கண்ணிய வென்ன கிளவியு மென்ற தனுன், உண்பாக்கு, வேபாக்கு என வரும் பாக்கீறும், உண்பான் வருவான் என்னும் ஆனீறும் 'நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே' என்னும் உம்மீறும், 'அற்ற லளவறிந் துண்க' என்னும் ஆலீறும், எதிர்மறைபற்றிக் 'கூறுமற் குறித்ததன் மேற்செல்லும்' என வரும் மல்லீறும், 'கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்' என்னும் மகரவைகாரவீறுங்கொள்க.

என்னகிளவியுமென்றதனுன், இன்றி, அன்றி, அல்லது, அல்லால் என வருங் குறிப்புவினையெச்சமுங்கொள்க. பிறவுமன்ன. (௩௨)

உ௩0. அவற்றுள்,

முதனிலை மூன்றும் வினைமு தன் முடிபின.

இ - ள். மேற்சொல்லப்பட்ட பதினைந்துவினையெச்சத்துள், முதற்கணின்ற செய்து, செய்யூ, செய்பு என்னுமூன்றும், தம்வினைமுதல்வினையான் முடியும். எ-று.

உ - ம். உண்டு வந்தான்; உண்ணூ வந்தான்; உண்குபு வந்தான். எ-ம். கற்று வல்லனுயினுன்; கல்லூ வல்லனுயினுன்; கற்குபு வல்லனுயினுன். எ-ம். வரும்.

'உரற்கால் யானை யொடித்துண்டெஞ்சிய யாஅவிரிநிழற்றுஞ்சும்' எனச் செய்தெனெச்சம் வினைமுதல்வினையல்லா வினையான்முடிந்ததாலெனின்; — அது "வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" என்புழிப் பெறப்படும்.

இது முன்னர் "வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பு—நினையத் தோன்றிய முடிபா கும்மே" எனப் பொதுவகையான் முடிவனவற்றை எதிரது நோக்கி இவை மூன்றும் வினைமுதன்முடிபீனவென நியமித்தவாறு. அஃதேல், இதனையும் ஆண்டே கூறுகவெனின்;—ஆண்டுச் செய்து செய்யூச் செய்பு என்னுமூன்றுமெனக் கிளந்தோதுவதல்லது, முதனிலைமூன்றுமெனத் தொகுத்தோதலாகாமையானும், ஈண்டியையுபுடைத்தாகலானும், ஆண்டுக் கூறுது ஈண்டுக கூறினுரென்பது. (௩௩)

உ௲க. அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றிற்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய வென்மனார் புலவர்.

இ - ள். வினைமுதன்முடிபினவாகிய அம்மூன்றுசொல்லு ம், சினைவினை நின்று சினைவினையோடு முடியாது முதல்வினை யோடு முடியினும், வினையானொருதன்மைய. எ-று.

வினையானொருதன்மையவென்றது, முதல்வினையோடு மு டியினும் முதலொடு சினைக்கொற்றுமையுண்மையாற் பிறவி னைகொண்டனவாகா வினைமுதல்வினை கொண்டனவேயாமெ ன்றவாறு.

உ - ம். கையிற்று வீழ்ந்தான்; கையிறா வீழ்ந்தான்; கையி றுபு வீழ்ந்தான் என வரும்.

'உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய' என்புழிப்போ லக் கையிற்றென்னுஞ்செய்தெனெச்சம் கையிறவெனச் செ யவெனெச்சப்பொருட்டாய் நின்றதெனவமையும், இச்சூத்தி ரம் வேண்டாவெனின்;—அற்றன்று : வினைமுதல்வினை கொ ள்ளாதவழியன்றே அது பிறபொருட்டாயது; வினைமுதல்வி னை கொண்டு தன்பொருளேயுணர்த்துவதனைப் பிறபொருண் மேனின்றதென்றல் பொருந்தாமையான், அது கடாவன றென்க. (௲ச)

உ௲உ. ஏனை யெச்சம் வினைமுத லானு
மானவந் திளையும் வினைநிலை யானுந்
தாமியன் மருங்கின் முடியு மென்ப.

இ - ள். முதனிலைமூன்றுமல்லாத பிறவினையெச்சம், வினை முதல்வினையானும், ஆண்டு வந்து பொருந்தும் பிறவினையா னும், வரையறையின்றித் தாமியலுமாற்றான் முடியும். எ-று.

உ - ம். மழை பெய்தெனப் புகழ் பெற்றது; மழை பெய் தென மரங்குழைத்தது. எ-ம். மழை பெய்யியவொழுந்தது; மழை பெய்யியர் பலி கொடுத்தார். எ-ம். மழைபெய்யிய மு

ழங்கும்; மழை பெய்ய வான் பழிச்சுதும். எ-ம். மழை பெய்யிற்புகழ்பெறும்; மழை பெய்யிற்குளநிறையும். எ-ம். மழை பெய்யப் புகழ் பெற்றது; மழை பெய்ய மரங்குழைத்தது. எ-ம். மழை பெய்தற்கு முழங்கும்; மழை பெய்தற்குக் கடவுள் வாழ்த்துதும். எ-ம். இறந்தபின்னிளமை வாராது; கணவனினிதுண்டபின் காதலிமுகமலர்ந்தது. எ-ம். அவை வினைமுதல்வினையும் பிறவினையுங்கொண்டவாறு கண்டுகொள்க. அல்லனவும் இருவகைவினையுங்கோடல் வழக்கினுட்கண்டுகொள்க.

வரையறையின்றி இருவகைவினையுங்கோடலின் "வினையுங் குறிப்பு—நினையத் தோன்றிய முடிபா கும்மே" என்னும் பொதுவிதியான் முடிவனவற்றை ஈண்டுக் கூறல்வேண்டாவெனின்;—வினையெச்சங்களுள் ஒருசாரன வினைமுதல்வினை கொள்ளுமென்றதனன், ஏனையெச்சம் பிறவினையே கொள்ளுமோ இருவகைவினையுங்கொள்ளுமோ என்றையமாம்; அதனன் ஐயநீங்க இவ்வாறு கூறல்வேண்டுமென்பது.

அஃதேல், வினையொடு முடிதல் ஈண்டுக் கூறப்பட்டமையின எச்சவியலுள் 'குறிப்பு முடிபாகும்' எனவமையும், வினையுமெனல் வேண்டாவெனின்;—குறிப்புமென்னும்மையாற் றழுவப்படுவது செய்த்தாகலிற்றெற்றென விளக்காமையானும், வினைமுதலென்பது பெயர்க்கும் வினைக்கும் பொதுவாகலானும், வினையுமெனல்வேண்டுமென்பது. (௩௫)

உ௩௩. பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினு
முன்னது முடிய முடியுமன் பொருளே.

இ - ள். ஒருவாய்பாட்டானும் மற்றப்பலவாய்பாட்டானும் வினையெஞ்சுகிளவி அச்சொற்கண்முறையான்முடியாது அடுக்கி வரினும், முன்னின்றவெச்சம் முடிய ஏனையவும் பொருண்முடிந்தனவாம். எ-று.

உ - ம். உண்டு தின்றோடிப் பாடி வந்தான். எ-ம். உண்டு பருகூத் தின்குபு வந்தான். எ-ம். வரும்.

முன்னது முடிய முடியுமென்றாராயினும், உண்டு தின்று மழை பெய்யக் குளநிறையும் என்றவழி, முன்னதன்றொழிலான் ஏனைய முடியாமையின் பன்முறையான் அடுக்குங்கான் முன்னதன்றொழிலான் முடிதற்கேற்பனவே கொள்க.

சொன்முறை முடியாமையாவது தம்மொடு தாமும் பிற சொல்லுமுடியாமை.

உண்டு வந்தான்; தின்று வந்தான் எனச் சொற்றோறும் வினையியைதன்மரபு. அங்ஙனமில்லாது தம்முளியைபில்லன அடுக்கி வருந்து இறுதி வினையெச்சத்திற்கு முடிபாகிய சொல்லான் எல்லாம் முடியினும் இழுக்காதென அமைத்தவாறு.

வினையெச்சம் பன்முறையானுமடுக்கி ஒருசொல்லான் முடியுமெனவே, பெயரெச்சம் ஒருமுறையானடுக்கி ஒருசொல்லான் முடியுமென்பதாம்.

'நெல்லரியுமிருந்தொழுவர்' என்னும் புறத்தொகைப்பாட்டினுள் 'தெண்கடற் றிரைமிசைப் பாயுந்து.' எ-ம். 'தண்குரவைச்சீர்தூங்குந்து.' எ-ம். 'எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து.' எ-ம். 'முந்நீர்ப்பாயும்.' எ-ம். செய்யுமென்னும் பெயரொச்சமடுக்கி 'ஓம்பா வீகை மாவே ளெவ்வி புனலம் புதவின் மிழலை' என்னும் ஒருபொருள்கொண்டு முடிந்தவாறு கண்டுகொள்க. ஆங்குத் 'தாங்கா வினையு ணல்லூர் கெழீஇய' என்னும பெயரொச்சம் இடைநிலையாய் வந்தது. பிறவுமன்ன. (நகூ)

உநசு. நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையு முளப்பட
வவ்வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய
செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே.

வினையெச்சமுணர்த்தி, இனிப் பெயரொச்சமுணர்த்துகின்றார்.

இ - ள். செய்யும், செய்த என்னுஞ்சொற்கள், தொழின்முதனிலையெட்டனுள் இன்னதற்கு இதுபயனுகை என்னும் இரண்டொழித்து, ஏனையாறுபொருட்கும் ஒத்தவுரிமைய. எ-று.

இவற்றிற்கொத்தவுரிமையவெனவே, ஒழிந்தவிரண்டற்கும் இவற்றோடொப்பவுரியவாகா, சிறுபான்மையுரியவென்றவாறும்.

உ-ம். வாழுமில், கற்குநூல், துயிலுங்காலம், வனையுங்கோல், ஓதும்பார்ப்பான், உண்ணுமூண் எனச் செய்யுமென்னும் பெயரொச்சத்து உம்மீறு காலவெழுத்துப் பெறாது ஆறுபொருட்குமுரித்தாய் வந்தவாறு. புக்கவில், உண்ட சோறு, வந்தநாள், வென்ற வேல், ஆடிய கூத்தன், போயின போக்கு எனச் செய்தவென்னும் பெயரொச்சத்திறுதியகரம் கடதறவும் யகர னகரமும் ஊர்ந்து அப்பொருட்குரித்தாய் வந்தவாறு. நோய் தீருமருந்து, நோய் தீர்ந்த மருந்து என்னுமேதுப்பொருண்மை கருவிக்கணடங்கும். அரசன ஆகொடுக்கும் பார்ப்பான்; ஆ கொடுத்த பார்ப்பான. எ-ம். ஆடையொலிக்குங்கூலி; ஆடையொலித்த கூலி. எ-ம். ஏனையிரண்டற்குஞ்சிறுபான்மையுரியவாய் வந்தவாறு.

எல்லைப்பொருள் பஃறொழில்பற்றி வருஞ்சிறப்பின்றாகலிற் றொழின்முதலொடு கூறாது "இன்மை யுடைமை நாற்றந் தீர்தல்" என்னும் பொருண்மையாற் றழீஇக்கொண்டாராகலின், பழமுதிருங்கோடு, பழமுதிர்ந்தகோடு எனச் சிறுபான்மை எல்லைப்பொருட்குரியவாதலுங்கொள்க.

'நின்முகங் காணு மருந்தினே னென்னுமால்'என்புழிக் காட்சியை மருந்தென்றாதலின், காணுமருந்தென்பது வினைப்பெயா கொண்டதாம். 'பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின்' என்புழிப் பொச்சாவாக்கருவியென்பதுமது. 'ஆறு சென்ற வியர்' என்புழி வியர் ஆறு சேறலான் வந்த காரியமாகலின், செயப்படுபொருட்கணடங்கும். நூற்ற நூலானியன்ற கலிங்கமும் ஒற்றுமைநயத்தால் நூற்ற கலிங்கமெனப்படும். 'நூலாக் கலிங்கம் வூாலனைக் கொளீஇ' எனப் பெயரொச்சத்தினெதிர்மறை பொருட்பெயர் கொண்டு நின்றதாம். பிறவுங்கூறப்பட்ட பொருட்கணடங்குமாறறிந்தடக்கிக்கொள்க. உண்டான் சாத்தன்; மெழுகிற்றுத் திண்ணை என்புழி

உண்டான் மெழுகிற்று என்னுமுற்றுச்சொல் வினைமுதலுஞ் செயப்படுபொருளுமாகிய பொருட்குரியவாமாறுபோல், இவ்விருவகைப்பெயரொச்சமும் நிலமுதலாகிய பொருட்குரியவாமெனவ அவற்றது அறுபொருட்குமுரிமை உணர்த்தியவாறு. முடிபு எச்சவியலுட் பெறப்படும்.

பொருளைக் கிளவியென்றார்.

நிலமுதலாயினவற்றைப் பெயரொச்சப்பொருளென்னாது முடிக்குஞ்சொல்லெனின், அவ்வறுபொருட்குமென்னாது அவ்வறுபெயர்க்குமென்றோதுவார். ஓதவே, "பெயரொஞ்சு கிளவி பெயரொடு முடிமே" என்னுஞ்சூத்திரம் வேண்டாவாம்; அதனான் இவை பொருளென்றலேயுரை.

அம் ஆமென்பன முதலாக அகரமீறாகக் கிடந்த இறுதியிடைச்சொற்குக் கூறப்பட்ட காலவெழுத்துச் சிறிய சிதைந்து வரினும், சிறுபான்மை பிறவெழுத்துப் பெறினும், நுண்ணுணர்வுடையோர் வழக்கு நோக்கியுணர்ந்துகொள்க. (௩எ)

உ௩ரு. அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்று முரித்தே.

இ - ள். நிலமுதலாகிய பொருளோடு வருங்கால், செய்யுமென்னுஞ்சொல், விலக்கப்பட்ட பல்லோர்படர்க்கை முன்னிலை தன்மையென்னும் மூவகைக்கும், உரித்தாம். எ-று.

உரித்தாய் வருமாறு "எஞ்சிய கிளவி" என்னுஞ்சூத்திரத்திற்காட்டினும்.

அவற்றொடு வருவழியெனச் செய்யுமென்னுஞ்சொல் அப்பொருண்மைக்குரித்தாயும் உரித்தன்றியும் வரும் இருநிலைமையும் உடைத்தென்பது பெறுதும். அவற்றொடு வருநிலைமை பெயரொஞ்சுகிளவியாம்; அவற்றொடு வாராநிலைமை முற்றுச் சொல்லாம். அஃதேல், அது முற்றுச்சொல்லாதற்கண்ணும் பெயரொஞ்சுகிளவியாதற்கண்ணும் வேற்றுமையென்னையெனின்;—வினைமுற்றிற்கும் வினையெச்சத்திற்கும் வேற்றுமையாவதே ஈண்டும் வேற்றுமையாமென்க. முற்றுச்சொல்லிற்கு

ம் எச்சத்திற்கும் வேற்றுமை யாதெனின்;—பிறிதோர்சொல்லோடியையாது தாமே தொடராதற்கேற்கும் வினைச்சொல் முற்றும்; பிறிதோர்சொற்பற்றியல்லது நிற்றலாற்றா வினைச்சொல் எச்சமாம்; இது தம்முள் வேற்றுமையென்க. அஃதேல், உண்டானென்பது சாத்தனென்னும் பெயரவாவியன்றே நிற்பது, தாமே தொடராமென்றது என்னையெனின்;—அற்றன்று: உண்டான் சாத்தன் என்றவழி, எத்தையென்னும் அவாய்நிலைக்கண் சோற்றையென்பது வந்தியைந்தாற்போல, உண்டான் என்றவழி யாரென்னும் அவாய்நிலைக்கண் சாத்தனென்பது வந்தியைவதல்லது, அப்பெயர்பற்றியல்லது நிற்றலாற்றா நிலைமைத்தன்று அச்சொல்லென்பது. இவ்வேற்றுமை விளங்க ஆசிரியர் முற்றுச்சொல்லென்றும், எச்சமென்றும், அவற்றிற்குப் பெயர் கொடுத்தார். (௩௮)

உ௩௯. பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியு
மெதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா.

இ - ள். பெயரெச்சமும் வினையெச்சமும், செய்தற்பொருளவன்றி அச்செய்தற்பொருண்மை எதிர்மறுத்துச் சொல்லினும், இவ்வெச்சப்பொருண்மையிற்றிரியா. எ-று.

பொருணிலையாவது தம்மெச்சமாகிய பெயரையும் வினையையுங்கொண்டல்லது அமையாத நிலைமை. என் சொல்லியவாறோவெனின்;—செய்யும், செய்த எனவும், செய்து, செய்யூ, செய்பு எனவும், பெயரெச்சமும் வினையெச்சமும் விதிவாயபாட்டாேனாதப்பட்டமையான், ஆண்டுச் செய்யா, செய்யாது என்னுமெதிர்மறைவாய்பாடு அடங்காமையின், அவை எச்சமாதல் பெறப்பட்டின்று. அதனால் அவையும் அவ்வெச்சப்பொருண்மையிற்றிரியாது பெயரும் வினையுங்கொள்ளுமென எய்தாததெய்துவித்தவாறு.

உ - ம். உண்ணாவில்லம், உண்ணாச்சோறு, உண்ணாக்காலம், வனையாக்கோல், ஓதாப்பார்ப்பான், உண்ணாவூண். எ-ம். உண்ணாது வந்தான், உண்ணாமைக்குப் போயினான். எ-ம். வரும்.

உண்ணு என்பது உண்ணும், உணட என்னுமிரண்டற்கும் எதிர்மறையாம். உண்ணுத என்பதுமது. உண்ணுது என்பது உண்டு, உண்ணூ, உண்குபு என்பனவற்றிற்கெதிர்மறை. உண்ணுமைக்கு என்பது, உண்ணியர், உண்ணிய, உணற்கு என்பனவற்றிற்கும், உண்ண எனச் செயற்கென்பது படவரும் செயவெனெச்சத்திற்கும், எதிர்மறையாம். உண்ணுமை, உண்ணுமல் என்பனவுநதாம் அதற்கு எதிர்மறையாம். பிறவும் எதிமறைவாய்பாடுளவேற்கொள்க.

உண்டிலன், உண்ணுநின்றிலன், உண்ணலன், உண்ணுன் என முற்றுச்சொல்லும் எதிர்மறுத்து நிற்குமாகலின், பொருணிலை திரியாதென அதற்கோதாராயிற்றென்னையெனின்;— விதிவினைக்கும் எதிர்மறைவினைக்கும் பொதுவாக ஈறுபற்றி ஓதியதலலது விதிப்பொருளவாகிய வாய்பாடுபற்றி ஓதாமையின், ஆண்டுக் கட்டுரையில்லையென்க. (ருக)

உருஎ. தத்த மெச்சமொடு சிவணுங் குறிப்பி
னெச்சொல் லாயினு மிடைநிலை வரையார்.

இ-ள். தத்தமெச்சமாகிய வினையோடும் பெயரோடும் இயையுங்குறிப்பையுடைய எச்சொல்லாயினும், இவ்வெச்சத்திற்கும் அவற்ருன் முடிவனவாகிய தமக்கும், இடைநிற்றல் வரையார். எ-று.

உ-ம். உழுது சாத்தன் வநதான்; உழுதேரொடு வந்தான். எ-ம. கொலலுங்காட்டுள் யானை; கொன்ற காட்டுள் யானை. எ-ம். வரும்.

சிவணுங்குறிப்பின் வரையாரெனவே, சிவணுக்குறிப்பின் வரைபவெனபதாம். சிவணுக்குறிப்பினவாவன, ஒருதலையாக எச்சத்தோடியைநது நில்லாது நின்ற சொல்லொடுந் தாமேயியைநது கவர்பொருட்படுவன். உண்டு விருந்தொடு வந்தான்; 'வல்ல மெறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி' என்றவழி, விருந்தொடுண்டென வினையெச்சத்தோடுமியைதலிற் பொருள் கவர்க்கும்; வல்லமெறிதல்

நல்லிளங்கோசர்க்கும் ஏற்குமாகலின் ஆண்டும் பொருள்கவ ராக்கும்; அன்ன சிவணுக்குறிப்பினவாம்.

எச்சொல்லாயினுமென்றதனுன், உழுதோடிவந்தான்; கவளங்கொள்ளாக் களித்த யானை என எச்சமும் இடைநிலை யாதல் கொள்க.

சாத்தனுண்டு வந்தான்; அறத்தையரசன் விரும்பினுன்; உண்டான் வந்த சாத்தன் என ஏனைத்தொடர்க்கண்ணும் பிற சொல் இடைநிற்றலொக்குமாயினும், எச்சத்தொடர்க்கு இடைநிற்பனவற்றின்கண் ஆராய்ச்சியுடைமையாறகூறினுர். ()

உ௩அ. அவற்றுள்,

> செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
> மெய்யொடுங் கெடுமே யீற்று மிசை யுகர
> மவ்விட னறித லென்மனுர் புலவர்.

இ - ள். மேற்சொல்லப்பட்ட எச்சங்களுட்செய்யுமென்னும் பெயரொச்சத்திற்கு ஈற்றுமிசை நின்ற உகரந் தன்னுனூரப்பட்ட மெய்யொடுங்கெடுமிடமறிக. எ-று.

கெடுமிடமறிகவென்றது, அவ்வீற்றுமிசையுகரம் யாண்டுங் கெடாது வரையறுக்கவும்படாது சான்ருேர்வழக்கினுள்ளும் செய்யுளுள்ளும் வந்தவழிக் கண்டுகொள்கவென்றவாறு.

உ - ம். வாவும்புரவி, போகும்புழை என்பன, ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங்கெட, வாம்புரவி, போம்புழை என நின்றன. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

செய்யுமென்னும் பெயரொஞ்சுகிளவிக்கு ஈற்றுமிசையுகர மெய்யொடுங்கெடுமெனவே, செய்யுமென்னுமுற்றுச்சொற்கு ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங்கெடும் மெய்யொழித்துங் கெடுமென்பதாம். உ-ம். 'அம்ப லூரு மவனொடு மொழிமே;' 'சார லுடைவென் ருேழியுங் கலுழ்மே' என வரும். பிறவுமன்ன. (சக)

உ௩௯. செய்தெ னெச்சத் திறந்த கால
மெய்திட னுடைத்தே வாராக் காலம்.

இ - ள். செய்தென்னும் வினையெச்சத்தினது இறந்தகாலம் வாராக்காலத்தை எய்துமிடமுடைத்து. எ-று.

ஈண்டுச் செய்தெனெச்சத்திறந்தகாலமென்றது முடிபாய் வரும் வினைச்சொல்லானுணர்த்தப்படுந் தொழிற்கு அவ்வெச்சத்தானுணர்த்தப்படுந்தொழில் முன்னிகழ்தலை. அது வாராக்காலமெய்துதலாவது, அம்முன்னிகழ்வு சிதையாமல அவ்வெச்சம் எதிர்காலத்து வருதல்.

உ - ம். நீயுண்டு வருவாய்; உழுது வருவாய் எனச் செய்தெனெச்சம் பொருள் சிதையாமல் எதிர்காலத்து வந்தவாறு கண்டுகொள்க.

எய்திடனுடைத்தே வாராக்காலமென்றதனன், உண்டு வந்தான், உழுது வந்தான் என அவ்வெச்சம் இறந்தகாலத்து வருதல் இலக்கணமென்பதாம்.

இறந்தகாலத்துச்சொல் எதிர்காலத்து வந்ததாயினும் அமைகவெனக் காலவழுவமைத்தவாறு. (சஉ)

உசо. முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை
யெம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப்பொதுச்சொற் கிளத்தல்வேண்டும்.

இ - ள். மூன்றுகாலத்தும் உளதாம் இயல்பையுடைய எல்லாப்பொருளையும் நிகழ்காலத்துப் பொருணிலைமையுடைய செய்யுமென்னுஞ்சொல்லாற்கிளக்க. எ-று.

முந்நிலைக்காலமுந்தோன்று மியற்கையெம்முறைப்பொருளுமாவன மலையது நிலையும் ஞாயிறு திங்களதியக்கமுமுதலாயின. அவற்றை இறந்தகாலச்சொல்லானும், எதிர்காலச்சொல்லானும், ஏனைநிகழ்காலசசொல்லானும் சொல்லாது, இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் அகப்படுத்து மூனறு காலத்திற்கும் பொதுவாய் நிற்குஞ் செய்யுமென்னுஞ்சொல்லாற்சொல்லுக. எ-று.

பொதுச்சொற்கிளத்தல்வேண்டுமெனவே, முற்றுனும் பெயரெச்சத்தானுங்கிளக்கவென்பதாம்.

உ - ம். மலை நிற்கும்; ஞாயிறியங்கும்; திங்களியங்கும். எ-ம். 'வெங்கதிர்க் கனலியொடு மதிவலந் திரிதருந் தண்கடல் வையத்து.' எ-ம். வரும்.

நிகழ்காலச்சொல்லாயினும் ஒருகாற்பொதுவாகலுடைமையாற்பொதுச்சொலென்றார்.

நிகழ்காலச்சொல் இறந்தகாலமும் எதிர்காலமுமுணர்த்துதல் வழுவாயினும் அமைகவென அமைத்தவாறு. (சஙு)

உசக. வாராக் காலத்து நிகழுங் காலத்
தோராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
யிறந்தகா லத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள வென்மனார் புலவர்.

இ - ள். எதிர்காலத்தும் நிகழ்காலத்தும் ஒருபடியாக வரும் வினைச்சொற்பொருண்மை இறந்தகாலத்தாற்சொல்லுதல் விரைவுபொருளையுடைய. எ-று.

சோறு பாணித்தவழி உண்ணுதிருந்தானைப் போகல்வேண்டுங்குறையுடையானொருவன் இன்னுமுண்டிலேயோ என்றவழி, உண்டேன் போந்தேன் என்னும்; உண்ணுநின்றானும் உண்டேன் போந்தேன் என்னும். ஆண்டு எதிர்காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் உரிய பொருளை விரைவுபற்றி இறந்தகாலத்தாற்கூறியவாறு கண்டுகொள்க.

தொழில் இறந்தனவல்லவேனும், சொல்லுவான்கருத்துவகையான் இறந்தனவாகச் சொல்லப்படுதலின், குறிப்பொடு கிளத்தலென்றார்.

எதிர்காலத்துப் பொருண்மையைக் கிளத்தலும், நிகழ்காலத்துப் பொருண்மையைக் கிளத்தலும் என இரண்டாகலான், விரைந்தபொருளவென்றார்.

இதுவுங்காலவழுவமைதி. (சச)

உ௪உ. மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
யப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும்பொருட்டாகும்மே.

இ - ள். மிக்கதன்கணிகழும் வினைச்சொல்லை நோக்கித் திரிபின்றிப் பயக்கும் அம்மிக்கதனது பண்பைக் குறித்து வரும் வினைமுதற்சொல், சுட்டிச் சொல்லப்படுவதோர் வினைமுதலில்லாதவிடத்து, நிகழ்காலத்தான் யாப்புறுத்த பொருளையுடைத்தாம். எ-று.

முயற்சியும் தெய்வமுமாகிய காரணங்களுட்டெய்வஞ்சிறந்தமையான், அதற்குக் காரணமாகிய தவஞ்செய்தல் தாயைக் கோறன் முதலாகிய தொழிலை மிக்கதென்றார். தெய்வமாய இருவினை மிக்கதன்கண் வினைச்சொல்லாவன, தவஞ்செய்தான், தாயைக் கொன்றான் என்னுந்தொடக்கத்தன. அப்பண்பு குறித்த வினைமுதற்கிளவியாவது, சுவர்க்கம் புகும், நிரயம் புகும் என்பன. யாவன் றவஞ்செய்தான் அவன் சுவர்க்கம் புகும்; யாவன்றாயைக் கொன்றான் அவனிரயம் புகும். எ-ம். ஒருவன்றவஞ்செய்யிற்சுவர்க்கம்புகும்; தாயைக் கொல்லினிரயம் புகும். எ-ம். மிக்கதன்வினைச்சொனோக்கி அம்மிக்கதன்றிரிபில் பண்பு குறித்த வினைமுதற்கிளவி நிகழ்காலத்தான் வந்தவாறு கண்டுகொள்க.

அப்பண்பு குறித்தவென்பதற்கு மிக்கதாகிய இருவினைப்பயனுறுதல் அவ்வினைமுதற்கியல்பென்பது குறித்தவென்று உரைப்பினுமமையும்.

பொதுவகையாகக் கூறுது ஒருவற்சுட்டியவழி, அவன்றவஞ்செய்து சுவர்க்கம் புக்கான், புகுவன் என ஏனைக்காலத்தாற்சொல்லப்படுதலின், அவ்வாறு ஒருவற்சுட்டுதலை நீக்குதற்கு, வினைமுதற்கிளவியாயினுஞ்செய்வதில்வழியென்றார். செய்வதென்பது செய்கையையென்பாருமுளர்.

வினைச்சொலென்றாரேனும், தவஞ்செய்தான் சுவர்க்கம் புகும்; தாயைக் கொன்றானிரயம் புகும் என வினைப்பெயராய் வருதலுங்கொள்க.

தவஞ்செய்யிற்சுவர்க்கம் புகுவன் என எதிர்காலத்தாற் சொல்லப்படுவதனை நிகழ்காலத்தாற்சொல்லுதல் வழுவாயினும் அமைகவென வழுவமைத்தவாறு.

அஃதேல், "இயற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை" என்புழி இது தெளிவாயடங்குமெனின்;—அற்றன்று: இயற்கையுந்தெளிவும் சிறந்த காரணமாகிய தெய்வத்தானாக பிறிதொன்றானாக திரிதலுடைய, இது திரிபின்றாகலானும், இறந்த காலத்தாற் சொல்லப்படாமையானும், ஆண்டடங்காதென்பது. இதனது திரிபின்மையும் அவற்றது திரிபுடைமையும் விளக்குதற்கன்றே, ஆசிரியர் மிக்கதன்மருங்கின் என்றும் "இயற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை" என்றும் ஓதுவாராயிற்றென்பது. (௪௫)

௨௪௩. இதுசெயல் வேண்டு மென்னுங் கிளவி
யிருவயி னிலையும் பொருட்டா குமே
தன்பா லானும் பிறன்பா லானும்.

இ-ள். இது செயல்வேண்டுமென்பது பட வருஞ்சொல், தன்பாலானும் பிறன்பாலானுமென ஈரிடத்தும் நிலைபெறும் பொருண்மையையுடைத்தாம். எ-று.

தானென்றது செயலது வினைமுதலை.

ஓதல்வேண்டும் என்றவழி வேண்டுமென்பது ஓதற்கு வினைமுதலாயினாற்கும் அவனோதலை விரும்புந் தந்தைக்கும் ஏற்றவாறு கண்டுகொள்க.

இதனான் ஒருசார்வினைச்சொற்பொருள்படும் வேறுபாடுணர்த்தினார்; உணர்த்தாக்காற் றெற்றென விளங்காமையினென்பது. (௪௬)

௨௪௪. வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொ
லெதிர்மறுத் துணர்த்துதற் குரிமையு முடைத்தே.

இ-ள். துணிந்து திட்பமெய்துதற்கு வரும் வினாவையுடைய வினைச்சொல் வினைநிகழ்வுணர்த்தாது எதிர்மறுத்துணர்த்துதற்கு உரித்தாதலுமுடைத்து. எ-று.

வினாவாவன ஆ, ஏ, ஓ என்பன.

கதத்தாஞக களியாஞக ஒருவன்றெருளாது ஒருவனை வைதான்; அவன்றெருண்டக்கால், வையப்பட்டான் நீயென்னை வைதாய் என்றவழித் தான் வைதவையுணராமையான் வைதேனேயென்னும்; ஆண்டவ்வினாவொடு வந்த வினைச்சொல் வைதிலேனென்னும் எதிர்மறைப்பொருள் பட வந்தவாறு கண்டுகொள்க. வினாவொடு வந்த வழி எதிர்மறைப்பொருள் படுமாறென்னையெனின்; — சொல்லுவான் குறிப்புவகையான் எதிர்மறைப்பொருளுணர்த்திற்றென்க. எதிர்மறைப்பொருளுணர்த்திற்று ஆண்டேகாரமாகலின், வினைச்சொல் எதிர்மறுத்துணர்த்துதற்குரிமையுமுடைத்தென்றல் நிரம்பாதெனின்;—எதிர்மறையாயின பயன்றருவது வினாவுடைவினைச்சொலென்றுராகலின், அஃதெதிர்மறுத்தல் யாண்டையதென மறுக்க.

வினைநிகழ்வுணர்த்தற்பாலது வினையது நிகழாமையுணர்த்துதல் வழுவாயினும் அமைகவென வினைச்சொற்பற்றி மரபுவழுவமைத்தவாறு. (எஎ)

உ௪ரு. வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
யிறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்று
மியற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை.

இ - ள். எதிர்காலத்துக்குரிய வினைச்சொற்பொருண்மை, இயற்கையாதலும் தெளியப்படுதலும் சொல்லுமிடத்து, இறந்தகாலச்சொல்லானும் நிகழ்காலச்சொல்லானும் விளங்கத் தோன்றும். எ-று.

இயற்கையென்பது பெற்றி முதலாயினவற்றுனுணரப்படுவது. தெளிவு நூற்றெளிவான் வருவது.

ஒருகாட்டின்கட்போவார் கூறைகோட்படுதல் ஒருதலையாகக்கண்டு இஃதியற்கையென்று துணிந்தான், கூறைகோட்படாமுன்னும், இக்காட்டுட்போகிற்கூறைகோட்பட்டான், கூறைகோட்படும் என்னும். எறும்பு முட்டைகொண்டு தெற்

றியேறின் மழை பெய்தல் நூலாற்றெளிந்தான், அவை முட்டைகொண்டு தெற்றியேறியவழி, மழை பெய்யாதொன்னும், மழை பெய்தது, மழை பெய்யும் என்னும். ஆண்டு எதிர்காலத்திற்குரிய பொருள் இறந்தகாலத்தானும் நிகழ்காலத்தானும் தோன்றியவாறு கண்டுகொள்க.

இது காலவழுவமைத்தவாறு. (சஅ)

உசகூ. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே.

இ - ள். செயப்படுபொருளைச் செய்த வினைமுதல்போலத் தொழிற்படச் சொல்லுதலும் வழக்கின்கண் இயலுமரபு. எ-று.

வழக்கியன்மரபெனவே, இலக்கணமன்றென்றவாரும்.

உ - ம். திண்ணை மெழுகிற்று; கலங்கழீஇற்று என வரும்.

திண்ணை மெழுகப்பட்டது; கலங்கழுவப்பட்டது என்று மன்னுகற்பாலது அவ்வாய்பாடன்றி வினைமுதல்வாய்பாட்டான் வருதலும் வழக்கினுளுண்மையான் அமைகவென வினைச்சொற்பற்றி மரபுவழுவமைத்தவாறு.

செயப்படுபொருளை வினைமுதல்வாய்பாட்டாற் கிளத்தலேயன்றி, எளிதினட்டப்படுதனேக்கி அரிசிதானேயட்டது எனச் செயப்படுபொருளை வினைமுதலின்றொழிறபடக் கிளத்தலும் வழக்கியன்மரபென்றற்கு, தொழிற்படக்கிளத்தலுமென்றார். இதனைக் கருமகருத்தனென்ப. (சகூ)

உசஎ. இறப்பே யெதிர்வே யாயிரு காலமுஞ்
சிறப்பத் தோன்று மயங்குமொழிக் கிளவி.

இ - ள். இறப்பும் எதிர்வுமாகிய இரண்டுகாலமும் மயங்குமொழிப்பொருளாய் விளங்கத் தோன்றும். எ-று.

உ-ம். இவர் பண்டிப்பொழிலகத்து விளையாடுவர்; நாளையவன் வாளொடு வெதண்டு வந்தான் பின் நீயென் செய்குவை என வரும்.

அவ்விரண்டுகாலமும் மயங்குமொழிப்பொருளாய்த் தோன்றுமெனவே, அவற்றையுணர்த்துஞ்சொன் மயங்குமென்றவாறும். அவை பெயரும் வினையுமாய் மயங்குதலின், மயங்குவினைச்சொற்கிளவியென்னாது, பொதுப்பட மயங்குமொழிக்கிளவியென்றார்.

தோன்றுமென்பது பெயரெச்சமெனினுமிழுக்காது.

பண்டு விளையாடினார் என்றும், நாளை வருவன் என்றுமன்றே கூறற்பாலது; அவ்வாறன்றித் தம்முண்மயங்கக் கூறினுமமைகவெனக் காலவ்ழுவமைத்தவாறு. (௫0)

உ௪௮. ஏனைக் காலமு மயங்குதல் வரையார்.

இ - ள். இறப்பும் எதிர்வுமேயன்றி நிகழ்காலமும் அவற்றொடு மயங்கும். எ-று.

உ - ம். இவள் பண்டிப்பொழிலகத்து விளையாடும். எ-ம். நாளை வரும். எ-ம். வரும்.

சிறப்பத்தோன்றுமெனவும் மயங்குதல்வரையாரெனவும் கூறினார்; இறப்பும் எதிர்வும் மயங்குதல் பயின்று வருதலானும், அத்துணை நிகழ்காலமயக்கம் பயின்று வாராமையானுமென்க.

மூன்றுகாலமுந் தம்முண்மயங்குமென்றோனும், ஏற்புழியல்லது மயங்காமை கொள்க. ஏற்புழிக்கொள்ளவே, வந்தானை வருமென்றலும் வருவானை வந்தானென்றலுமென இவை முதலாயினவெல்லாம் வழுவென்பதாம். பிறவுமன்ன. (௫௧)

வினையியன் முற்றிற்று.

---

ஏழாவது

# இடையியல்.

உ௪௯. இடையெனப் படுப பெயரொடும் வினையொடு
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே.

நிறுத்த முறையானே இடைச்சொலுணர்த்திய வெடுத்துக்கொண்டார். அதனுன் இவ்வோத்து இடையியலென்னும் பெயர்த்தாயிற்று. மொழிக்கு முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பான்மையும் இடை வருதலின் இடைச்சொல்லாயிற்று.

இச்சூத்திரத்தின் பொருள். இடைச்சொல்லென்று சொல்லப்படுவன பெயரொடும் வினையொடும் வழக்குப்பெற்றியலும்; தாமாக நடக்குமியல்பில. எ-று.

"இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு—மவற்றுவழி மருங்கிற் றோன்றும்" என்றதனுன் இடைச்சொற் பெயரும் வினையுஞ்சார்ந்து வருதல் பெறப்பட்டமையால், பெயரொடும் வினையொடு நடைபெற்றியலுந் தமக்கியல்பிலவென்றது, ஈண்டுப் பெயரும் வினையுமுணர்த்தும் பொருளைச் சார்ந்து நின்று அவற்றை வெளிப்படுப்பதல்லது தமக்கெனப் பொருளுடையவல்லவென்றவாறும்.

உ-ம். 'அதுகொ றோழி காம நோயே.' எ-ம். 'வருகதில் லம்மவெஞ் சேரி சேர.' எ-ம். பெயரும் வினையுஞ்சார்ந்து அப்பொருளை வெளிப்படுத்தவாறு கண்டுகொள்க.

சார்ந்து வருதல் உரிச்சொற்குமொத்தலின், தமக்கெனப் பொருளின்மை இடைச்சொற்குச் சிறப்பிலக்கணமாம். தமக்கியல்பிலவேயென்றது, சார்ந்தல்லது வாராவென வலியுறுத்தவாறு.

பெயரொடும் வினையொடுநடைபெற்றியலுந்தமக்கியல்பில வெனப் பொதுப்படக் கூறியவதனுல், சாரப்படுஞ்சொல்லின் வேறுய் வருதலேயன்றி, உண்டனன், உண்டான். எ-ம். என்மனுர், என்றிசினோர். எ-ம். அருங்குரைத்து. எ-ம். அவற்றிறுதிக்குறுப்பாய் வருதலுங்கொள்க.

இனி ஒருரை:—"இடைச்சொற்கிளவியும் உரிச்சொற்கிளவியும் அவற்றுவழிமருங்கிற்றோன்றும்" என்பதற்கு, சார்ந்து வருதலான் இடைச்சொல்லும் உரிச்சொல்லுஞ் சிறப்பில இவையுட்படச் சொன்னுன்காமென்பது கருத்தாகலின், இடை

ச்சொற் பெயரும் வினையுஞ்சார்ந்து வருமென்னும் வேறுபாடு அதனாற்பெறப்படாது. என்னை? இடைச்சொற் பெயர் சார்ந்தும் உரிச்சொல் வினை சார்ந்தும் வரினும் அவற்றது சிறப்பின்மையுஞ் சொன்னான்காதலும் உணர்த்துதல் சிதையாதாகலான். அதனான் இடைச்சொற்பெயரும் வினையுஞ்சார்ந்து வருமென்பது இச்சூத்திரத்தாற் கூறல்வேண்டுமென்ப. அவ்வுரையுரைப்பார் "பெயரினும் வினையினு மெய்தடு மாறி" என்பதற்கும் பெயரும் வினையுஞ்சார்ந்தென்று பொருளுரைப்ப.

உருo. அவைதாம்,

புணரிய னிலையிடைப் பொருணிலைக் குதநவும்
வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயி னுருபா குநவு
மசைநிலைக் கிளவி யாகி வருநவு
மிசைநிறைக் கிளவி யாகி வருநவுந்
தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவு
மொப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலை.

இ - ள். மேற்சொல்லப்பட்ட இடைச்சொற்கடாம், இரண்டுசொற்புணருமிடத்து அப்பொருணிலைக்குதவுவனவும், வினைச்சொல்லை முடிக்குமிடத்துக் காலப்பொருளவாய் வருவனவும், செயப்படுபொருண்முதலாகிய வேற்றுமைப்பொருட்கண் உருபென்னுங்குறியவாய் வருவனவும், பொருளுடையவன்றிச் சார்த்திச் சொல்லப்படுந்துணையாய் வருவனவும், வேறுபொருளுணர்த்தாது இசைநிறைத்தலே பொருளாக வருவனவும், தத்தங்குறிப்பாற்பொருளுணர்த்துவனவும், ஒப்புமை தோன்றுதவழி அவ்வொப்புமைப்பொருள் பயப்பனவுமெனக் கூறப்பட்ட ஏழியல்பையுடைய, சொல்லுமிடத்து. எ-று.

புணரியனிலை புணரியலது நிலை. ஆண்டுப் பொருணிலைக்குதவுதலாவது, எல்லாவற்றையும் என்புழி வற்றுச்சாரியை நிலைமொழிப்பொருள் அஃறிணைப்பொருளென்பது பட வரு

தலும், எல்லாநம்மையும் என்புழி நம்முச்சாரியை அப்பொருள் தன்மைப்பன்மையென்பது பட வருதலுமாம். அல்லனவும் தாஞ் சார்ந்து வரும் மொழிப்பொருட்கு உபகாரமுடையவாய் வருமாறேற்றது கொள்ளப்படும். அல்லாக்கால், சாரியை மொழியாகாவென்பது.

வினைச்சொல் ஒருசொல்லாயினும் முதனிலையும் இறுதிநிலையும் இடைச்சொல்லுமாகப் பிரித்துச் செய்கை செய்து காட்டப்படுதலின், வினைசெயன்மருங்கினென்றார். அம்முடிபுணர்த்தாமைக்குக் காரணம் "புணரிய னிலையிடை யுணரத்தோன்று" என்புழிச் சொல்லப்பட்டது. அவற்றுள் ஒருசாரன பாலுணர்த்தாமையானும், எல்லாங் காலமுணர்த்துதலானும், காலமொடு வருநவுமென்றார்.

வேற்றுமைப்பொருளவாய் வருவன பிறசொல்லுமுளவாகலின், அவற்றை நீக்குதற்கு உருபாகுநவுமென்றார். பிற சொல்லாவன 'கண்ணகன் ஞாலம்,' 'ஊர்க்கா னிவந்த பொதும்பர்' என ஏழாம்வேற்றுமைப்பொருட்கண் வருங் கண் கால் முதலாயினவும், 'அனையை யாகன் மாறே;'. 'சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே;' 'இயல்புளி கோலோச்சு மன்னவன்' என மூன்றாம்வேற்றுமைப்பொருட்கண் வரும் மாறு உளி எனபனவும், அன்ன பிறவுமாம். அஃதேல், வேற்றுமையுருபுமென்றேதுவார்; ஓதவே, இவை நீங்குமெனின்;—அஃதொக்கும். அவைதம்மைபுந்தமூஇக்கோட்டற்கு வேற்றுமைப்பொருள்வயினென்றார். அவை வருங்கால் நிலைமொழியுருபிற்கேற்ற செய்கை ஏற்புழிப் பெறுதலுமுடைமையின, உருபாகுநவுமெனறார். இஃதிருபொருளுணர்த்தலான் இருதொடராகக் கொளக.

அசைத்தல் சார்த்துதல். பொருளுணர்த்தாது பெயரொடும் வினையொடுஞ் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்றலின், அசைநிலையாயிறறு. அவை அந்தின்முதலாயின. 'புகழ்ந்திகு மல்லரோ பெரிதே;' 'உரைத்திசினோரே' எனச் சார்நத மொழியை வேறுபடுத்து நிற்றலின், அசைநிலைச் சொல்லாயினவென்பாருமுளர்.

செய்யுட்கண் இசை நிறைத்து நிற்றலின், இசைநிறையா யின.

குறிப்புச் சொல்லுவான்கண்ணதாயினும் அவன் குறித்த பொருளைத் தாங்குறித்து நிற்றலின், தத்தங்குறிப்பினென் றார். சொல்லுவான் குறித்த பொருளைத் தாம் விளக்குமென வே, 'கூரியதோர்வாள்' என மன்னுனன்றி ஓசைவேறுபாட் டான் ஒருகாற்றிட்பமின்றென்னுந தொடக்கத்து ஒழியிசை ப்பொருடோன்றலும் பெறப்படும். பொருட்கும் பொரு ளைப் புலனாகவுடைய உணர்விற்கும் ஒற்றுமை கருதிப் பொ ருளுணர்வைப் பொருளென்றார். "மிகுதி செய்யும் பொருள" என்பது முதலாயினவற்றிற்கும் ஈதொக்கும்.

ஒக்குமென்னுஞ்சொல்லன்றே ஒப்புமையுணர்த்துவது; அ ச்சொல் ஆண்டின்மையான் ஒப்புமை தோன்றுமையான், ஒ ப்பில்வழியாலென்றார்; உவமையொடு பொருட்கு ஒப்பில்லை யென்றாரல்லரென்பது. ஒக்குமென்னுஞ்சொல்லை ஒப்பென் றரென்பாருமுளர். ஒப்பில்வழியாற்பொருள் செய்குநவாவ ன, அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப என்பன முதலாகப் பொரு ளதிகாரத்துக் கூறப்பட்ட முப்பத்தாறனுள் ஒக்குமென்ப தொழிய ஏனையவாம்.

சாரியையும், வேற்றுமையுருபும், உவமவுருபும், குறிப்பா ற்பொருளுணர்த்துமாயினும், புணர்ச்சிக்கண் உபகாரப்படுத லும் வேற்றுமைத்தொகைக்கும் உவமத்தொகைக்கும் அவ் வுருபுபற்றி இலக்கணங்கூறுதலும் முதலாகிய பயனோக்கி, இவற்றை வேறு கூறினர்.

இடைச்சொலேழனுள்ளும் முதனின்ற மூன்றும் மேலேயு ணர்த்தப்பட்டமையான் முன் வைத்தார். ஒப்பில்வழியாற் பொருள் செய்குந முன்னருணர்த்தப்படுதலின் இறுதிக்கண் வைத்தார். ஒழிந்த மூன்றும் இவ்வோத்தின்கண் உணர்த்தப் படுதலின் இடை வைத்தார். (உ)

உருக. அவைதாம்,

முன்னும் பின்னு மொழியடுத்து வருதலுந்
தம்மீறு திரிதலும் பிறிதவ ணிலையலு
மன்னவை யெல்லா முரிய வென்ப.

இ - ள். மேற்சொல்லப்பட்ட இடைச்சொல், இடை வரு தலேயன்றி, தம்மாற்சாரப்படுஞ்சொற்கு முன்னும் பின்னும் வருதலும், தம்மீறு வேறுபட்டு வருதலும், பிறிதோரிடைச் சொல் ஓரிடைச்சொன்முன் வருதலுமாகிய அத்தன்மைய வெல்லாமுரிய. எ-று.

உ - ம். 'அதுமன்.' எ-ம். 'கேண்மியா.' எ-ம். சாரப்படுமொழியை முன்னடுத்து வந்தன. 'கொன்னூர்.' எ-ம். 'ஓஒவினிதே.' எ-ம். பின்னடுத்து வந்தன. 'உடனுயிர் போகுக தில்ல' என ஈறு திரிந்து வந்தது. 'வருகதில் லம்ம வெஞ்சேரி சேர' என்பது பிறிதவணின்றது.

அவைதாமெனப் பொதுவகையானோக்கினோனும், இவ்விலக்கணம் இவ்வோத்தின்கணுணர்த்தப்படும் அசைநிலை முதலாகிய மூன்றற்குமெனக் கொள்க.

அன்னவையெல்லாமென்றதனான், 'மன்னைச்சொல்' 'கொன்னைச்சொல்' எனத் தம்மையுணர நின்றவழி ஈறு திரிதலும், 'னகாரைமுன்னர்' என எழுத்துச்சாரியை ஈறு திரிதலுங்கொள்க. (௩)

உருஉ. கழிவே யாக்க மொழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே.

இவ்வோத்தின்கணுணர்த்தப்படும் மூவகையிடைச்சொல்லுள், தத்தங்குறிப்பாற்பொருள் செய்குந பொருளுணர்த்து தற்சிறப்புப்பரப்புடைமையான் அதனை முன்னுணர்த்துகின்றார்.

இ - ள். கழிவு குறித்து நிற்பதும், ஆக்கங்குறித்து நிற்பதும், ஒழியிசைப்பொருண்மை குறித்து நிற்பதுமென மன்னைச்சொன்மூன்றும். எ-று.

உ - ம், 'சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே' என்புழி மன்னைச்சொல் இனி அது கழிந்ததென்னும் பொருள் குறித்து நின்றது. 'பண்டு காடும னின்றுகயல் பிறழும் வயலாயிற்று' என்புழி அஃதாக்கங்குறித்து நின்றது. 'கூரியதோர்வாண் மன்' என்புழித் திட்பமின்றென்றானும் இலக்கணமின்றென் றானும் எச்சமாய் ஒழிந்த சொற்பொருண்மை நோக்கி நின் றது. (ச)

உருந. விழைவே கால மொழியிசைக் கிளவியென் றம்மூன் றென்ப தில்லைச் சொல்லே.

இ - ள். விழைவு குறித்து நிற்பதும், காலங்குறித்து நிற்ப தும், ஆண்டொழிந்து நின்ற சொற்பொருளை நோக்கி நிற்ப துமெனத் தில்லைச்சொன் மூன்றாம். எ-று.

உ - ம். 'வார்ந்திலங் கும்மை யெயிற்றுச் சின்மொழி—யரி வையைப் பெறுகதில் லம்ம யானே' என அவளைப் பெறுதற் கணுளதாகிய விழைவின்கண் வந்தது. 'பெற்றாங் கறிகதில் லம்மவிவ் வூரே' எனப் பெற்ற காலத்தறிகவெனக் காலங்கு றித்து நின்றது. 'வருகதில் லம்ம வெஞ்சேரி சேர' என வந் தக்கால் இன்னது செய்வலென்னும் ஒழியிசைப்பொருணோ க்கிற்று. (ரு)

உருசு. அச்சம் பயமிலி காலம் பெருமையென் றப்பா னான்கே கொன்னைச் சொல்லே.

இ - ள். அச்சப்பொருளதும், பயமின்மைப்பொருளதும், காலப்பொருளதும், பெருமைப்பொருளதுமெனக் கொன் னைச்சொன்னான்காம். எ-று.

உ - ம். 'கொன்முனை யிரவூர்போலச் - சிலவாகுக நீ துஞ்சு நாளே' என்புழி அஞ்சி வாழுமூர் எனவும், 'கொன்னே கழிந் தன் றிளமை' என்புழிப் பயமின்றிக் கழிந்தது எனவும், 'கொன்வரல் வாடை நினதெனக் கொண்டேனோ' என்புழி க் காதலர் நீங்கிய காலமறிந்து வந்த வாடை எனவும், 'கொ

ன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே' என்புழிப் பேரூர் துஞ்சினும் எனவும், கொன்னைச்சொல் நான்குபொருளும் பட வந்தவாறு கண்டுகொள்க. (௬)

உ௫௫. எச்சஞ் சிறப்பே யைய மெதிர்மறை
முற்றே யெண்ணே தெரிநிலை யாக்கமென்
றப்பா லெட்டே யும்மைச் சொல்லே.

இ - ள். எச்சங்குறிப்பது முதலாக ஆக்கங்குறிப்பதீறாக உம்மைச்சொல் எட்டாம. எ-று.

உ - ம். சாத்தனும் வந்தான் என்னுமும்மை, கொற்றனும் வந்தானென்னும் எச்சங்குறித்து நிற்றலின், எச்சவும்மை: கொற்றனும் வந்தான் என்பதூஉம், இறந்த சாத்தன் வரவாகிய எச்சங்குறித்து நிற்றலின், எச்சவும்மை. 'குறவரு மருளுங் குன்றத்துப் படினே' என்பது குன்றத்து மயங்காதியங்குதற்கட் குறவர் சிறந்தமையாற் சிறப்பும்மை. "ஒன்றிரப்பான் போ லிளிவந்துஞ் சொல்லுமுலகம்—புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்—வல்லாரை வழிபட்டொன்றறிந் தான்போ—னல்லார்கட் டோன்று மடக்கமு முடைய—னில்லோர் புன்க ணீகையிற் றணிக்க—வல்லான் போல்வதோர் வண்மையுமுடையன்" என்புழி இன்னனென்று துணியாமைக்கண் வருதலின் ஐயவும்மை. சாத்தன் வருதற்கு முரியன் என்பது, வாராமைக்குமுரியனென்னும் எதிர்மறையை ஒழிபாகவுடைத்தாய் நிற்றலின், எதிர்மறையும்மை. தமிழ்நாட்டுமூவேந்தரும் வந்தார் என எஞ்சாப்பொருட்டாகலான் முற்றும்மை. 'நிலனு நீருந் தீயும் வளியு மாகா யமுமெனப் பூதமைந்து' என்புழி எண்ணுதற்கண் வருதலின் எண்ணும்மை. இருநிலமடிதோய்தலிற் றிருமகளுமல்லள் அரமகளுமல்லள் இவள் யாராகும் என்றவழித் தெரிதற்பொருட்கண் வருதலிற் றெரிநிலையும்மை. திருமகளோ அரமகளோ என்னுது அவரை நீக்குதலின், ஐயவும்மையின் வேறுதலறிக. ஆக்கவும்மை வந்தவழிக் கண்டுகொள்க. உரையாசிரியர் நெடியனும் வலியனுமாயினுன் என்புழி உம்மை ஆக்கங்குறித்து நிற்றலின்

ஆக்கவும்மை யென்றார். "செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே" என்னுமும்மை, வழுவையிலக்கணமாக்கிக்கோடல் குறித்து நின்றமையின், ஆக்கவும்மையென்பாருமுளர். (எ)

உ௫௬. பிரிநிலை வினாவே யெதிர்மறை யொழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
யிருமூன் றென்ப வோகா ரம்மே.

இ - ள். பிரிநிலைப்பொருட்டாவது முதலாக ஓகாரம் அறுவகைப்படும். எ-று.

உ - ம். 'யானோ தேறேனவர் பொய்வழங்கலரோ' என்பது தேறுவார் பிறரிற்பிரித்தலிற் பிரிநிலையெச்சமாயிற்று. சாத்தனுண்டானோ என்பது வினாவோகாரம். யானோ கொள்வேன் என்பது, கொள்ளேனென்னு மெதிர்மறை குறித்து நிற்றலின், எதிர்மறையோகாரமாம். கொளலோ கொண்டான் என்பது, கொண்டுய்யப்போயினானல்லனென்பது முதலாய ஒழியிசை நோக்கி நிற்றலின், ஒழியிசையோகாரம். திருமகளோவல்லள் அரமகளோவல்லள் இவள் யார் என்றவழித் தெரிதற்கண் வருதலிற்றெரிநிலையோகாரம். ஓஒபெரியன் என்பது பெருமைமிகுதியுணர்த்தலிற சிறப்போகாரம். (அ)

உ௫எ. தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே
யீற்றசை யிவ்வைந் தேகா ரம்மே.

இ - ள். தேற்றேகாரமுதலாக ஏகாரமைந்து. எ-று.

உ - ம். உண்டேஎமறுமை எனத் தெளிவின்கண் வருதலிற்றேற்றேகாரம். நீயே கொண்டாய் என வினாப்பொருளுணர்த்தலின் வினாவேகாரம். அவருளிவனே கள்வன் எனப் பிரித்தலிற் பிரிநிலையேகாரம். நிலனே நீரே தீயே வளியே என எண்ணுதற்கண் வருதலின் எண்ணேகாரம். 'கடல்போற் றோன்றல் காடிறந் தோரே' என்பது செய்யுளிறுதிக்கண் வருதலின் ஈற்றசையேகாரம். 'வநடா வள்ளியங் காடிறந் தோரே' எனச் செய்யுளிடையும் வருதலின் ஈற்றசையென்பது மிகுதி நோக்கிச் சென்ற குறி. இஃதசைநிலையாயினும் ஏகார வேறுபாடாகலின் ஈண்டுக் கூறினார். (௯)

உ௫அ. வினையே குறிப்பே யிசையே பண்பே
யெண்ணே பெயரோ டவ்வறு கிளவியுங்
கண்ணிய நிலைத்தே யெனவென் கிளவி.

இ-ள். வினை முதலாகிய ஆறுபொருண்மையுங்குறித்து வரும் எனவென்னுமிடைச்சொல். எ-று.

உ-ம். 'மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்' என வினைப்பொருண்மையும், 'துண்ணெனத் துடித்தது மனம்' எனக் குறிப்புப்பொருண்மையும், ஒல்லெனவொலித்தது என இசைப்பொருண்மையும், வெள்ளென விளர்த்தது எனப் பண்புப்பொருண்மையும், நிலனென நீரெனத் தீயென வளியென என எண்ணுப்பொருண்மையும், 'அழுக்கா றெனவொரு பாவி' எனப் பெயர்ப்பொருண்மையுங் குறித்து எனவென்னுஞ்சொல் வந்தவாறு கண்டுகொள்க. (கο)

உ௫கூ. என்றென் கிளவியு மதனோ ரற்றே.

இ-ள். என்றென்னுமிடைச்சொல்லும் எனவென்பதுபோல அவ்வாறுபொருளுங்குறித்து வரும். எ-று.

உ-ம். 'நரைவரு மென்றெண்ணி.' எ-ம். 'விண்ணென்று விசைத்தது.' எ-ம். 'ஒல்லென் றொலிக்கு மொலிபுன லூரற்கு.' எ-ம். பச்சென்று பசுத்தது. எ-ம். நிலனென்று நீரொன்று தீயென்று. எ-ம். பாரியென்றொருவனுளன். எ-ம். வரும்.

உ௬ο. விழைவின் றில்லை தன்னிடத் தியலும்.

இ-ள். "அப்பான்மூன்றே தில்லைச்சொல்" என்று சொல்லப்பட்ட மூன்றனுள், விழைவின்கண் வருந் தில்லை தன்மைக்கணல்லது வாராது. எ-று.

தன்மைக்கண் வருதல் மேற்காட்டப்பட்டனவற்றுள்ளும் பிறண்டுங்கண்டுகொள்க. இ-ம் வரையறுத்தோதாமையின், விழைவின்றில்லை தன்மைக்கண் வருதலும் மேலே பெறப்பட்டதனைப் பின்னுங் கூறினார், ஏனையிடத்து வாராதென்று நியமித்தற்கென்பது. (கஉ)

உசுக. தெளிவி னேயுஞ் சிறப்பி னோவு
மளபி னெடுத்த விசைய வென்ப.

இ - ள். தெளிவின்கண் வரும் ஏகாரமுஞ் சிறப்பின்கண் வரும் ஓகாரமும் அளபான் மிக்க இசையையுடையவென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

அளபெடையாய் வருதல் மேற்காட்டப்பட்டனவற்றுள்ளும் பிறுண்டுங்கண்டுகொள்க. (கங)

உசுஉ. மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
யப்பா லிரண்டென மொழிமனார் புலவர்.

இ - ள். மற்றென்னுஞ்சொல் வினைமாற்றும் அசைநிலையுமென இரண்டாம். எ-று.

உ - ம். 'மற்றறிவா நல்வினை யாமிளையம்' என்றவழி அறஞ்செய்தல் பின்னறிவாமென அக்காலத்து வினைமாற்றுதலான் மற்றென்பது வினைமாற்றின்கண் வந்தது. 'அதுமற்றவலங் கொள்ளாது நொதுமற்கலுழும்' என அசைநிலையாய் வந்தது. கட்டுரையிடையும் மற்றோ என அசைநிலையாய் வரும். (கச)

உசுங. எற்றென் கிளவி யிறந்த பொருட்டே.

இ-ள். எற்றென்னுஞ்சொல் இறந்தபொருண்மைத்து.எ-று.

உ - ம். 'எற்றென் னுடம்பி னெழினலம்' என்பது என்னலமிறந்ததென்னும் பொருள்பட நின்றது. 'எற்றேற்ற மில்லாருள் யானேற்ற மில்லாதேன்' என்பதூஉம் இதுபொழுது துணிவில்லாருட்டுணிவில்லாதேன் யான் என்று துணிவிறந்ததென்பது பட நின்றது. (கரு)

உசுச. மற்றைய தென்னுங் கிளவி தானே
சுட்டுநிலை யொழிய வினங்குறித் தன்றே.

இ - ள். மற்றையதெனப் பெயர்க்கு முதனிலையாய் வரும் மற்றையென்னும் ஐகாரவீற்றிடைச்சொல், சுட்டப்பட்டதனை ஒழித்து, அதனினங்குறித்து நிற்கும். எ-று.

ஆடை கொணர்ந்தவழி அவ்வாடை வேண்டாதான் மற்றையது கொணவென்னும். அஃது அச்சுட்டியவாடையொழித்து அதறனமாகிய பிறவாடை குறித்து நின்றவாறு கண்டுகொள்க.

பெரும்பான்மையும் முதனிலையாய் நின்றல்லது அவ்விடைச்சொற்பொருள் விளக்காமையின், மற்றையதென்னுங்கிளவியென்றார். சிறுபான்மை மற்றையாடை எனத் தானேயும் வரும். மற்றையஃது, மற்றையவன் என்னுந்தொடக்கத்தனவும் அவ்விடைச்சொன்முதனிலையாய பெயர். (கசு)

உசுரு. மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்.

இ - ள். மன்றவென்னுஞ்சொல், தெளிவுபொருண்மையையுணர்த்தும். எ-று.

உ - ம். 'கடவு ளாயினு மாக—மடவை மன்ற வாழிய முருகே' என வரும். மடவையேயென்றவாறும். (கஎ)

உசுசு. தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே.

'முரசுகெழு தாயத் தரசே தஞ்சம்' எனத் தஞ்சக்கிளவி அரசு கொடுத்தலெளிதென எண்மைப்பொருளுணர்த்தியவாறு கண்டுகொள்க. (கஅ)

உசுஎ. அந்தி லாங்க வசைநிலைக் கிளவியென்
றாயிர ண்டாகு மியற்கைத் தென்ப.

இ - ள். அந்திலென்னுஞ்சொல், ஆங்கென்னும் இடப்பொருளுணர்த்துவதும், அசைநிலையுமென இரண்டாம். எ-று.

உ - ம். 'வருமே—சேயிழை யந்திற் கொழுநற் காணிய' எனபுழி ஆங்கு வருமென்றவாறும். 'அந்திற் கச்சினன் கழலினன்' என வாளாதே அசைத்து நின்றது. (கக)

உசுஅ. கொல்லே யையம்.

குற்றிகொல்லோ மகன்கொல்லோ எனக் கொல் ஐயத்துக்கண் வந்தவாறு. (உ0)

உ௬௯. எல்லே யிலக்கம்.

எல்லென்பது உரிச்சொனீர்மைத்தாயினும், ஆசிரியர் இடச்சொல்லாக ஓதினமையான், இடைச்சொல்லென்று கோடும்.

'எல்வளை' என எல்லென்பது இலங்குதற்கண் வந்தவாறு.

உ௭0. இயற்பெயர் முன்ன ராரைக் கிளவி
பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே.

இ - ள். இயற்பெயர்முன்னர் வரும் ஆரென்னுமிடைச்சொற் பலரறிசொல்லான் முடியும். எ-று.

ஈண்டியற்பெயரென்றது இருதிணைக்கும் அஃறிணையிருபாற்குமுரிய பெயரை.

உ - ம். பெருஞ்சேந்தனார் வந்தார்; முடவனார் வந்தார்; முடத்தாமக்கண்ணியார் வந்தார்; தந்தையார் வந்தார். எ-ம். நரியார் வந்தார். எ-ம். வரும்.

தாம், தான், எல்லாம், நீயிர், நீ என்னும் ஐந்துமொழிதுது அல்லாவியற்பெயரெல்லாவற்றுமுன்னரும் அஃறிணையியற்பெயரெல்லாவற்று முன்னரும் ஆரைக்கிளவி வருதலின், பெரும்பான்மை குறித்து இயறபெயர்முன்னவொன்றூர்.

நம்பியார் வந்தார்; நங்கையார் வந்தார் எனச் சிறுபான்மை உயர்திணைப்பெயர்முன்னர் வருசல் ஒன்றெனமுடித்தலென்பதனாற்கொள்க.

ஆரைக்கிளவி கள்ளென்பதுபோல ஒற்றுமைப்பட்டுப் பெயரீறாய் நிற்றலின், ஆரைக்கிளவி பலரறிசொல்லானமுடியுமென்றது அதனையீறாகவுடைய பெயர் பலரறிசொல்லானமுடியுமென்றவாறும்.

பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே என ஆரைக்கிளவியதியல்புணர்த்தவே, அஃது உயர்த்தற்பொருட்டாதலும், திணைவழுவும் பால்வழுவும் அமைத்தலும் பெற்றாம்.

ஒருமைப்பெயர்முன்னர் ஒருமை சிதையாமல் ஆரைக்கிளவி வந்து பலரறிசொல்லான் முடிதலின, ஒருவனைக் கூறும் பன்மைக்கிளவியின் வேறுதலறிக. (௨௨)

## உஎக. அசைநிலைக் கிளவி யாகுவழி யறிதல்.

இ - ள். ஆரைக்கிளவி அசைநிலையாமிடமறிக, எ-று.

உ - ம். 'பெயரி னாகிய தொகையுமா ருளவே.' எ-ம். 'எல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே.' எ-ம். வரும்.

ஆகுவழியறிதலென்றதனால், அசைநிலையாங்கால் உம்மை முன்னரும் உம்மீறறுவினைமுன்னருமல்லது வாராமையறிக. சிறுபான்மை பிறண்டு வருமேனுங்கொள்க. (உரு)

## உஎஉ. ஏயுங் குரையு மிசைநிறை யசைநிலை யாயிரண் டாகு மியற்கைய வென்ப.

இ - ள். ஏயென்னுமிடைச்சொல்லும், குரையென்னுமிடைச்சொல்லும் இசைநிறையும் அசைநிலையுமென ஒரோன்றிரண்டாம். எ-று.

உ - ம். 'ஏஎயிஃதொத்தனெனப் பொருன் கேட்டைக்காண்' என்பது இசைநிறை. ஏஎயென்சொல்லுக என்பது அசைநிலை. 'அளிதோ தானே யதுபெறலருங் குரைத்தே'என்பது. இசைநிறை. 'பலகுரைத் துன்பங்கள் சென்று படும்' என்பது அசைநிலை.

தொடர்மொழிமுதற்கட்பிரிந்து நின்றல்லது பெரும்பான்மையும் ஏகாரம் இசைநிறையும் அசைநிலையுமாகாமையின், சார்ந்த மொழியோடு ஒன்றுபட்டிசைத்து இடையும் இறுதியும் நிற்குநதேற்றேகாரமுதலாயினவற்றோடு ஒருங்கு கூறாது வேறு கூறினார்.

அஃதேல், இதனை நிரனிறைப்பொருட்டாகக் கொண்டு ஏ இசைநிறை குரை அசைநிலையென்றாரால் உரையாசிரியரெனின்; — அற்றன்று: மற்று அந்தில் என்பனபோலப் பொருள் வகையான் வேறுபடுவனவற்றை இரண்டாமென்பதல்லது, சொல்வகையான் இரண்டாகிய சொல்லை இரண்டாமென்றதனான் ஓர்பயனின்மையின், அவர்க்கது கருத்தன்றென்க. அல்

லதூஉம், ஒருசொல்லே இசைநிறையும் அசைநிலையுமாகலு டைமையான் அவற்றையுடன்கூறினரொன்றுக்கால் இசைநி றையும் அசைநிலையும் ஒருங்கு மயங்கக் கூறலாமாகலானும், அவர்க்கது கருத்தன்மையுணர்க. (உ௪)

உ௭௩. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.

இ-ள். மாவென்னுமிடைச்சொல் வியங்கோளைச் சார்ந்து அசைநிலையாய் வரும். எ-று.

உ-ம். 'புற்கை யுண்கமா கொற்கை யோனே' என வரும்.

உ௭௪. மியாயிக ஃமோமதி யிகுஞ்சின் னென்னு மாவயி னாறு முன்னிலை யசைச்சொல்.

இ-ள். மியா முதலாகிய ஆறும் முன்னிலைமொழியைச் சார்ந்து வரும் அசைச்சொல்லாம். எ-று.

உ-ம். கேண்மியா, சென்மியா. எ-ம். 'கண்பனி யான்றிக வென்றி தோழி.' எ-ம். 'காமஞ்செப் பாது கண்டது மொழிமோ.' எ-ம். 'உரைமதி வாழியோ வலவ.' எ-ம். 'மெல்லம் புலம்ப கண்டிகும்.' எ-ம். 'காப்பும் பூண்டிசிற் கடையும் போகல்.' எ-ம். வரும். (உ௬)

உ௭௫. அவற்றுள்,
இகுமுஞ் சின்னு மேனை யிடத்தொடுந்
தகுநிலை யுடைய வென்மனார் புலவர்.

இ-ள். மேற்கூறப்பட்ட ஆறனுள், இகுமுஞ் சின்னும் படர்க்கைச்சொல்லோடுந் தன்மைச்சொல்லோடும் பொருந்து நிலையுடையவென எய்தியதன்மேற்சிறப்புவிதி வகுத்தவாறு.

உ-ம். 'கண்டிகு மல்லமோ.' எ-ம். 'கண்ணும் படுமோ வென்றிசின் யானே.' எ-ம். தன்மைக்கண் வந்தன. 'புகழ்ந்திகு மல்லரோ பெரிதே.' எ-ம். 'யாரஃ தறிந்திசி னோரே.' எ-ம். படர்க்கைக்கண் வந்தன. (உ௭)

உ௭௬. அம்மகேட் பிக்கும்.

இ-ள். அம்மவென்னுமிடைச்சொல் ஒருவனை ஒருவன் ஒன்று கேளென்று சொல்லுதற்கண் வரும். எ-று.

உ - ம். 'அம்ம வாழி தோழி' என வரும்.

மியா இக முதலாகிய அசைநிலை ஒருபொருளுணர்த்தாவாயினும் முன்னிலைக்கணல்லது வாராமையான் அவ்விடமுணர்விக்குமாறுபோல, அம்மவென்பதூஉம் ஒருபொருளுணர்த்தாதாயினும் ஒன்றனைக் கேட்பிக்குமிடத்தல்லது வாராமையான் அப்பொருளுணர்விக்குமென்பது விளக்கிய, கேட்பிக்குமென்றார். (உஅ)

உஎஎ. ஆங்க வுரையசை.

இ - ள். ஆங்கவென்னுமிடைச்சொல் கட்டுரைக்கண் அசைநிலையாய் வரும். எ-று.

உ - ம். 'ஆங்கக்குயிலுமயிலுங்காட்டி' என வரும். (உகூ)

உஎஅ. ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்.

இ - ள். ஒப்புமையுணர்த்தாத போலிச்சொல்லும் ஆங்கவென்பதுபோல உரையசையாம். எ-று.

உ - ம். மங்கலமென்பதோரூருண்டுபோலும் என வரும். போலும் போல்வது என்னுந்தொடக்கத்துப் பலவாய்பாடுந்தழுவுதற்குப் போலியென்றார். 'நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல்வதூஉம்' என்பதுமது.

அசைநிலையும் பொருள் குறித்தல்லது நில்லாமையின் அப்பொருட்டாகுமென்றார். (ஙo)

உஎகூ. யாகா,

பிறபிறக் கரோபோ மாதெள வரூஉ
மாயேழ் சொல்லு மசைநிலைக் கிளவி.

இ - ள். யா முதலாகிய ஏழிடைச்சொல்லும் அசைநிலையாம். எ-று.

உ-ம். யாபன்னிருவர் மாணாக்கருளரகத்தியனார்க்கு. எ-ம். 'புறநிறற் பட்டாளோ விவளிவட் காண்டிகா.' எ-ம். 'தான் பிற வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி.' எ-ம். 'அதுபிறக்கு.' எ-ம். 'நோதக விருங்குயி லாலுமரோ.' எ-ம். 'பிரியின் வா

மூா தென்போா தெய்ய.' எ-ம். 'விளிந்தன்று மாதவர்த் தெளிந்தவென் னெஞ்சே.' எ-ம். வரும்.

இடம் வரையறுமையின் இவை மூன்றிடத்திற்குமுரிய.

ஆங்கவும் ஒப்பில்போலியும் உரைதொடங்குறற்கண்ணும் ஆதாமில்வழியும் வருதலின், வேறு கூறினர். (௩௧)

உ௮0. ஆக வாக லென்ப தென்னு
மாவயின் மூன்றும் பிரிவி லசைநிலை.

இ - ள். ஆக, ஆகல், என்பது என்னுமூன்றிடைச்சொல்லும், அசைநிலையாங்கால், இரட்டித்து நிற்கும். எ-று.

பிரிவிலசைநிலையெனவே, தனித்து நின்று அசைநிலையாகாவென்பதாம்.

ஒருவன் யானின்னேன் என்றுனும், நீயின்னை என்றுனும், அவனின்னன் என்றுனும் கூறியவழிக் கேட்டான் ஆக ஆக, ஆகல் ஆகல் என்னும்; இவை உடம்படாமைக்கண்ணும் ஆதரமிலவழியும் வரும். ஒருவனென்றுரைப்பக் கேட்டான் என்பது என்பது என்னும்; அது நன்குரைத்தற்கண்ணும் இழித்தற்கண்ணும் வரும். பிறுண்டு வரினும் வழக்கு நோக்கியுணர்ந்துகொள்க. (௩௨)

உ௮௧. ஈரள பிசைக்கு மிறுதியி லுயிரே
யாயிய னிலையுங் காலத் தானு
மளபெடை நிலையுங் காலத் தானு
மளபெடை யின்றித் தான்வருங் காலையு
முளவென மொழிப பொருள்வேறு படுதல்
குறிப்பி னிசையா னெறிப்படத் தோன்றும்.

இ - ள். இரண்டுமாத்திரையையுடைத்தாய மொழிக்கீறுகாதெனப்பட்ட ஔகாரம், பிரிவிலசைநிலையென மேற்கூறப்பட்டனபோல இரட்டித்து நிற்குமிடத்தும், இரட்டியாது அளபெடையாய் நிற்குமிடத்தும, அளபெடையின்றித் தான் வருமிடத்தும், பொருள் வேறுபடுதலுள; அப்பொருள்வே

றுபாடு சொல்லுவான்குறிப்பிற்குத் தகுமோசைவேறுபாட்டாற் புலப்படும். எ-று.

பொருள்வேறுபாடாவன வழக்கு நோக்கச் சிறப்பும் மாறுபாடுமாம்.

உ - ம். ஔஔவொருவன்றவஞ்செய்தவாறு என்றவழிச் சிறப்புத் தோன்றும். ஒருதொழில் செய்வானை ஔஔவினிச்சாலும் என்றவழி மாறுபாடு தோன்றும். ஔஉவொருவனிரவலர்க்கீந்தவாறு; ஔஉவினிவெகுளல். எ-ம். ஔவவன்முயலுமாறு; ஔவினித்தட்டுப்புடையல். எ-ம். அளபெடுத்தும் அளபெடாதும் வந்தவழியும், அப்பொருடோன்றியவாறு கண்டுகொள்க. இதனை இக்காலத்து ஓகாரமாக வழங்குப. பிறபொருள்படுமாயினும் அறிந்துகொள்க.

ஈரளபிசைக்குமென்றேயொழியின் நெட்டெழுத்தெல்லாவற்றுமேலும், இறுதியிலுயிரொன்றேயொழியின எகரவொகரத்துமேலுஞ்சேறலான் ஈரளபிசைக்குமிறுதியிலுயிரொன்றார்.

இது தத்தங்குறிப்பிற்பொருள் செய்வதாயினும் அடுக்கி வருதலுடைமையான் ஈண்டு வைத்தார். (௩௩)

உஅஉ. நன்றீற் றேயு மன்றீற் றேயு
மந்தீற் றோவு மன்னீற் றோவு
மன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்.

நன்றீற்றேயும் அன்றீற்றேயுமாவன நன்றே அன்றே என்பன. அந்தீற்றோவும் அன்னீற்றோவுமாவன அநதோ அன்னோ என்பன. நன்றினதீற்றின்கண் ஏயென விரியும். இவ்விரிவு ஏனையவற்றிற்குமொக்கும். நன்றீற்றேயென்பதனான் "நம்மூர்ந்து வரூஉ மிகரவை காரமும்" என்புழிப்போலச் சொன்முழுவதுங்கொள்ளப்படும். ஒழிந்தனவுமன்ன.

குறிப்பொடுகொள்ளுமென்றது, மேலதுபோல இவையுங் குறிப்போசையாற்பொருளுணர்த்துமென்றவாறு.

ஒருவன் ஒன்றுரைத்தவழி அதற்கு மேவாதான் நன்றே நன்றே, அன்றேயன்றே என அடுக்கலும் வரும்; அவை மேவாமைக்குறிப்பு விளக்கும். அவனன்றேயிதுசெய்வான் என அடுக்காது நின்றவழி, அன்றீற்றேவுக்குத் தெளிவு முதலாகிய பிறபொருளும்படும். ஏனையிரண்டும் அடுக்கியும் அடுக்காதும் இரங்கற்குறிப்பு வெளிப்படுக்கும். இவையுந்தத்தங்குறிப்பிற் பொருள் செய்குவன.

அன்னபிறவுமென்றதனுன், அதோ அதோ, சோசோ, ஒக்கும் ஒக்கும் என்னுந்தொடக்கத்தன கொள்க. (௩௪)

உ௮௩. எச்ச வும்மையு மெதிர்மறை யும்மையுந்
தத்தமுண் மயங்கு முடனிலை யிலவே.

இனி மேற்கூறப்பட்ட இடைச்சொல்லின்கட்படுமிலக்கண வேறுபாடுணர்த்துகின்றார்.

இ - ள். எச்சவும்மை நின்றவழி எஞ்சுபொருட்கிளவியாம் எதிர்மறையும்மைத்தொடர் வந்து தம்முண்மயங்குதலில. எ-று.

சாத்தனும் வந்தான் கொற்றனும் வரலுரியன் எனின் இயையாமை கண்டுகொள்க.

ஏனையும்மையொடு மயங்குதல் விலக்காராயிற்றென்னையெனின்;—அவை எஞ்சுபொருட்கிளவியவாய் வாராமையினென்பது. (௩௫)

உ௮௪. எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்.

இ - ள். எச்சவும்மையாற்றழுவப்படும் எஞ்சுபொருட்கிளவி உம்மையில் சொல்லாயின், அவ்வும்மையில் சொல்லை அவ்வும்மைத்தொடர்க்குப் பின் சொல்லாது முன் சொல்லுக எ-று.

உ - ம். சாத்தன் வந்தான் கொற்றனும் வந்தான் என வரும். கொற்றனும் வந்தான் சாத்தன் வந்தான் எனப் பிற்பட

க் கிளப்பின், முற்கூறியதனை விலக்குவதுபோன்று பொருள் கொள்ளாமை கண்டுகொள்க. 'அடகு புலால்பாகு பாளித மு மூண்ணுன்—கடல்போலுங் கல்வி யவன்' என்புழுமது

உம்மையடாதே தானே நிற்றலிற் செஞ்சொலென்றார்.

செஞ்சொலாயின் முற்படக்கிளக்கவெனவே, எஞ்சுபொருட்கிளவி உம்மையொடு வரிற் பிற்படக்கிளக்கவென்றவாறும். (௩௬)

உ௮௫. முற்றிய வும்மைத் தொகைச்சொன் மருங்கி
னெச்சக் கிளவி யுரித்து மாகும்.

இ - ள். முற்றும்மையடுத்து நின்ற தொகைச்சொல்லிடத்து எச்சச்சொல்லுரித்துமாம். எ-று.

உ - ம். பத்துங்கொடால்; அனைத்துங்கொடால் என்புழி முற்றும்மை தம்பொருளுணர்த்தாது சிலவெஞ்சக்கொடுவென்னும் பொருள் தோன்றி நின்றவாறு கண்டுகொள்க.

முற்றுதலென்னும் பொருளது பண்பு முற்றியவும்மையென ஒற்றுமைநயத்தாற் சொன்மேலேறி நின்றது.

உரித்துமாகுமெனவே, எச்சப்பொருண்மை குறியாது நிற்றலே பெரும்பான்மையென்பதாம்.

ஏற்புழிக்கோடலென்பதனான் எச்சப்படுவது எதிர்மறைவினைக்கணென்று கொள்க. பத்துங்கொடு என்பது பிறவுங் கொடுவென்பது பட நிற்றலின், விதிவினைக்கண்ணும் எச்சங் குறிக்குமென்பாருமுளர். இப்பொழுது பத்துங்கொடு என்பது கருத்தாயின், இப்பொழுது பத்துக்கொடு என உம்மையின்றியும் பொருள் பெறப்படும்; பத்துங்கொடு பிறவுங்கொடு என்பது கருத்தாயின், இஃதெச்சவும்மையாகலின் ஈண்டைக்கெய்தாது; அதனான் அது பொருத்தமின்றென்க.

இவை மூன்று சூத்திரத்தானும் வழுவற்கவென இடைச்சொற்பற்றி மரபுவழுக்காத்தவாறு. (௩௭)

உ௮௬. ஈற்றுநின் றிசைக்கு மேயெ னிறுதி
கூற்றுவயி னோரள பாகலு முரித்தே.

இ - ள். செய்யுளிறுதிக்கண் நின்றிசைக்கும் ஈற்றசையே காரங் கூற்றிடத்து ஒருமாத்திரைத்தாகலுமுரித்து. எ-று.

உ - ம். 'கடல்போற் றோன்றல் காடிறந் தோரே' என்புழி ஓரளபாயினவாறு கண்டுகொள்க.

தேற்றமுதலாயின நீக்கி ஈற்றசையே தழுவுதற்கு ஈற்றுநின்றிசைக்குமென்றார். செய்யுளிடை நிற்பதனை நீக்குதற்கு ஈற்றுநின்றிசைக்குமென்றேயொழியாது இறுதியென்றார். மேனின்ற செய்யுளுறுப்போடு பொருந்தக் கூறுதற்கணென்பார் கூற்றுவயினென்றார்.

உம்மை எதிர்மறை. (௩௮)

உ௮௭. உம்மை யெண்ணு மெனவெ னெண்ணுந்
தம்வயிற் றொகுதி கடப்பா டிலவே.

இ - ள். உம்மையான் வருமெண்ணும், எனவான் வருமெண்ணும், இறுதிக்கட்டொகை பெறுதலைக் கடப்பாடாகவுடையவல்ல. எ-று. எனவே, தொகை பெற்றும் பெறாதும் வருமென்பதாம்.

உ - ம். 'உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு—மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு—மம்மூ வுருபின.' எ-ம். 'இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றி.' எ-ம். 'நிலனென நீரெனத் தீயென வளியென நான்கும்.' எ-ம். 'உயிரென வுடலென வின்றி யமையா.' எ-ம். அவ்விருவகையெண்ணுந் தொகை பெற்றும் பெறாதும் வந்தவாறு.

தொகையெனப் பொதுப்படக் கூறியவதனான், எண்ணுப்பெயரேயன்றி அனைத்தும் எல்லாமென்னுந்தொடக்கத்தனவுங்கொள்க. (௩௯)

உ௮௮. எண்ணே கார மிடையிட்டுக் கொளினு
மெண்ணுக்குறித் தியலு மென்மனார் புலவர்.

இ - ள். சொற்றொறும் வாராத எண்ணேகாரம் இடையிட்டு வரினும் எண்ணுதற்பொருட்டாம். எ-று.

உ - ம். 'மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்னர்.' எ-ம். 'தோற்ற மிசையே நாற்றஞ் சுவையே—யுறலோ டாங்கைம் புலனென மொழிப.' எ-ம். வரும்.

எண்ணுக் குறித்து வருவன எண்ணப்படும் பெயரொல்லா வற்றோடும் வருதன்மரபாயினும், இடையிட்டு வரினும் அமை கவென அமைத்தவாறு.

எனவும் என்றும் சொற்றொறும் வாராது ஒருவழி நின்று ம் எண்ணுக்குறிக்குமாலெனின்;—அவை ஒருவழி நின்று எ ல்லாவற்றோடும் ஒன்றாதலின் ஆண்டாராய்ச்சியில்லையென்க.

பிறவெண் ஓடாநிற்றவழி ஏகாரவெண் இடை வந்ததா யினும் ஓடாநின்ற பிறவெண்ணேயாமென உரைத்தாரால் உரையாசிரியரெனின்;—அவ்வாறு விராயெண்ணியவழிப் பி றவெண்ணுற்பெயர் கொடுப்பின் அதனை ஏகாரவெண்ணென் பாரையும் விலக்காமையானும், பிறவெண்ணுமென்றதனுற் பெறப்படுவதோர்பயனின்மையானும், அவர்க்கது கருத்தன் றென்க. (சO)

உ௮௯. உம்மை தொக்க வெனாவென் கிளவியு
மாவீ றாகிய வென்றென் கிளவியு
மாயிரு கிளவியு மெண்ணுவழிப் பட்டன.

இ - ள். உம்மை தொக்கு நின்ற எனாவென்னுமிடைச்சொ ல்லும் என்றுவென்னுமிடைச்சொல்லும் இரண்டும் எண்ணு மிடத்து வரும். எ-று.

உ - ம். நிலனெனா நீரெனா. எ-ம். நிலனென்று நீரென்று. எ-ம். வரும்.

உம்மைதொக்கவெனாவென்கிளவியெனவே, எனாவுமென அச்சொல் உம்மோடு வருதலுமுடைத்தென்பதாம். உம்மோ டு வநதவழி அவ்வெண்ணும்மை எண்ணுளடங்கும்.

எண்ணுவழிப்பட்டனவெனவே, அவை சொற்றொறும் வ ருதலேயன்றி இடையிட்டும் வருமென்பதாம். 'பின்சாரய ல்புடை தேவகை யெனா.' எ-ம். 'ஒப்பிற் புகழிற் பழியி னெ

ன்று.' எ-ம். இடையிட்டு வந்தவாறு. இவை எண்ணுதற்கண் வாராமையானும், "அவற்றின் வரூஉ மெண்ணி னிறுதியும்" எனச் சூத்திரஞ்சுருங்குதற்சிறப்பினானும், அவற்றினை ஈண்டு வைத்தார். (௪௧)

உ௯0. அவற்றின் வரூஉ மெண்ணி னிறுதியும்
பெயர்க்குறி மரபிற் செவ்வெ ணிறுதியு
மேயி னாகிய வெண்ணி னிறுதியும்
யாவயின் வரினுந் தொகையின் றியலா.

இ - ள். மேற்சொல்லப்பட்ட எனா என்று என்பனவற்றான் வரும் எண்ணினிறுதியும், இடைச்சொல்லானன்றிப் பெயரானெண்ணப்படுஞ் செவ்வெணிறுதியும், ஏகாரத்தான் வரும் எண்ணினிறுதியும், யாதானுமோரிடத்து வரினுந் தொகையின்றி நில்லா. எ-று.

உ - ம். நிலனெனா நீரெனாவிரண்டும். எ-ம். நிலனென்று நீரென்றுவிரண்டும். எ-ம். நிலநீரெனவிரண்டும். எ-ம். நிலனே நீரேயெனவிரண்டும். எ-ம். தொகை பெற்று வந்தவாறு.

செவ்வெண் இடைச்சொல்லெண்ணன்றென்றாராயினும், எண்ணுதலுந்தொகை பெறுதலுமாகிய ஒப்புமையான் ஈண்டுக் கூறினார். (௪௨)

உ௯௧. உம்மை யெண்ணி னுருபுதொகல் வரையார்.

இ - ள். உம்மையெண்ணின்கண் உருபு தொகுதல் வரையப்படாது. எ-று.

"பிறிதுபிறி தேற்றலு முருபுதொக வருதலு—நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப" என்னும் பொதுவிதியான் உம்மையெண்ணின்கண் உருபு தொகல் பெறப்பட்டமையால், பெற்றதன்பெயர்த்துரை நியமப்பொருட்டாகலான், உம்மையெண்ணினுருபு தொகல் வரையப்படாது; ஏனையெண்ணின்கண் அவை வரையப்படுமென நியமித்தல் இதற்குப் பயனாகக் கொள்க.

'குன்றி கோபங் கொடிவிடு பவளம்—மொண்செங் காந்த ளொக்கு நின்னிறம்' எனப் பிறவெண்ணின்கண் உருபு தொக்கதாலெனின்; — அற்றன்று: செவ்வெண் தொகையின்றி நில்லாமையின் அவற்றையெண் ஒருசொல் விரிக்கப்படும்; விரிக்கவே, குன்றி முதலாயின எழுவாயாய் நின்றனவாமென்பது.

உ - ம். 'பாட்டிங் கோட்டியு மறியாப் பயமில—றேக்கு மரம்போ னீடிய வொருவன்;' 'இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றி' என உம்மையெண்ணின்கண் உருபு தொக்கவாறு கண்டுகொள்க.

வரையாரென்றதனன், ஆண்டும் எல்லாவுருபுந்தொகா; ஐயுங்கண்ணுமே தொகுவனவெனக் கொள்க.

யானை தேர் குதிரை காலாளெறிந்தார் என உம்மையும் உருபும் உடன்றொக்கவழி உம்மைத்தொகையென்னது உருபுதொகையென்கவென்பது இசசூத்திரத்திற்குக் கருத்தாக உரைத்தாரால் உரையாசிரியரெனின்;—அஃது உம்மைத்தொகையாதலின் ஒருசொன்னடைத்தாய் உருபேற்றுனும் பயனிலை கொண்டானும் நிற்கும்; அத்தொகையிடை உருபின்மை சிற்றறிவினார்க்கும் புலனும்; அதனன் அஃதவர்க்குக் கருத்தன்மை சொல்லவேண்டுமோவெனபது. (௬௫)

உ௯௨. உம்முந் தாகு மிடனுமா ருண்டே.

இ - ள். வினைசெயன்மருங்கிற்காலமொடு வருவனவற்றுள் உம்மீறு உந்தாய்த் திரிதலுமுடைத்து. எ-று.,

உ - ம். 'நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து.' எ-ம். 'நாரரி நறவிணுண் மகிழ்தூங்குந்து.' எ-ம். வரும்.

வினைசெயன்மருங்கிற்காலமொடு வரும் உம்மென்பது ஏற்புழிக்கோடலென்பதனற் பெற்றும்.

இடனுமாருண்டேயென்றது, இத்திரிபு பெயரெச்சத்திற்கிருயவழியென்பது கருதிப்போலும்.

தம்மீறு திரிதன்முதலாயின இவ்வோத்தினுட்கூறப்படும் இடைச்சொற்கேயென்பது இதனானும் பெறும். வினையியலுள்ளுங்கூறப்படுமாயினும், இடைச்சொற்றிரிபாகலான் ஈண்டுக் கூறலும் இயைபுடைத்தென்பது. (சச)

உகூரு. வினையொடு நிலையினு மெண்ணுநிலை திரியா
நினையல் வேண்டு மவற்றவற் றியல்பே.

இ - ள். வினையொடு நிற்பினும் எண்ணிடைச்சொற்கள் தந்நிலையிற்றிரியா; அவற்றொடு வருங்கால் அவற்றவற்றியல்பு ஆராய்தல்வேண்டும். எ-று.

உ - ம். உண்டுந்தின்றும் பாடியும் வந்தான். எ-ம். உண்ணவெனத் தின்னவெனப் பாடவென வந்தான். எ-ம். வரும்.

ஒழிந்தவெண்ணொடு வருவனவுளவேற் கண்டுகொள்க.

பெரும்பான்மையும் பெயரொடல்லது எண்ணிடைச்சொல் நில்லாமையின் அதனை முற்கூறி, சிறுபானமை வினையொடு நிற்றலுமுடைமையான் இதனை ஈண்டுக் கூறினார்.

நினையல்வேண்டுமவற்றவற்றியல்பேயென்றதனான், எண்ணிடைச்சொல் முற்றுச்சொல்லும் பெயரெச்சமும்பற்றி வாராதென்பதூஉம், வினையெச்சத்தோடும் ஏற்பனவல்லது வாராவென்பதூஉம், ஆண்டுத் தொகை பெறுதல் சிறுபான்மையென்பதூஉங்கொள்க.

சாத்தன் வந்தான் கொற்றன் வந்தான வேடன் வந்தான் என மூவரும் வந்தமையாற்கலியாணம் பொலிந்தது எனச் செவ்வெண் தொகை பெற்று வந்ததென்றாரால் உரையாசிரியரெனின்;—அவை எழுவாயும் பயனிலையுமாய் அமைந்து மாறுதலின் எண்ணப்படாமையானும், மூவருமென்பது சாத்தன் முதலாயினோர் தொகையாகலானும், அது போலியுரையென்க. (சரு)

உகூசு. என்று மெனவு மொடுவுந் தோன்றி
யொன்றுவழி யுடைய வெண்ணினுட் பிரிந்தே.

இ - ள். என்றும் எனவும் ஒடுவும் என்பன ஒருவழித்தோன்றி எண்ணினுட்பிறவழியும் பிரிந்து சென்று ஒன்றுமிடமுடைய. எ-று.

உ - ம். 'வினைபகை யென்றிரண்டி னெச்சம்.' எ-ம். 'கண்ணிமை நொடியென.' எ-ம். 'பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்.' எ-ம். அவை ஒருவழி நின்று, வினையென்று பகையென்று. எ-ம். கண்ணிமையென நொடியென. எ-ம். பொருளொடு கருவியொடு காலத்தொடு வினையொடு இடத்தொடு. எ-ம். நின்றவிடத்துப் பிரிந்து, பிறவழிச் சென்று ஒன்றியவாறு கண்டுகொள்க.

ஒன்றுவழியுடையவென்றதனால், சொற்சொறு நிற்பதே பெரும்பான்மையென்பதாம். சொற்சொறுநின்றவெண் இக்காலத்தரிய. ஒடுவென்பதோரிடைச்சொல் எண்ணின்கண் வருதலினுற்கொள்க.

இவைமூன்றும் பொருளிற்பிரிந்து எண்ணின்கண் அசையாய் வருதலுடையவென்பது உரையாசிரியர்க்குக் கருத்தென்பாருமுளர். அசைநிலையென்பது இச்சூத்திரத்தாற்பெறப்படாமையானும், "கண்ணிமை நொடி" என்னுஞ்சூத்திரத்து எனவைக் கண்ணிமையென்பதனோடுங் கூட்டுகவென்றுரைத்தலானும், அவர்க்கது கருத்தன்றென்க. (சசு)

உசுரு. அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த வியல வாயினும்
வினையொடும் பெயரொடு நினையத் தோன்றித்
திரிந்துவேறு படினுந்தெரிந்தனர்கொளலே.

இ - ள். மேற்கூறப்பட்ட இடைச்சொற்கள், அவ்வச்சொல்லிற்கு அவையவை பொருளென நிலைபெறச் சொல்லப்பட்ட இயல்பையுடையனவாயினும், வினையொடும் பெயரொடும் ஆராய்ந்து உணரத் தோன்றி வேறுபொருளவாயும் அசைநிலையாயுந்திரிந்து வரினும், ஆராய்ந்துகொள்க. எ-று. என

வே, கூறிய முறையான் வருதல் பெரும்பான்மையென்றும், வேறுபட வருதல் சிறுபான்மையென்றுஞ்சொல்லியவாறும்.

வினையொடும் பெயரொடுமென்றது, அவை வேறுபொருளவென்றுணர்தற்குச் சார்பு கூறியவாறு.

உ-ம். 'சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ.' எ-ம். 'கலக்கொண்டேன் கள்ளென்கோ காழ்கொற்றன் சூடென்கோ.' எ-ம். ஓகாரம் ஈற்றசையாயும் எண்ணாயும் வந்தது. 'ஓர்கமா தோழியவர் தேர்மணிக் குரலே' என மா முன்னிலையசைச்சொல்லாயிற்று. 'அதுமற் கொண்கன் றேரோ' என மன் அசைநிலையாயிற்று. பிறவுமன்ன.

செய்யுளின்பநோக்கி வினையொடும் பெயரொடுமென்றார்.

உகசு. கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே.

இ-ள். மேற்சொல்லப்பட்டனவன்றி, அவைபோல்வன பிற வரினும், அவற்றைக் கிளந்த சொல்லினியல்பானுணர்ந்து கொள்க. எ-று.

கிளந்தவற்றியலானென்றது, ஆசிரியர் ஆணையானன்றிக் கிளந்தவற்றையும் இன்னவென்றறிவது வழக்கினுட்சார்பும் இடமுங் குறிப்பும்பற்றியன்றே, கிளவாதவற்றையும் அவ்வாறு சார்பும் இடமுங் குறிப்பும்பற்றி இஃதசைநிலை இஃதிசைநிறை இது குறிப்பால் இன்னபொருளுணர்த்தும் என்றுணர்ந்துகொள்கவென்றவாறு.

உ-ம். 'சிறிதுதவிர்ந் தீக மாளநின் பரிசிலரும்மார்.' எ-ம். 'சொல்லென் றெய்ய நின்னொடு பெயர்ந்தே.' எ-ம். 'அறிவார் யாரஃ திறுவுழி யிறுகென.' எ-ம். 'பணியுமா மென்றும் பெருமை.' எ-ம். 'ஈங்காகுநவாலென்றிசின் யானே.' எ-ம். மாள, தெய்ய, என, ஆம், ஆல் என்பனவும் அசைநிலையாய் வந்தன. 'குன்றுதொ றாடலு நின்றதன் பண்பே' எனத் தொறு வென்பது தான் சார்ந்த மொழிப்பொருட்குப் பன்மையும்

இடமாதலுமுணர்த்தி நிற்கும். ஆனம், ஏனம், ஓனம் என்பன எழுத்துச்சாரியை. பிறவும் எடுத்தோதாதவிடைச்சொலெல்லாம் இப்புறனடையாற்றழீஇக்கொள்க. (சஅ)

இடையியன் முற்றிற்று.

---

எட்டாவது

## உரியியல்.

உகூஎ. உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
யிசையினுங் குறிப்பினும் பண்பினுந்தோன்றிப்
பெயரினும் வினையினு மெய்தடு மாறி
யொருசொற்பலபொருட் குரிமைதோன்றினும்
பலசொல்லொருபொருட்குரிமைதோன்றினும்
பயிலா தவற்றைப்பயின்றவைசார்த்தித்
தத்த மரபிற் சென்றுநிலை மருங்கி
னெச்சொல்லாயினும் பொருள்வேறுகிளத்தல்.

நிறுத்த முறையானே உரிச்சொல்லுணர்த்தியவெடுத்துக் கொண்டார்; அதனான் இவ்வோத்து உரியியலென்னும் பெயர்த்தாயிற்று. தமக்கியல்பில்லாவிடைச்சொற்போலாது இசை குறிப்புப் பணபென்னும் பொருட்குத் தாமேயுரியவாதலின், உரிச்சொல்லாயிற்று. பெரும்பான்மையுஞ் செய்யுட்குரியவாய் வருதலின் உரிச்சொல்லாயிற்றென்பாருமுளர்.

இச்சூத்திரத்தின்பொருள். உரிச்சொல்லை விரித்துணாக்குமிடத்து, இசை குறிப்புப் பண்பென்னும் பொருண்மேற்றோன்றி, பெயர்க்கண்ணும் வினைக்கண்ணுந் தம்முருபு தடுமாறி, ஒருசொற் பலபொருட்குரித்தாய் வரினும் பலசொல் ஒருபொருட்குரித்தாய் வரினும் கேட்பானாற் பயிலப்படாத சொல்லைப் பயின்றவறறோடு சார்த்திப் பெயரும் வினையுமாகிய

தத்தமக்குரிய நிலைக்களத்தின்கண் யாதானுமொருசொல்லாயினும் வேறு வேறு பொருளுணர்த்தப்படும். எ-று. என்றது, இசை குறிப்புப் பண்பென்னும் பொருளவாய்ப் பெயர் வினை போன்றும் அவற்றிற்கு முதனிலையாயுந் தடுமாறி ஒருசொல் ஒருபொருட்குரித்தாதலேயன்றி ஒருசொற்பலபொருட்கும் பலசொல் ஒருபொருட்கும் உரியவாய் வருவன உரிச்சொல்லென்றும், அவை பெயரும் வினையும்போல ஈறுபற்றிப் பொருளுணர்த்தலாகாமையின் வெளிப்படாதவற்றை வெளிப்பட்டவற்றோடு சார்த்தித் தம்மையெடுத்தோதியே அப்பொருளுணர்த்தப்படுமென்றும், உரிச்சொற்குப் பொதுவிலக்கணமும் அவற்றிற்குப் பொருளுணர்த்துமுறைமையுமுணர்த்தியவாறு.

குறிப்பு மனத்தாற்குறித்துணரப்படுவது. பண்பு பொறியானுணரப்படுங்குணம்.

கறுப்பு, தவவென்பன பெயர் வினைப்போலி. துவைத்தல், துவைக்குமென்பன பெயர் வினைக்கு முதனிலையாயின. உறு முதலாயின மெய் தடுமாறுது வருமாதலின், பெயரினும் வினையினு மெய்தடுமாறியென்றது பெரும்பான்மைபற்றியெனக் கொள்க.

அவை கூறியவாற்முற் பொருட்குரியவாய் வருமாறு முன்னர்க் காணப்படும்.

மெய்தடு மாறலும், ஒருசொற்பலபொருட்குரிமையும், பலசொல் ஒருபொருட்குரிமையும் உரிச்சொற்கு உண்மையான் ஓதினரேனும், உரிச்சொற்கு இலக்கணமாவது இசை குறிப்புப் பண்பென்னும் பொருட்குரியவாய் வருதலேயாம்.

ஒருசொல் ஒருபொருட்குரித்தாதல் இயல்பாகலாற் சொல்லாமையே முடியுமென்பது. (க)

உகூஅ. வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா வுரிச்சொன் மேன.

இ - ள். வெளிப்பட்ட உரிச்சொல், கிளந்ததாற் பயனி ன்மையிற் கிளக்கப்படா; வெளிப்பட வாரா உரிச்சொன்மே ற்றுக் கிளந்தோதல். எ-று.

"பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தி யெச்சொல் லா யினும் பொருள்வேறு கிளத்தல்" என்றதனால், பயிலாதவற் றைப் பயின்றவற்றோடு சார்த்திப் பயின்றவற்றைப் பிறதொ ன்றனோடு சார்த்தாது தம்மையே கிளந்தும் எல்லாவுரிச் சொல்லும் உணர்த்தப்படுமென்பது பட்டு நின்றதனை விலக் கி, பயனின்மையாற் பயின்ற உரிச்சொறகிளக்கப்படாது பயி லாத உரிச்சொல்லே கிளக்கப்படுமென, வரையறுத்தவாறு.

மேலவென்பது மேனவென நின்றது. (உ)

உ௯௯. அவைதாம்,

உறுதவ நனியென வரூஉ மூன்று
மிகுதி செய்யும் பொருள வென்ப.

வெளிப்படவாரா உரிச்சொல்லைக் கிளந்தோதி விரிக்கின் றா.

அவைதாம். எ-து. வெளிப்படவாரா உரிச்சொற்றும். எ-று. அதற்கு முடிபு "அவைதாம், அம்மா மெம்மே மென்னுங் கி ளவியும்" என்புழி உரைத்தாங்குரைக்க.

இ - ள். 'உறுபுன றநதுல கூட்டி.' எ-ம். 'ஈயாது வீயு மு யிாதவப் பலவே.' எ-ம். 'வந்துநனி வருநதினை வாழியென் னெஞ்சே.' எ-ம். உறு, தவ, நனியென்பன மிகுதியென்னுங் குறிப்புப்பொருளுணர்த்தும். எ-று.

குறிபபுச்சொற்பரப்புடைமையான் முற்கூறினர். (௩)

௩00. உருவுட் காரும் புரையுயர் பாகும்.

இ - ள். 'உருகெழு கடவுள்.' எ-ம். 'புரைய மன்ற புரை யோர் கேண்மை.' எ-ம். உருவும் புரையும், உட்கும் உயர்பு முணர்த்தும். எ-று. (௪)

௩௦௧. குருவுங் கெழுவு நிறனா கும்மே.

இ - ள். 'குருமணித் தாலி;' 'செங்கேழ் மென்கொடி' என க் குருவும் கெழுவும், நிறமென்னும் பண்புணர்த்தும். எ-று.

௩௦௨. செல்ல லின்ன லின்னா மையே.

இ - ள். 'மணங்கமழ் வியன்மார்ப னணங்கிய செல்லல். எ-ம். 'வெயில்புறந் தரூஉ மின்னலியக் கத்து.' எ-ம். செல் லலும் இன்னலும், இன்னாமையென்னுங்குறிப்புணர்த்தும். எ-று. (௬)

௩௦௩. மல்லல் வளனே.

௩௦௪. ஏபெற் றாகும்.

இ - ள். 'மல்லன் மால்வரை.' எ-ம். 'ஏகல்லடுக்கம்.' எ-ம். மல்லலும ஏவும், வளமும் பெற்றுமாகிய குறிப்புணர்த்தும்' எ-று.

பெற்று—பெருக்கம். ஈதக்காலத்துப் பயின்றதுபோலும். இவையிரண்டுசூத்திரம். (எ) (அ)

௩௦௫. உகப்பே யுயர்த லுவப்பே யுவகை.

இ - ள். 'விசும்புகந் தாடாது.' எ-ம். 'உவந்துவந் தார்வ நெஞ்சமோ டாய்நல னளைஇய.' எ-ம். உகப்பும் உவப்பும், உயர்தலும் உவகையுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௯)

௩௦௬. பயப்பே பயனாம்.

௩௦௭. பசப்புநிற னாகும்.

இ - ள். 'பயவாக் களரனையர் கல்லா தவர்.' எ-ம். 'மையி ல் வாண்முகம் பசப்பூ ரும்மே.' எ-ம். பயப்பும் பசப்பும், பயனும் நிறவேறுபாடுமாகிய குறிப்பும் பண்புமுணர்த்தும். எ-று. (௧௦) (௧௧)

௩௦௮. இயைபே புணர்ச்சி.

௩௦௯. இசைப்பிசை யாகும்.

இ - ள். 'இயைந்தொழுகும்.' எ-ம். 'யாழிசையூப் புக்கு ம்.' எ-ம். இயைபும் இசைப்பும், புணர்ச்சிக்குறிப்பும் இசைப் பொருண்மையுமுணர்த்தியவாறு. (௧௨) (௧௩)

௩கo. அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி.

இ - ள். 'அலமர லாயம்.' எ-ம். 'தெருமர லுள்ளமொ டன்னை துஞ்சாள்.' எ-ம். அலமரலும் தெருமரலும், சுழற்சியாகிய குறிப்புணர்த்தும். எ-று. (கச)

௩கக. மழவுங் குழவு மிளமைப் பொருள.

இ - ள். 'மழகளிறு.' எ-ம். 'குழக்கன்று.' எ-ம். மழவுங் குழவும், இளமைக்குறிப்புப்பொருளுணர்த்தும். எ-று. (கரு)

௩கஉ. சீர்த்தி மிகுபுகழ்.
௩க௩. மாலை யியல்பே.

இ - ள். 'வயக்கல்சால் சீர்த்தி.' எ-ம். 'இரவரன் மாலையனே.' எ-ம். சீர்த்தியும் மாலையும், பெரும்புகழும் இயல்புமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (கசு) (கஎ)

௩கச. கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும்.

இ - ள். 'துனிகூ ரெவ்வமொடு.' எ-ம். 'கழிகண் ணோட்டம்.' எ-ம். கூர்ப்பும் கழிவும், ஒன்றனது சிறத்தலாகிய குறிப்பையுணர்த்தும். எ-று. உள்ளதென்றது முன் சிறவாதுள்ளதென்றவாறு. (சஅ)

௩கரு. கதழ்வுந் துனைவும் விரைவின் பொருள.

இ - ள். 'கதழ்பரி நெடுந்தேர்.' எ-ம். 'துனைபரி நிவக்கும் புள்ளின் மான.' எ-ம். கதழ்வும் துனைவும், விரைவாகிய குறிப்புணர்த்தும். எ-று. (கக)

௩கசு. அதிர்வும் விதிர்ப்பு நடுக்கஞ் செய்யும்.

இ - ள். 'அதிர வருவதோர் நோய்.' எ-ம். 'விதிர்ப்புற வறியா வேமக் காப்பினை.' எ-ம். அதிர்வும் விதிர்ப்பும், நடுக்கமாகிய குறிப்புணர்த்தும். எ-று.

அதிழ்வென்று பாடமோதி, 'அதிழ்கண முரசம்' என்றுதாரணங்காட்டுவாருமுளர். (உo)

௬௧எ. வார்தல் போக லொழுகன் மூன்று
நேர்வு நெடுமையுஞ் செய்யும் பொருள.

இ-ள். 'வார்ந்திலங் குமைவை யெயிற்று;' 'வார்கையிற் ஜெுழகை.' எ-ம். 'போகுகொடி மருங்குல்' 'வெள்வேல் விடத்தே ரொடு காருடை போகி.' எ-ம். 'ஒழுகுகொடி மருங்குல்;' 'மால்வரை யொழுகிய வாழை.' எ-ம். வார்தல், போகல், ஒழுகல் என்னுமூன்றுசொல்லும், நேர்மையும் நெடுமையுமாகிய பண்புணர்த்தும். எ-று. (உக)

௬௧அ. தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்.

இ-ள். தீர்தலுந் தீர்த்தலுமென்னுமிரண்டும் விடுதலாகிய குறிப்புணர்த்தும். எ-று.

உ-ம். 'துனையிற் றீர்ந்த கடுங்கண் யானை' என வரும்.

தீர்த்தல் விடுதற்பொருண்மைக்கண் வந்தவழிக் கண்டுகொள்க. தீர்த்தலென்பது செய்வித்தலையுணர்த்தி நின்ற நிலைமையெனின்;—செய்வித்தலையுணர்த்து நிலைமை வேறுறின், "இயைபே புணர்ச்சி" என்புழியும் இயைப்பென வேறுதல்வேண்டும்; அதனாற் றீர்த்தலுஞ் செய்தலையுணர்த்துவதோருரிச்சொல்லெனவேபடுமென்பது.

விடற்பொருட்டாகுமென்பதனை இரண்டனோடுங்கூட்டுக. பன்மையொருமைமயக்கமெனினுமமையும். (உஉ)

௬௧௯. கெடவரல் பண்ணையா யிரண்டும்விளை யாட்டு.

இ-ள். 'கெடவர லாயமொடு.' எ-ம். 'பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளும்.' எ-ம். கெடவரலும் பண்ணையும், விளையாட்டாகிய குறிப்புணர்த்தும். எ-று. (உ௩)

௬உ0. தடவுங் கயவு நளியும் பெருமை.

இ-ள். 'வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்;' 'கயவாய்ப் பெருங்கை யானை;' 'நளிமலை நாடன்' எனத் தடவும் கயவும் நளியும், பெருமையாகிய பண்புணர்த்தும். எ-று. ()

௩உ௧. அவற்றுள்,
தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்.

௩உ௨. கயவென் கிளவி மென்மையு மாகும்.

௩உ௩. நளியென் கிளவி செறிவு மாகும்.

இ - ள். 'தடமருப்பெருமை;' 'கயந்தலை மடப்பிடி;' 'நளிபிருள்' எனத் தடவென்கிளவி முதலாயின, பெருமையேயன்றிக் கோட்டமும் மென்மையுமாகிய பண்பும செறிவாகிய குறிப்புமுணர்த்தும். எ-று. (உ௫) (உ௬) (உ௭)

௩உ௪. பழுதுபய மின்றே.

௩உ௫. சாயன் மென்மை.

௩உ௬. முழுதென் கிளவி யெஞ்சாப் பொருட்டே.

இ - ள். 'பழுதுகழி வாழ்நாள்;' 'சாயன்மார்பு;' 'மண்முழு தாண்ட' எனப் பழுது முதலாயின, பயமின்மையாகிய குறிப்பும் மென்மையாகிய பண்பும் எஞ்சாமையாகி ய குறிப்புமுணர்த்தும். எ-று. (உ௮) (உ௯) (௩0)

௩உ௭. வம்புநிலை யின்மை.

௩உ௮. மாதர் காதல்.

௩உ௯. நம்பு மேவு நசையா கும்மே.

இ - ள். 'வம்புமாரி;' 'மாதர் நோக்கு;' 'நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி;' 'பேரிசை நவிரமே வுறையும்' என வம்பும் மாதரும், நிலையின்மையுங் காதலுமாகிய குறிப்புணர்த்தும்; நம்பும் மேவும், நசையாகிய குறிப்புணர்த்தும். எ-று. மேவு—நசையாக. (௩௧) (௩௨) (௩௩)

௩௩0. ஓய்த லாய்த னிழத்தல் சாஅ
யாவயி னான்கு முள்ளத நுணுக்கம்.

இ - ள். 'வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு;' 'பாய்ந் தாய்ந்த தானை பரிந்தாளு மைந்தனே;' 'நிழத்த யானை மேய்புலம் படா;' 'கயலற லெதிரக் கடும்புனல் சாஅய்' என ஓய்தன்முதலாயின நுணுக்கமாகிய குறிப்புணர்த்தும். எ-று.

ஆய்ந்த தானை—பொங்குதல் விசித்தலானுணங்கிய தானை. உள்ளதென்றது முன்னுணுகாதுள்ளதென்றவாறு. (௬௪)

௬௬௧. புலம்பே தனிமை.

௬௬௨. துவன்றுநிறை வாகும்.

௬௬௩. முரஞ்சன் முதிர்வே.

௬௬௪. வெம்மை வேண்டல்.

இ - ள். 'புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி.' எ-ம். 'ஆரியர் துவன்றிய பேரிசை மூதூர்.' எ-ம். 'சூன்முரஞ் செழிலி.' எ-ம். 'வெங்காமம்.' எ-ம். புலம்பு முதலாயின, தனிமையும் நிறைவும் முதிர்வுமாகிய குறிப்பும் விரும்புதலாகிய பண்புமுணர்த்தும். எ-று. (௬௫) (௬௬) (௬௭) (௬௮)

௬௬௫. பொற்பே பொலிவு.

௬௬௬. வறிதுசிறி தாகும்.

௬௬௭. ஏற்ற நினைவுந் துணிவு மாகும்.

இ - ள். 'பெருவரை யடுக்கம் பொற்ப.' எ-ம். 'வறிதுவடக் கிறைஞ்சிய.' எ-ம். 'கானலஞ் சேர்ப்பன் கொடுமை யேற்றி;' 'எற்றேற்ற மில்லாருள் யானேற்ற மில்லாதேன்.' எ-ம். பொற்பு முதலாயின, முறையானே பொலிவும், சிறிதென்பதூஉம், நினைவும் துணிவுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௬௯) (௪0) (௪௧)

௬௬௮. பிணையும் பேணும் பெட்பின் பொருள.

இ - ள். 'அரும்பிணை யகற்றி வேட்ட ஞாட்பினும்.' எ-ம். 'அமரர்ப் பேணியு மாகுதி யருத்தியும்.' எ-ம். பிணையும் பேணும், பெட்பின் பொருளாகிய புறந்தருதலென்னுங்குறிப்புணர்த்தும். எ-று.

பெட்பின் பொருளவென்றதனுல், பெட்பின் பொருளாகிய விரும்புதலுணர்த்தலுங்கொள்க. அது வந்தவழிக் கண்டு கொள்க. (௪௨)

௩௩௯. பணையே பிழைத்தல் பெருப்பு மாகும்.

இ - ள். 'பணைத்துவீழ் பகழி' எனப் பணையென்பது பிழைத்தலாகிய குறிப்புணர்த்தும்; அதுவேயன்றி 'வேய்மருள் பணைத்தோள்' எனப் பெருப்பாகிய குறிப்புமுணர்த்தும். எ-று.

பெருமையாகிய பண்புணர்த்தாது பெருத்தலாகிய குறிப்புணர்த்துமென்பார் பெருப்பென்றார். (௪௩)

௩௪0. படரே யுள்ளல் செலவு மாகும்.

இ - ள். 'வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி;' 'கறவை கன்று வயிற்படர' எனப் படரென்பது உள்ளுதலுஞ் செலவுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௪௪)

௩௪௧. பையுளுஞ் சிறுமையு நோயின் பொருள.

இ - ள். 'பையுண்மாலை.' எ-ம். 'சிறுமை யுறுப செய்பறியலரோ.' எ-ம். பையுளுஞ் சிறுமையும், நோயாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௪௫)

௩௪௨. எய்யா மையே யறியா மையே.

இ - ள். 'எய்யா மையல்லை நீயும் வருந்துதி' என எய்யாமை அறிவின்மையாகிய குறிப்புணர்த்தும். எ-று.

அறிதற்பொருட்டாய் எய்தலென்றாலும் எய்த்தலென்றாலும் சான்றோர்செய்யுட்கண் வாராமையின், எய்யாமை எதிர்மறையன்மையறிக. (௪௬)

௩௪௩. நன்றுபெரி தாகும்.

இ - ள். 'நன்று மரிதுற் றனையாற்பெரும' என நன்றென்பது பெரிதென்னுங்குறிப்புணர்த்தும். எ-று.

பெருமையென்னாது பெரிதென்றதனான் நன்றென்பது வினையெச்சமாதல் கொள்க. (௪௭)

௩௪௪. தாவே வலியும் வருத்தமு மாகும்.

இ - ள். 'தாவி னன்பொன் றைஇய பாவை.' எ-ம். 'கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றென.' எ-ம். தாவென்பது வலியும் வருத்தமுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௪௮)

௬௪௫. தெவுக்கொளற் பொருட்டே.

௬௪௬. தெவ்வுப்பகை யாகும்.

இ-ள். 'நீர் தெவுநிரைத் தொழுவர்.' எ-ம். 'தெவ்வுப் புலம்.' எ-ம். தெவுந் தெவ்வும், முறையானே கொள்ளுதலும் பகையுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௪௯) (௫0)

௬௪எ. விறப்பு முறப்பும் வெறுப்புஞ் செறிவே.

இ-ள். 'விறந்த காப்போ டுண்ணின்று வலியுறுத்தும்.' எ-ம். 'உறந்த விஞ்சி.' எ-ம். 'வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்.' எ-ம். விறப்பு முதலாயின செறிவென்னுங் குறிப்புணர்த்தும். எ-று. (௫௧)

௬௪அ. அவற்றுள்,
விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும்.

இ-ள். 'அவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல' என விறப்பென்பது செறிவேயன்றி வெருவுதற்குறிப்புமுணர்த்தும். எ-று. (௫௨)

௬௪௯. கம்பலை சும்மை கலியே யழுங்க
லென்றிவை நான்கு மரவப் பொருள.

இ-ள். 'கம்பலை மூதூர்.' எ-ம். 'ஒருபெருஞ் சும்மையொடு.' எ-ம். 'கலிகொ ளாயம் மலிதொகு பெடுத்த.' எ-ம். 'உயவுப் புணர்ந்தன்றிவ் வழுங்க லூரே.' எ-ம். கம்பலை முதலாகிய நான்கும் அரவமாகிய இசைப்பொருண்மையுணர்த்தும். எ-று. (௫௩)

௬௫0. அவற்றுள்,
அழுங்க லிரக்கமுங் கேடு மாகும்.

இ-ள். 'பழங்கண் ணோட்டமு நலிய வழுங்கின னல்லனோ.' எ-ம். 'குணனழுங்கக் குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர்கட்கு.' எ-ம். அழுங்கல், அரவமேயன்றி இரக்கமுங்கேடுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௫௪)

௯௫௧. கழுமென் கிளவி மயக்கஞ் செய்யும்.

இ - ள். 'கழுமிய ஞாட்பு' எனக் கழுமென்பது மயக்கமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௫௫)

௯௫௨. செழுமை வளனுங் கொழுப்பு மாகும்.

இ - ள். 'செழும்பல்குன்றம்.' எ-ம். 'செழுந்தடி தின்ற செந்நாய்.' எ-ம். செழுமை, வளனுங்கொழுப்புமாகிய பண்புணர்த்தும். எ-று. (௫௬)

௯௫௩. விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்.

இ - ள். 'விழுமியோர்க் காண்டொறுஞ் செய்வர் சிறப்பு' எ-ம். 'வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து.' எ-ம். 'நின்னுறு விழுமங் களைந்தோன்.' எ-ம். விழுமம் முறையானே சீர்மையுஞ் சிறப்பும் இடும்பையுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௫௭)

௯௫௪. கருவி தொகுதி.

௯௫௫. கமநிறைந் தியலும.

இ - ள். 'கருவி வானம்.' எ-ம். 'கமஞ்சூன் மாமழை.' எ-ம். கருவியுங் கமமும், தொகுதியும் நிறைவுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. 'கருவிவானம்' என்புழிக் கருவி மின்னுமுழக்கு முதலாயவற்றது தொகுதி. (௫அ) (௫௯)

௯௫௬. அரியே யைம்மை.

௯௫௭. கவவகத் திடுமே.

இ - ள். 'அரிமயிர்த் திரண் முன்கை.' எ-ம். 'கழுவிளங் காரங் கவைஇய மார்பே.' எ-ம். அரியுங் கவவும், ஐம்மையும் அகத்திடுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௬0) (௬௧)

௯௫அ. துவைத்தலுஞ் சிலைத்தலு மியம்பலு மிரங்கலு மிசைப்பொருட் கிளவி யென்மனார் புலவர்.

இ - ள். 'வரிவளை துவைப்ப.' எ-ம். 'ஆமா நல்லேறு சிலைப்ப.' எ-ம். 'கடிமரந் தடியு மோசை தன்னூர் நெடுமதில் வ

ரைப்பிற் கடிமனை யியம்ப.' எ-ம். 'ஏறிரங்கிருளிடை.' எ-ம். துவைத்தன்முதலாயின இசைப்பொருளுணர்த்தும். எ-று. ()

௩௫௯. அவற்றுள்,
இரங்கல் கழிந்த பொருட்டு மாகும்.

இ - ள். 'செய்திரங்காவினை' என இரங்கல், இசையேயன்றிப் பொருளது கழிவாகிய குறிப்புமுணர்த்தும். எ-று.
கழிந்த பொருள்பற்றி வருங்கவலையைக் கழிந்த பொருளென்றார். (௬௩)

௩௬0. இலம்பா டொற்கமா யிரண்டும் வறுமை.
இ - ள். 'இலம்படு புலவ ரேற்றகை நிறைய.' எ-ம். 'ஒக்கலொற்கஞ்சொலிய.' எ-ம். இலம்பாடும் ஒற்கமும் வறுமையாகிய குறிப்புணர்த்தும். எ-று.

இலமென்னுமுரிச்சொல், பெரும்பான்மையும் பாடென்னுந்தொழில்பற்றியல்லது வாராமையின் இலம்பாடென்றார். ()
௩௬௧. ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள.

இ - ள். 'கருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து.' எ-ம். 'பாய்புனல்.' எ-ம். ஞெமிர்தலும் பாய்தலும், பரத்தலாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௬௫)

௩௬௨. கவர்வுவிருப் பாகும்.
௩௬௩. சேரே திரட்சி.
௩௬௪. வியலென் கிளவி யகலப் பொருட்டே.

இ - ள். 'கவர்நடைப் புரவி.' எ-ம். 'சேர்ந்துசெறி குறங்கு.' எ-ம். 'வியலுலகம்.' எ-ம். கவர்வு முதலாயின முறையானே விருப்புந் திரட்சியும் அகலமுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௬௬) (௬௭) (௬அ)

௩௬௫. பேநா முருமென வருஉங் கிளவி
யாமுறை மூன்று மச்சப் பொருள.

இ - ள். 'மன்ற மார்தத பேமுதிர் கடவுள்.' எ-ம். 'நாநல்லார்.' எ-ம். 'உருமில் சுற்றம்.' எ-ம். பே முதலாகிய மூன்றும் அச்சமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௬௯)

௩௬௬. வயவலி யாகும்.
௩௬௭. வாளொளி யாகும்.
௩௬௮. துயவென் கிளவி யறிவின் றிரிபே.

இ - ள். 'தன்னந் துப்பின் வயமான்.' எ-ம். 'வாண்முகம்.' எ-ம். 'துயவுற்றேம் யாமாக.' எ-ம். வயமுதலாயின, வலியும் அறிவு வேறுபடுதலுமாகிய குறிப்பும் ஒளியாகிய பண்புமுணர்த்தும். எ-று. (எO) (எக) (எஉ)

௩௬௯. உயாவே யுயங்கல்.
௩௭0. உசாவே சூழ்ச்சி.
௩௭௧. வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்.

இ - ள். 'பருந்திருந் துயாவிளி பயிற்று மியாவுயர் நனந்தலை.' எ-ம். 'உசாத்துணை.' எ-ம். 'வயவுறு மகளிர்.' எ-ம். உயா முதலாயின, முறையானே உயங்கலுஞ் சூழ்ச்சியும் வேட்கைப்பெருக்கமுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (எ௩) (எச) (எ௫)

௩௭௨. கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள.

இ - ள். 'நிற்கறுப்பதோரருங்கடிமுனையள்.' எ-ம். 'நீசிவந் திறுத்த நீரழி பாக்கம்.' எ-ம். கறுப்புஞ் சிவப்பும், வெகுளியாகிய குறிப்புணர்த்தும். எ-று.

கருமை செம்மையென்னாது கறுப்புச் சிவப்பென்றதனான், தொழிற்பட்டுழியல்லது அவை வெகுளியுணர்த்தாமை கொள்க. (எ௬)

௩௭௩. நிறத்துரு வுணர்த்தற்கு முரிய வென்ப.

இ - ள். 'கறுத்த காயா;' 'சிவந்த காந்தள்.' என அவை வெகுளியேயன்றி நிறவேறுபாடுணர்த்தற்குமுரிய. எ-று.

இவை வெளிப்படுசொல்லாயினும், கறுப்புஞ்சிவப்பும் வெகுளிப்பொருளவென்றதனால், கருங்கண், செவ்வாய் எனப் பண்பாயவழியல்லது தொழிலாயவழி நிறவேறுபாடுணர்த்தாவென்பது படுதலின், அதனைப் பாதுகாத்தவாறு. (எஎ)

௩௭௪. நொசிவு நுழைவு நுணங்கு நுண்மை.

இ - ள். 'நொசிமருங்குல்.' எ-ம். 'நுழைநூற் கலிங்கம்.' எ-ம். 'நுணங்குதுகி ளுடக்கம்போல.' எ-ம். நொசிவு முதலாயின, நுண்மையாகிய பண்புணர்த்தும். எ-று. (௭௯)

௩௭௫. புனிறென் கிளவியீன் றணிமைப் பொருட்டே.

இ - ள். 'புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி' எனப் புனிறென்பது ஈன்றணிமையாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௭௯)

௩௭௬. நனவே களனு மகலமுஞ் செய்யும்.

இ - ள். 'நனவுப்புகு விறலியிற் றோன்று நாடன்.' எ-ம். 'நனந்தலையுலகம்.' எ-ம. நனவு, களனும் அகலமுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௮0)

௩௭௭. மதவே மடனும் வலியு மாகும்.

இ - ள். 'பதவு மேய்ந்த மதவுநடை நல்லான்.' எ-ம். 'கயிறிடு கதச்சேப் போல மதமிக்கு.' எ-ம். மதவென்பது மடனும் வலியுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௮௧)

௩௭௮. மிகுதியும் வனப்பு மாகலு முரித்தே.

இ - ள். 'மதவிடை.' எ-ம். 'மாதர் வாண்முக மதைஇய நோக்கே.' எ-ம். மடனும் வலியுமேயன்றி, மிகுதியும் வனப்புமாகிய குறிப்புஞ்சிறுபான்மையுணர்தது. எ-று. மதவிடையென்புழி மிகுதி உள்ளமிகுதி. (௮௨)

௩௭௯. புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி.

இ - ள். 'மீன்றொடு பெயரும் யாணரூர்' என யாணரென்பது வாரி புதிதாகப்படுதலாகிய குறிப்புணர்ததும். எ-று. (௮௩)

௩௮0. அமர்தன் மேவல்.

௩௮௧. யாணுக் கவினும்.

இ - ள். 'அகனமர்ந்து செய்யா ளுறையும்.' எ-ம். 'யாணது பசலை.' எ-ம். அமர்தலும் யாணும், முறையானே மேவுதலுங் கவினுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௮௪) (௮௫)

௩௮௨. பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள.

இ - ள். 'செல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே.' எ-ம். 'கைதொழூஉப் பழிச்சி.' எ-ம். பரவும் பழிச்சும், வழுத்துத லாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௮௬)

௩௮௩. கடியென் கிளவி,

வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்க மிகுதி சிறப்பே
யச்ச முன்றேற் றாயீ ரைந்து
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே.

இ - ள். கடியென்னுமுரிச்சொல் வரைவு முதலாகிய பத் துகுறிப்புமுணர்த்தும். எ-று.

உ-ம். 'கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு' என வரைவும், 'கடிநுனைப் பகழி' எனக் கூர்மையும் 'கடிகா' எனக் காப் பும், 'கடிமலர்' எனப் புதுமையும், 'கடுமான்' என விரைவும், 'கடும்பகல்' என விளக்கமும், 'கடுங்கா லொற்றலின்' என மி குதியும், 'கடுநட்பு' எனச் சிறப்பும், 'கடியையா னெடுத்தகை செருவத் தானே' என அச்சமும், 'கொடுஞ்சுழிப் புகார்த் தெய்வ நோக்கிக் கடுஞ்சூ டருகுவ னினக்கே' என முன்றே ற்றும் உணர்த்தியவாறு கண்டுகொள்க.

முன்றேற்று - புறத்தின்றித் தெய்வமுதலாயினவற்றின்மு னனின்று தெளித்தல். (௮௭)

௩௮௪. ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே.

இ - ள். 'கடுத்தன ளல்லளோ வன்னை.' எ-ம். 'கடிமிள கு தின்ற கல்லா மந்தி.' எ-ம். கடியென்கிளவி மேற்கூறப்ப ட்ட பொருளேயன்றிச் சிறுபான்மை ஐயமாகிய குறிப்புங் கரிப்பாகிய பண்புமுணர்த்துதற்குமுரித்து. எ-று. (௮௮)

௩௮௫. ஐவியப் பாகும்.

௩௮௬. முனைவுமுனி வாகும்.

ஙுஅஎ. ஐயே கூர்மை.
ஙுஅஅ. எறுழ்வலி யாகும்.

இ-ள். 'ஐதே காமம் யானே.' எ-ம். 'சேற்றுநில முனைஇ ய செங்கட் காரான்.' எ-ம். 'வைநுனைப் பகழி.' எ-ம். 'போ ரெறுழ்த் திணிதோள்.' எ-ம். ஐ முதலாயின முறையானே வி யப்பும் முனிவுங் கூர்மையும் வலியுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (அகூ) (கூO) (கூக) (கூஉ)

ஙுஅகூ. மெய்பெறக் கிளந்த வுரிச்சொல் லெல்லா
முன்னும் பின்னும் வருபவை நாடி
யொத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்த
றத்த மரபிற் றோன்றுமன் பொருளே.

இ-ள். இச்சொல் இப்பொருட்குரித்தென மேற்கூறப்ப ட்ட உரிச்சொலெல்லாவற்றையும், அவற்று முன்னும் பின்னு ம் வருமொழிகளை ஆராய்ந்து, அம்மொழிகளுட்டக்க மொழி யாலே ஒருபொருளுணர்த்துக; இவ்வாறுணர்த்தவே, வரலா ற்றுமுறைமையாற் றத்தமக்குரித்தாய பொருள் விளங்கும். எ-று.

இஃதென் சொல்லியவாறோவெனின்;—"உறு தவ நனியெ ன வரூஉ மூன்று—மிகுதி செய்யும் பொருள வென்ப." எ-ம். "செல்ல லின்ன லின்னா மையே." எ-ம். ஓதியவழி, அவை பயின்ற சொல்லன்மையான், இவை மிகுதியும் இன்னாமையு முணர்த்துமென்று ஆசிரியராணையாற்கொள்வதல்லது வர லாற்றுற்பொருளுணர்த்துமெனப்படாவோவென்று ஐயுறு வார்க்கு, 'உறுகால்;' 'தவப்பல;' 'நனி சேய்த்து' எனவும், 'ம ணங்கமழ் வியன்மார்ப னணங்கிய செல்லல்' எனவும், முன் னும் பின்னும் வருஞ்சொன்னாடி அவற்றுள் இச்சொல்லோடு இவ்வுரிச்சொல் இயையுமென்று கடைப்பிடிக்கத் தாம் புணர் த்த சொற்கேற்ற பொருள் விளங்குதலின், உரிச்சொல்லும் வரலாற்றுற்பொருளுணர்த்துமென்பது பெறப்படுமென ஐய மகற்றியவாறெனக் கொள்க. வரலாற்றுற்பொருளுணர்த்தா

வாயின், குழூஉவின் வந்த குறிநிலைவழக்குப்போல இயற்கைச் சொல்லெனப்படாவென்பது. (கூரு)

ருகூ0. கூறிய கிளவிப் பொருணிலை யல்ல
வேறுபிற தோன்றினு மவற்றொடுங் கொளலே.

இ - ள். முன்னும் பின்னும் வருபவை நாடிய வழி, உரிச்சொற்குக் கூறப்பட்ட பொருளேயன்றிப் பிறபொருடோன்றுமாயினும், கூறப்பட்டவற்றோடு அவற்றையுங்கொள்க. எ-று.

'கடிநாறும் பூந்துணர்' என்றவழிக் கடியென்பது முன்னும் பின்னும் வருபவை நாட வரைவு முதலாயின பொருட்கேலாது மணப்பொருட்டாயினவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. (கூசு)

ருகூக. பொருட்குப்பொரு டெரியி னதுவரம் பின்றே.

பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்திப் பொருளுணர்த்துங்கால் படுமுறைமையுணர்த்துகின்றார்.

இ - ள். ஒருசொல்லை ஒருசொல்லாற்பொருளுணர்த்தியவழி அப்பொருளுணர்த்த வந்த சொற்கும் பொருள் யாதெனப் பொருட்குப் பொருடெரியுமாயின், மேல் வருவனவற்றிற்கெல்லாம் ஈதொத்தலின், அவ்வினா இறை வரம்பின்றியோடும்; அதனாற்பொருட்குப் பொருடெரியற்க. எ-று.

ஒருசொற்குப் பொருளுரைப்பது பிறிதோர்சொல்லானன்றே, அச்சொற்பொருளும் அறியாதானை உணர்த்துமாறென்னையெனின்;—அது வருகின்ற சூத்திரத்தாற்பெறப்படும். ()

ருகூஉ. பொருட்குத்திரி பில்லை யுணர்த்த வல்லின்.

இ - ள். 'உறுகால்' என்புழி உறுவென்னுஞ்சொற்குப் பொருளாகிய மிகுதியென்பதன்பொருளும் அறியாத மடவோனாயின், அவ்வாறு ஒருபொருட்கிளவி கொணர்ந்துணர்த்தலுறாது கடுங்காலது வலி கண்டாய் ஈண்டு உறுவென்பதற்குப் பொருளென்று தொடர்மொழி கூறியானும் கடுங்காலுள்வழிக் காட்டியானும், அம்மாணக்கனுணரும் வாயிலறிந்து உணர்த்த

ல்வல்லனாயின், அப்பொருடிரிபு படாமல் அவனுணரும். எ-று. அவற்றானுமுணர்தலாற்றாதானை உணர்த்துமாறென்னையெனின்;—அதற்கன்றே வருஞ்சூத்திரமெழுந்ததென்பது. (௬௬)

௩௯௩. உணர்ச்சி வாயி லுணர்வோர் வலித்தே.

இ - ள். வெளிப்படத் தொடர்மொழி கூறியானும் பொருளைக் காட்டியானும் உணர்த்தவும் உணராதானை உணர்த்தும் வாயிலில்லை; உணர்ச்சியது வாயில் உணர்வோரதுணர்வை வலியாகவுடைத்தாகலான். எ-று.

யாதானுமோராற்றானுணருந்தன்மை அவற்கில்லையாயின், அவனையுணர்த்தற்பாலனல்லனென்றவாறு. (௬௭)

௩௯௪. மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோன்றா.

இ - ள். உறு தவ முதலாயின சொற்கு மிகுதி முதலாயின பொருளாதல் வரலாற்றுமுறைமையாற்கொள்வதல்லது, அவை அப்பொருளவாதற்குக் காரணம் விளங்கத் தோன்றா. எ-று.

பொருளொடு சொற்கியைபு இயற்கையாகலான் அவ்வியற்கையாகிய இயைபாற் சொற்பொருளுணர்த்துமென்ப. ஒருசாரார் பிறகாரணத்தானுணர்த்துமென்ப. அவற்றுண்மெய்ம்மையாகிய காரணம் ஆசிரியர்க்குப் புலனாவதல்லது நம்மனோர்க்குப் புலனாகாமையின், மொழிப்பொருட்காரணமில்லையென்னாது விழிப்பத் தோன்றாவென்றார். அக்காரணம் பொதுவகையான் ஒன்றாயினுஞ் சொற்றோறுமுண்மையிற்சிறப்புவகையாற்பலவாம்; அதனான் விழிப்பத் தோன்றாவெனப் பன்மையாற்கூறினார். உரிச்சொற்பற்றியோதினானேனும், ஏனைச்சொற்பொருட்குமிஃதொக்கும். (௬௮)

௩௯௫. எழுத்துப்பிரிந் திசைத்த லிவணியல் பின்றே.

இ - ள். முதனிலையும் இறுதிநிலையுமாக எழுத்துக்கள் பிரிந்து வேறு வேறு பொருளுணர்த்தல் உரிச்சொல்லிடத்தியையுடைத்தன்று. எ-று.

இவணியல்பின்றெனவே, எழுத்துப் பிரிந்து பொருளுணர்த்தல் இரண்டு இயல்புடைத்தென்பதாம். அவையாவன, வினைச்சொல்லும் ஒட்டுப்பெயருமாம். பிரிதலும் பிரியாமையும் பொருளுணர்த்துவனவற்றிற்கேயாகலின், கூறைகோட்படுதல் கடவுளர்க்கு எய்தாதவாறுபோல, இடைச்சொற்கு இவ்வாராய்ச்சியெய்தாமையறிக.

தவ நனியென்னுந்தொடக்கத்தன குறிப்புவினையெச்சம்போலப் பொருளுணர்த்தலின், அவைபோலப் பிரிக்கப்படுங்கொல்லோவென்றையுறுமை ஐயமகற்றியவாறு. (௯௯)

௩௯௯. அன்ன பிறவுங் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉ
முரிச்சொல் லெல்லாம் பொருட்குறை கூட்ட
வியன்ற மருங்கி னினைத்தென வறியும்
வரம்புதமக் கின்மையின்வழி நனிகடைப்பிடித்
தோம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்த லென்மனார் புலவர்.

இ - ள். அன்னபிறவுங்கிளந்தவல்ல பன்முறையானும் பரந்தன வரூஉமுரிச்சொல்லெல்லாம். எ-து. சொல்லப்பட்டனவேயன்றி அவைபோல்வன பிறவும் பலவாற்றானும் பரந்து வருமுரிச்சொலெல்லாம்.எ-று. பொருட்குறைகூட்டவியன்ற மருங்கினினைத்தெனவறியும் வரம்பு தமக்கின்மையின். எ-து. பொருளொடு புணர்த்துணர்த்த இசை குறிப்புப் பண்புபற்றித் தாமியன்ற நிலத்து இத்துணையென வரையறுத்துணருமெல்லை தமக்கின்மையான் எஞ்சாமைக் கிளத்தலரிதாகலின். எ-று. வழிநனிகடைப்பிடித்தோம்படையாணையிற்கிளந்தவற்றியலாற் பாங்குறவுணர்தல். எ-து. "இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப் பெயரினும் வினையினு மெய்தடுமாறி" எனவும் "முன்னும் பின்னும் வருபவை நாடி" எனவுங் கூறிய நெறியைச் சோராமற் கடைப்பிடித்து "எச்சொல்லாயினும் பொருள்வேறு கிளத்தல்" எனவும், "ஒத்த மொழி

யாற் புணர்த்தன ருணர்த்த—றத்த மரபிற் றோன்றுமன் பொருளே" எனவும் என்றோற்றரப்பட்ட பாதுகாவலாளையிற் கிளந்தவற்றியல்பொடும் ஒரீஇயவற்றை முறைப்படவுணர்க. எ-று.

குறிப்புப்பொருண்மை பலவகைத்தாகலானும், பெயரினும் வினையினு மெய்தடுமாறியுந் தடுமாறாதும் ஒருசொற்பலபொருட்குரித்தாயும் வருதலானும், ஈறுபற்றித் தொகுத்துணர்த தற்கு அன்னவீறுடையவன்மையானும், பன்முறையானும் பரந்தன வருஉமென்றார்.

பொருளைச் சொல் இன்றியமையாமையின், அதனைக் குறையென்றார்; ஒருவன் வினையும் பயனும் இன்றியமையாமையின், 'வினைக்குறை தீர்ந்தாரிற் றீர்ந்தின் றுலகு' 'பயக்குறை யில்லைதாம் வாழுநாளே' என்றாற்போல. பொருட்குறை கூட்ட வரம்பு தமக்கின்மையின்ன இவையும்.

இருமையென்பது கருமையும் பெருமையுமாகிய பண்புணர்த்தும். சேணென்பது சேய்மையாகிய குறிப்புணர்த்தும். தொன்மையென்பது பழமையாகிய குறிப்புணர்த்தும். இவையெல்லாம் அன்னபிறவுங்கிளந்தவல்லவென்பதனாற்கொள்க. பிறவுமன்ன. (௪௦௦)

உரியியன் முற்றிற்று.

ஒன்பதாவது

# எச்சவியல்.

௩௯௭. இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொ
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே. [லென்

கிளவியாக்கமுதலாக உரியியலிறுதியாகக் கிடந்த ஓத்துக்களுள் உணர்த்துதற்கிடமின்மையான் உணர்த்தப்படாது எஞ்சி நின்ற சொல்லிலக்கணமெல்லாந்தொகுத்துணர்த்திய வெடுத்துக்கொண்டார். அதனான் இவ்வோத்து எச்சவியலென்னும் பெயர்த்தாயிற்று.

"கண்டீரொன்று" எனவும், "செய்யா யென்னு முன்னிலை வினைச்சொல்" எனவும், "உரிச்சொன் மருங்கினும்" எனவும், "ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி" எனவும், இவை முதலாகிய சூத்திரங்களானுணர்த்தப்பட்ட அசைநிலையும் வினைச்சொல்லிலக்கணமும் வழுவமைதியும் அவ்வோத்துக்களுளுணர்த்தாது ஈண்டுணர்த்தியதென்னையோவெனின்; — அதற்குக் காரணம் அவ்வச்சூத்திரமுரைக்கும்வழிச் சொல்லுதும்.

பலபொருட்டொகுதிக்கு ஒன்றனாற்பெயர் கொடுக்குங்கால் தலைமையும் பன்மையும்பற்றிக் கொடுப்பினல்லது பிறிதாறின்மையானும், தலைமையும் பன்மையும் எச்சத்திற்கின்மையானும், பத்துவகையெச்சம் ஈண்டுணர்த்தலான் எச்சவியலாயிற்றென்றல் பொருந்தாமையுணர்க.

செய்யுட்குரிய சொல்லும், அவற்றதிலக்கணமும், அவற்றாற்செய்யுள் செய்வுழிப் படும் விகாரமும், செய்யுட்பொருள்கோளும், எடுத்துக்கோடற்கணுணர்த்துகின்றார்.

இச்சூத்திரத்தின் பொருள். இயற்சொல்லும், திரிசொல்லும், திசைச்சொல்லும், வடசொல்லுமென அத்துணையே செய்யுளீட்டுதற்குரிய சொல்லாவன. எ-று.

இயற்சொல்லானுஞ் செய்யுட்சொல்லாகிய திரிசொல்லானுமேயன்றித் திசைச்சொல்லும் வடசொல்லும் இடைவிராய்ச் சான்றோர் செய்யுள் செய்யுமாறு கண்டு ஏனைப்பாடைச்சொல்லுஞ் செய்யுட்குரியவோவென்றையுற்றார்க்கு, இந்நான்கு சொல்லுமே செய்யுட்குரியன பிறபாடைச்சொல் உரியவல்லவென்று வரையறுத்தவாறு.

செய்யுள் செய்யலாவது ஒருபொருண்மேற் பலசொற் கொணர்ந்தீட்டலாகலான், ஈட்டலென்றார்.

பெயர்வினையிடையுரியென்பன இயற்சொற்பாகுபாடாகலான், இயற்சொல் அந்நான்குபாகுபாட்டானுஞ்செய்யுட்குரித்தாம். திரிசொற்பெயராயல்லது வாரா. என்மனாரென்பத

னை வினைத்திரிசொல்லென்பாருமுளர். அஃது 'என்றிசினோர்' 'பெறலருங்குரைத்து' என்பனபோலச் செய்யுண்முடிபு பெற்று நின்றதென்றலே பொருத்தமுடைத்து. தில்லென்னுமிடைச்சொல், தில்லவென்றுனுந் தில்லையென்றுனுந் திரிந்து நின்றவழி அவை வழக்கிற்குமுரியவாகலின், திரிசொல்லெனப்படாது. கடுங்கால் என்புழிக் கடியென்னுமுரிச்சொல், "பெயரினும் வினையினு மெய்தடு மாறி" என்பதனுற் பண்புப்பெயராய்ப் பெயரொடு தொக்கு வழக்கினுட்பயின்று வருதலால், திரிசொல்லெனப்படாது. திசைச்சொல்லுள் ஏனைச்சொல்லுமுளவேனும், செய்யுட்குரித்தாய் வருவது பெயர்ச்சொல்லேயாம். வடசொல்லுள்ளும் பெயரல்லது செய்யுட்குரியவாய் வாரா. இவ்வாறுதல் சான்றோர்செய்யுள் நோக்கிக் கண்டுகொள்க. (க)

நகூஅ. அவற்றுள்,

　　இயற்சொற் றாமே
　　செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
　　தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே.

இ - ள். அந்நான்கனுள், இயற்சொல்லென்று சொல்லப்பட்ட சொற்றாம், செந்தமிழ்நிலத்து வழக்காதற்குப் பொருந்திக் கொடுந்தமிழ்நிலத்துந் தம்பொருள் வழுவாமலுணர்த்துஞ்சொல்லாம். எ-று.

அவையாவன நிலம், நீர், தீ, வளி, சோறு, கூழ், பால், தயிர், மக்கள், மா, தெங்கு, கமுகு என்னுந்தொடக்கத்தன.

செந்தமிழ்நிலமாவன வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் றெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்.

திரிபின்றி இயல்பாகிய சொல்லாகலின் இயற்சொல்லாயிற்று. கொடுந்தமிழ்நிலத்திற்கும் பொதுவாகலின் இயற்சொல்லாயிற்றெனினுமமையும். நீரென்பது ஆரியச்சிதைவாயினும் அப்பொருட்கு அதுவே சொல்லாய்ச் செந்தமிழ்நிலத்தும் கொடுந்தமிழ்நிலத்தும் வழங்கப்படுதலான் இயற்சொல்லாயிற்று. பிறவுமிவ்வாறு வருவன இயற்சொல்லாகக்கொள்க.

தாமென்பது கட்டுரைச்சுவைபட நின்றது. (உ)

கூ௯௯. ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த வொருசொல் லாகியு
மிருபாற் றென்ப திரிசொற் கிளவி.

இ - ள். ஒருபொருள் குறித்து வரும் பலசொல்லும் பல பொருள் குறித்து வரும் ஒருசொல்லுமென இருவகைப்படு ந் திரிசொல். எ-று.

வெற்பு, விலங்கல், விண்டு என்பன ஒருபொருள் குறித்த வேறுபெயர்க்கிளவி. எகினமென்பது அன்னமும் கவரிமாவு ம் புளிமாவும் நாயுமுணர்த்தலானும், உந்தியென்பது யாழ்ப் பத்தலுறுப்பும் கொப்பூழும் தேர்த்தட்டும் கான்யாறுமுண ர்த்தலானும், இவை வேறுபொருள் குறித்த ஒருசொல்.

திரிசொல்லது திரிவாவது உறுப்புத் திரிதலும் முழுவது ந்திரிதலுமென இருவகைத்து. கிள்ளை, மஞ்ஞை என்பன உறுப்புத் திரிந்தன. விலங்கல், விண்டு என்பன முழுவதுந் திரிந்தன. முழுவதுந்திரிந்தனவற்றைக் கட்டிய வழக்கென் பாருமுளர். அவை கட்டிய சொல்லாமாயிற் செய்யுள் வழ க்காமாறில்லை; அதனான் அவையுந்திரிவெனல்வேண்டுமென் பது.

அஃதேல், பலசொல் ஒருபொருட்குரியவாதலும் ஒருசொ ற் பலபொருட்குரித்தாதலும் உரிச்சொன்முதலாகிய இயற் சொற்குமுண்மையான் அது திரிசொற்கிலக்கணமாமாறென் னையெனின்; — அது திரிசொற்கிலக்கணமுணர்த்தியவாறன் று; அதனது பாகுபாடுணர்த்தியவாறு. திரிபுடைமையே திரி சொற்கிலக்கணமாதல் சொல்லின்முடிவினப்பொருண்முடி த்தலென்பதனாற்பெற வைத்தார். கிள்ளை மஞ்ஞையென்பன ஒருசொல் ஒருபொருட்குரித்தாகிய திரிசொல்லாதலின் இரு பாற்றென்றல் நிரம்பாதெனின்,—அற்றன்று: ஆசிரியர் இரு பாற்றென்ப திரிசொற்கிளவி எனத் தொகை கொடுத்தாரா கலின், கிள்ளை மஞ்ஞையென்பனவற்றோடு ஒருபொருட்கிள வியாய் வரும் திரிசொலுளவாகலொன்றே இவை பிறபொ

ருள்படுதலொனரே இரண்டனுளொன்று திட்பமுடைத்தா தல்வேண்டும். என்னை? ஆசிரியர் பிற கூறுமையினென்பது.

திரித்துக்கொண்டது இயற்கைச்சொல்லான் இன்பம் பெறச் செய்யுளீட்டலாகாமையானன்றே; அதனாற்றிரிசொல்லெனவே, செய்யுட்குரித்தாதலும் பெறப்படும். (௩)

௪00. செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி.

இ - ள். செந்தமிழ்நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டுநிலத்துந் தாங்குறித்த பொருள் விளக்குந்திசைச்சொல். எ-று. என்றது, அவ்வந்நிலத்துத் தாங்குறித்த பொருள் விளக்குவதல்லது அவ்வியற்சொற்போல எந்நிலத்துந் தம்பொருள் விளக்காவென்றவாறும்.

பன்னிருநிலமாவன பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை எனச் செந்தமிழ்நாட்டுத் தென்கீழ்பான்முதலாக வடகீழ்பாலிறுதியாக எண்ணிக்கொள்க.

தென்பாண்டிநாட்டார் ஆ எருமை என்பனவற்றைப் பெற்றமென்றும், தம்மாமியென்பதனைத் தந்துவையென்றும், வழங்குப. பிறவுமன்ன.

தங்குறிப்பினவென்று தனிமொழி தம்பொருளுணர்த்து மாற்றுக்குச் சொல்லினர்; இருமொழி தொடருமிடத்துத் தன்னை வந்தான் என வேண்டியவாறு வரப்பெறுமென்றுரால்லவொன்பது. (௪)

௪0௧. வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.

இ - ள். வடசொற்கிளவியாவது வடசொற்கே உரியவெனப்படுஞ் சிறப்பெழுத்தினீங்கி இருசார்மொழிக்கும் பொதுவாகிய எழுத்தானியன்ற சொல்லாம். எ-று. எனவே, பொதுவெழுத்தானியன்ற வடசொல்லும் செய்யுட் செய்தற்குச் சொல்லாமென்றவாறுமிற்று.

அவை வாரி, மேரு, குங்குமம், மணி என்னுந்தொடக்கத்தன.

வடசொல்லாவது வடசொல்லோடொக்குந்தமிழ்ச்சொல்லென்றா லுரையாசிரியரெனின்;—அற்றன்று: ஒக்குமென்று சொல்லப்படுவன ஒருபுடையானொப்புமையும் வேற்றுமையுமுடைமையான் இரண்டாகல்வேண்டும். இவை எழுத்தானும் பொருளானும் வேறுபாடின்மையாகிய ஒருசொல்லிலக்கணமுடைமையான் இரண்டுசொல்லெனப்படா; அதனான் ஒத்தல் யாண்டையது, ஒருசொல்லேயாமென்பது. ஒருசொல்லாயினும் ஆரியமுந்தமிழுமாகிய இடவேற்றுமையான் வேறாயினவெனின்;—அவ்வாறாயின் வழக்குஞ்செய்யுளுமாகிய இடவேற்றுமையாற் சோறு கூழென்னுந்தொடக்கத்தனவும் இரண்டுசொல்லாவான் செல்லும்; அதனான் இடவேற்றுமையுடையவேனும் ஒருசொல்லிலக்கணமுடைமையான் ஒருசொல்லேயாம். ஒருசொல்லாயவழித் தமிழ்ச்சொல் வடபாடைக்கட்செல்லாமையானும், வடசொல் எல்லாத்தேயத்திற்கும் பொதுவாகலானும், இவை வடசொல்லாய் ஈண்டு வழங்கப்பட்டனவெனல்வேண்டும்; அதனான் இது போலியுரையென்க. அல்லதூஉம், அவை தமிழ்ச்சொல்லாயின் வடவெழுத்தொரீஇயென்றல் பொருந்தாமையானும், வடசொல்லாதலறிக. (ரு)

சo௨. சிதைந்தன வரினு மியைந்தன வரையார்.

இ - ள். பொதுவெழுத்தானியன்றனவேயன்றி, வடவெழுத்தானியன்ற வடசொற்சிதைந்து வரினும், பொருத்தமுடையன செய்யுளிடத்து வரையார். எ-று.

உ - ம். 'அரமிய வியலகத் தியம்பும்.' எ-ம். 'தசநான் கெய்திய பணைமரு ளெருத்தின்.' எ-ம். வரும்.

சிதைந்தன வரினுமெனப் பொதுப்படக் கூறியவதனான், ஆணை, வட்டம், நட்டம், கண்ணன் எனப் பாகதமாய்ச் சிதைந்து வருவனவுங்கொள்க.

இச்சூத்திரத்தானும் அவை தமிழ்ச்சொலன்மையறிக. (சு)

௩௦௩. அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை, வலிக்கும் வழி வலித்தலு மெலிக்கும்வழி மெலித்தலும், விரிக்கும்வழி விரித்தலுந் தொகுக்கும்வழித் தொகுத்தலு, நீட்டும்வழி நீட்டலுங் குறுக்கும்வழிக் குறுக்கலு, நாட்டல் வலிய வென்மனார் புலவர்.

இ - ள். இயற்சொற்றிரிசொற்றிசைச்சொல்வடசொல்லென்னுநான்குசொல்லையுஞ் செய்யுளாகத் தொடுக்குங்கால், மெலியதனை வலிக்கவேண்டும்வழி வலித்தலும், வலியதனை மெலிக்கவேண்டும்வழி மெலித்தலும், குறைவதனை விரிக்கவேண்டும்வழி விரித்தலும், மிகுவதனைத் தொகுக்கவேண்டும் வழித் தொகுத்தலும், குறியதனை நீட்டவேண்டும்வழி நீட்டலும், நெடியதனைக் குறுக்கவேண்டும்வழிக் குறுக்கலுமாகிய அறுவகைவிகாரமும், செய்யுளின்பம் பெறச் செய்வான் நாட்டுதலை வலியாகவுடைய. எ-று.

உ - ம். 'குறுக்கையிரும்புலி;' 'முத்தை வரூஉங் காலந் தோன்றின்' என்பன வலிக்கும்வழி வலித்தல். 'சுடுமண்பாவை;' 'குன்றிய லுகரத் திறுதி' என்பன மெலிக்கும்வழி மெலித்தல். 'தண்ணந்துறைவன்' என்பது விரிக்கும்வழி விரித்தல். 'மழவரோட்டிய' என்பது தொகுக்கும்வழித் தொகுத்தல். 'குன்றி கோபங் கொடிவிடு பவளமொண்செங் காந்தளொக்கு நின்னிறம்' என்புழிச் செவ்வெண்ணின்றொகை தொக்கு நிற்றலின் இதுவுமது. வீடுமின் என்பது நீட்டும்வழி நீட்டல். பாசிலையென்பது காட்டுவாருமுளர். உண்டார்ந் தென்பது உண்டருந்தெனக் குறுகி நிற்றலிற் குறுக்கும்வழிக் குறுக்கல். 'அழுந்துபடு விழுப்புண்' என்பதுமது. பிறவுமன்ன.

நாட்டல்வலியவென்றது, இவ்வறுவகைவிகாரமும் இன்னுழியாமென்று வரையறுக்கப்படா; செய்யுள் செய்யுஞ்சான்றோர் அணி பெற நாட்டலைத் தமக்கு வலியாகவுடையவென்றவாறு. நாட்டல், நிலை பெறச் செய்தல்.     (எ)

சO௪. நிரனிறை சுண்ணை மடிமறி மொழிமாற்
றவைநான் கென்ப மொழிபுண ரியல்பே.

இனிச் செய்யுளிடத்து விகாரவகையான் மொழிகள் தம் முட்புணருமாறு கூறுகின்றார்.

இ - ள். நிரனிறையும், சுண்ணமும், அடிமறியும், மொழி மாற்றுமென நான்கென்று சொல்லுப, அந்நான்குசொல்லு ஞ் செய்யுளிடத்துத் தம்முட்புணருமுறைமை. எ-று.

நான்குசொல்லுமென்பதூஉஞ் செய்யுளிடத்தென்பதூஉம் அதிகாரத்தாற்பெற்றாம்.

நிரனிறையுஞ் சுண்ணமும் மொழிமாற்றாதலொக்குமாயி னும், நிரனிற்றலும் அளவடியெண்சீரைச் சுண்ணமாகத் து ணித்தலுமாகிய வேறுபாடுடைமையான், அவற்றைப் பிரித்து அவ்வேறுபாட்டாற் பெயர் கொடுத்து, வேறிலக்கணமில்லா த மொழிமாற்றை மொழிமாற்றென்றார்.

இச்சூத்திரத்தான் மொழிபுணரியல் நான்கென வரையறு த்தவாறு. (அ)

சO௫. அவற்றுள்,
நிரனிறை தானே
வினையினும் பெயரினு நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்.

இ - ள். அந்நான்கினுள், நிரனிறையாவது வினையானும் பெயரானும் ஆராயத் தோன்றிச் சொல் வேறு நிற்பப் பொ ருள் வேறு நிற்றலாம். எ-று.

தொடர்மொழிப்பொருள் முடிக்குஞ் சொற்கண்ணதாக லான், முடிக்குஞ்சொல்லைப் பொருளென்றார்.

வினையினும் பெயரினுமென்றதனான், வினைச்சொல்லான் வருவதூஉம், பெயர்ச்சொல்லான் வருவதூஉம், அவ்விருசொ ல்லான் வருவதூஉமென நிரனிறை மூன்றாம்.

உ - ம். 'மாசு போகவுங் காய்பசி நீங்கவுங்—கடிபுனன் மூழ்கி யடிசில்கை தொட்டு' என முடிவனவும் முடிப்பனவு மாகிய வினைச்சொல் வேறு வேறு நிற்றலின், வினைநிரனிறை யாயிற்று. அவை மாசு போகப் புனன்மூழ்கி, பசி நீங்க அடிசில் கைதொட்டு எனவியையும். 'கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி' என முடிவனவும் முடிப்பனவுமாகிய பெயர்ச்சொல் வேறு வேறு நிற்றலின், பெயர்நிரனிறையாயிற்று. அவை நுசுப்புக் கொடி, உண்கண் குவளை, மேனி கொட்டை எனவியையும். 'உடலு முடைந்தோடு மூழ்மலரும் பார்க்குங்—கடலிரு ளாம்பல்பாம் பென்ற - கெடலருஞ்சீர்த்—திங்க டிருமுகமாச் செத்து' என முடிப்பனவாகிய வினையும் முடிவனவாகிய பெயரும் வேறு வேறு நிற்றலின், பொதுநிரனிறையாயிற்று. அவை கடல் உடலும், இருள் உடைந்தோடும், ஆம்பல் ஊழ்மலரும், பாம்பு பார்க்கும் எனவியையும்.

நினையத் தோன்றியென்றதனால், சொல்லும் பொருளும் வேறு வேறு நிற்குங்கால் நிரல் பட நில்லாது 'களிறுங் கந்தும் போல நளிகடற் - கூம்புங் கலனுந் தோன்றுந்—தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே' என மயங்கி வருதலுங்கொள்க. (௬)

௪0௬. சுண்ணந் தானே
பட்டாங் கமைந்த வீரடி யெண்சீ
ரொட்டுவழி யறிந்து துணித்தன ரியற்றல்.

இ - ள். சுண்ணமாவது இயல்பாக அமைந்த ஈரடிக்கணுளவாகிய எண்சீரைத் துணித்து இயையும்வழி அறிந்து கூட்டி இயற்றப்படுவதாம். எ-று.

அளவடியல்லாதன விகாரவடியாகலிற் பட்டாங்கமைந்திலவாதலிற் பட்டாங்கமைந்தவீரடியெனவே, அளவடியாதல் பெறப்படும். ஈரடியெண்சீர் விகாரவடியானும் பெறப்படுதலின், அவற்றை நீக்குதற்குப் பட்டாங்கமைந்தவீரடியென்றார். எனவே, சுண்ணம் அளவடியிரண்டனுளல்லது பிறுண்டு வாராதென்பது.

உ - ம். 'சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய—யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப—கானக நாடன் சுனை' என்புழி, ஆழ, மிதப்ப, நீத்து, நிலையென்பனவும், சுரை, அம்மி, யானை, முயற்கென்பனவும், நின்றுழி நிற்ப இயையாமையின், சுரை மிதப்ப, அம்மியாழ, யானைக்கு நிலை, முயற்கு நீத்து எனத் துணித்துக் கூட்ட, இயைந்தவாறு கண்டுகொள்க.

சுண்ணம்போலச் சிதராய்ப் பரந்து கிடத்தலிற் சுண்ணமென்றார். (௧0)

ச0எ. அடிமறிச் செய்தி யடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே.

இ - ள். அடிமறிச்செய்யுளாவது, சீர் நின்றாங்கு நிற்ப அடிகள் தத்தநிலையிற்றிரிந்து ஒன்றனிலைக்களத்து ஒன்று சென்று நிற்கும். எ-று. எனவே, எல்லாவடியும் யாண்டுஞ்செல்லுமென்பதாம்.

உ - ம். 'மாறுக் காதலர் மலைமறந் தனரே—யாறுக் கட்பனி வரலா னாவே—வேறு மென்றோள் வளைநெகி ழும்மே—கூறாய் தோழியான் வாழு மாறே' என வரும். இதனுட் சீர் நின்றாங்கு நிற்பப் பொருள் சிதையாமல் எல்லாவடியுந் தடுமாறியவாறு கண்டுகொள்க.

பெரும்பான்மையும் நாலடிச்செய்யுட்கணல்லது இப்பொருள்கோள் வாராதென்க.

"நிரனிறைதானே;" "சுண்ணந்தானே;" "மொழிமாற்றியற்கை" என்பனபோல ஈண்டும அடிமறிச்செய்தியென்பதனைக் குறளடியாக்கி, அடிநிலை திரிந்து சீர்நிலை திரியாது தடுமா றும்மே பொருடெரி மருங்கின் என்று சூத்திரமாக அறுப்பாருமுளர். (௧௧)

ச0அ. பொருடெரி மருங்கி
னீற்றடி யிறுசீ ரெருத்துவயிற் றிரியுந்
தோற்றமும் வரையா ரடிமறி யான.

இ - ள். பொருளாராயுங்கால், அடிமறிச்செய்யுட்கண் ஈற்றடியது இறுதிச்சீர் எருத்தடியிற்சென்று திரிதலும்.வரையாா. எ-று.

சீர்நிலை திரியாது தடுமாறுமென்முராகலின், சீர்நிலை திரிதலும் ஒருவழிக்கண்டு எய்தியதிகந்துபடாமற்காத்தவாறு.

இலக்கியம் வந்தவழிக் கண்டுகொள்க.

எருத்துவயினென்பதற்கு ஈற்றயற்சீர்வயினென்று பொருளுரைத்து, 'சூரல் பம்பிய சிறுகான் யாறே—சூரர மகளிா் ரரணஞ் கினரோ — சார ஞட நீவரு நீயே — வார லெனினே யானஞ் சுவலே' என்புழி அஞ்சுவல் யான் என இறுதிச்சீர் ஈற்றயற்சீர்வயிற்சென்று திரிந்ததென்று உதாரணங் காட்டினூரால் உரையாசிரியரொனின்;—யானஞ்சுவலென நின்முங்கு நிற்பவும் பொருள் செல்லுமாகலின் இவ்வாறு திரிதல் பொருந்தாமையின், அவர்க்கது கருத்தன்றென்க.

எல்லாவடியும் யாண்டுஞ்செல்லுமாயினும், உரைப்போர் குறிப்பான் எருத்தென்றும் ஈற்றடியென்றுங்கூறினூர். "உரைப்போர் குறிப்பி னுணர்வகை யன்றி—யிடைப்பான் முதலீ றென்றிவை தம்முண்—மதிக்கப் படாதன மண்டல யாப்பே" என உரைப்போர்குறிப்பான் முதலுமிடையுமீறுங்கோடல் பிறருங்கூறினூரென்பது. (௧௨)

௪0௬. மொழிமாற் றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதி ரியைய
முன்னும் பின்னுங் கொள்வழிக் கொளாஅல்.

இ - ள். மொழிமாற்றினதியல்பு, பொருளெதிரியையுமாறு சொன்னிலையை மாற்றி முன்னும் பின்னுங் கொள்ளும்வழிக் கொளுவுதலாம். எ-று.

உ - ம். 'ஆரிய மன்னர் பறையி னெழூஉந்தியம்பும்—பாரி பறம்பின்மேற் றண்ணுமை-காரி—விறன்முள்ளூர் வேங்கை வீ தாஞணுந் தோளா—ணிறனுள்ளூ ருள்ள தலர்' என இதனுள், பாரி பறம்பின்மேற்றண்ணுமைதாஞணுந்தோளாள் என

வும், நிறன் விறன்முள்ளூர் வேங்கைவீ எனவும், உள்ளுருள்ளதாகிய அலர் ஆரிய மன்னர் பறையினெழூஉந்தியம்பும் எனவும், முன்னும் பின்னுங்கொள்வழியறிந்து கொளுவப் பொருளெதிரியைந்தவாறு கண்டுகொள்க. மொழிமாற்று நின்று ஒன்றற்கொன்று செவ்வாகாமை கேட்டார் கூட்டியுணருமாற்றாற் கடாவல்வேண்டும். அல்லாக்கால், அவாய்நிலையுந் தகுதியுமுடையவேனும் அண்மையாகிய காரணமின்மையாற்சொற்கள் தம்முளியையாவாமென்க. (கூ)

சகo. த ந நு எ எனு மவைமுத லாகிய
கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா.

செய்யுட்குரிய சொல்லும், சொற்றொடுக்குங்காற்படும் விகாரமும், அவை செய்யுளாக்குங்காற்றம்முட்புணர்ந்து நிற்குமாறுமாகிய செய்யுளொழிபு உணர்த்தி, இனி வழக்கிலக்கணத்தொழிபு கூறுகின்றார்.

இ - ள். த ந நு எ என்பனவற்றை முதலாகவுடையவாய்க் கிளைமை நுதலி வரும் பெயரும் பிரிக்கப்படா. எ-று.

அவையாவன தமன், தமள், தமர்; நமன், நமள், நமர்; நுமன், நுமள், நுமர்; எமன், எமள், எமர்; தம்மான், தம்மாள், தம்மார்; நம்மான், நம்மாள், நம்மார்; நும்மான், நும்மாள், நும்மார்; எம்மான், எம்மாள், எம்மார் என வரும்.

உம்மையாற் பிற கிளைநுதற்பெயரும் பிரிக்கப் பிரியாவென்பதாம்: அவை தாய், ஞாய், தந்தை, தன்னை என்னுந்தொடக்கத்தன.

இவற்றைப் பிரிப்பப் பிரியாவென்றது என்னையெனின்;—வெற்பன், பொருப்பன் என்னுந்தொடக்கத்தொட்டுப்பெயர் வெற்பு+அன், பொருப்பு+அன் எனப் பிரித்தவழியும், வெற்பு, பொருப்பு என்னுமுதனிலை தம்பொருள் இனிது விளக்கும். தமன் எமன் என்பனவற்றைத் தம்+அன், எம்+அன் எனப் பிரிக்கலுறின் தம், எம் என்பன முதனிலையாய்ப் பொருளுணர்த்துவனவாதல்வேண்டும்; அவை பொருளுணர்த்தா

மையான், தமன், எமன் என வழங்கியாங்குக் கொள்வதல்லது பிரிக்கப்படாமையின், அவ்வாறு கூறினாரென்பது. பிறவுமன்ன. அஃதேல், தாம், யாம் என்பனவற்றிற்கு முதனிலையாகப் பிரிக்கவே, அவையுந்தம்பொருளுணர்த்துமெனின்;— தமன், எமன் என்பன தன்கிளை, என்கிளை. எ-ம். தங்கிளை, எங்கிளை. எ-ம். முதனிலைவகையான் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாதலுடைய. ஒருமையுணர்த்துங்கால் தாம் யாம் என்பன பொருந்தாமையின் தான் யான் என்பனவே முதனிலையெனல்வேண்டும். வேண்டவே, இவ்வாறு பிரிப்பின் தமன் எமன் என ஓரொன்றிரண்டு சொல்லாதல்வேண்டுதலான், எழுத்தானும் பொருளானும் வேறுபாடின்மையின் ஒருசொல்லெனவேபடும்; இரண்டுசொல்லென்றல் நிரம்பாமையின், அவ்வாறு பிரித்தலும் பொருத்தமின்றென்பது.

கிளைநுதற்பெயர் விளிமரபின்கட்பெறப்பட்டமையாற் பெயரியலுளுணர்த்தாராயினர். அதனான் ஆண்டியைபுபட்டின்றாகலால், பிரிப்பப் பிரியா ஒருசொல்லடுக்கோடியைய இதனை ஈண்டு வைத்தார். (௧௪)

௪௧௧. இசைநிறையசைநிலைபொருளொடுபுணர்தலென்
றவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே.

இ - ள். இசைநிறையும், அசைநிலையும், பொருள் வேறுபாட்டோடு புணர்வதுமென ஒருசொல்லடுக்கு அம்மூன்றுவகைப்படும். எ-று.

உ - ம். 'ஏ ஏ ஏ ஏ யம்பன் மொழிந்தனள்' என்றது இசைநிறை. மற்றோ மற்றோ; அன்றே அன்றே என்பன அசைநிலை. பாம்பு பாம்பு; அவனவன்; வைதேன் வைதேன்; உண்டு உண்டு; போம் போம் என்பன, முறையானே விரைவுந் துணிவும் உடம்பாடும் ஒருதொழில் பலகானிகழ்தலுமாகிய பொருள்வேறுபாடுணர்த்தலிற் பொருளொடு புணர்தல். பொருள்வேறுபாடு பிறவுமுளவேல் வழக்கு நோக்கிக் கண்டுகொள்க.

அடுக்கு ஒருசொல்லது விகாரமெனப்படும்; இரண்டுசொல்லாயின் இருபொருளுணர்த்துவதல்லது இப்பொருள் வேறுபாடுணர்த்தாமையினென்பது. (கரு)

சுகஉ. வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே
வினையின் றொகையே பண்பின் றொகையே
யும்மைத்தொகையே யன்மொழித்தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே.

இனித் தொகையிலக்கணமுணர்த்துகின்றார்.

இ - ள். வேற்றுமைத்தொகை முதலாகத் தொகைச்சொல் ஆறும். எ-று.

வேற்றுமையுருபும் உவமவுருபும் உம்மையும் வினைச்சொல்லீறும் பண்புச்சொல்லீறுந் தொகுதலிற்றொகையாயினவென்பாரும், அவ்வப்பொருண்மேல் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்படத் தம்முளியைதலிற்றொகையாயினவென்பாருமென இருதிறத்தர் ஆசிரியர். செய்தான் பொருள்; இருந்தான் மாடத்து என உருபு தொக்கு ஒரு சொன்னீர்மைப்படாதனவுந் தொகையாவான் சேறலின் அவற்றை நீக்குதற்கும், வேழக்கரும்பு, கேழற்பன்றி என்புழித் தொக்கனவில்லையெனினும் தொகையென வேண்டப்படுமாகலான் அவற்றைத் தழுவுதற்கும், உருபு முதலாயின தொகுதலிற்றொகையென்பார்க்கும் ஒட்டியொருசொன்னீர்மைப்படுதலுந் தொகையிலக்கணமெனல்வேண்டும்; அதனான் உருபு முதலாயின தொகுதல் எல்லாத்தொகையினுஞ்செல்லாமையான், எல்லாத்தொகைக்கண்ணுஞ்செல்லுமாறு ஒட்டியொருசொல்லாதல் தொகையிலக்கணமாய் முடிதலின், இவ்வாசிரியர்க்கு இதுவே துணிவெனப்படுமென்பது. அற்றாயின், "உருபு தொக வருதலும்" எனவும் "வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்" எனவும் "உம்மை தொக்க பெயர்வயி னானும்" எனவும் "உவமை தொக்க பெயர்வயி னானும்" எனவும் ஓதலால் அவை ஆண்டுத் தொக்கனவெனப்படுமன்றோ வெனின்;—அற்றன்று: "அதுவென் வேற்றுமை யுயர்திணைத்

தொகைவயின்" என்புழி அதுவெனுருபு நின்று கெட்டதா யின் நின்ற காலத்துத் திணைவழுவாம்; அதுதிணைவழு அமை வுடைத்தெனின் விரிக்கின்றுழி நான்காமுருபு தொடராது அது தன்னையே விரிப்பினும் அமைவுடைத்து; அதனான் முறை ப்பொருட்டோன்ற நம்பிமகன் என இரண்டுசொற்றொக்கன வென்பதே ஆசிரியர்கருத்தெனல்வேண்டும். அல்லதூஉம், வினைத்தொகை பண்புத்தொகை அன்மொழித்தொகையென் பனவற்றின்கண் வினையும் பண்பும் அன்மொழியுந்தொக்கு நில்லாமையானும், அஃதே கருத்தாதலறிக. அதனான் உருபும் உவமையும் உம்மையுந்தொகுதலாவது தம்பொருள் ஒட்டிய சொல்லாற்றோன்றத் தாம் ஆண்டுப் புலப்படாதே நிற்றலே யாம்.

வேற்றுமைத்தொகையென்பது வேற்றுமைப்பொருளையு டைய தொகையென்றானும் வேற்றுமைப்பொருட்டொக்க தொ கையென்றானும் விரியும். உவமத்தொகை, உம்மைத்தொ கை, அன்மொழித்தொகையென்பனவும் அவ்வாறு விரியும். அன்மொழியாவது தொக்க சொல்லல்லாத மொழி. வினைத் தொகை பண்புத்தொகையென்பன வினையினது தொகை ப ண்பினது தொகையென விரியும். வினை பண்பென்றது அவ ற்றையுணர்த்துஞ்சொல்லை. ஒருசொல்லாற்றொகையின்மையி ற் பிறிதோர்சொல்லொடு தொகுதல் பெறப்படும்.

இச்சூத்திரத்தாற்றொகைச்சொல் இனைத்தென வரையறுத் தவாறு. (கசு)

சகஙு. அவற்றுள்,

வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல.

இ - ள். வேற்றுமைத்தொகை அவ்வேற்றுமையுருபு தொ டர்ப் பொருளுணர்த்தியாங்குணர்த்தும். எ-று. என்வே, சா த்தனொடு வந்தான் என்னும் பொருட்கட் சாத்தன் வந்தான் எனவும், சாத்தற்குக் கொடுத்தான் என்னும் பொருட்கட் சாத்தன் கொடுத்தான் எனவும், உருபு தொடர்ப் பொருளு

ணர்த்தும் ஆற்றலில்லன தொகா; அவ்வாற்றலுடையனவே தொகுவனவென்றவாறும்.

இரண்டாம்வேற்றுமைத்தொகை முதலாக வேற்றுமைத் தொகை அறுவகைப்படும். நிலங்கடந்தான்; குழைககாது. எ-ம். தாய்மூவர்; பொற்குடம். எ-ம். கருப்புவேலி; கடிசூத் திரப்பொன். எ-ம். வரைபாய்தல்; கருவூர்க்கிழக்கு. எ-ம். சாத்தன்புத்தகம்; கொற்றனுணர்வு. எ-ம். மன்றப்பெண்ணை; மாரிமா. எ-ம். வரும். இவை. முறையானே நிலத்தைக் கட ந்தான்; குழையையுடைய காது; தாயொடு மூவர்; பொன் ஞணியன்ற குடம்; கரும்பிற்கு வேலி; கடிசூததிரத்திற்குப் பொன்; வரையினின்றும் பாய்தல்; கருவூரின் கிழக்கு; சாத் தனது புத்தகம்; கொற்றனதுணர்வு; மன்றத்தின்கணிற்கும் பெண்ணை; மாரிக்கணுளதாமா என்னும் உருபுதொடர்ப் பொ ருளை இனிது விளக்கியவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. ()

சகச. உவமத் தொகையே யுவம வியல.

இ - ள். உவமத்தொகை உவமவுருபு தொடர்ப்பொருள் போலப் பொருளுணர்த்தும். எ-று. எனவே, புலியன்ன சா த்தன்; மயிலனன மாதர் என்னும் பொருட்கட் புலிச்சாத்தன்; மயின்மாதர் என அப்பொருள் விளக்கும் ஆற்றலில்லன தொ கா; ஆற்றலுடையனவே தொகுவனவென்பதாம்.

உ - ம். புலிப்பாய்த்துள்; மழைவண்கை; துடிநடுவு; பொ ன்மேனி என்பன புலிப்பாய்த்துளன்ன பாய்த்துள்; மழைய ன்ன வண்கை; துடியன்ன நடுவு; பொன்னன்ன மேனி என த் தம்விரிப்பொருளுணர்த்தியவாறு கண்டுகொள்க. அஃதே ல், புலிப்பாய்த்துளையொக்கும் பாய்த்துள்; மழையையொக் கும் வண்கை என விரிதலின் அவையெல்லாம் வேற்றுமைத் தொகையெனப்படும்; அதனுன் உவமத்தொகையென ஒன்றி ல்லையெனின்; — அற்றன்று: சொல்லுவார்க்கு அது கருத்தா யின் வேற்றுமைத்தொகையுமாம். அக்கருத்தானன்றிப் புலி யன்ன பாய்த்துள், பொன்மானுமேனி எனவேற்றுமையோ டு இயைபில்லா உவமவுருபு தொடர்ப்பொருட்கட்டொக்கவ

ழி உவமத்தொகையாவதல்லது வேற்றுமைத்தொகை ஆண்டி ன்மையின் வேற்றுமைத்தொகையாமாறில்லையென்க. உவம வுருபு ஒப்பில்வழியாற்பொருள் செய்யும் இடைச்சொல்லாக லான், வினையும் வினைக்குறிப்பும்பற்றி வரும் இரண்டாம்வே ற்றுமை; அவைபற்றி 'என்போற் பெருவிதுப் புறுக நின்னை யின்னு துற்ற வறனில் கூறோ' என்புழிப் போலவென்பது கு றிப்பு வினையெச்சமாய் நிற்றலானும், 'நும்ம ளோருமற் றினைய ராயி—னெம்ம னோரிவட் பிறவலர் மாதோ' என்புழி அன் னோ ரென்பது இடைச்சொன்முதனிலையாகப் பிறந்த குறிப்பு ப்பெயராகலானும், நும்மையனனோர் எம்மையன்னோரென இரண்டாவது விரித்தற்கேற்புடைமையறிக. (கஅ)

சகடு. வினையின் றொகுதி காலத் தியலும்.

இ - ள். வினைத்தொகை காலத்தின்கணிகழும். எ-று.

காலத்தியலுமெனப் பொதுவகையாற்கூறியவதனான் மூ ன்றுகாலமுங்கொள்க.

தொகுதி காலத்தியலுமெனவே, அவ்வினை விரிந்து நின்ற வழித் தோன்றாது தொக்கவழித் தொகையாற்றலாற் கா லந்தோன்றுமென்றவாறும்.

ஈண்டு வினையென்றது எவற்றையெனின்; — வினைச்சொற் கும் வினைப்பெயர்க்கும் முதனிலையாய், உண், தின், செல், கொல் என வினைமாத்திரமுணர்த்தி நிற்பனவற்றையென்பது. இவற்றை வடநூலார் தாதுவென்ப.

உ - ம். ஆடரங்கு; செய்குன்று; புணர்பொழுது; அரிவா ள்; கொல்யானை; செல்செலவு என வரும். காலமுணர்த்தா து வினைமாத்திரமுணர்த்தும் பெயர் நிலப்பெயர் முதலாகி ய பெயரொடு தொக்குழிக் காலமுணர்த்தியவாறு கண்டு கொள்க. காலமுணர்த்துகின்றுழிப் பெயரெச்சப்பொருள வாய் நின்றுணர்த்துமென்பது "செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின்—மெய்யொருங் கியலுந் தொழிறொகு மொழியு ம்" என்பதனாற்கூறினார். தொகைப்பொருளாகிய தாம் பிரி

ந்தவழிப் பெறப்படாமையின் ஆசிரியர் இவற்றைப் "புண ரிய நிலையிடை யுணரத் தோன்றா" என்றார். அதனான் இவை தஞ் சொல்லான் விரிக்கப்படாமையிற் பிரிவிலொட் டாம்.

பெயரொச்சம் நின்று தொக்கதென்றாரால் உரையாசிரிய ரெனின்;—அற்றன்று: ஆசிரியர் இவற்றைப் பிரித்துப் புணர்க் கப்படா வழங்கியவாறே கொள்ளப்படுமென்றது, பிரித்தவ ழித் தொகைப்பொருள் சிதைதலானன்றே; கொன்றயானை என விரிந்தவழியும் அப்பொருள் சிதைவின்றேல் "புணரிய நி லையிடை யுணரத் தோன்றா" என்றற்கோர்காரணமில்லையாம், அதனாற்பெயரெச்சம் நின்று தொகுதல் ஆசிரியர்கருத்தன் மையின், உரையாசிரியர்க்கும் அது கருத்தன்றெனக. அல்ல தூஉம், ஆகுபெயருணர்த்தியவழி வினைத்தொகையுளப்பட "இருபெயரொட்டும்" என்றாராகலானும். வினை நின்று தொ குதல் அவர்க்குக் கருத்தன்மையறிக.

அஃதேல், வினைத்தொகைக்கு முதனிலை பெயராமன்றோ வெனின்;—உரிஞென்பது முதலாயினவற்றைத் தொழிற்பெ யரென்றாராகலின், தொழின்மாத்திரமுணர்த்துவனவெல்லா ம் தொழிற்பெயரென்பது ஆசிரியர்கருத்தென்ப. (கக)

சுககூ. வண்ணத்தின் வடிவி னளவிற் சுவையினென்
றன்ன பிறவு மதன்குண நுதலி
யின்ன திதுவென வரூஉ மியற்கை
யென்ன கிளவியும் பண்பின் றொகையே.

இ-ள். வண்ணம், வடிவு, அளவு, சுவை என்பனவும் அ வை போல்வன பிறவுமாகிய குணத்தை நுதலிப் பின்றொக்க வழிக் குணச்சொற்குணமுடையதனையுணர்த்தலான் இன்ன திதுவென ஒன்றனை ஒன்று விசேடித்து இருசொல்லும் ஒரு பொருண்மேல் வருமியல்பையுடைய எல்லாத்தொகைச்சொ ல்லும் பண்புத்தொகையாம். எ-று.

றுதலியென்னுஞ்சினைவினையெச்சம் வருமென்னுமுதல்வினையோடு முடிந்தது.

இயற்கையென்றது, தொக்குழிப் பண்புடையதனைக் குறித்தல் அத்தொகைச்சொல்லதியல்பென்பதல்லது காரணங் கூறப்படாதென்றவாறு. தொகைக்கண்ணல்லது அச்சொல் தனிநிலையாய், உண், தின், செல், கொல் என்பனபோலப் பொருளுணர்த்தாமையின், பண்புத்தொகையும் வினைத்தொகைபோலப் பிரிக்கப்படாதாம்.

உ - ம். கருங்குதிரையென்பது வண்ணப்பண்பு. வட்டப் பலகையென்பது வடிவு. நெடுங்கோலென்பது அளவு. தீங் கரும்பென்பது சுவை. அன்னபிறவுமென்றதனுன், நுண்ணூல, பராரை, மெல்லிலை, நல்லாடை என்னுந்தொடக்கத்தன கொள்க. அவை, கரிதாகிய குதிரை, வட்டமாகிய பலகை எனப் பண்புச்சொல்லும் பண்புடைப்பொருளே குறித்தலான, இருசொல்லும் ஒருபொருளவாய் இன்னதிதுவென ஒனறையொன்று பொதுமை நீக்கியவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன.

அஃதேல், கரிதாகிய குதிரை, வட்டமாகிய பலகை என்பன அத்தொகையின் விரியாகலிற் பண்புத்தொகை பிரிக்கப்படாதென்றதென்னையெனின்;—அற்றன்று: தொகைப்பொருளுணர்த்துதற்குப் பிறசொற்கொணர்ந்து விரித்ததல்லது, தன்சொல்லான் விரியாமையின் அவை விரியெனப்படாவென்க. வடநூலாரும் பிரியாத்தொகையம் பிறசொல்லான் விரிக்கப்படுமென்றுர். கரியதென்னும் பண்புகொள்பெயர் கருங்குதிரையெனத் தொக்கதென்றுரால் உரையாசிரியரெனின்; — அதனைப் பெயரொச்சம் வினைத்தொகைநிலைமொழியென்றதற்குரைத்தாங்குரைத்து மறுக்க. பிறசொற்கொணர்ந்து விரிக்குங்கால், கரிய குதிரை, கரிதாகிய குதிரை, கரியது குதிரை என அத்தொகைப்பொருளுணர்த்துவனவெல்லாவற்றுனும் விரிக்கப்படும்.

முதனிலையாவது, கரியன், செய்யன், கருமை, செம்மை என்பனவற்றிற்கெல்லாம் முதனிலையாய்ச் சொல்லாய் நிரம்பாத கரு செவ்வெனப் பண்புமாத்திரநிற்பதாம்.

என்னகிளவியுமென்றதனால், சாரைப்பாம்பு, வேழக்கரும்பு, கேழற்பன்றி எனப் பண்பு தொகாது பெயர் தொக்கனவும் அத்தொகையாதல் கொள்க. இவற்றது சாரை முதலாகிய நிலைமொழி பிரித்தவழியும் பொருளுணர்த்தலின், இவற்றைப் பிரித்துப் புணர்த்தார். அஃதேல், பாம்பைச் சாரை விசேடித்ததல்லது சாரையைப் பாம்பு விசேடித்தின்றாகலின் ஒன்றையொன்று பொதுமை நீக்காமையாற் சாரைப் பாம்பென்பது முதலாயின பண்புத்தொகையாயினவாறென்னையெனின்;—நன்று சொன்னாய்: விசேடிப்பதும் விசேடிக்கப்படுவதுமாகிய இரண்டனுள் விசேடிப்பது விசேடியாக்கால் அது குற்றமாம்; விசேடிக்கப்படுவது விசேடித்தின்றெனினும் விசேடிக்கப்படுதலாகிய தன்றன்மைக்கிழுக்கின்மையான் விசேடியாது நிற்பினும் அமையுமென்க. இவ்வேறுபாடு பெறுதற்கன்றே, இன்னதிதுவென வரூஉமெனப் பின்மொழியை விசேடிப்பதாகவும், முன்மொழியை விசேடிக்கப்படுவதாகவும், ஆசிரியர் ஓதவாராயிற்றென்பது. அற்றேனும், சாரையெனவே குறித்த பொருள் விளக்கலிற் பாம்பென்பது மிகையாம் பிறவெனின்;—அற்றன்று: உலகவழக்காவது, சூத்திரயாப்புப்போல மிகைச்சொற்படா . . - சொல்லப்படுவதொன்றன்றி, மேற்றொட்டுங்கேட்டார்க்குப பொருள் இனிது விளங்க வழங்கப்பட்டு வருவதாகலின், அது கடாவன்றென்க. மிகைச்சொற்படாமைச்சொல்லப்படுமாயின், யான் வந்தேன், நீ வந்தாய் என்னாது வந்தேன், வந்தாய் என்றே வழங்கல்வேண்டுமென்பது. இனி ஒற்றுமைநயத்தால் எனபுநதோறுமுரியவாதலாகிய உறுப்புஞ் சாரையெனப்படுதலின், அவற்றை நீக்கலாற் பாம்பென்பதூஉம் பொதுமை நீக்கிற்றென்பாருமுளர். உயர்சொற்கிளவி, இடைச்சொற்கிளவி, உரிச்சொற்கிளவி என்புழியும், உயர்சொல், இடைச்சொல், உரிச்சொல்லென்பன சொல்லென்பதன்கட் கருத்துடையவன்றிக் குறிமாத்திரமாய், உயர்வு, இடை, உரி என்ற துணையாய் நின்றனவாகலின், சாரையென்பது பாம்பை விசேடித்தாற்போல அவை கிளவியென்பதனை விசேடித்து நின்றனவென்பது. அவ்வாற்றான் அமைவுடையவாயி

னும், சூத்திரமாகலின், உயர்சொல், இடைச்சொல், உரிச்சொலெனவேயமையும், கிளவியென்பதுமிகையெனின்; — மிகையாயினும் இன்னோரன்ன அமைவுடையவென்பதுணாத்தற்கு அவ்வாறோதினானென்பது. (௨௦)

௪௧௭. இருபெயர் பலபெய ரளவின் பெயரே
யெண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
யெண்ணின் பெயரோ டவ்வறு கிளவியுங்
கண்ணிய நிலத்தே யும்மைத் தொகையே.

இ - ள். இருபெயர் முதலாகச் சொல்லப்பட்ட அறுவகைச்சொற்றிரளையும் தனக்குச் சார்பாகக் குறித்து நிற்கும் உம்மைத்தொகை. எ-று.

உ - ம். உவாப்பதினான்கு என்பது இருபெயராகிய உம்மைத்தொகை. புலிவிற்கெண்டை என்பது பலபெயராகிய உம்மைத்தொகை. தூணிப்பதக்கு என்பது அளவுப்பெயராகிய உம்மைத்தொகை. முப்பத்துமூவரொன்பது எண்ணியற்பெயராகிய உம்மைத்தொகை. தொடியரையென்பது நிறைபெயராகிய உம்மைத்தொகை. பதினைந்தென்பது எண்ணுப்பெயராகிய உம்மைதத்தொகை. இனி அவை விரியுங்கால, உவாவும் பதினான்கும். எ-ம். புலியும் வில்லுங்கெண்டையும். எ-ம். தூணியும் பதக்கும். எ-ம். முப்பதின்மரும் மூவரும். எ-ம். தொடியுமரையும். எ-ம். பத்துமைந்தும். எ-ம். விரியும்.

வேற்றுமைத்தொகை முதலாயின பலசொல்லாற்றொகுதல் சிறுபான்மை; அதனான் உம்மைத்தொகை இருசொல்லானும் பலசொல்லானும் ஒப்பத் தொகுமென்பது அறிவித்தற்கு இருபெயர் பலபெயரென்றார். கற்சுனைக்குவளையிதழ், பெருந்தோட்பேதை எனப் பிறதொகையும் பெரும்பான்மையும். பலசொல்லான் வருமாலெனின்;—கல்லென்பதுஞ் சுனையென்பதுங் கற்சுனையெனத் தொக்கு ஒரு சொல்லாய்ப் பின் குவளையென்பதனோடு தொக்கு ஒரு சொல்லாய்ப் பின் இத

மென்பதனோடு தொக்குக் கற்சுனைக்குவளையிதழென்றாயிற்று. பெருந்தோளென்னுந்தொகை ஒருசொல்லாய்ப் பேதையென்பதனோடு தொக்குப் பெருந்தோட்பேதையாயிற்று. அவை இவ்வாற்றானல்லது தொகாமையின் இருசொற்றொகையேயாம். புலிவிற்கெண்டை என்புழி மூன்றுபெயருந்தொகுமென்றாது முதற்பெயரொழித்தும், இறுதிப்பெயரொழித்தும், ஏனையிரண்டுந் தம்முட்டொக்கு ஒருசொல்லாய்ப் பின் மற்றையதனோடு தொகுமெனின்; — முன்றொகுமிரண்டற்கும் ஓரியைபுவேறுபாடின்மையானும், இருதொகைப்படுத்தல் பலசெய்கைத்தாகலானும், அவை மூன்றுபெயரும் ஒருங்கு தொக்கனவெனவேபடுமென்பது.

அளவின் பெயர் முதலாயின இரு பெயராயல்லது தொகாவென வரையறுத்தற்கு இருபெயர் பலபெயரென அடங்குவனவற்றைப் பெயர்த்துக் கூறினார். கலனேதூணிப்பதக்கு. தொடியேகஃசரை, நூற்றுநாற்பத்துநான்கு என்புழித் தூணிப்பதக்கு, கஃசரை, நாற்பத்துநான்கு என்பன ஒருசொற்போல அளவுப்பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப்பெயருமாய் வழங்கப்பட்டு வருதலின், கலமுந் தூணிப்பதக்கும், தொடியுங் கஃசரையும், நூறும் நாற்பத்துநான்கும் என இருமொழி நின்று தொக்கவென்றலே பொருத்தமுடைமையறிக.

உம்மைத்தொகை இன்னபொருள்பற்றித் தொகுமென்றாது அவ்வறுகிளவியும் எனச் சொல்லேபற்றி ஒதினாரோனும், ஏற்புழிக்கோடலென்பதனான் "உயர்திணை மருங்கி னும்மைத தொகையே பலர் சொன் னடைத்து" என்பதனான் எண்ணும்மைப்பொருட்கட்டொகுமென்பது பெறப்படும். எண்ணின்கண் வரும் இடைச்சொற்பலவேனும், தொக்கு நிற்கும் ஆற்றலுடையது உம்மைப்பெயராகலான், உம்மைத்தொகையாயிற்று. (உக)

சகஅ. பண்பு தொகவரூஉங் கிளவி யானு
மும்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானு
மீற்றுநின் றியலு மன்மொழித் தொகையே.

இ - ள். பண்புச்சொற்றொகுஞ்சொல்லினும் உம்மைதொக்க பெயர்க்கண்ணும் வேற்றுமை தொக்க பெயர்க்கண்ணும் இறுதிச்சொற்கண் நின்று நடக்கும் அன்மொழித்தொகை. எ-று.

பண்புத்தொகைபடவும் உம்மைத்தொகைபடவும் வேற்றுமைத்தொகைபடவும் அச்சொற்றொக்கபின் அத்தொகை அன்மொழித்தொகையாகாமையின், தொகுவதன்முன் அவற்றிற்கு நிலைக்களமாகிய சொற்பற்றி வருமென்பது விளக்கிய, தொகைவயினுமென்னுது, பண்பு தொகவரூஉங் கிளவியானு மும்மை தொக்க பெயர்வயினும் வேற்றுமை தொக்க பெயர்வயினுமென்றார்.

இறுதிச்சொற்படுத்தலோசையாற் பொருள் விளக்குமாறு வழக்கினுள்ளுஞ்செய்யுளுள்ளுங் கண்டுகொள்க.

உ - ம். வெள்ளாடை, அகரவீறு என்பன பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. தகரஞாழல் என்பது உம்மைத்தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. பொற்றொடி என்பது வேற்றுமைத்தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இனி அவை வெள்ளாடையுடுத்தாள், அகரமாகிய ஈற்றையுடைய சொல். எ-ம். தகரமுஞாழலுமாகிய சாந்து பூசினுள். எ-ம். பொற்றொடி தொட்டாள். எ-ம். விரியும்.

பண்புத்தொகைநிலைக்களத்துப் பிறத்தல் பெரும்பான்மையாகலின், முறையிற்கூறுது அதனை முற்கூறினுர். வேற்றுமைத்தொகைநிலைக்களத்துப் பிறத்தல் உம்மைத்தொகைநிலைக்களத்துப் பிறத்தல் சிறுபான்மையாயினும், ஒருபயனோக்கி அதனை அதன்முன் வைத்தார். யாதோ பயனெனின்;—சிறுபான்மை உவமத்தொகைநிலைக்களத்தும் வினைத்தொகைநிலைக்களத்தும் அன்மொழித்தொகை பிறக்குமென்பதுணர்த்துதலென்க. அவை பவளவாய், திரிதாடி என வரும். அவைதாம் பவளம்போலும் வாயையுடையாள், திரிந்த தாடியையுடையான் என விரியும். பிறவுமன்ன. (உஉ)

சகக. அவைதாம்,
முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலு
மிருமொழிமேலுமொருங்குடனிலையலு
மம்மொழி நிலையா தன்மொழி நிலையலு
மந்நான் கென்ப பொருணிலை மரபே.

இ - ள். முன்மொழிமேனிற்றலும், பின்மொழிமேனிற்றலும், இருமொழிமேனிற்றலும், அவற்றின்மேனில்லாது பிறமொழிமேனிற்றலுமென அத்தொகையும அவற்றது பொருணிலைமரபும் நான்கென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

தொகையும் அவற்றது பொருணிலைமரபும் ஒருவகையான் வேறாயினும், ஒற்றுமைநயம்பற்றி அவைதாமென்றார்.

பொருணிற்றலாவது வினையோடியைபுமாற்றான் மேற்பட்டுத் தோன்றுதல்.

உ - ம். வேங்கைப்பூ என்புழிப் பூவென்னும் முன்மொழிக்கட்பொருணின்றது. அது நறிதென்னும் வினையோடியையுமாற்றான் மேற்பட்டுத் தோன்றியவாறு கண்டுகொள்க. மேல் வருவனவற்றிற்கும் ஈதொக்கும். இடவகையான் முன்மொழியாயிற்று. அடைகடல் என்புழி அடையென்னும் பின்மொழிக்கட்பொருணின்றது. இடவகையாற் பின்மொழியாயிற்று. முன் பின்னென்பன காலவகையாற்றடுமாறி நிற்கும். கடலுங்கடலடைந்தவிடமுங் கடலெனப்படுதலின், அடைகடலென்பது அடையாகிய கடலென இருபெயர்ப்பண்புத்தொகை. இனி வரையறையின்மையாற் சிறுபான்மை முன்மொழி பின்மொழியாகத் தொக்கதோராரும்வேற்றுமைத்தொகையெனவுமமையும். உவாப்பதினான்கு என்புழி இருமொழிமேலும் பொருணின்றது. தன்னினமுடித்தலென்பதனாற் பலபெயர்மேனிற்றலுங்கண்டுகொள்க. வெள்ளாடை என்புழித் தொக்க இருமொழிமேலும் நில்லாது உடுத்தாளென்னும் அன்மொழிமேனின்றது.

வேற்றுமைத்தொகைமுதனான்குதொகையும் முன்மொழிப்பொருள; வேற்றுமைத்தொகையும் பண்புத்தொகையுஞ் சி

றுபான்மை பின்மொழிப்பொருளவுமாம். உம்மைத்தொகை இருமொழிப்பொருட்டு.

ஆறெனப்பட்டதொகை பொருள்வகையான் நான்காமெனப் பிறிதோர்வகை குறித்தவாறு. (உரு)

சஉ0. எல்லாத் தொகையு மொருசொன் னடைய.

இ - ள். அறுவகைத்தொகைச்சொல்லும் ஒருசொல்லாய் நடத்தலையுடைய. எ-று.

ஒருசொன்னடையவெனப் பொதுப்படக் கூறியவதனான், யானைக்கோடு, கொல்யானை என முன்மொழி பெயராகியவழி ஒருபெயர்ச்சொன்னடையவாதலும், நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் என முன்மொழி வினையாயவழி ஒருவினைச்சொன்னடையவாதலுங்கொள்க. அவை உருபேற்றலும் பயனிலை கோடலுமுதலாகிய பெயர்த்தன்மையும, பயனிலையாதலும் பெயர் கோடலுமுதலாகிய வினைத்தன்மையுமுடையவாதல் அவ்வச்சொல்லோடு கூட்டிக கண்டுகொள்க.

நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் எனப்பெயரும் வினையுநதொக்கன ஒருசொன்னீர்மையிலவாகலிற் றொகையெனப் படாவென்பாருமுளர். எழுத்தோத்தினுள் "பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப—வேற்றுமை யுருபு நிலைபெறு வழியுந்—தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்" என்றதனான், வேற்றுமையுருபு தொகப் பெயருந்தொழிலும் ஒருங்கிசைத்தல் ஆசிரியர் நேர்ந்தாராகலின், அவை தொகையெனவேபடுமென்பது. கடந்தானிலம், இருநதான்குன்றத்து என்பன ஒருங்கிசையாது பக்கிசைததலின், அவை தொகையன்மையறிக.

எல்லாத் தொகையு மொருசொன் னடைய என்றதனான். தொகையல்லாத தொடர்மொழியுள் ஒருசொன்னடையவாவன சிலவுளவென்பதாம். யானை கோடுகூரிது, இரும்பு பொன்னாயிற்று, மக்களையுயர்திணையென்ப என்பனவற்றுள், கோடு கூரிது, பொன்னாயிற்று, உயர்திணையென்ப என்னுந்தொகையது தொடர்மொழி ஒருசொன்னடையவாய் எழுவாய்

கரும் இரண்டாவதறகும் முடிவாயினவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. (உச)

சஉக. உயர்திணை மருங்கி னும்மைத் தொகையே
பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்.

இ - ள். உயர்திணைக்கண் வரும் உம்மைத்தொகை பலர்க்குரிய ஈற்றான் நடக்கும். எ-று.

பொதுவிறகூறினுரோனும், மாமூலபெருந்தலைச்சாத்தர்; கபிலபரணநக்கீரர் என வரும்.

விரவுப்பெயர்த்தொகையும் அடங்குதற்கு உயர்திணைப்பெயரும்மைத்தொகையென்னாது உயர்திணைமருங்கினுமமைத்தொகையென்றார். அவை ஒட்டியொருசொல்லாய் நிற்றலிற பலரறிசொல்லெனப்படும். பலரறிசொற் கபிலபரணன் என ஒருமையீற்றான் நடத்தல் வழுவாகலின் வழுக்காத்தவாறு.

இதனானுந்தொகை ஒருசொல்லாதல் பெற்றாம். ஒருசொன்னீர்மை பெற்றின்றாயின், கபிலன் பரணன் என ஒருமைச்சொல் ஒருமையீற்றான் நடத்தற்கட்படுமிழுக்கென்னையென்பது. (உரு)

சஉஉ. வாரா மரபின வரக்கூ றுதலு
மென்னா மரபின வெனக்கூ றுதலு
மன்னவை யெல்லா மவற்றவற் றியல்பா
னின்ன வென்னுங் குறிப்புரை யாகும்.

இ - ள். வாராவியல்பினவற்றை வருவனவாகச் சொல்லுதலும், என்னாவியல்பினவற்றை என்பனவாகச் சொல்லுதலும், அத்தன்மையனவெல்லாம் அவ்வப்பொருளியல்பான் இத்தன்மையவென்று சொல்லுங்குறிப்புமொழியாம். எ-று.

உ - ம். அந்நெறியீண்டு வந்து கிடந்தது; அம்மலை வந்திதனோடு பொருந்திற்று. எ-ம். அலலவலென்கின்றன நெல்; மழைமழையென்கின்றன பைங்கூழ். எ-ம். வரும். அவை வரவுஞ்சொல்லுதலுமுணர்த்தாது இன்னவென்பதனைக் குறிப்பானுணர்த்தியவாறு கண்டுகொளக.

மூலை வந்தன, தலை வந்தன என்பன காட்டுவாருமுளர். ஆண்டு வருதல் வளர்தற் பொருட்டாகலான், அவை ஈண்டைக்காகாவென்க.

நிலம் வல்லென்றது, நீர் தண்ணென்றது என்பன காட்டினரால் உரையாசிரியரெனின்; — சொலற்பொருளவன்மையின், அவை காட்டல் அவர்கருத்தன்றென்க.

அன்னவையெல்லாமென்றதனான், இந்நெறியாண்டுச் சென்று கிடக்கும்; இக்குன்றக்குன்றோடொன்றும் என்னுந்தொடக்கத்தன கொள்க. (உகூ)

சஉகூ. இசைபடு பொருளே நான்குவரம் பாகும்.

சஉச. விரைசொல் லடுக்கே மூன்றுவரம் பாகும்.

இ - ள். மேற்கூறப்பட்ட ஒருசொல்லடுக்கினுள், இசைநிறையடுக்கு நான்காகிய வரம்பையுடைத்து; பொருளொடு புணர்தற்கண் விரைவுபொருள்பட அடுக்குவது மூன்றாகிய வரம்பையுடைத்து. எ - று.

வரம்பாகுமென்றது, அவை நான்கினும் மூன்றினுமிறந்து வாரா குறைந்து வரப்பெறுமென்றவாறு.

உ - ம். 'பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ.' எ-ம். தீத்தீத்தீ. எ-ம். வரும்.

அவை மும்முறையானும் இருமுறையானும் அடுக்கி வருதல், இவற்றைக் குறைத்துச் சொல்லிக் கண்டுகொள்க.

இசைப்பொருளாவது செய்யுளின்பம்.

விரைவிக்குஞ்சொல்லடுக்கை விரைசொலென்றார்.

அசைநிலை இருமுறையல்லது அடுக்காமையின், அதற்கெல்லை கூறாராயினார். அஃதிருமுறையடுக்குமென்பது யாண்டுப் பெற்றாமெனின்;—அடுக்கென்பதனாற்பெற்றாம்; ஒருமுறை வருவது அடுக்கெனப்படாமையினென்பது.

முன்னர்க் கூறப்படும் அசைநிலை அடுக்கி வருமென்பது அதிகாரத்தாற்கோடற்பொருட்டு "இசைநிறையசைநிலை," என்னுஞ்சூத்திரத்தின்பின் வையாது இச்சூத்திரமிரண்டனையும ஈண்டு வைத்தார். (உஎ) (உஅ)

சஉரு. கண்டீ ரென்ற கொண்டீ ரென்ற
சென்ற தென்ற போயிற் றென்ற
வன்றி யனைத்தும் வினாவொடு சிவணி
நின்றவழி யசைக்குங் கிளவி யென்ப.

இ - ள். கண்டீரெனவும், கொண்டீரெனவும், சென்றதெனவும், போயிற்றெனவும் வரும் வினைச்சொனான்கும், வினாவொடு பொருந்தி நின்றவழி, அசைநிலையடுக்காம். எ-று.

கட்டுரையகத்து ஒருவன் ஒன்று சொல்லியவழி அதற்குடம்படாதான் கண்டீரோ கண்டீரோ என்னும்; ஈண்டு வினைச்சொற்பொருண்மையும் வினாப்பொருண்மையுமின்மையின், அசைநிலையாயினவாறு கண்டுகொள்க. வரையாது கூறினமையால், கண்டீரோ எனச் சிறுபான்மை அடுக்காது வருதலுங்கொள்க. ஏனையவும் ஏற்றவழி அடுக்கியும் அடுக்காதும அசைநிலையாம். அவை இக்காலத்தரிய; வந்தவழிக் கண்டு கொள்க. (உகூ)

சஉகூ. கேட்டை யென்ற நின்றை யென்ற
காத்தை யென்ற கண்டை யென்ற
வன்றி யனைத்து முன்னிலை யல்வழி
முன்னுறக் கிளந்த வியல்பா குமமே.

இ - ள். கேட்டையெனவும், நின்றையெனவும், காத்தையெனவும், கண்டையெனவும் வரும் நான்கும், முன்னிலையல்லாக்கால் மேற்சொல்லப்பட்ட அசைநிலையாம். எ-று.

இவையுங்கட்டுரைக்கண் அடுக்கியும் சிறுபான்மை அடுக்காதும் ஏற்றவழி அசைநிலையாய் வருமாறு கண்டுகொள்க.

நின்றை, காத்தையென்பன இக்காலத்துப் பயின்று வாரா.

வினைவிற்கடையாக அடுக்கி வந்தவழி முன்னிலையசைநிலையேயாம். இவை அடுக்கியும் அடுக்காதும் முன்னிலைச்சொல்லாதலுமுடைமையான், அந்நிலைமை நீக்குதற்கு முன்னிலையல்வழியென்றார்.

முன்னுறக்கிளந்தவியல்பாகுமென்றதனான், முன்னையபோலச் சிறுபான்மை வினைவொடு வருதலுங்கொள்க.

முன்னிலையல்வழியென்பதற்கு முன்னையபோல வினைவொடு சிவணி நில்லாதவழியென்றுரைத்தாரால் உரையாசிரியரெனின்;—அற்றன்று: வினைவொடு சிவணல் இவற்றிற்கொன்றுனெய்தாமையின் விலக்கவேண்டா; அதனான் அவர்க்கது கருத்தன்றென்க.

இரண்டுசூத்திரத்தானுங்கூறப்பட்டன வினைச்சொல்லாதலும் இடைச்சொல்லாதலுமுடைமையான், வினையியலுள்ளும் இடையியலுள்ளுங்கூறாது ஈண்டுக் கூறினார்.

அஃதேல், ஆக, ஆகல், என்பது என்பனவற்றோடு இவற்றிடை வேற்றுமையென்னை, அவையும் வினைச்சொல்லாதலுடைமையானெனின்;—இசை நிறைத்தற்கும் பொருள்வேறுபாட்டிற்கும் அடுக்கி வரினல்லாது அடுக்காது வருதலே வினைச்சொற்கியல்பாம். ஆக, ஆகல், என்பது என்பன அடுக்கியல்லது நில்லாமையின், வினைச்சொல் இடைச்சொல்லாயினவெனப்படா; கண்டீர், கொண்டீர் என்பன முதலாயின வினைச்சொற்குரிய ஈற்றவாய் அடுக்கியும் அடுக்காதும் வருதல் வினைச்சொல் அசைநிலையாயினவெனப்படும்; இது தம்முள் வேற்றுமையென்க. அல்லதூஉம், வினைவொடு சிவணி நிற்றலானும் வினைச்சொல்லெனவேபடுமென்பது. (௩0)

சஉஎ. இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றச்
சிறப்புடை மரபி னம்முக் காலமுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னு
மம்மூ விடத்தான் வினையினுங் குறிப்பினு
மெய்ம்மை யானு மிரிரண் டாகு
மவ்வா றென்ப முற்றியன் மொழியே.

இ - ள். முற்றுச்சொல்லாவது, இறப்பு நிகழ்வு எதிர்வென்னும் மூன்றுகாலமும், தன்மை முன்னிலை படர்க்கையென்னும் மூன்றிடத்தும், உயர்திணையும் அஃறிணையும் இருதிணைப் பொதுவுமாகிய பொருடோறும், வினையானுங் குறிப்பானும் இவ்விரண்டினானும் வரும் அவ்வறுவகைச்சொல்லாமென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

உ - ம். சென்றனன், கரியன். எ-ம். சென்றது, கரிது. எ-ம். சென்றனை, கரியை. எ-ம். வரும்.

இடமுணர்த்தலுந் திணையும் பாலும் விளக்கலும்போல ஒருசாரனவற்றிற்கேயாகாது, எல்லாமுற்றுச்சொற்குங் காலம் முற்சிறத்தலின், சிறப்புடைமரபின்முக்காலமுமென்றார்.

வினையினுங்குறிப்பினும் என்புழி ஓரீற்றவாகிய வினையும் வினைக்குறிப்புமே கொள்ளப்படும்; இவ்விரண்டாதற்கேற்பன அவையாகலான்.

மெய்ம்மையாவது பொருண்மை.

உயர்திணையும் அஃறிணையுமல்லது இருதிணைப்பொதுவென பதோர்பொருளில்லையாயினும், சென்றனை, கரியை என்பன செலவிற்கு வினைமுதலாதலும் பண்புமாகிய ஒருநிமித்தம் பற்றி இருதிணைக்கண்ணுஞ்சேறலின், அந்நிமித்தம் இருதிணைப்பொதுவெனப்பட்டது.

வினையினுங்குறிப்பினும் ஈரிரண்டாய் வருதலாவது, தெரிநிலைவினையாற்றெற்றெனத் தோன்றலும், குறிப்புவினையாற்றெற்றெனத் தோன்றாமையுமாம்.

முற்றி நிற்றல் முற்றுச்சொற்கிலக்கணமாதல் முற்றியன்மொழியேயென்பதனாற்பெற்றாம். முற்றிநிற்றலாவது இதுவென்பது வினையியலுட்கூறினாம். திணையும் பாலும் இடமும் விளக்கல், எல்லாமுற்றிற்குமின்மையான், இலக்கணமன்மையறிக.

உயர்திணை அஃறிணை விரவென்னும் பொருண்மேல் வினையும் வினைக்குறிப்புமாய் வருதல்பற்றி, அவ்வ[illegible]ன்பவென்

ருர். காலமும் இடமுமுதலாயினவற்ருேடு கூட்டிப் பகுப்ப
ப் பலவாம்.

ஊூராஞேர்தேவகுலம் என்ருற்போல மெய்ம்மையானு
ன்புழி ஆனென்பது தொறுமென்பதன்பொருட்டாய் நின
றது.

முன்னர்ப் "பிரிநிலை வினையே பெயரே" என்புழிப் பெயரெ
ச்சமும் வினையெச்சமுங்கூறுபவாகலின், அவற்ருேடியைய
முற்றுச்சொல்லையும் ஈண்டுக் கூறினர். கூறவே, முற்றுச
சொல்லும், பெயரெச்சமும், வினையெச்சமுமென வினைச்
சொன்மூவகைத்தாதல் இனிதுணரப்படுமெனபது.

உரையாசிரியர் வினையியலுள் ஓதப்பட்டன சிலவினை
[illegible]ற்று முற்றுச்சொல்லென்று குறியிடுதனுதலிற்று இச்சூ
திரமென்ருராலெனின்;—குறியீடு கருத்தாயின், அவ்வாறெ
ன்ப முற்றியன்மொழியே என்ருது அவ்வாறுமுற்றியன்மொ
ழியெனல்வேண்டுமாகலான், அது போலியுரையென்க. முற்
றியன்மொழியென்ப என மொழிமாற்றவே குறியிடாமெ
னின்;—குறியீடு ஆட்சிப்பொருட்டாகலின, குறியான் அதனை
யாளாமையான், மொழிமாற்றியிடர்ப்படுவதென்னேயோவெ
ன்பது. அல்லதூஉம், முற்றியன்மொழியெனக் குறியிட்டா
ராயின், இவை பெயரெஞ்சுகிளவியெனவும், இவை வினையெ
ஞ்சுகிளவியெனவுங் குறியிடல்வேண்டும்; அவ்வாறு குறியி
டாமையானும் அது கருத்தன்ரும. அதனுன் வினைச்சொல்
லுள இருவகையெச்சமொழித்து ஒழிந்த சொன்முற்றி நிற்
குமென்றும், அவை இனைத்துப்பாகுபடுமென்றும் உணர்த்த
ல் இச்சூத்திரத்திற்குக் கருத்தாகக் கொள்க. (௩௩)

சஉஅ. எவ்வயின் வினையு மவ்விய னிலையும்.

இ - ள். மூவிடத்தாற்பொருடோறும் இவ்விரண்டாமென
மேறசொல்லப்பட்ட கட்டளையுட்படாது பிறண்டு
வரும் வினையும் முற்றியல்பாய நிலையும். எ-று.

யார், எவன், இல்லை, வேறு என்பன, இடமுணர்த்தாமை
யின், மேற்கூறிய கட்டளையினடங்காது, பிறண்டு வருவன

வாம். சிறப்பீற்றன் வருந்தெரிநிலைவினையுங் குறிப்புவினையும், பொருடோறும் வினையும் வினைக்குறிப்புமாய் வருதற்கு எய்தாமையின், "மெய்ம்மையானுமிரண்டாகும்" கட்டளையுட்படாது பிறண்டு வந்தனவாம். குறிப்புவினைக்கீறாகாது தெரிநிலைவினைக்கீறுவனவுந் தெரிநிலைவினைக்கீறாகாது குறிப்புவினைக்கீறுவனவும் சிறப்பீற்றவாம். அவை வினையியலுட்கூறிப்போந்தாம். யார், எவன் என்பன பாலும், இல்லை, வேறு என்பன திணையும் பாலும் உணர்த்தாவாயினும், மேலைச்சூத்திரத்தான் முற்றுச்சொற்குப் பாலுந்திணையுமுணர்த்தல் ஒருதலையாக எய்தாமையின், இடமுணர்த்தாமையேபற்றி ஈண்டுக் காட்டப்பட்டன. திணையும் பாலுமுணர்த்தல் ஒருதலையாயின், "தன்மை முன்னிலை படர்க்கை யென்னு மம்மூ விடத்தான்" என ஆசிரியர் முன்னிலையிடம் ஆண்டு வையாரென்பது.

முற்றுச்சொல்லேயன்றிப் பெயரெச்சமும் வினையெச்சமுங் காலமும் இடமுமுணர்த்துமென்பது இச்சூத்திரத்திற்குப் பொருளாக உரைத்தாரால் உரையாசிரியரெனின்; — அவை இடவேறுபாடுணர்த்தாது மூவிடத்திற்கும் பொதுவாய் நிற்றலின், அது போலியுரையென்க.

இனி ஒருரை:—மேலைச்சூத்திரத்தாற்கூறப்பட்ட பொருண்மேலும் வரும் எல்லாவினையும் முற்றுச்சொல்லாய் நிற்கும். எ - று. ஈண்டு வினையென்றது வினைச்சொல்லையாக்குமுதனிலையை. எல்லாவினையும் முற்றுச்சொல்லாமெனவே, எச்சமாதல் ஒருதலையன்றென்பதாம். ஆகவே, வினைச்சொலாதற்குச் சிறந்தன முற்றுச்சொல்லேயென்பதாம். எல்லாவினையும் முற்றுச்சொல்லாகலும், கச்சினன், கழலினன், நிலத்தன், புறத்தன் என்னுந்தொடக்கத்து வினைக்குறிப்பின் முதனிலை எச்சமாய் நில்லாமையும், வழக்கு நோக்கிக் கண்டுகொள்க. பிறவுமன்ன.

இவையிரண்டும் இச்சூத்திரத்துக்குப் பொருளாகக் கொள்க. (௩௨)

௪உகூ. அவைதாம்,
தத்தங் கிளவி யடுக்குந வரினு
மெத்திறத் தானும் பெயர்முடி பினவே.

இ - ள். மேற்சொல்லப்பட்ட முற்றுச்சொற்றாம், தத்தங் கிளவி பல அடுக்கி வரினும், தம்முட்டொடராது எவ்வாற்றானும் பெயரொடு முடியும். எ - று.

உ - ம். உண்டான்றின்றானோடினான் பாடினான் சாத்தன்; நல்லனறிவுடையன் செவ்வியன் சான்றோர்மகன் எனவரும்.

அடுக்கி வரினுமென்ற உம்மையான், வந்தான் வழுதி; கரியன் மால் என அடுக்காது பெயரொடு முடிதலே பெரும்பான்மையென்பதாம்.

தம்பாற்சொல்லல்லது பிறபாற்சொல்லொடு விராயடுக்கின்மையின், தத்தங்கிளவியென்றார்.

என்மனார் புலவர், முப்பஃதென்ப என வெளிப்படும் வெளிப்படாதும் பெயர்முடிபாமென்றற்கு எத்திறத்தானுமென்றார். "எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி" எனறதனான், வெளிப்படாது நிற்றலும் பெறப்பட்டமையான் ஈண்டுக் கூறல்வேண்டாவெனின்;— ஆண்டு முடிக்கப்படும் பெயர் வெளிப்படாது நிற்றலுமுடைத்தென்றார்; இது முடிக்கும் பெயராகலின் ஆண்டடங்காதென்பது. முடிக்கப்படுவதனோடு முடிப்பதனிடை வேற்றுமை வேற்றுமையோத்தினுட்கூறினாம். இன்னும் எத்திறத்தானுமென்றதனான், உண்டான் சாத்தன்; சாத்தனுண்டான் என முன்னும் பின்னும் பெயர் கிடத்தலுங்கொள்க.

அஃதேல், முற்றி நிற்றலாவது மற்றுச்சொன்னோக்காமையாகலின், முற்றிற்றேல் அது பெயர் அவாய் நில்லாது; பெயர் அவாயிற்றேன் முற்றுச்சொலெனப்படாது; அதனான் முற்றுச்சொற்பெயர்கொள்ளுமென்றல் மாறுகொளக்கூறலாமெனின்;—அற்றன்று: உண்டான் சாத்தன் என்பது எத்தையென்னும் அவாய்நிலைக்கட்சோற்றையென்பதனோடு இயை

ந்தாற்போல, உண்டான் என்பது யாரென்னும் அவாய்நிலைக்கட் சாத்தனென்பதனோடு இயைவதல்லது, அவாய்நிலையில்வழி உண்டானெனத் தானே தொடராய் நிற்றல் வினையியலுள்ளுங் கூறினுமென்பது. அஃதேல், சாத்தனென்னும் பெயா சோற்றையென்பது போல் அவாய்நிற்றலையுள்வழி வருவதாயின், எத்திறத் தானும் பெயர்முடி பினவே என விதந்தோதல் வேண்டாம் பிறவெனின்;—நன்று சொன்னாய்: அவாய்நிற்றலையுள்வழி வருவது அவ்விரண்டற்கும் ஒக்குமேனும், உண்டானென்றவழி உண்டற்றொழிலாற்செயப்படுபொருள் உய்த்துணர்ந்துபின் அதன்வேறுபாடறியலுறிற் சோற்றையென்பது வந்தியைவதல்லது, சொற்கேட்ட துணையான் எத்தையெனக் கேட்பான் செயப்படுபொருள்வேறுபாடு அறிதற்கு அவாவாமையின், சோற்றையென்பது வருதல் ஒருதலையன்று. இனி உண்டானென்னுஞ்சொல்லாற் பொதுவகையான் வினைமுதலுணர்ந்து கேட்பான் அதன்வேறுபாடறியலுறுதலின், சாத்தனென்பது வருதல் ஒருதலையாம். அதனான் இச்சிறப்பு நோக்கி விதந்தோதினானென்பது. (௫௫)

௪௫0. பிரிநிலை வினையே பெயரே யொழியிசை
யெதிர்மறை யும்மை யெனவே சொல்லே
குறிப்பே யிசையே யாயீ ரைந்து
நெறிப்படத் தோன்று மெஞ்சுபொருட் கிளவி.

முற்றுச்சொல்லுணர்த்தி எச்சமாமாறுணர்த்துகின்றார். எஞ்சுபொருட்கிளவிகொண்டல்லது அமையாமையின் எச்சமாயினவும், ஒருதொடர்க்கொழிபாய் எச்சமாயினவுமென அவை இருவகைப்படும்.

இ - ள். பிரிநிலை முதலாகச் சொல்லப்பட்ட பத்தும் எஞ்சுபொருட்கிளவியாம். எ-று.

அவற்றுட்கடைநிலைமூன்றும் ஒருதொடர்க்கொழிபாய் எச்சமாயின; அல்லன எஞ்சுபொருட்கிளவியான் முடிவன. எஞ்சுபொருட்கிளவியெனினும் எச்சமெனினுமொக்கும்.

பெயரெச்சம் வினையெச்சம் பெயர் வினையான் முடிதலி ன, ஆகுபெயராற்பெயர் வினையென்றார்.

ஆயினாந்துமெஞ்சுபொருட்கிளவியென்றாரேனும், எஞ்சு பொருட்கிளவி பத்துவகைப்படுமென்பது கருத்தாகக் கொ ள்க.

எச்சமாவன ஒருசார்பெயரும் வினையும் இடைச்சொல்லு மாதலின, பெயரியன்முதலாயினவற்றுட் பததும் ஒருங்குணா த்துதற்கேலாமையறிக.

முடிவும் பொருளுமொத்தலான், என்றென்பதனை எனவி னகணேற்றினார். (௩௪)

௪௩௫. அவற்றுள்,
பிரிநிலை யெச்சம் பிரிநிலை முடிபின.

இ - ள். மேற்சொல்லப்பட்ட எச்சங்களுள், பிரிநிலையெ ச்சம் ஏகாரப்பிரிநிலையும் ஓகாரப்பிரிநிலையுமென இருவகை ப்படும். அவ்விருவகைப்பிரிநிலையெச்சமும் பிரிக்கப்பட்ட பொருளையுணர்த்துஞ்சொல்லோடு முடியும். எ-று.

உ - ம். தானே கொண்டான்; தானோ கொண்டான் என் னும் பிரிநிலையெச்சம் பிறர் கொண்டிலரெனப் பிரிக்கப்பட்ட பொருளையுணர்த்துஞ்சொல்லான் முடிந்தவாறு கண்டுகொ ள்க.

அஃதேல், தானெனப்பட்டானன்றே ஆண்டுப் பிரிக்கப்ப ட்டான், பிறர் கொண்டிலரென்பது அவனையுணர்த்துஞ்சொ ல்லன்மையான், அவை பிரிநிலை கொண்டு முடிந்திலவாலெ னின்;—அற்றன்று: தானெனப்பட்டான் பிறரிற்பிரிக்கப்பட் டவழிப் பிறரும் அவனிற்பிரிக்கப்பட்டமையான், அவை பிரி நிலை கொண்டனவேயாமென்க.

பிரிநிலையோடு முடிதலாவது அவனே கொண்டான் என்ற வழி அவனேயென்பது கொண்டானெனப் பிரிக்கப்பட்ட பொருளை வினையெனக் கொண்டு முடிதலென்றாரால் உரையா

சியொனின்;—அற்றன்று: அவனே கொண்டான் என்புழி அவனென்னும் எழுவாய்வேற்றுமை கொண்டானென்னும் பயனிலை கொண்டது; ஏகாரம் பிரிவுணர்த்திற்று; ஆண்டெச்சமும் எச்சத்தை முடிக்குஞ்சொலலுமின்மையான், அவர்க்கது கருத்தன்றென்க. (௫௫)

௪௫௨. வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பு
நினையத் தோன்றிய முடிபா கும்மே
யாவயிற் குறிப்பே யாக்கமொடு வருமே.

இ - ள். வினையெச்சத்திற்குத் தெரிநிலைவினையுங் குறிப்புவினையும் முடிபாம்; ஆண்டைக்குறிப்புவினை ஆக்கவினையோடு வரும். எ-று.

உ - ம். உழுது வந்தான்; மருந்துண்டு நல்லனாயினான் என வரும்.

உழுது வருதல்; உழுது வந்தவன் என வினையெச்சம் வினைப்பெயரோடு முடிதல் நினையத்தோன்றியவென்றதனாற்கொள்க.

வினையெச்சத்திற்கு முடிபு வினையியலுட்கூறப்பட்டமையான் இச்சூத்திரம் வேண்டாவெனின்;—இதற்கு விடை ஆண்டே கூறினாம்.

“வேங்கையுங் காந்தளு நாறி யாம்பன் மலரினுந் தான்றண் ணியளே” ‘வில்லக விரலிற் பொருந்திய வாறு நல்லகஞ் சேரி னொருமருங் கிலமே.’ எ-ம். கற்றுவல்லன்; பெற்றுடையன். எ-ம். வினைக்குறிப்பு ஆக்கமின்றி வந்தனவாலெனின்;—ஆக்கமொடு வருமென்றது பெரும்பான்மை குறித்ததாகலிற் சிறுபான்மை ஆக்கமின்றியும் வருமென்பது. (௫௬)

௪௫௩. பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே.

இ - ள். பெயரெச்சம் பெயரொடு முடியும். எ-று.

உ - ம். உண்ணுஞ்சாத்தன்; உண்ட சாத்தன் என வரும்.

“அவ்வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய” என்றதனாற் பெயரெச்சம் பொருள்படுமுறைமை கூறினார். முடிபு எ

ச்சவியலுட்பெறப்படுமெனை வினையியலுட்கூறியவாறு கடைப்பிடிக்க. (௩எ)

சா௩அ. ஒழியிசை யெச்ச மொழியிசை முடிபின.

இ - ள். மன்னையொழியிசையும், தில்லையொழியிசையும், ஓகாரவொழியிசையும் ஆகிய ஒழியிசையெச்சமூன்றும் ஒழியிசையான் முடியும். எ-று.

உ-ம். 'கூரியதோர்வாண்மன்;' 'வருகதில் லம்மவெஞ் சேரி சேர;' கொளலோ கொண்டான் என்னும் ஒழியிசையெச்சம், முறையானே, திட்பமின்று, வந்தாலின்னது செய்வல, கொண்டுய்யப்போமாறறிந்திலன் என்னும் ஒழியிசையான் முடிந்தவாறு. பிறவும் முடித்தற்கேற்கும் ஒழியிசையறிந்து கொள்க. (௩அ)

சா௩௯. எதிர்மறை யெச்ச மெதிர்மறை முடிபின.

இ-ள். மாறுகொளெச்சமெனப்பட்ட ஏகாரவெதிர்மறையும், ஓகாரவெதிர்மறையும், உம்மையெதிர்மறையுமாகிய எதிர்மறையெச்சமூன்றும் எதிர்மறையான்முடியும். எ-று.

உ-ம். யானே கொள்வேன்; யானோ கள்வேன்; வரலுமுரியன் என்னும் எதிர்மறையெச்சம், முறையானே, கொள்ளேன், கள்ளேன், வாராமையுமுரியன் என்னும் எதிர்மறையான் முடிந்தவாறு கண்டுகொள்க. (௩௯)

சா௪௰. உம்மை யெச்ச மிருவீற் றானுந்
தன்வினை யொன்றிய முடிபா கும்மே.

இ - ள். எஞ்சுபொருட்கிளவியும் அவ்வெஞ்சுபொருட்கிளவியான் முடிவதுமாகிய உம்மையெச்சவேறுபாடிரண்டன்கண்ணும், தன்வினை உம்மையொடு தொடர்ந்த சொற்குப் பொருந்திய முடிபாம். எ-று. என்றது, "எஞ்சுபொருட் கிளவி செஞ்சொலாயின்" என்றதனான் உம்மையுடைத்தாயும் உம்மையின்றியும் வரும் எஞ்சுபொருட்கிளவி உம்மையெச்சத்திற்கு முடிபாதலெய்திற்று. என்னை? எல்லாவெச்சத்திற்கும்

எஞ்சுபொருட்கிளவியே முடிபாகலின். இனி உம்மையொடு தொடர்ந்த சொல்லிரண்டற்கும் வினையொன்றேயாகல்வே ண்டுமென எய்தாததெய்துவித்தவாறு.

ஒன்றற்காயதே ஏனையதற்குமாகலிறறன்வினையென்றா.

உ - ம். சாத்தனும் வந்தான் கொற்றனும் வந்தான் என இரண்டும் ஒருவினை கொண்டவாறு கண்டுகொள்க. சாத்த னும் வந்தான் கொற்றனுமுண்டான் என வினை வேறுபட்ட வழி உம்மையெச்சமும் எஞ்சுபொருட்கிளவியும் இயையா மை கண்டுகொள்க. அஃதேல், 'பைம்புதல் வேங்கையு மொ ள்ளிணர் விரிந்தன—நெடுவெண் டிங்களு மூர்கொண் டன் றே' என வினை வேறுபட்டுழியுந் தம்முளியைந்தனவாலெனி ன;—இணர் விரிதலும் ஊர் கோடலும் இரண்டும் மணஞ்செ ய்காலம் இதுவென்றுணர்த்துதலாகிய ஒருபொருள் குறித்து நின்றமையான, அவை ஒருவினைப்பாற்படுமென்பது. பிறவும் இவ்வாறு வருவனவறிந்து ஒருவினைப்பாற்படுக்க.

எஞ்சுபொருட்கிளவி செஞ்சொலாயவழித் தன்வினை கோ டல் ஈண்டடங்காமையான், அது தன்னின முடித்தலென்ப தனாற்பெறப்படும்.

உம்மையெச்சமிருவீற்றுமெனன்றதனான், உம்மையெச்சத் திற்கு முடிபாகிய எஞ்சுபொருட்கிளவி உம்மையொடு வரின் எச்சமாமென்பதாம். அஃதெச்சமாங்கால், முன்னின்றது எஞ்சுபொருட்கிளவியாமென்பது.

எதிர்மறையும்மை எதிர்மறையெச்சமாயடங்குதலின், ஈ ண்டும்மையெச்சமென்றது எச்சவும்மையேயாம். (௪0)

௪௩எ. தன்மேற் செஞ்சொல் வரூஉங் காலை
நிகழுங் காலமொடு வாராக் காலமு
மிறந்த காலமொடு வாராக் காலமு
மயங்குதல் வரையார் முறைநிலை யான.

இ - ள். உம்மையெச்சத்தின்முன் எஞ்சுபொருட்கிளவி உ ம்மையில் சொல்லாய் வருங்கால், நிகழ்காலத்தோடு எதிர்கா

லும் இறந்தகாலத்தோடு எதிர்காலமும் மயங்குதல் வரையார். எ-று.

முறைநிலையானவென்றதனான், கூறிய முறையானல்லது எதிர்காலம் முன்னிற்ப ஏனைக்காலம் பின் வந்து மயங்குதலில்லையென்பதாம்.

உ - ம். கூழுண்ணாநின்றான் சோறுமுண்பன். எ-ம். கூழுண்டான் சோறுமுண்பன். எ-ம். அவை கூறிய முறையான் மயங்கியவாறு கண்டுகொள்க.

இவற்றோடு இது மயங்குதல் வரையாரெனவே, இறந்தகாலத்தோடு நிகழ்காலமும் நிகழ்காலத்தோடு இறந்தகாலமும் வந்து மயங்குதல் வரையப்படுமென்றவாறாயிற்று.

தன்மேற்செஞ்சொல் வரூஉங்காலையென்றதனான், உம்மையடுத்த சொல் வருங்கால் வேறுபாடின்றி இரண்டுசொல்லும் ஒருகாலத்தான் வருமென்பதாம்.

தன்வினை காலம் வேறுபடுதலும் படாமையும் உடைமையான், இன்னுழி இன்னவாற்றானல்லது காலம் வேறுபடாதென வரையறுத்தவாறு. (சக)

சஙஅ. என்னெ னெச்சம் வினையொடு முடிமே.

இ-ள். எனவென்னுமெச்சம் வினை கொண்டு முடியும். எ-று.

உ - ம். கொள்ளெனக் கொடுத்தான்; துண்ணெனத் துடித்தது; ஒல்லெனவொலித்தது; காரெனக் கறுத்தது. எ-ம். நன்றென்று கொண்டான்; தீதென்றிகழ்ந்தான். எ-ம். வரும்.

சஙகூ. எஞ்சிய மூன்று மேல்வந்து முடிக்கு
மெஞ்சுபொருட் கிளவி யிலவென மொழிப.

இ - ள். சொல்லப்பட்டனவொழிந்து நின்ற சொல்லுங் குறிப்பும் இசையுமாகிய எச்சமூன்றும் மேல் வந்து தம்மை முடிக்கும் எஞ்சுபொருட்கிளவியையுடையவல்லவென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று. என்றது, அவ்வத்தொடர்க்குத் தாமெச்சமாய் வந்து அவற்றதவாய்நிலையை நீக்கலின், பிரிநி

லயெச்சமுதலாயினபோலத் தம்மை முடிக்கும் பிறசொல் லைத் தாம் அவாய் நில்லாவென்றவாறு. அவை பிறசொல்ல வாவாது தாம் எச்சமாய் வருமாறு முன்னர்ச்சூத்திரத்தாற் பெறப்படும். (சரு)

சச0. அவைதாம்,
தத்தங் குறிப்பி னெச்சஞ் செப்பும்.

இ - ள். அவ்வெச்சமூன்றும் சொல்லுவார் குறிப்பான் எஞ்சி நின்ற பொருளையுணர்த்தும். எ-று.

உ - ம். 'பசப்பித்துச் சென்றா ருடையையோ வன்ன—நிறத்தையோ பீர மலர்.' 'இளைதாக முண்மரங் கொல்க களையுநர்—கைகொல்லுங் காழ்த்த விடத்து' என்புழி முறையானே பசப்பித்துச் சென்றாரை யாமுடையேம் எனவும், தீயாரைக் காலத்தாற்களைக எனவும் வந்த தொடர்மொழி எச்சமாய் நின்ற குறிப்புப்பொருளை வெளிப்படுத்தலாற் குறிப்பெச்சமாயின. 'அகர முதல வெழுத்தெல்லா மாதி—பகவன் முதற்றே யுலகு.' 'அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற றெளித்தசொற்—றேறியார்க் குண்டோ தவறு' என்றவழி முறையானே அதுபோல எனவும், நீத்தார்க்கே தவறு எனவும், வருவன எஞ்சிய பொருளுணர்த்தலான் இசையெச்சமாயின. சொல்லெச்சத்திற்கு உதாரணம் முன்னர்க்காட்டுதும். "சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே" என்பதனான் அஃதொருசொல்லாதல் பெறப்படுதலின், இது தொடர்ச்சொல்லாமென்பது. சொல்லென்னுஞ்சொல் எஞ்சுவதுஞ் சொல்லெச்சமென்பார் இவ்விருவகையும் இசையெச்சமென அடக்குப.

பசப்பித்துச் சென்றாரை யாமுடையேம் என்னுந்தொடக்கத்தன குறிப்பிற்றோன்றலாயடங்குதலின், விண்ணென விசைத்தது என்பது குறிப்பெச்சமென்றும், அதுபோல என்னுந்தொடக்கத்தன விகாரவகையாற்றொக்கு நின்றமையான், ஒல்லெனவொலித்தது என்பது இசையெச்சமென்றும், இவை தத்தஞ்சொல்லான் முடிதலல்லது பிறசொல்லான் முடியாமையின் இவற்றை மேல் வந்து முடிக்கும் எஞ்சுபொ

ருட்கிளவியிலவென்றொன்றும், உரைத்தாரால் உரையாசிரியரெனின்;—அற்றன்று: "தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலும்" எனச் சொற்பொருட்பாகுபாடுணர்த்தினார்; குறிப்பிற்றோன்றும் பொருளை வெளிப்படுத்தும் எச்சமாதலுடைமையான் எச்சமென்றார்; அதனான் ஆண்டடங்காது. இனி விசைத்தது ஒலித்தது என்பன தஞ்சொல்லெனப் படா; படினும், விண்ணென வீங்கிற்று துண்ணெனத் துளங்கினான். எ-ம். ஒல்லெனவீழ்ந்தது. எ-ம். பிறசொல்லானும் முடிதலின் எஞ்சுபொருட்கிளவியிலவென்றல் பொருந்தாதாம். எனனை? தஞ்சொலல்லாதன எஞ்சுபொருட்கிளவியாமாகலின். இனி அதுபோலவென்பது தொகுக்கும்வழித் தொகுத்தலென்பதனாற்றோக்கதாயின், அதனைச் சுட்டிக் கூறுவுவமையென அணியியலுள் ஆசிரியர் ஒருவமைவேறுபாடாகக் கூறல் பொருந்தாது. தொகுக்கும்வழித் தொகுத்தல் ஒருமொழிக்கண்ணதாகலிற பலசொற்றொடுமென்றலும் பொருத்தமின்று. அதனான் அவர்க்கது கருத்தன்று. விண்ணெனவிசைத்தது; ஒல்லெனவொலிததது என்னுந் தொடக்கத்தனவற்றை எனவெனெச்சமென அடக்கிக் குறிப்பெச்சத்திற்கும் இசையெச்சத்திற்கும் வேறுகாரணங்காட்டல் கருத்தென்க. அல்லதூஉம், எனவெனெச்சமென அடக்காது இசையுங்குறிபபும்பற்றி வருவனவற்றை வேறோதின், வெள்ளெனவெளுத்தது எனப் பண்புபற்றி வருவதனையும் வேறோதல்வேண்டும்; அதனை வேறோதாமையானும் எனவெனெச்சமென அடக்குதலே கருத்தாகக் கொள்க. குறிப்புப்பொருளைப் 'பசப்பித்துச் சென்றா ருடையையோ' 'இளைதாகமுண்மரங் கொல்க' என்பன முதலாகிய தொடாமொழியே உணாத்தலான் எஞ்சுபொருளெனப்படாவாயினும், அபபொருள் பிறசொல்லானல்லது வெளிப்படாமையின், அச்சொல்லெச்சமாயிற்று. குறிப்புப்பொருளேயன்றி எஞ்சுபொருளுஞ் சொல்லுவான்குறிப்பொடு படுத்துணர்ந்து தமக்கேற்ற சொல்லாலுணர்த்தப்படுதலின், குறிப்பானெச்சஞ்செப்பல் மூன்றற்குமொத்தவாறறிக. (சச)

**சசக. சொல்லெ னெச்ச முன்னும் பின்னுஞ் சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே.**

இ - ள். சொல்லெச்சம், ஒருசொற்கு முன்னும பின்னுஞ் சொன்மாத்திரம் எஞ்சுவதல்லது, தொடராயெஞ்சுதலின்று. எ-று.

'உயர்திணையென்மனார்' என்புழி ஆசிரியரென்னுஞ்சொல் முன்னும், 'மருநதெனின் மருநதே வைப்பெனின் வைப்பே' என்புழி எமக்கென்னுஞ்சொல் பின்னும், எஞசி நின்றவாறு கண்டுகொள்க.

ஒருசாரார் இவற்றை இசையெச்சமென்று, சொல்லள வல்லதெஞ்சுதலின்றே எனபதற்குச் சொலலென்னுஞ்சொல்லள வலலது பிறிதுசொல்லெஞ்சுதலின்றென்று பொருளுரைத்து, பசித்தேன் பழஞ்சோறு தாவென்று நின்றாள் என்புழித் தாவெனச் சொல்லியெனச் சொல்லென்னுஞ்சொல் எஞ்சி நின்றதென்று, இதனை உதாரணமாகக் காட்டுப. அவர் முன் னும பின்னுமெனபதற்குச் சொல்லென்னுஞ்சொற்கொணர்ந்து கூட்டுவதன்முன்னும் பின்னுமென இடர்ப்பட்டுப் பொருளுரைப்ப. (சரு)

**சசஉ. அவையல் கிளவி மறைத்தனர் கிளததல்.**

இ - ள். உயர்ந்தோர் வக்கணுரைக்கபபடாத சொல்லை அவ்வாய்பாடு மறைத்துப் பிறவாய்பாட்டாற்சொல்லுக. எ-று.

அவைக்கண வழஙகப்படுஞ்சொல்லை அவையென்றார்.

உ - ம். 'ஆனமுன் வருஉ மீகார பகரம்.' எ-ம்.' கண்கழீஇ வருதும்; கானமேனீர பெய்து வருதும. எ-ம். கருமுகமநதி, செப்பினேறறை, புலிநின் றிறநத நீரல் லீரத்து. எ-ம். இடக்கர்வாய்பாடு மறைத்துப் பிறவாய்பாட்டாறகூறியவாறு.

ஈகாரபகரமென்பதுபோலக் கண் கழுவுதன்முதலாயின அவையலகிளவியைக் கிடந்தவாறு கூறுது பிறிதோராற்றாற் கிளநதனவல்லவெனினும் அவையல்கிளவிப்பொருண்மையை

புணர்த்தலின், ஒற்றுமைநயத்தான் அவையல்கிளவியைப் பிறிதோராற்றாற்கூறிய வாய்பாடாகக் கொள்ளப்படும். இவை "தகுதியும் வழக்கும்" என்புழித் தகுதியாயடங்குமெனின்;—செத்தாரைத் துஞ்சினாரென்றல் முதலாயினவன்றே தகுதியாவன; ஆண்டுச் செத்தாரென்பது இலக்கணமாகலின் அதனானும் வழங்கப்படும்; தகவு நோக்கிச் சொல்லுங்காற் றுஞ்சினாரென் றுஞ்சொல்லப்படும்; ஈண்டையவையல்கிளவியாற்கிளத்தல் வழுவாதலின் மறைத்த வாய்பாட்டானே கிளக்கப்படும்; அதனான் ஆண்டடங்காவென்பது.

இஃது வழுவமைதியன்மையாற் கிளவியாக்கத்துக் கூறாராயினார். (சகூ)

சசரு. மறைக்குங் காலை மரீஇய தொராஅல்.

இ - ள். அவையல்கிளவியை மறைத்துச்சொல்லுங்கால், மேற்றொட்டு வழங்கப்பட்டு வருவன மறைக்கப்படா. எ-று.

உ - ம். ஆப்பீ, ஆனையிலண்டம் என மரீஇ வந்தன மறைக்கப்படாது வந்தவாறு.

'பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பரிதி' என்புழிக் கான்றென்பது, தன்பொருண்மேனில்லாது அணி குறித்துப் பிறிதோர்பொருண்மேனிற்றலின் மரீஇய சொல்லாய் மறைக்கப்படாமையின், அதன்பொருண்மேனின்றவழி மறைக்கப்படுதலுமறிக. (சஎ)

சசசு. ஈதா கொடுவெனக் கிளக்கு மூன்று
மிரவின் கிளவி யாகிட னுடைய.

இ - ள். ஈ, தா, கொடு எனச்சொல்லப்படும் மூன்றும் ஒருவன் ஒன்றையிரத்தற்கண் வருஞ்சொல்லாம். எ-று.

அவை பிறபொருண்மேல் வருதலுமுடைமையான், இரவின்கிளவியாகிடனுடையவென்றார்.

வழங்கல், உதவல், வீசல் முதலாயின பிறவுமுளவாக இவற்றையே விதந்தோதியதென்னையெனின்;—அவை கொடைப்பொருளவாய் வருவதல்லது இவைபோல இரத்தற்குறிப்பு வெளிப்படுக்கும் இரவின்கிளவியாய்ப் பயின்று வாராமையா

னும், இன்னார்க்கு இன்னசொல்லுரித்தென்று வரையறுத்த லும் வழுவமைத்தலுமாகிய ஆராய்ச்சி ஆண்டின்மையானும், இவற்றையே விதந்தோதினானென்பது.

அஃதேல், "ஈயென்கிளவி" என்னுஞ்சூத்திரமுதலாய நான்கும் அமையும், இச்சூத்திரம் வேண்டாவெனின்;—இவை இரவின்கிளவியாதலும் மூன்றென்னும் வரையறையும் அவற்றாற்பெறப்படாமையின் வேண்டுமென்பது.

முன்னிலைச்சொல்லாய் வருவழியல்லது பிறண்டு இன்ன சொல் இன்னார்க்குரித்தென்னும் வரையறையில்லென்பதுணர்த்துதற்கு, ஈ தா கொடுவென முன்னிலைவாய்பாடுபற்றியோதினார். (சஅ)

சசரு. அவற்றுள்,
ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே.

சசசு. தாவென் கிளவி யொப்போன் கூற்றே.

சசஎ. கொடுவென் கிளவி யுயர்ந்தோன் கூற்றே.

இ - ள். ஈயென்கிளவி இரக்கப்படுவோனின் இழிந்தவிரவலன் கூற்றாம். தாவென்கிளவி அவனோடொப்பான் கூற்றாம். கொடுவென்கிளவி அவனினுயர்ந்தவன் கூற்றாம். எ-று.

உ-ம். சோறீ; ஆடை தா; சாந்து கொடு என மூன்றுசொல்லும் முறையானே மூவர்க்குமுரியவாய் வந்தவாறு கண்டுகொள்க. (சகூ) (ரு0) (ருக)

சசஅ. கொடுவென் கிளவி படர்க்கை யாயினுந்
தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பிற்
றன்னிடத் தியலு மென்மனார் புலவர்.

இ - ள். கொடுவென்னுஞ்சொல், முதனிலைவகையாற்படர்க்கையாயினும், தன்னைப் பிறனொருவன்போலக் கூறுங்கருதது வகையால், தன்னிடத்துச் செல்லும். எ-று.

உதாரணம் மேற்காட்டப்பட்டது.

தன்மைக்கும் முன்னிலைக்குமுரிய தாவென்பதனோடு பொருளவாகிய ஈயென்பதனோடு அவன்றே சொல்லற்பாலது; உயர்ந்தான் அங்ஙனந்தானேற்பானாகச் சொல்லாது கொடுவெனப் படர்க்கைவாய்பாட்டாற்சொல்லும்; ஆண்டுத் தன்னையே பிறன்போலக் குறித்தானாகலிற் றன்னிடத்தேயாமென இடவழுவமைத்தவாறு.

உயர்ந்தான் தமரொருவனைக் காட்டி இவற்குக் கொடுவென்னுமென்றாரால் உரையாசிரியரெனின்;—ஆண்டுப் படர்க்கைச்சொற் படர்க்கைச்சொல்லோடியைதலான் வழுவினமையின் அமைக்கல்வேண்டாவாம்; அதனான் அது போலியுரையென்க. (௫உ)

சசகூ. பெயர்நிலைக் கிளவியி னாஅ குநவுந்
திசைநிலைக் கிளவியி னாஅ குநவுந்
தொன்னெறி மொழிவயி னாஅ குநவு
மெய்ந்நிலை மயக்கி னாஅ குநவு
மந்திரப் பொருள்வயி னாஅ குநவு
மன்றி யனைத்துங் கடப்பா டிலவே.

இ - ள். பெயர்நிலைக்கிளவியினாகுநவும். எ-து. ஒருதிணைப்பெயர் ஒருதிணைக்காய் வருவனவும். எ-று. அவையாவன ஒரெருத்தை நம்பியென்று வழங்குதலும், ஒருகிளியை நங்கையென்று வழங்குதலுமாம். பிறவுமன்ன. திசைநிலைக்கிளவியினாகுநவும். எ-து. திசைச்சொல்லிடத்து வாய்பாடு திரிந்து வருவனவும். எ-று. அவை புலியான், பூசையான் என்னுந் தொடக்கத்தன. தொன்னெறிமொழிவயினாகுநவும். எ-து. முதுசொல்லாகிய செய்யுள்வேறுபாட்டின்கண் இயைபில்லன இயைந்தனவாய் வருவனவும். எ-று. அவை யாற்றுட்செத்தவெருமையீர்த்தலூர்க்குயவர்க்குக் கடன் என்பது முதலாயின. மெய்ந்நிலைமயக்கினாகுநவும். எ-து. பொருண்மயக்காகிய பிசிச்செய்யுட்கட்டினைமுதலாயின திரிந்து வருவனவும். எ-று. அவை *எழுதுவரிக் கோலத்தா ரீவார்க் குரியார் —தொழுதிமைக் கண்ணனைநத தோட்டார் - முழுதகலா—

நாணிற் செறிந்தார் நலங்கிள்ளி நாடோறும்—பேணற் கமைந்தார் பெரிது' என்பது புத்தகமென்னும் பொருண்மேற்றிணை திரிந்து வந்தவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. மந்திரப் பொருள்வயினுகுநவும். எ-து. மந்திரப்பொருட்கண் அப பொருட்குரித்தல்லாச் சொல் வருவனவும். எ-று. இதற்குதாரணம் மந்திரநூல்வல்லார்வாய்க் கேட்டுணர்க. அன்றியனைத்துங்கடப்பாடிலவே. எ-து. அவ்வனைத்தும் வழங்கியவாறே கொள்வதல்லது இலக்கணத்தான் யாப்புறவுடையவல்ல. எ-று.

இஃதிச்சூத்திரத்திற்கு ஒருசாராருரை. ஒருசாரார் பிறவுரைப்ப.

இஃதியற்சொல்லுந்திசைச்சொல்லும் பிறவும்பற்றி வழுவமைத்ததாகலின், கிளவியாக்கமுதலாயினவற்றின்கண் உணர்த்துதற்கியைபின்மையான், ஈண்டு வைத்தார். (ருரு)

சருo. செய்யா வென்னு முன்னிலை வினைச்சொற்
செய்யென் கிளவி யாகிட னுடைத்தே.

இ - ள். செய்யாவென்னும் வாய்பாட்டதாகிய முன்னிலை முற்றுச்சொல் ஆவென்னுமீறு கெடச் செய்யென்னுஞ்சொல்லாய் நிற்றலுடைத்து. எ-று.

ஆகிடனுடைத்தென்றதனால், செய்யாவென ஈறு கெடாது நிற்றலே பெரும்பான்மையென்பதாம்.

உ - ம். உண்ணாய், தின்னாய், கிடவாய், நடவாய், தாராய், வாராய், போவாய் என்பன, ஈறு கெட, உண், தின், கிட, நட, தா, வா, போ எனச் செய்யென்கிளவியாயினவாறு கண்டுகொள்க.

செய்யாவென்னும் முன்னிலையெதிர்மறை செய்யென்கிளவியாதற்கேலாமையின், செய்யாவென்னு முன்னிலைவினைச்சொலென்றது விதிவினையேயாம்.

தன்னினமுடித்தலென்பதனுன் அழியலை, அலையலை என்னு முன்னிலையெதிர்மறை ஐகாரங்கெட்டு அழியல், அலையல் என நிற்றலுங்கொள்க. ஒன்றெனமுடித்தலென்பதனுல், புகழ்நதாரொன்னும் படர்க்கைவினை ஆரீறு கெடப் 'புகழ்ந்திகு மல்லரோ' என நிற்றலுங்கொள்க. இவையெல்லாஞ்செய்யு ணமுடிபென்பாருமுளர்.

செய்யாயென்னுமுன்னிலையெதிர்மறை எதிர்மறை படாது செய்யென் விதிவினையாதலுமுரித்தென்றுரைத்தாரால் உரையாசிரியரொனின்;—அற்றன்று: செய்யாயென்னும் எதிர்மறை வினையுஞ் செய்யாயென்னும் விதிவினையும் முடிநத நிலைமை ஒக்குமாயினும், எதிமறைக்சண் மறையுணர்த்தும் இடைநிலையுமுண்மையான், முடிக்குஞ்சொல் வேறெனவேண்டும். மறையுணர்த்தும் இடைநிலையாவன, உண்ணலன், உண்டிலன், உண்ணுது, உண்ணேன் என்புழி வரும் அல்லும், இல்லும், ஆவும், ஏயும், பிறவுமாம். உண்ணுய், உண்ணேன் என்புழி எதிர்மறையாகாரவேகாரங்கெட்டு நின்றனவெனல்வேண்டும்; அல்லாக்கால் மறைப்பொருள் பெறப்படாமையின். அதனுன் எதிர்மறைச்சொல்லே விதிவினைச்சொல்லாகாமையின் அவர்க்கது கருத்தன்றென்க. அல்லதூஉம், ஆசிரியர் அக்கருத்தினராயின், செய்யா யென்னு மெதிர்மறை வினைச் சொல் என்றோதுவார்மன்; அவ்வாறோதாமையான், அவர்க்கது கருத்தன்மையான் உரையாசிரியர்க்கும் அது கருத்தன்மையறிக.. (ருச)

சருக. முன்னிலை முன்ன ரீயு மேயு
மந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

இ - ள். முன்னிலைவினைச்சொன்முன் வரும் ஈகாரமும் ஏகாரமும் அம்முன்னிலைச்சொற்கேற்ற மெய்யூர்ந்து வரும். எ-று.

உ - ம். 'சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே:' 'அட்டிலோலை தொட்டனை நின்மே' என அவை முன்னிலைக்கேற்ற மெய்யூர்ந்து வந்தவாறு கண்டுகொள்க.

முன்னிலையென்றாரேனும், செய்யென்கிளவியாகிய முன்னிலையென்பது அதிகாரத்தாற்கொள்க.

ஈகாரமொன்றேயாக, புக்கீ, உண்டீ, உரைத்தீ, சென்றீ என முன்னிலைவினையீற்றுவேறுபாட்டிற்கேற்ப மெய் வேறுபட்டு வருதலான், அந்நிலைமரபின்மெய்யென்றார். ஏகாரம் மகரமூர்ந்தல்லது வாராது.

இவ்வெழுத்துப்பேறு புணர்ச்சிவிகாரமாதலின் ஈண்டுக் கூறற்பாற்றன்றெனின்;—அற்றன்று: இயற்பெயர்முன்னராரைக்கிளவி அப்பெயரோடு ஒற்றுமைப்பட்டு நின்றாற்போல முன்னிலைமுன்னரீயுமேயும் முன்னிலைச்சொல்லோடு ஒற்றுமைப்பட்டு நிற்றலான் நிலைமொழி வருமொழி செய்து புணர்க்கப்படாமையான், அம்மெய் புணர்ச்சிவிகாரமெனப்படாவென்க. அஃதேல், இடையியலுள் "இயற்பெயர் முன்னராரைக் கிளவி" என்பதனோடியைய இதனையும் வைக்கவெனின்;—ஆண்டு வைப்பிற் செய்யாயென்பது செய்யென்கிளவியாயவழியது அவ்வீகாரவேகாரவரவென்பது பெறப்படாமையின், ஈண்டு வைத்தார். "செய்யா யென்னு முன்னிலை வினைச்சொல்" என்பதனை ஈண்டு வைத்தற்கும் இதுவே பயனுதலறிக. முன்னிலைச்சொல்விகாரம் ஒருங்குணர்த்தல் அதற்குப் பயனெனினுமமையும். ஈயென்பதோரிடைச்சொல் உண்டென்பது இச்சூத்திரத்தாற்பெற்றாம். இவையிரண்டும் ஈண்டுப் புறத்துறவு பொருள் பட நின்றன. அசைநிலையென்பாருமுளர். (௫௫)

௪௫௨. கடிசொல் லில்லைக் காலத்துப் படினே.

இ - ள். இவை தொன்று தொட்டனவல்லனவென்று கடியப்படுஞ்சொல்லில்லை; அவ்வக்காலத்துத் தோன்றி வழங்கப்படுமாயின். எ-று.

உ - ம். சம்பு, சள்ளை, சட்டி, சமழ்ப்பு என வரும். இவை தொன்று தொட்டு வந்தனவாயின், முதலாகாதனவற்றின்கண் "சகரக் கிளவியு மவற்றோ ரற்றே—அ ஐ ஔவெனு மூன்றலங் கடையே" என விலக்கார் ஆசிரியர்; அதனான் அவை பிற்காலத்துத் தோன்றிய சொல்லேயாமென்பது.

இஃது எழுவகைவழுவமைதியுள் ஒன்றாகாது ஓர்பாதுகாவலாதலிற் கிளவியாக்கத்தியைபின்மையான் ஈண்டுக் கூறினாரென்பது.

இனி ஒன்றெனமுடித்தலாற் புதியன தோன்றினாற்போலப் பழையன கெடுவனவும் உளவெனக் கொள்க. அவை அழான், புழான் முதலியனவும், எழுத்திற்புணர்ந்த சொற்கள் இக்காலத்து வழங்காதனவுமாம். (௫௬)

௪௫௭. குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி யறிதல்.

இ - ள். குறைக்குஞ்சொல்லைக் குறைக்குமிடமறிந்து குறைக்க. எ-று.

குறைக்கும்வழியறிதலென்பது, ஒருசொற்குத் தலையுமிடையுங்கடையுமெென இடமூன்றன்றே; அவற்றுள் இன்னுழிக்குறைக்கப்படும் இச்சொல்லென்றறிந்து குறைக்கவென்றவாறு.

உ - ம். தாமரையென்பது 'மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி' எனத் தலைக்கண்ணும், ஓந்தியென்பது 'வேதின வெரிநி னோதிமுது போத்து' என இடைக்கண்ணும், நீலமென்பது 'நீலுண் டுகிலிகை கடுப்ப' எனக் கடைக்கண்ணும், குறைக்கப்பட்டவாறும், அவை பிறண்டுக் குறைத்தற்கேலாமையுங்கண்டுகொள்க. குறைத்தலாவது, ஒருசொல்லிற்சிறிது நிற்பச் சிறிது கெடுத்தலாகலின், முழுவதுங்கெடுத்தலாகிய தொகுக்கும்வழித் தொகுத்தலின் வேறுதலறிக.

"இயற்சொற்றிரிசொல்" என்னுஞ்சூத்திரமுதலாயின செய்யுளதிகாரத்துக் கூறுமையானும், ஒருகாரணத்தாற்கூறினாரேனுஞ் செய்யுட்கணென்று விதந்து கூறாமையானும், இது வழக்குமுடிபென்பாருமுளர். (௫௭)

௪௫௮. குறைத்தன வாயினு நிறைப்பெய ரியல.

இ - ள். குறைத்தனவாயினும், அவை குறையாது நிறைந்து நின்ற பெயரியல்பையுடைய. எ-று. என்றது, முற்கூறிய உதாரணங்கள் தாமரை ஓந்தி நீலமென நிறைந்த பெயர்களின் பொருள்களைத் தந்தே நிற்குமென்றவாறும்.

குறைந்தவழியும் நிறைந்த பெயராகக் குறைக்கப்படுவன பெயரோயாகலின், நிறைப்பெயரியலவென்றார். (நிஅ)

சநிநி. இடைச்சொல்லெல்லாம்வேற்றுமைச்சொல்லே.

இ - ள். பிறிதோர்சொல்லை வேறுபடுப்பனவும் பிறிதோர் சொல்லான் வேறுபடுக்கப்படுவனவுமெனச் சொல் இருவகைப்படும்; பிறிதோர்சொல்லை வேறுபடுத்தலாவது விசேடித்தல். பிறிதோர்சொல்லான வேறுபடுக்கப்படுதலாவது விசேடிக்கப்படுதல். இடைச்சொலலெல்லாம் பிறிதோர்சொல்லை வேறுபடுக்குஞ்சொல்லாம். எ-று.

வேறுபடுத்தலும் வேறுபடுக்கப்படுதலும் ஆகிய இரண்டும் பொதுவகையான் எல்லாச்சொற்குங் கூறுமை எய்துமாகலின, இடைச்சொல்லெல்லாம் வேற்றுமைச்சொல்லென்றதனான், இவ்வ வேறுபடுக்குஞ்சொல்லாதலல்லது ஒருஞான்றும் வேறுபடுக்கப்படுஞ்சொல்லாகாவென நியமித்தவாறும். அவை அன்னவாதல் இடையியலுள் ஓதப்பட்ட இடைச்சொல் வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளும் வரும்வழிக் கண்டுகொள்க.

வேற்றுமைச்சொல் வேற்றுமையைச் செய்யுஞ்சொல்லென்ன விரியும். வேற்றுமையெனினும், வேறுபாடெனினுமொக்கும்.

இடைச்சொல்லெல்லாம் வேற்றுமைச்சொல்லாயினும், அவற்றுள் ஒருசாரனவற்றை வேற்றுமைச்சொல்லென்றுளப; இயறசொல்லுள் ஒருசாரனவற்றை இயற்பெயரொன்றாற்போலவென்பது. இதுவுமோர்நயம். (நிக)

சநிஉ. உரிச்சொன் மருங்கினு முரியவை யுரிய.

இ - ள். உரிச்சொல்லிடத்தும் வேறுபடுக்குஞ்சொல்லாதற்கும் உரியன உரியவாம்; எல்லாம் உரியவாகா. எ-று. எனவே, உரிச்சொல்லுள் வேறுபடுத்தும் வேறுபடுக்கப்பட்டும் இருநிலைமையுமுடையவாய் வருவனவே பெரும்பான்மையென்பதாம்.

வேறுபடுக்குஞ்சொல்லேயாவன உறு, தவ, நனி என்னுந தொடக்கத்தன. இருநிலைமையுமுடையன குரு, கெழு, செ

ல்லல், இன்னல் என்னுந்தொடக்கத்தன. உறுபொருள், தவ ப்பல, நனிசெய்த்து, ஏகல்லடுக்கம் என இவை ஒன்றை விசே டித்தல்லது வாராமையும், குருமணி, விளங்குகுரு; கேழ்கிள ரகலம், செங்கேழ்; செல்லனேய், அருஞ்செல்லல்; இன்னற் குறிப்பு, பெயரின்னல் என இவை ஒன்றனை விசேடித்தும வி சேடிக்கப்படும் இருநிலைமையுமுடையவாய் வருமாறும், வ ழக்குஞ்செய்யுளுநோக்கிக் கண்டுகொள்க. குரு விளங்கிற்று; செல்லறீர எனத் தாமே நின்று வினை கொள்வன, விசேடிக் கப்படுந்தன்மையுடையவாதலின், விசேடிக்கப்படுஞ்சொல லாம். பிறவும் விசேடித்தல்லது வாராதனவும், விசேடித்து ம் விசேடியாதும் வருவனவும், வழக்குஞ்செய்யுளுநோகி யுணாக.

வேறுபடுக்குஞ்சொல்லேயாவன இவையெனத் தொகுத் துணர்த்தற்கும், உரிசசொன்மருங்கினுமுரியவையுரிய எனச் சூத்திரஞ்சுருங்குதற்கும், இடையியலுள்ளும் உரியியலுள் ளும் வையாது, இரண்டுசூத்திரத்தையும் ஈண்டு வைத்தார்.

சருஎ. வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய.

இ - ள். மேற்கூறப்பட்ட வினையெச்சமும் வேறுபட்ட ப லவிலக்கணத்தையுடைய. எ-று.

அவையாவன, 'உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய.' எ-ம். 'ஞாயிறு பட்டு வந்தான்.' எ-ம். செய்தெனெச்சம் வினை முதல் கொள்ளாது பிறிதின் வினை கோடலும், அஃதீறு திரி தலும், 'மோயினளுயிர்த்த காலை.' எ-ம். கிண்ணியன் வில்ல ன் வரும். எ-ம். முற்றுச்சொல்லது திரிபாய் வருதலும், ஓடி வந்தான், விரைந்து போயினான். எ-ம். வெய்ய சிறிய மிழற் றுஞ் செவ்வாய். எ-ம். செவ்வன்றெரிகிற்பான், புதுவதனிய ன்றவணியன். எ-ம். தம்மை முடிக்கும் வினைக்கட்கிடந்த தொழிலானும் பண்பானுங் குறிப்பானும் உணர்த்தித் தெரிநி லைவினையுங் குறிப்புவினையுமாய் முடிக்குஞ்சொல்லை விசேடி த்தலும், பிறவுமாம். செய்தெனெச்சத்திறு திரிதல் வினையி யலுட்காட்டிப் போந்தாம்.

'பெருங்கை யற்றவென் புலம்புமுந் துறுத்து' என்புழிப பெருமென்பதனை ஒருசாரார் வினையெச்சவாய்பாடென்ப. ஒருசாரார் வினைச்சொற்பற்றி நின்றதோருரிச்சொலென்ப.

இடைச்சொல்லும் உரிச்சொல்லும் மேற்கூறப்பட்ட இலக்கணமேயன்றிப் பிறவிலக்கணமுமுடையவென்பதுணர்த்தினார். இனி அவையேயன்றி வினையெஞ்சுகிளவியும் பலவிலக்கணத்தனவென்பது படநின்றமையான், உம்மை இறந்தது தழீஇயவெச்சவும்மை. அவ்விலக்கணம் ஓரியலவனறித் திரிதலும் வேறுபொருளுணர்த்தலும் விசேடித்தலுமுதலாகிய வேறுமையுடையவாகலின், வேறுபல்குறியவென்றார்.

வினையெச்சத்துள் விசேடித்தே நிற்பனவுமுளவென்பதூஉம் உணர்த்துகின்றாராகலின், இதனை வினையியலுள் கூறாது, ஈண்டு விசேடிக்குஞ் சொலலுணர்த்துவனவற்றோடு வைத்தார்.

'பெயர்த்தனென் முயங்க' என்பது முதலாயின செய்தெனெச்சம் முற்றாய்த் திரிந்தனவென்றும், ஒடித்துண்டெஞ்சி என்பது முதலாயின செயவெனெச்சம் செய்தெனெச்சமாய்த் திரிந்தனவென்றும், முன்னருரைத்தாரால் உரையாசிரியரெனின்;—பெயர்த்தனென்முயங்க என்பது முதலாயின எச்சத்திரிபாயின் எச்சப்பொருளுணர்த்துவதல்லது இடமும் பாலுமுணர்த்தற்பாலவல்ல; எச்சப்பொருண்மையாவது மூன்றிடத்திற்கும் ஐந்து பாற்கும் பொதுவாகிய வினைநிகழ்ச்சியன்றே; அவ்வாறன்றி முற்றுச்சொற்கு ஓதிய ஈற்றவாய் இடமும் பாலுமுணர்த்தலின், அவை முற்றுத்திரிசொல்லெனவேபடும். சொன்னிலையுணர்ந்து வினைகோடன்மாததிரத்தான் வினையெச்சமெனின்; — மாரைக்கிளவியும் வினையொடு முடியும் வேற்றுமையும் பிறவுமெல்லாம் வினையெச்சமாவான் செல்லும்; அதனான் அவர்க்கது கருத்தன்றென்க. அல்லதூஉம், கண்ணியன் வில்லன் வரும் என வினைக்குறிப்புமுற்றாய்த் திரிதற்கேற்பதோர்வினையெச்சம் இன்மையானும், அது கருத்தன்மையறிக.

'ஒடித்துண்டெஞ்சிய' என்பதூஉம் ஞாயிறு பட்டு வந்தான் என்பதூஉம் பிறவினை கொண்டனவாயினும், செய்தெனெச்சத்திற்குரிய இறந்தகாலமுணர்த்தலான், ஏனைக்காலத்திற்குரிய செயவெனெச்சத்தின் றிரிபெனப்படா; செயவெனெச்சத்திரிபாயிற் செயவெனெச்சத்திற்குரிய காலமுணர்த்தல்வேண்டும். மழை பெய்ய மரங்குழைத்தது எனச் செயவெனெச்சத்திற்கு இறந்தகாலமுமுரித்தெனின்;—காரணகாரியப்பொருண்மையுணர்த்தும்வழியல்லது செயவெனெச்சம் இறந்தகாலமுணர்த்தாது, ஒடித்துண்டலும் ஞாயிறு படுதலும் எஞ்சுதற்கும் வருதற்குங்காரணமன்மையான் ஆண்டிறந்தகாலமுணர்த்தாமையின், செய்தெனெச்சமாய் நின்று தமக்குரிய இறந்தகாலமுணர்த்தினவெனப்படும். அதனாற் செயவெனெச்சஞ் செய்தெனெச்சமாய்த் திரிந்தனவென்றலும் அவர் கருத்தன்றென்க. ஞாயிறு பட்டு வந்தான் என்பது ஞாயிறு பட்டபின் வந்தான் என இறந்தகாலமுணர்த்தலும், ஞாயிறு பட வந்தான் என்பது ஞாயிறு படாநிற்க வந்தான் என நிகழ்காலமுணர்த்தலும் வழக்கு நோக்கிக் கண்டுகொள்க. (௬௧)

## சஙு அ. உரையிடத் தியலு முடனிலை யறிதல்.

இ - ள். வழக்கிடத்து உடனிற்கற்பாலவல்லனவற்றது உடனிலை போற்றுக. எ-று.

உடனிற்கற்பாலவல்லனவாவன தம்முண்மாறுபாடுடையன. மாறுபாடில்லனவற்றதுடனிலைக்கண் ஆராய்ச்சியின்மையின், உடனிலையென்றது மாறுபாடுடையனவற்றதுடனிலையேயாம்.

உ - ம். இந்நாழிக்கிந்நாழி சிறிது பெரிது என உடனிற்கற்பாலவல்லாச் சிறுமையும் பெருமையும் உடனின்றவாறு கண்டுகொள்க. சிறிதென்பது பெரிதெனப்பட்ட பொருளை நோக்காது பெரிதென்பதற்கு அடையாய் மிகப்பெரிதன்றென்பது பட நிற்றலான், அமைவுடைத்தாயிற்று.

அறிதலென்பது இவ்வாறு அமைவுடையன கொள்கவென் றவாறு.

மாறுபாடுடையன உடனிற்றல் எழுவகைவழுவினுள் ஒன் றன்மையான், இதனைக் கிளவியாக்கத்துட்கூறுது ஈண்டுக் கூறினர். (௬௨)

சறு௯. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே.
இன்ன வென்னுஞ் சொன்முறை யான.

இ - ள். சொல்லானன்றிச் சொல்லுவான்குறிப்பாற்பொ ருளுணரப்படுஞ்சொல்லுமுள, இப்பொருள் இத்தன்மைய வென்று சொல்லுதற்கண். எ-று.

உ - ம். செஞ்செவி, வெள்ளொக்கலர் என்புழி மணியும் பொன்னுமணிந்த செவி என்றும், வெளியதுடுத்த சுற்றம் எ ன்றும், குறிப்பானுணரப்பட்டவாறு கண்டுகொள்க. குழை கொண்டு கோழியெறியும் வாழ்க்கையர் என்புழி அன்ன பெருஞ்செல்வத்தார் என்பதூஉங்குறிப்பானுணரப்படும்.

இது "தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலும்" எ ன்புழி அடங்குமெனின்;—ஆண்டுப் பொருணிலை இருவகைத் தென்பதல்லது இன்னுழி இப்பொருள் குறிப்பிற்றோன்றுமெ ன்னும் வேறுபாடு பெறப்படாமையான், ஆண்டடங்காதென் பது.

இதுவும் மேலையோத்துக்களுள் உணர்த்துதற்கியைபின் மையான் ஈண்டுணர்த்தினர். (௬௩)

சசுா0. ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்.

இ - ள். பொருள்வேறுபாடின்றி ஒருபொருண்மேல் வரு ம் இரண்டுசொற்பிரிவின்றித் தொடர்ந்து வரின், அவற்றைக் கடியார். எ-று.

உ - ம். 'நிவந்தோங்கு பெருமலை.' எ-ம். 'துறுகன் மீமி சை யுறுகண்.' எ-ம். வரும்.

பிரிவிலவென்றது, வேறோர்சொல்லான் இடையிடப்படா து நிற்பனவென்றவாறு.

இருசொல் ஒருபொருண்மேல் வருதல் எழுவகைவழுவினுள் ஒன்றன்மையான் ஈண்டுக் கூறினார்.

'வைகைக் கிழவன் வயங்குதார் மாணகலந்—தையலா யின்றுநீ நல்கினை நல்காயேற்—கூடலார் கோவொடு நீயும் படுதியே—நாடறியக் கௌவை யொருங்கு' என்புழி வைகைக் கிழவன் கூடலார்கோ என்பன ஒருபொருளை வரைந்துணரத்தலாற் பிரிவிலவாகலின் வரையப்படாவென்றும், 'கொய்தளிர்த் தண்டலைக் கூத்தப் பெருஞ்சேந்தன் - வைகலு மேறும் வயக்களிறே - கைதொழுவல்—காலேக வண்ணனைக் கண்ணாரக் காணவெஞ்—சாலேகஞ் சார நட' என்புழிக் காலேகவண்ணன் என்பது அச்சாந்து பூசினாரெல்லார்க்கும் பொதுவாய்க் கூத்தப்பெருஞ்சேந்தனையே வரைந்துணர்த்தாமையின், அவை பிரிவுடையவாமென்றும், உரையாசிரியர் உரைத்தாராலெனின்;—அற்றன்று: 'நாணிநின் றோணிலை கண்டியானும்—பேணினே னல்லனோ மகிழ்ந வானத்—தணங்கருங் கடவு ளன்னோணின்—மகன்று யாதல் புரைவதா லெனவே' என்புழி வானத்தணங்கருங்கடவுளன்னோள் என்பது மகளிர்க்கெல்லாம் பொதுவாய் நாணி நின்றோளை வரைந்துணர்த்தாதாயினும் சொல்லுவான்குறிப்பான் அவளையே உணர்த்தினாற்போலக் காலேகவண்ணன் என்பதூஉம் பொதுவாயினுஞ் சொல்லுவான்குறிப்பாற் கூத்தப்பெருஞ்சேந்தனையே உணர்த்திப் பிரிவிலவாய் நிற்றலான், அவர்க்கது கருததன்றென்க. (௬௪)

௪௬௧. ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காகு மிடனுமா ருண்டே.

இ - ள். ஒருமைக்குரிய பெயர்ச்சொற் பன்மைக்காகுமிடமுமுண்டு. எ-று.

உ - ம். 'ஏவ லிளையர் தாய்வயிறு கரிப்ப' என்புழித் தாயென்னும் ஒருமை சுட்டிய பெயர் இளையரொன்பதனாற் றாயரென்னும் பன்மை உணர்த்தியவாறு கண்டுகொள்க.

பன்மைக்காகுமிடனுமாருண்டேயென்பது ஒருமைச்சொற் பன்மைச்சொல்லோடு தொடர்தற்குப் பொருந்துமிடமுண்டென்பதூஉம் பட நின்றமையான், 'அஃதை தந்தை யண்ணல் யானை யடுபோர்ச் சோழர்' என ஒருமைச்சொற் பன்மைச்சொல்லோடு தொடர்தலுங்கண்டுகொள்க. ஈண்டு ஒருமைச்சொற் பன்மைச்சொல்லோடு மயங்குதலுடைமையான் "ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவி" என்புழி அடங்காமையறிக.

ஏற்புழிக்கோடலென்பதனான் உயர்திணைக்கண்ணது இம்மயக்கமென்று கொள்க.

ஆகுமிடமென்பதனால், பன்மையுணர்த்துதற்கும் பன்மைச்சொல்லோடு தொடர்தற்கும் பொருந்தும்வழிக் கொள்கவென்பதாம். (௬௫)

௪௬௨. முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
யாற்றுப்படைமருங்கிற் போற்றல்வேண்டும்.

இ-ள். முன்னிலை குறித்து நின்ற ஒருமைச்சொல், பன்மையொடு முடிந்ததாயினும், வரையப்படாது. அம்முடிபு ஆற்றுப்படைச்செய்யுளிடத்துப் போற்றியுணரப்படும். எ-று.

கூத்தராற்றுப்படையுள் 'கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ' என நின்ற ஒருமைச்சொற்போய் 'இரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர்' என்னும் பன்மைச்சொல்லோடு முடிந்தவாறு கண்டுகொள்க. ஈண்டு முன்னிலையொருமைப் பெயராதல் அதிகாரத்தாற்கொள்க.

"ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி—பன்மைக் காகு மிடனுமா ருண்டே" என்பதனான் இதுவும் அடங்குதலின் இச்சூத்திரம் வேண்டாவெனின்;—பன்மையொடு முடியு மிடனுமா ருண்டே என்னாது "பன்மைக் காகு மிடனு மாருண்டே" என்றாராதலின், ஆண்டுப் பன்மைச்சொற்கொண்டு முடியாது ஒருமைச்சொற்பன்மையுணர்த்துதலும் பன்மைச்சொல்

லோடு ஒருபொருட்டாகிய துணையாய் மயங்குதலுமுணர்த்தினார்; அதனான் இக்கொண்டுமுடிபு ஆண்டடங்காதென்பது. அல்லதூஉம், இம்முடிபு செய்யுட்குரித்தென்றமையானும் ஆண்டடங்காமையறிக.

பொதுவகையான் ஆற்றுப்படைமருங்கினென்றாராயினும, சுற்றத்தோடு சுற்றத்தலைவனை ஆற்றுப்படுத்தறகண்ணது இம்மயக்கமென்பது பாதுகாத்துணர்கவென்பார் போற்றல்வேண்டுமென்றார்.

"பான்மயக் குற்ற வையக் கிளவி" என்பதனாற்கூறிய ஒருமைப்பன்மைமயக்கம் வழூவமைதியாயினும் இலக்கணத்தோடொத்துப் பயின்று வரும். ஒருமை சுட்டிய பெயாநிலைக்கிளவி பன்மைக்காதலும், முன்னிலையொருமை பன்மையொடு முடிதலும் அன்னவன்றிச் சிறுவழக்கினவாதலின், ஆண்டு வையாது ஈண்டு வைத்தார்.

ஒருவர் ஒருவரை ஆற்றுப்படுத்தற்கண் முன்னிலையொருமை பன்மையொடு முடிதல் வழக்கிற்கும் ஒக்குமாகலான, ஆற்றுப்படையெனப் பொதுவகையாற் கூறினார். (௬௬)

௪௬௩. செய்யுண் மருங்கினும் வழக்கியன் மருங்கினு
மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்
பல்வேறு செய்தியி னூனெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்.

இ - ள். செய்யுளிடத்தும் வழக்கிடத்தும் இவ்வதிகாரத்தின்கட்பொருள்பெறச்சொல்லப்பட்ட சொல்லெல்லாவற்றையும், பலவேறு செய்கையுடைய தொன்னூனெறியிற் பிழையாது சொல்லை வேறுபடுத்துணருமாற்றாற் பிரித்துக் காட்டுக.

எ-று. என்றது, "நிலப்பெயர் குடிப்பெயர்." எ-ம். "அம்மா மெம்மேம்." எ-ம். பொதுவகையாற்கூறப்பட்டன அருவாளநிலத்தானென்னும் பொருட்கண் அருவாளன். எ-ம். சோழநிலத்தானென்னும் பொருட்கண் சோழியன். எ-ம். இறந்தகாலத்தின்கண் உண்டனம், உண்டாம். எ-ம். நிகழ்காலத்து

ன்கண் உண்ணாநின்றனம், உண்ணாநின்றாம், உண்கின்றாம். எ-ம். எதிர்காலத்தின்கண் உண்குவம், உண்பாம். எ-ம். வேறுபட்டு வருமன்றே; அவ்வேறுபாடெல்லாம் கூறிற் பல்குமென்றஞ்சிக் கூறிற்றிலனாயினும், தொன்னூனெறியிற்பிழையாமல் அவ்வேறுபாடுணரப் பிரித்துக் காட்டுக நூல்வல்லானென்றவாறாயிற்று.

இது பிறநூன்முடிந்தது தானுடம்படுதலென்னுந் தந்திரவுத்தி. பிறவுமன்ன.

செய்கை - விதி.

சொல்வரைந்தறியவெனவே, வரைந்தோதாது பொதுவகையானோதப்பட்டவற்றும் ஏற்றுக இப்புறனடையென்பதாம்.

இனி ஒருரை:—செய்யுளிடத்தும் வழக்கிடத்தும் என்னாற் கிளக்கப்படாது தொன்னூலாசிரியராற் கிளக்கப்பட்டு எஞ்சிநின்ற சொல்லெல்லாவற்றையும் அவ்வத்தொன்னூனெறியிற் பிழையாமைச் சொல்லை வரைந்துணரக் கொணர்ந்து பிரித்துக் காட்டுக. எ-று.

என்னாற்கிளக்கப்படாது என்பது பெற்றவாறென்னையெனின்; — கிளந்தன பிறநூலிற்கொணர்ந்து காட்டல்வேண்டாமையிற் கிளக்கப்படாதனவென்பது பெறப்படுமென்க.

புறனடையாற்கொள்ளப்படுவன: — யானுநீயுமவனுஞ்செல்வேம். எ-ம். யானுநீயுஞ்செல்வேம். எ-ம். ஏனையிடத்திற்குரிய சொற்றன்மைச்சொல்லோடியைந்தவழித் தன்மையான் முடிதலும், அவனுநீயுஞ்சென்மின் எனப் படர்க்கைச்சொன் முன்னிலையோடியைந்தவழி முன்னிலையான் முடிதலும், 'நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும்' என்புழிப் பல்லேமுள்ளுமெனத் தன்மையாகற்பாலது பல்லோருள்ளுமெனப் படர்க்கைப்பன்மையாயவழி அமைதலும், 'முரசுகெழு தானை மூவ ருள்ளு—மரசெனப் படுவது நின்றே யத்தை' என்புழி மூவீருள்ளுமென முன்னிலையாகற்பாலது மூவருள்ளுமென

ப் படர்க்கையாயவழி அமைதலும், 'இரண்டனுட்கூர்ங்கோட்டகாட்டுவெல்' என்புழிக் கூர்ங்கோட்டதென ஒருமையாகற்பாலது கூர்ங்கோட்டவெனப் பன்மையாயவழி அமைதலுமாம். பிறவுமுளவேற்கொள்க.

'அகத்தியமுதலாயின எல்லாவிலக்கணமுங்கூறலிற் பல்வேறுசெய்தியினூலென்றார்.

இவ்விரண்டுரையும் இச்சூத்திரத்திற்குரையாகக் கொள்க.

எச்சவியன் முற்றிற்று.

சொல்லதிகாரச்சேனவரையருரை

முற்றுப்பெற்றது.

மெய்கண்டதேவன்றிருவடிவாழ்க.

உ

கணபதி துணை.

# சூத்திரவகராதி.


| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| அ ஆ வ என - வறி ... | ௧௧ |
| அ ஆ வ என - வற்று ... | ௧௭௧ |
| அ எனப்பிறத்த ... | ௧௦௪ |
| அசைநிலைக்கிளவி ... | ௨௧௪ |
| அச்சக்கிளவி ... ... | ௯௮ |
| அச்சம்பயமிலி ... ... | ௨௦௭ |
| அடிமறிச்செய்தி ... | ௨௫௬ |
| அடைசினைமுத ... ... | ௨௮ |
| அண்மைச்சொல்லிற் ... | ௧௧௯ |
| அண்மைச்சொல்லே... | ௧௧௮ |
| அதற்குவினையுடைமை ... | ௭௮ |
| அதனினியறல் ... ... | ௭௫ |
| அதிர்வும்விதிர்ப்பு ... | ௨௩௨ |
| அதுச்சொல்வேற்றுமை | ௧௬௭ |
| அதுவிதுவுதுவென... | ௧௩௬ |
| அதுவென்வேற்றுமை... | ௯௫ |
| அத்திணைமருங்கி ... | ௧௭௩ |
| அந்திலாங்க ... ... | ௨௧௨ |
| அந்நாற்சொல்லு ... | ௨௫௩ |
| அப்பொருள்கூறி ... | ௩௭ |
| அமர்தன்மேவல் ... ... | ௨௪௧ |
| அம்மகேட்பிக்கு ... | ௨௧௫ |
| அம்மவென்னு ... ... | ௧௨௫ |
| அம்முக்கிளவி... ... | ௧௮௭ |
| அயனெடிதாயி ... ... | ௧௨௨ |
| அரியேயைம்மை ... | ௨௩௮ |
| அர் ஆர் ப என ... ... | ௧௬௩ |
| அலமர்றெருமர ... | ௨௩௨ |
| அவற்றினவரூஉ... ... | ௨௨௩ |
| அவற்றுள், அழுங்கல்... | ௨௩௭ |
| அவற்றுள், அன்னனி | ௧௧௯ |
| அவற்றுள், இ ஈ யாகு... | ௧௧௬ |
| அவற்றுள், இகுமுஞ்சி | ௨௧௫ |
| அவற்றுள், இயற்சொ | ௨௪௯ |
| அவற்றுள், இரங்கல்... | ௨௩௯ |
| அவற்றுள், ஈயென் ... | ௨௯௦ |
| அவற்றுள், எழுவாய்... | ௬௫ |
| அவற்றுள், செய்கென்... | ௧௬௧ |
| அவற்றுள், செய்யு ... | ௧௯௪ |
| அவற்றுள், தடவென்... | ௨௩௪ |
| அவற்றுள், தருசொல் ... | ௩௨ |
| அவற்றுள், நான்கே... | ௧௪௩ |
| அவற்றுள், நிரனிறை... | ௨௫௪ |
| அவற்றுள், நீயென்... | ௧௫௦ |
| அவற்றுள், பன்மை ... | ௧௬௫ |
| அவற்றுள், பிரிநிலை ... | ௨௮௧ |
| அவற்றுள், பெயரொன... | ௧௩௧ |
| அவற்றுள், முதனிலை... | ௧௮௬ |
| அவற்றுள், முன்னிலைக் | ௧௭௮ |
| அவற்றுள், முன்னிலைத | ௧௮௧ |
| அவற்றுள், யாதென ... | ௩௪ |
| அவற்றுள், விறப்பே... | ௨௩௭ |
| அவற்றுள், வினைவேறு ... | ௫௨ |
| அவற்றுள், வேற்றுமை | ௨௬௧ |
| அவற்றொருவருவழி... | ௧௯௧ |
| அவைதாம், அம்மா ... | ௧௫௮ |
| அவைதாம், இ உ ஐ ஓ... | ௧௧௪ |
| அவைதாம், உறுதவ... | ௨௩௦ |
| அவைதாம், தத்தங்கிள | ௨௭௯ |
| அவைதாம், தத்தங்குறி | ௨௮௬ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| அவைதாம், தத்தம்பொ | ௧௧௧ |
| அவைதாம், புணரியனி | ௨௦௫ |
| அவைதாம், பெண்மை | ௧௪௫ |
| அவைதாம், பெயர்... | ...௬௪ |
| அவைதாம், முன்மொழி | ௨௭௦ |
| அவைதாம், முன்னும்... | ௨௦௬ |
| அவைதாம், வழங்கியல் | ௪௦௮ |
| அவையல்கிளவி ... | ௨௮௮ |
| அவ்வச்சொல் ... | ...௨௨௬ |
| அவ்வழி, அவளிய | ...௧௫௨ |
| அவ்வே, இவ்வென... | ௧௧௪ |
| அளபெடைப்பெயரே... | ௧௨௦ |
| அளபெடைப்பெயரே | ௧௨௧ |
| அளபெடைப்பெயரே... | ...௧௨௫ |
| அளபெடைமிகூஉ ... | ௧௪௭ |
| அளவுநிறையும் ... | ...௧௧௨ |
| அன ஆன் அள் ஆள்... | ௪௬௨ |
| அன்மையினின்மையி ... | ௪௬௮ |
| அன்னபிறவுங்கிள ... | ௨௪௬ |
| அன்னபிறவுந்தொன் | ...௯௮ |
| அன்னபிறவுமஃறி... | ...௧௫௮ |
| அன்னபிறவுமுபர் ... | ௧௫௬ |
| ஆகவாகவென்ப ... | ௨௧௭ |
| ஆக்கக்கிளவி ... ... | ௨௪ |
| ஆக்கந்தானே... ... | ...௨௫ |
| ஆங்கவுரையசை ... | ...௨௧௬ |
| ஆடூஉவறிசொல் ... | .. ௬ |
| ஆண்மைசுட்டிய ... | ௧௪௫ |
| ஆண்மைதிரிந்த ... ... | ௪௬ |
| ஆண்மைபேர்ந்த ... | ௧௫௫ |
| ஆயெனகிளவி... ... | ௧௬௬ |
| ஆருமருவ... ... | ...௧௨௦ |
| ஆவோவாகும்... ... | ௪௫ |
| ஆறன்மருங்க ... ... | ௯௦ |
| ஆறு ... | ...அ |
| ஆனெனிறுதி... ... | ...௧௧௯ |
| இசைத்தலு ... ... | ௫௯ |
| இசைநிறையசைநிலை... | ௨௫௯ |
| இசைப்படுபொருளே ... | ௨௭௫ |
| இசைபயிசையாகும்... | ௨௫௧ |
| இடைச்சொல்லெல்லா | ௨௬௬ |
| இடைச்சொற்கிளவி... | ௧௫௦ |
| இடைபெறப்படிப ... | ௨௦௪ |
| இதனதிதுவிற்றென் | ...௧௦௫ |
| இதுசெயல்வேண்டும்... | ௧௯௮ |
| இயற்கைப்பொருளை ... | ௨௨ |
| இயற்கையினுடைமை ... | ௮௨ |
| இயற்சொற்றிரி... ... | ௨௪௭ |
| இயற்பெயர்க்கிளவி ... | ௫௯ |
| இயற்பெயர்ச்சினை ... | ௧௪௨ |
| இயற்பெயர்முன் | ...௨௧௫ |
| இயைபுபுணர்ச்சி ... | ௨௫௧ |
| இரட்டைக்கிளவி... ... | ௪௮ |
| இரண்டன்மருங்கி... | ...௯௪ |
| இரண்டாவதே, ஐயெ... | ௭௧ |
| இருதிணைச்சொற்கு... | ௧௫௯ |
| இருதிணைப்பிரிந்த ... | ௪௫௪ |
| இருதிணைமரு ... | ...௩௫ |
| இருபெயர்பலபெய | ௨௬௭ |
| இர் ஈர்மின ... | ௪௭௯ |
| இலம்பாடொற்... | ...௨௫௯ |
| இறப்பினிகழ்வி-றச்சி | ௨௭௫ |
| இறப்பினிகழ்வி-முவம் | ௧௫௬ |
| இறப்பேயெதிர் ... | ௨௦௦ |
| இறுதியுமிடை... ... | ௪௦௦ |
| இறைச்சிப்பொருள்... | ௧௫௫ |
| இனச்சுட்டில்லா | ௨௧ |
| இனைய... ... | ...௫௫ |
| இனைநிலைத்த... ... | ௪௭௪ |
| இன்னபெயரே ... | ...௫௨ |

சூத்திரம். பக்கம்.

ஈகாரொகம்வென ... ௨௮௯
ஈரளபிசைக்கு ... ... ௨௧௭
ஈற்றுநின்றிசை ... ௨௨௧
ஈற்றுப்பெயர் ... ... ௯௫

உகப்பெயயர்... ... ௨௩௬
உகரந்தானே ... ... ௧௧௬
உசாவெசூழ்ச்சி ... ௨௪௦
உணர்ச்சியாயி ... ... ௨௪௫
உம்முந்தாகு... ... ௨௨௪
உம்மைதொக்க... ... ௨௨௨
உம்மையெச்ச ... ௨௮௩
உம்மையெண்ணினுரு ௨௨௩
உம்மையெண்ணுமென ௨௨௧
உயர்திணைமருங்கினு ... ௨௭௨
உயர்திணையென் ... ... ௧
உயாவேயுயங்கல் ... ௨௪௦
உரிச்சொற்கிளவி... ... ௨௨௮
உரிசசொன்மருங்கினு ௨௯௬
உருபுதொடர் ... ... ௯௯
உருபெனமொழி... ... ௨௬
உருவுட்காசும் ... ...௨௩௦
உரையிடத்தியலு ... ௨௯௯
உவமத்தொகையே ... ௨௬௨
உளவெனப்பட்ட ... ௧௨௫

எச்சஞ்சிறப்பே ... ௨௦௮
எச்சவும்மை ... ... ௨௧௯
எஞ்சியகிளவி ... ... ௧௮௦
எஞ்சியமூன்று... ... ௨௮௫
எஞ்சியவிரண்டி... ...௧௨௨
எஞ்சுபொருட்கிளவி... ௨௧௯
எடுத்தமொழி... ... ...௫௯
எண்ணுங்காலு ... ... ௪௭
எண்ணேகார... ... ௨௨௪
எதிர்மறுக்கு ... ... ௧௦௩
எதிர்மறையெச்ச ... ௨௮௩

சூத்திரம். பக்கம்.

எப்பொருளாயினு ... ௩௬
எய்யாமையே ... ௨௩௬
எல்லாச்சொல்லும் ... ௧௨.௭
எல்லாத்தொகையு ... ௨௭௧
எல்லாமென்னும் ... ௧௪௮
எல்லாருமென்னும் ...௧௩௪
எல்லேயிலக்கம் ... ...௨௧௩
எவ்வயிற்பெயரு ... ௬௮
எவ்வயின்வினையு... ...௨௭௭
எழுத்துப்பிரிந்திசை... ௨௪௫
எறுழ்வலியாகும் ... ௨௪௩
எற்றென்கிளவி ... ௨௧௧
எனவெனெச்சம் ... ௨௮௫
என்றுமெனவு ... ...௨௨௫
என்றென்கிளவி... ... ௨௧௦

ஏபெற்றுகும் ... ... ௨௩௧
ஏயுங்குரையு... ... ௨௧௪
ஏழாகுவதே, கண்ணென ௮௪
ஏற்றநினைவு ... ... ௨௩௫
ஏனைக்காலமு ... ... ௨௦௬
ஏனைக்கிளவி ... ... ௧௫௦
ஏனைப்புள்ளி... ... ௧௧௮
ஏனையிரண்டு ... ... ௩௩
ஏனையுயிரே ... ... ௧௧௬
ஏனையுருபுமன்ன ... ௧௦௬
ஏனையெச்சம் ... ... ௧௮௭

ஐந்தாகுவதே, இன்... ...௭௯
ஐயமுங்கரிப்பு... ... ௨௪௨
ஐயுங்கண்ணு... ... ...௧௦௨
ஐவியப்பாகும் ... ... ௨௪௨

ஒப்பில்போலி... ... ௨௧௬
ஒருபெயர்ப்பொது ... ௪௯
ஒருபொருளிரு... ... ௩௦௦
ஒருபொருள்-சொல்... ௨௫௦

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| ஒருபொருள்-பெயர் | ௪௩ |
| ஒருமைசுட்டியபெயர் | ௩௦௧ |
| ஒருமைசுட்டியவெல் | ௧௪௭ |
| ஒருமையெண்ணின் | ௪௪ |
| ஒருவரொன்னும் | ௧௫௧ |
| ஒருவரைக்கூறும் | ௩௦ |
| ஒருவினையொடு | ௯௨ |
| ஒழியிசையெச்ச | ௨௮௩ |
| ஒன்றறிகிளவி | ௧௧ |
| ஒன்றறிசொல்லே | ௭ |
| ஒன்றன்படர்க்கை | ௧௭௨ |
| ஒன்றுவினைமரு | ௫௩ |
| ஓம்படைக்கிளவி | ௯௬ |
| ஓய்தலாய்த | ௨௩௪ |
| ஓவும் உவ்வும் | ௧௧௬ |
| கடதறவென்னு | ௪௬௦ |
| கடிசொலவில்லை | ௨௯௪ |
| கடியென்கிளவி | ௨௪௨ |
| கண்கால்புறமக | ௮௪ |
| கண்டொன்று | ௨௭௪ |
| கண்ணுந்தோளு | ௯௦ |
| கதழ்வுந்துனைவு | ௨௩௨ |
| கமநிறைந்திய | ௨௩௮ |
| கம்பலைசும்மை | ௨௩௭ |
| கயவென்கிளவி | ௨௩௪ |
| கருமமல்லா | ௮௭ |
| கருவிதொகுதி | ௨௩௮ |
| கவவகத்திடுமே | ௨௩௮ |
| கவர்வுவிருப்பாகும் | ௨௩௯ |
| கழிவேயாக்க | ௨௦௬ |
| கழுமென்கிளவி | ௨௩௮ |
| களளொடுசிவணு | ௧௩௭ |
| கறுப்புஞ்சிவப்பும் | ௨௪௦ |
| கன்றலுஞ்செலவு | ௮௯ |
| காப்பினொப்பி | ௭௩ |
| காலந்தாமே | ௧௫௬ |
| காலமுலக | ௫௭ |
| கிளந்தவல்ல | ௧௧௨ |
| கிளந்தவல்ல | ௨௨௭ |
| கிளந்தவிறுதி | ௧௨௩ |
| கு ஐ ஆனென | ௧௦௪ |
| குடிமையாண்மை | ௫௫ |
| குத்தொகவரூஉ | ௯௮ |
| குருவுங்கெழுவு | ௨௩௧ |
| குறித்தோன்கூற்ற | ௫௪ |
| குறிப்பினும்வினையினு | ௧௫௭ |
| குறைச்சொற்கிளவி | ௨௯௫ |
| குறைத்தனவாயினு | ௨௯௫ |
| கூர்ப்புங்கழிவு | ௨௩௨ |
| கூறியகிளவி | ௨௪௪ |
| கூறியமுறையி | ௭௦ |
| கெடவரல்பண்ணை | ௨௩௩ |
| கேட்டையென்று | ௨௭௪ |
| கொடுவென்கிளவிபடர் | ௨௯௦ |
| கொடுவென்கிளவியுயர் | ௨௯௦ |
| கொல்லேயையம் | ௨௧௨ |
| சாயன்மென்மை | ௨௩௪ |
| சிதைந்தனவரினு | ௨௫௨ |
| சிறப்பினாகிய | ௪௨ |
| சினைநிலைக்கிளவி | ௮௯ |
| சீர்த்திமிகுபுகழ் | ௨௩௨ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| சுட்டுமுதலாகிய ... | ௪௧ |
| சுட்டுமுதற்பெயரும் ... | ௧௨௩ |
| சுட்டுமுதற்பெயரோ ... | ௧௨௧ |
| சுண்ணந்தானே ... | ௨௫௫ |
| செந்தமிழ்சேர்ந்த ... | ௨௫௧ |
| செப்பினும்வினாவினும் ... | ௧௯ |
| செப்பும்வினாவும் ... | ௧௬ |
| செப்பேவழீஇயினும் ... | ௧௮ |
| செயப்படுபொருளை ... | ௨௦௦ |
| செயற்கைப்பொருளை ... | ௨௩ |
| செய்துசெய்யூ ... ... | ௧௮௨ |
| செய்தெனெச்ச ... ... | ௧௯௪ |
| செய்யாயென்னு ... | ௨௯௨ |
| செய்யுண்மருங்கினு ... | ௩௦௩ |
| செலவினும்வரவினு ... | ௩௧ |
| செல்லலின்ன ... ... | ௨௩௧ |
| செழுமைவளனு ... ... | ௨௩௮ |
| சேரேதிரட்சி ... ... | ௨௩௯ |
| சொல்லெனப்படுப ... | ௧௩௦ |
| சொல்லெனெச்ச ... | ௨௮௮ |
| ஞெமிர்தலும் பாய்தலு | ௨௩௯ |
| தகுதியும்வழக்கு ... ... | ௨௦ |
| தஞ்சக்கிளவி ... ... | ௨௧௨ |
| தடவுங்கயவு ... ... | ௨௩௩ |
| தடுமாறுதொழி ... ... | ௯௫ |
| தத்தமெச்சமொடு ... | ௧௯௩ |
| தநநுஎ என ... ... | ௧௨௬ |
| தநநுஎ எனு ... ... | ௨௫௮ |
| தன்மேற்செஞ்சொல் ... | ௨௮௪ |
| தன்மைசுட்டலு ... ... | ௨௬ |
| தன்மைசுட்டிற்பன்மை | ௧௫௧ |
| தன்மைச்சொல்லே ... | ௪௪ |
| தன்னுளுறுத்த ... ... | ௧௪௯ |
| தாமென்கிளவி ... | ௧௪௮ |
| தாவென்கிளவி ... ... | ௨௯௦ |
| தாவேவலியும் ... ... | ௨௩௬ |
| தானென்கிளவி ... ... | ௧௪௮ |
| தானெனபெய ... ... | ௧௨௦ |
| திணையொடுபழகிய ... | ௧௫௪ |
| தீர்தலுந்தீர்த்தலு ... | ௨௩௩ |
| துயவென்கிளவி ... | ௨௪௦ |
| துவன்றுநிறை ... | ௨௩௫ |
| துவைத்தலுஞ்சிலை ... | ௨௩௮ |
| தெவுக்கொள ... ... | ௨௩௭ |
| தெவ்வுப்பகை ... ... | ௨௩௭ |
| தெரிநிலையுடைய ... | ௧௩௮ |
| தெரிபுவேறு ... ... | ௧௨௯ |
| தெளிவினேயு ... ... | ௨௧௧ |
| தேற்றம்வினாவே ... | ௨௦௯ |
| தொழிலிற்கூறு ... ... | ௧௧௯ |
| தொழிற்பெயராயி ... | ௧௨௧ |
| நம்புமேவு ... ... | ௨௩௪ |
| நளியென்கிளவி ... ... | ௨௩௪ |
| நனவேகளனு ... ... | ௨௪௧ |
| நன்றீறறேயு ... ... | ௨௧௮ |
| நன்றுபெரிதாகும் ... | ௨௩௬ |
| நான்காகுவதே, கு என | ௭௮ |
| நிகழூஉநின்ற ... ... | ௧௪௦ |
| நிரனிறைசுண்ண ... | ௨௫௪ |

| சூத்திரம். | பக்கம். |
| --- | --- |
| நலபெயராகுடி ... | ௧௩௪ |
| நிலனுமபொருமுரம் ... | ௧௮௯ |
| நிறத்துருவுணா ... | ௨௪௦ |
| நினறுங்கிசைத்த ... | ௫௯ |
| நீயிர்நீயென ... | ௧௫௦ |
| நும்மின்றிரிபெயர் ... | ௧௨௨ |
| நொசிவுநுழைவு ... | ௨௪௧ |
| பசப்புநிறனாகும் ... | ௨௩௧ |
| படரேயுள்ளல ... | ௨௩௬ |
| பணையேபிழைத்தல் ... | ௨௩௬ |
| பண்புகொள்பெயரு ... | ௧௨௦ |
| பண்புகொள்பெயரு ... | ௧௨௧ |
| பண்புதொகவரூஉ ... | ௨௬௮ |
| பயப்பேபயனாம் ... | ௨௩௧ |
| பரவும்பழிச்சும ... | ௨௪௨ |
| பலவயினானு ... | ௫௦ |
| பல்லபலசில ... | ௧௩௭ |
| பல்லோர்படர்க்கை ... | ௧௮௨ |
| பழுதுபயமின்றே ... | ௨௩௪ |
| பனமுறையானு ... | ௧௮௮ |
| பனமைசுட்டியவெல் | ௧௪௬ |
| பன்மையுவநநாலே ... | ௧௬௪ |
| பனமையு-வமமூவிர ... | ௧௭௩ |
| பன்மையு-யஃறிணை ... | ௧௭௫ |
| பனமையு-யுயர்திணை ... | ௧௭௦ |
| பாலறிமரபி ... | ௧௬௬ |
| பானமயக்குற்ற ... | ௨௫ |
| பிணையும்பேணும் ... | ௨௩௫ |
| பிணடப்பெயரும் ... | ௯௧ |
| பிரிநிலைவினாவே ... | ௨௦௯ |
| பிரிநிலைவினையே ... | ௨௮௦ |

| சூத்திரம். | பக்கம். |
| --- | --- |
| பிறிதுபிறிதேற்றலு ... | ௪௦௯ |
| பின்முனகால் ... | ௧௮௫ |
| புகிறுபடற்பொரு ... | ௨௪௯ |
| புலமபேதனிமை ... | ௨௩௫ |
| புள்ளியுமுயிரு ... | ௧௨௪ |
| புணிறெனகிளவி ... | ௨௪௧ |
| பெண்மைசுட்டியசினை | ௧௪௪ |
| பெண்மைசுட்டியவுயர் ... | ௭ |
| பெண்மைசுட்டியவெல | ௧௪௪ |
| பெண்மைச்சினை ... | ௧௪௪ |
| பெண்மைமுறை ... | ௧௪௪ |
| பெயரினாகிய ... | ௬௭ |
| பெயரினுநதொழி ... | ௪௯ |
| பெயரொஞ்சுகிளவிபெ | ௨௮௨ |
| பெயரொஞ்சுகிளவியும் | ௧௯௨ |
| பெயர்நிலைகிளவிகால ... | ௭௦ |
| பெயர்நிலைக்கிளவியின் | ௨௯௧ |
| பேநாமுருமென ... | ௨௩௯ |
| பையுளுஞ்சிறுமை ... | ௨௩௬ |
| பொருடிமருங்கி ... | ௨௫௬ |
| பொருட்டகதிரியில் ... | ௨௪௪ |
| பொருட்குப்பொரு ... | ௨௪௪ |
| பொருண்மைசுட்டல் ... | ௬௫ |
| பொருண்மைதெரி ... | ௧௨௮ |
| பொருளொடுபுண ... | ௩௮ |
| பொற்பேபொலிவு ... | ௨௩௫ |
| மகடூஉமருங்கி ... | ௧௫௨ |
| மதவேமடனு ... | ௨௪௧ |
| மல்லலவளனே ... | ௨௩௧ |
| மழவுங்குழவு ... | ௨௩௨ |
| மறைக்குங்காலை ... | ௨௮௯ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| மற்றென்கிளவி ... | ... உகக |
| மற்றையதென் ... | ...உகக |
| மன்றவென்கிளவி ... | உகஉ |
| மன்னுப்பொரு ... | ... ஙசு |
| மாதர்காதல் ... | ... உஙச |
| மாணாக்கிளவி ... | ...கசுங |
| மாலேயியல்பே ... | ... உஙஉ |
| மாவெனுங்கிளவி ... | ...உகரு |
| மிகுதியம்வனப்பு ... | உசச |
| மிக்கதன்மருங்கி ... | ககூஎ |
| மியாயிகமோ ... | ... உசரு |
| முதலிற்கூறு ... | ... க0கூ |
| முதலுஞ்சினையு ... | ... கூ0 |
| முதறசினைககிளவி ... | ...கூ0 |
| முதன்முனைவரி ... | ... கூ0 |
| முந்நிலைக்காலமு ... | ககூரு |
| முரஞ்சன்முதர்வே ... | உஙரு |
| முழுதென்கிளவி ... | ...உஙச |
| முறைபபெயர்-முறை ... | கஉங |
| முறைபபெயர்-பெயொ | கஉ0 |
| முறைபபெயாமரு ... | ககஎ |
| முற்படக்களத்தல் ... | ...ச0 |
| முற்றியவும்மை ... | ... உஉ0 |
| முனைவுமுனிவாகும் | ...உசஉ |
| முன்னத்தினுணரு . | ங00 |
| முன்னிலைசுட்டிய ... | ங0உ |
| முன்னிலைமுனன ... | .உகூங |
| முன்னிலைவியங்கோள | கஎசு |
| மூன்றனுமைமநதனு ... | ...கூஉ |
| மூன்றுதலைபிட்ட, ஒடு ... | எச |
| மெய்பொருட்கிளத்த ... | உசங |
| மொழிப்பொருட்கார | உசரு |
| மொழிமாற்றியறைகை | உருஎ |
| யாஅவொன்னும் ... | ... கசுரு |
| யாகாபிறபிற ... | ... உகசு |
| யாணுக்கவினும ... | ... உசக |
| யாதனுருபிற்கூறி ... | க0உ |
| யாதெவனென்னு ... | ஙங |
| ரஃகாவொற்றும் ... | ... ச0 |
| வடசொற்கிளவி ... | உருக |
| வண்ணத்தின்வடிவி | ...உசுச |
| வண்ணம்வடிவே ... | அ0 |
| வம்புநிலையின்மை ... | உஙச |
| வயவலியாகும் ... | ... உச0 |
| வயாவென்கிளவி . | உச0 |
| வறிதுசிறிதாகும் ... | உஙரு |
| வன்புறவரூஉம் ... | ககூஅ |
| வாராக்காலத்துநிக ... | ககூசு |
| வாராககாலத்துவினை ... | ககூகூ |
| வாராமரபின ... | ... உஎஉ |
| வாராதலபோக ... | ...உஙங |
| வாளொளியாகும் ... | உச0 |
| வியங்கோளெண ... | ... சரு |
| வியலென்கிளவி ... | உஙகூ |
| வினைசெலலதிக்கே | உஎங |
| விழுமஞ்சீர்மை ... | உஙஅ |
| விழுமமிலிலை ... | உக0 |
| விழைவேகால ... | ...உ0எ |
| விளிகொள்வதன் . | .சுச |
| விளியெனப்படுப ... | ககங |
| விறப்புமுறப்பு ... | உஙஎ |
| வினவுஞ்செப்பே ... | கஅ |
| வினையிறகுறிப்பும் ... | கங. |

| சூத்திரம். | பக்கம். |
| --- | --- |
| வினையினும்பண்பினு... | கஉஉ |
| வினையின்றொகுதி ... | உகூரு |
| வினையெஞ்சுகிளவிக்கு | உஅஉ |
| வினையெஞ்சுகிளவியும் | உகஎ |
| வினையெனப்படுவது... | க௫௫ |
| வினையேகுறிப்பே ... | உக0 |
| வினையேசெய்வது... | க0எ |
| வினையொடுநிலை ... | உஉ௫ |
| வினைவேறுபடூஉம் ... | ...௫உ |
| வெம்மைவேண்டல் ... | உ௬௫ |
| வெளிப்படுசொல்லே | உஉக |

| சூத்திரம். | பக்கம். |
| --- | --- |
| வேறுவினைப்பொது ... | சஎ |
| வேற்றுமைதாமே... | ...கூஉ |
| வேற்றுமைத்தொகை... | உகூ0 |
| வேற்றுமைப்பொருளை... | அகூ |
| வையேகூர்மை ... | உச௬ |
| ளஃகானொற்றே ... ... | க |
| னஃகானொற்றே ... ... | க |
| னரலளவென்னு ... ... | ககஅ |